Q22:38 ... T
M93

114688

959

ஸ்ரீ



ஸ்ரீமதேராமாநுஜாயநம:

திருக்குருகூளமென்னும்

# தென்திருப்பதிபுராணம்.

## பாயிரப்படலம்.

### காப்பு.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மருமாலைத் துளவுபுனை மாதவனிவ் வுலகுய்யமனத் திலெண்ணி
விரிநீழற் றிந்திருணியடியினடியவர்சூழவீற் றிருந்து
திருந்தேவு நான்மறையைத் தமிழாக்கி மதுரகவி தீட்டுதற்குக்
குருகூரினுதயஞ்செய் சடகோபன் றாளிணையைக் குறித்து வாழ்வாம்.

(இதன்பொருள்.)

வாசனையுள்ள துளபமாலையணிந்த ஸ்ரீமந்நாராயணன் இவ்வுலகத்தோர் உய்விக்கத் திருவுள்ளத்திலெண்ணி விரிந்த நிழலையுடைய திருப்புளியாழ்வாரடியில் பாகவதோத்தமர்கள் சூழ எழுந்தருளியிருந்து இலக்ஷ்மீகரம்பொருந்திய நான்குவேதங்களையும் தமிழினாலே திருவாய்மொழியென்னும் திவ்வியப்பிரபந்தமாக்கி மதுரகவியாழ்வார் பட்டோலைகொள்ளத் திருவாய்மலர்ந்தருளித் திருக்குருகூர் என்னும் ஸ்தலத்திலே காரிமாறன் புத்திரராகத் திருவவதாரஞ் செய்தருளிய நம்மாழ்வார் திருவடிகளை நமஸ்கரித்து தோத்திரஞ்செய்வோம் — என்றவாறு.

குருகூரென்றது ஆழ்வார் திருநகரியை. திந்திருணி - புளியமரம்; அத்தருவைச் சேஷாம்சமென்ப. மதுரகவியென்புழி எதிரதுதழுவிய எச்சவும்மை தொகுத்தலாகக்கொண்டு ஸ்ரீமந்நாதமுனிகளும் என்றுரைப்பினுமமையும்.

# தென்திருப்பதிபுராணம்.

## திருமால்வணக்கம்.

### கலிவிருத்தம்.

நீர்கொண்டவுலகமெலாநிறைந்துமிருக்குமிராகிச்
சீர்கொண்டநான்மறைக்குந்தெரிவரியபரம்பொருளாய்
ஏர்கொண்டபழவடியார்க்கினியவருள்பொழிந்திலங்குங்
கார்கொண்டபுயன்மேனிக்கடவுளிணையடிபணிவாம்.

(இ-ள்.) நீர்பொருந்திய உலகங்களிலே எல்லாப்பொருளினும் எள்ளினெய்போல்நிறைந்து தேனும் அதன்சுவையும்போல ... யோகிகளுக்கும் காருண்யமான பரமாத்மாவாயும், சிறப்புப்பொருந்திய நாலுவேதங்களுந்தெரிந்து தோத்திரஞ்செய்தற்கரிய பரப்பிரமமாயும், அழகமைந்த சனகாதியோரும் தவம் செய்துவந்த பழமையாகிய பாகவதர்களுக்கு இனிமையான அருண்மழையைப்பொழிந்து எப்போதும் பிரகாசித்துக்கொண்டிருக்கும் நீலநிறம்பொருந்திய மேகம்போன்ற திருமேனியையுடைய கடவுளாகிய ஸ்ரீமந்நாராயணனுடைய இரண்டு திருவடிகளையும்பணிந்து தோத்திரஞ்செய்வாம். - எ-று.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தேர்கொண்டமணிவீதிமுகிலுலவுநெடுமாடந்திகழ்வைகுந்த
நேர்கொண்டவடமலையம்பதிமேவுந்திருமார்பனெடியோனிந்தப்
பார்கொண்டகுழுனகர்க்கெழுந்தருளிவீற்றிருந்தபரமன்குல்லைத்
தார்கொண்டசீநிவாசக்கடவுளிணையடியெந்தலைமேற்கொள்வாம்.

(இ-ள்.) தேவர்கள்பொருந்திய அழகுமிகுந்த வீதிகளும் மேகங்களும் மலையென்று நினைத்து சஞ்சரித்துக்கொண்டிருக்கும் உயர்ந்த மாடமாளிகைகளும் நிறைந்து கீர்த்திப்பிரகாசம்பொருந்திய பரமபதத்திற்கொப்பாகிய வடமலையென்னும் அழகான திருப்பதியிலெழுந்தருளி யிருக்கின்றவன் மகாலட்சுமியாகிய பெரியபிராட்டியாரை மார்பிலே தரித்துக்கொண்டவன், விசுவரூபமுடையவன், இத்தன்மையையுடைய ஸ்ரீமந்நாராயணன், பரமபதத்திலிருந்து திருவெங்கடத்திற்கு எழுந்தருளியதுபோல, அந்தத்திருவேங்கடத்திலிருந்து இத்தென்பூமியை அடிமைகொள்ளக்கருதித் திருக்குழுனம் என்னும் நகரத்திலெழுந்தருளி வீற்றிருக்கும் பரமனாகிய திருத்துளவமாலையணிந்த ஸ்ரீநிவாசனுடைய இரண்டு திருவடிகளையும் எமது சிரத்தின்மேற்கொள்வாம்.— எ-று. (உ)

### கலிவிருத்தம்.

ஆக்கவயனெனத்தோன்றியருமறையின்வீற்றிருந்துங்
காக்கவரியாயுலகின்காரணமெய்ச்சுடர்வடிவாய்
நீக்கவரனாகிவளர்நிர்க்குணநின்மலவடியார்
பாக்கியமிராதாரப்பரம்பொருளைவணங்குவாம்.

(இ-ள்.) சகல பூமிகளையுஞ் சீவர்களையும் உண்டாக்கப் பிரமனைத்தோன்றி அருமையான வேதத்தின்முடிவில் உல்லாசமாக வீற்றிருந்து மூன்றுஞ்




பரமபதநாதர்.

டாக்கியவற்றைக் காக்கும்பொருட்டாக உபேந்திரனாகத்தோன்றிச் சகத்திற்குத் தான் முதற்காரணமாகிய சிற்சொரூபப் பிரகாசவடிவமாயும் மறுபடியும் அந்த வுலகத்தை ஊழிகாலத்திலே சங்கரிக்க உருத்திரனாகத்தோன்றி வளர்ச்சிபொருந்திய தாமத ராஜச சாத்வீகமென்னும் இம்மூக்குணமும் உலகமாயையென்பதற்ற நிர்மலகுணமும்பொருந்திய பாகவதோத்தமர்கள்செய்யும் பாக்கியமென்பது முற்றிய ஐஸ்வரியமாயும் யாதிலும் ஒன்றியும் ஒன்றாதிருக்கும் ஆகாசம்போல எங்கும் நிறைந்திருக்கும் பரப்பிரமமாயுமிருக்கின்ற பொருளை வணங்குவோம்,—எ-று. (௧)

## அலர்மேன்மங்கைத்தாயார்வணக்கம்.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கந்தரமென்குழல்வடிவேல்விழிப்பவளவாய்சங்குகளமிந்தா
மந்தரக்கொங்கையுமுலகைத்தருமாலின்றனிருதரமவல்லிவாய்த்த
சுந்தரஞ்சேரிடையரம்பைத்தொடைத்தண்டைச்சதங்கையந்தாட்டுணை
எந்தமக்குவரந்தருவாளலர்மேலுமங்கையுலகின்றதாயே.[யும்போற்ற

(இ-ள்.) மேகம்போன்ற மென்மையான கூந்தலும், கொல்லனுலையிற் காய்ச்சிவடித்த கூர்மையான வேல்போன்ற கண்களும், பவளம்போன்ற சிவந்தவாயும், சங்குபோன்ற கழுத்தும், சந்திராரம்பூண்ட மந்திரகிரிபோன்ற இரண்டு தனபாரமும், சகலலோகங்களையும்பெற்ற ஆலந்தளிர்போன்ற வயிறும், வல்லிசாதக்கொடியென்று வாய்ப்பாகச்சொல்லும் அழகுபொருந்திய இடையும், வாழைத்தண்டுபோன்ற தொடையும், தண்டையும் சிலம்பும் சதங்கையும் அணிந்த இரண்டு திருவடிகளும் தமிழினால் வருணித்துத்துதிக்க அடியேனுக்கு வரம்கொடுப்பவள், அவள் யாரெனிற் செந்தாமரைப்பூவில் வாசமாயெழுந்தருளியிருக்கின்றவள்; பின்னும் திருப்பாற்கடல்பெற்ற பெரியபிராட்டியாவாள்.—எ-று. (௨)

## சேனைமுதலியார்வணக்கம்.

மெய்காட்டுஞ்சுருதிநிலைவிமலவயினுபதேசவிளக்கம்பெற்றுப்
பொய்காட்டும்புறநெறிநீத்துலகுய்யமாறனுக்குப்பொருளையோதி
வைகாட்டுமனியாழிக்கரத்தான்றனதிகாரவளமைபூண்ட [வாம்.
கைகாட்டுந்திருச்செங்கோற்பெருஞ்சேனைத்தலைவன்மென்கருத்துட்சேர்

(இ-ள்.) மெய்யாகிய பரவாசுதேவனைக் காண்பிப்பது எதுவெனின்: வேதத்தின் நிலையாகிய அஷ்டாக்ஷரப்பொருள் அந்தப்பொருளைப் பெரியபிராட்டியார் திருவாக்கினால் உபதேசிக்கப் பிரகாசமடைந்து சொப்பனம் என்ற பொய்யுறவைக்காட்டிச் * சகமாயையை நீக்கி இவ்வுலகத்திலுள்ள சேதனர்கள் உச்சீவிக்கும்பொருட்டுச் சடகோபருக்கு உபதேசஞ்செய்து கூர்மைபொருந்திய சக்கராயுதத்தைக் கையிலே தரித்திருக்கும் எம்பெருமான் அதிகாரமா

* மாயையென்று எனவும்பாடம்.

கிய வனத்தைப்பூண்டு கையிலே பிரகாசித்துக்கொண்டிருக்கும் செங்கோலரி கிய பொற்பிரம்பு ஏந்திய சேனைமுதலியாருடைய திருவடிகளை மனத்தில் தியானிப்பாம்.—எ-று. (௫)

## நாமகள் வணக்கம்.

மாதங்கநடையாளைப்பவளவாய்ச்செழுங்குயிலைமறையின் வாழ்வை
மாதங்கட்ருமிரவிபோலமனவிருளகற்றுமானைத்தேனை
மாதங்கமெனப்போற்றுவாரறிவைமூவுலகுமகிழ்ந்தளிக்கு
மாதங்கம்படிகநிறத்தாள்பாதமலரிணையெம்மனத்துள்வைப்பாம்.

(இ-ள்.) பெண்யானைபோல நடையுள்ளது, பவளம்போன்ற சிவந்த வாயும், செழுமையான குயில்போன்ற குரலும் உள்ளவளும், வேதங்களுக்குச் செல்வம்போன்றவளும், பன்னிரண்டுமாதங்களையும் கணக்காக்கிக்கொடுக்குஞ் சூரியன் உலகத்திற்றோன்றிய இருளை நீக்குவதுபோல மனத்திலிருக்கு மஞ்ஞானவிருளை நீக்கும் மான்போன்ற பாரதியும், ஆசரித்தவர்களுக்குத் தேன்போன்றவளும், பொன்னைப்போன்ற கல்வியை அருமையாய்ப் போற்றுகின்றவர்களுக்கு அறிவாய் இருக்கப்பட்டவளும், சுவர்க்கம்-மத்தியம் - பாதலமென்னும் திரிலோகத்தையும் மகிழ்ந்துபெற்ற தாயுமாகி அங்கம் ஸ்படிகநிறம்பொருந்திய சரஸ்வதியினது தாமரைமலர்போன்ற இரண்டுபாதத்தையும் என்மனத்தில் எப்போதும் தியானிப்பாம்.—எ-று. (௬)

## அநுமான் வணக்கம்.

ஓராழித்தேர்ப்பரிதிபுழையினயிந்திரமதனை யோர்ந்துகாலால்
ஓராழிகடந்திலங்கைநகரையனற்குணவளித்திவ்வுலகின்றூருக்
கோராழிதனைக்காட்டிப்புலவர்மாதவரிடரையொழிக்குஞ்சோதிப்
பேராழிசெலுத்துமரிந்தமன்றூதனிணையடியைப்பேணிவாழ்வாம்.

(இ-ள்.) ஒரு சக்கரம்பொருந்திய தேருள்ள சூரியனிடத்தில் வடமொழியிலக்கணத்தையறிந்தும், காலினாலே ஒப்பற்ற சமுத்திரத்தைத்தாண்டியும், இலங்கையென்னும் பட்டணத்தை அக்கினிக்கு இரையாக்கி இவ்வுலகத்தையெல்லாம் பெற்ற மாதாவாகிய சீதாபிராட்டியாருக்கு ஒப்பற்ற திருவாழி மோதிரத்தை அடையாளங்காட்டினவரும், பின்னும் தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும் இடர்செய்யும் இராக்கதர்களைச் சங்கரித்த சோதிசொருபமாகிய ஓர் ஆழியாகிய ஆக்கினைசக்கரத்தைச்செலுத்தும் இரகுநாதனுக்குத் தூதனுமாகிய அநுமானுடைய இரண்டுபாதத்தையும் ஸ்தோத்திரம் செய்வாம்.—எ-று. (௭)

## ஆழ்வார்கள் வணக்கம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஆதிமறையைத்தமிழாற்பாடினோன்மறவர்பிரானரசர்கோமான்
கோதிலாக்கச்சியான்மயிலையர்கோன்திருமண்டங்குடியான்பூதன்
மாதவஞ்சேருறையூரான்வில்லிபுத்தூரன்மழிசைமன்னன்பூவை
பூதலத்துமதுரகவிமுதலானோர்சரணிணையைப்போற்றல்செய்வாம்.



(இ-ள்.) முதன்மையாகிய வேதத்தை தமிழிற்பாசுரமாக திருவாய்மலர்ந்தருளிய நம்மாழ்வார், மறவர்பிரான் என்னுந் திருமங்கையாழ்வார், அரசர்கோமான் என்னுங் குலசேகராழ்வார், குற்றமில்லாத கச்சியானென்னும் பொய்கையாழ்வார், மயிலையர்கோன் என்னும் பேயாழ்வார், திருமண்டங்குடியானென்னுந் தொண்டரடிப்பொடியாழ்வார், பூதத்தாழ்வார், திருவுறையூரிலவதரித்த திருப்பாணாழ்வார், வில்லிபுத்தூரனென்னும் பெரியாழ்வார், திருமழிசைமன்னனென்னுந் திருமழிசையாழ்வார், பூவையென்னும் சூடிக்கொடுத்த நாய்ச்சியார், மதுரகவியாழ்வார் முதலாகிய பன்னிரண்டாழ்வார்களுடைய இரண்டு திருவடிகளையும் தோத்திரஞ்செய்வாம்.—எ-று. (௮).

## அனந்தநாதன் வணக்கம்.

குளத்தூறலெனவடியார்க்கருள்சுரக்குந்திருமலையங்கோமான்
றாளைக், குளத்தேரப்பணிந்தேதென்திருப்பதியில்வரவழைக்குங்கு
ணமுள்ளானைக், குளத்தானெய்பாற்கனியுற்றலெனவன்புருக்கின்
பங்கொடுத்தாட்கொள்ளக், குளத்தூரினுதயஞ்செயனந்தநாதனைப்
புகழ்ந்துகுலறகடர்வாம்.

(இ-ள்.) குளத்தினூறிவரும் சலத்தைப்போல சேதனர்களுக்குக் கிருபைபரிபாலிக்கும் திருமலையென்னும் ஸ்தலத்திலெழுந்தருளியிருக்கிற அழகிய கோமானாகிய ஸ்ரீநிவாசனது திருவடிகளைத் தன் நெற்றியிலே சேர மிகுந்த வன்புடன் பணிந்து தென்றிருப்பதியென்னும் குழுவபுரத்திலெழுந்தருளி வீற்றிருக்கச் செய்யும் புத்திமிகுந்த சத்வகுணமுள்ளவரும்; சருக்கரையில் பசுவின் நெய்யும், பாலும், முக்கனியும் கலந்ததுபோல் அன்புள்ளவர்க்கு மெய்ஞ்ஞானமாகிய இன்பத்தைக்கொடுத்து அவர்களை யாட்கொண்டு மோக்ஷசாதனம் அடையக் குளத்தூர் என்னும் திருப்பதியில் திருவவதாரஞ்செய்தவருமாகிய அனந்தநாதனென்னும் பரமபாகவதரது கீர்த்தியைக் கொண்டாடி நம் குறைகளைத் தீர்ப்பாம். ()

## அவையடக்கம்.

அருளணிவராகபுராணத்தினிற்பூக்கொள்ளுமத்தியாயந்தன்னில்
வரமகிமாநிலுக்குக்கேழன்முகத்தானுரைத்தவடமலையான்கஞ்சத்
திருவளருமெழிற்சீநிவாசகிநிவீற்றிருக்குஞ்செயலைப்பூண்ட
பொருவருதென்திருப்பதிநல்வளத்தினையான்செந்தமிழாற்புகலலுற்றேன்.

(இ-ள்.) திருடையே யாபரணமாக விளங்கும் பதினெண்புராணத்தினுள்ளவராக புராணத்தில் பூக்கொள்ளத்தியாயத்தில் பூமிதேவிக்கு வரங்களைக் கொடுக்கும் ஆதிவராகப்பெருமாள் திருவாய்மலர்ந்தருளிய மகத்வமிகுந்த வடவேங்கடமென்னுந் தலத்தி லெழுந்தருளியிருக்கிறவனும், தாமரைப்பூவில் வீற்றிருக்கும் பெரியபிராட்டியாருக்குப் பிரசன்னனும், அழகுள்ள ஸ்ரீநிவாசனுமாகிய மெய்ப்பொருள் எழுந்தருளியிருக்கும் செயலைப்பூண்ட ஒப்பற்ற தென்றிருப்பதியின் நலமுள்ள வளமையை அடியேன் செந்தமிழினாலே சொல்லத்தொடங்கினேன்.—எ-று. (௧௦)

அதிபிரமாண்டம்புகழும்பணிகிரியானனந்தனைமெய்யாடிமைகொள்ளச்
சதிருறுதென்திருப்பதிவந்திருந்தகதைபரந்தாமன்றனையிடேற்ற
மதிபெருகுமவ்வனந்தனருளவவனெழிற்சிநிவாசனன்பர்க் [ன்.
கிதயமுவந்திடவுரைத்தான்யானதனைத்தமிழ்க்கவியாலியம்பலுற்றே

(இ-ள்.) மிகுதியாகிய பிரமாண்டங்களெல்லாம் புகழும் சேஷகிரியென்னும் திருப்பதியையுடையவன் அநந்தநாதனென்னும் பரமபாகவதனைத் திருப்பணிகொண்டு பெருமைபொருந்திய தென்திருப்பதியென்னும் ஸ்தலத்திலெழுந்தருளித் தன்னிடத்தி லெண்ணிக்கையில்லாத அற்புதத்தைச் செய்தருளிய கதையைப் பேரறிவுள்ள அனந்தநாதன் தன் பக்தனாகிய பரந்தாமனை யிடேற்றும்பொருட்டாகச்சொல்ல, அவன் அழகுபொருந்திய ஸ்ரீமந்நாராயணனிடத்தில் பக்திமிகுந்த பாகவதோத்தமர்களுக்கு உலகமயக்கத்தி லழுந்திக்கிடந்து வேதனைகொண்டிருக்கும் மனத்தில் குளிர்ச்சியடையும்படி அருளிச்செய்ய, அதை அறிவிலியாகிய அடியேன் தமிழ்ப்பாக்களால் சொல்லத் தொடங்கினேன்.—எ-று. இவை யிரண்டும் நூல்வந்தவழி. (௧௧)

கலிவிருத்தம்.

செழித்தவல்லிருள்சீக்கும்பருதிமுன்
விழித்துமின்மினிமேவியதாமரோ
வெழுத்துச்சொற்பொருள்யாப்பணியின்சுவை
பழுத்தநெஞ்சர்முனென்றமிழ்ப்பான்மையே.

(இ-ள்.) செழிப்புற்ற வல்லமையான இருளையெல்லாம் ஓட்டும் கிரணமுள்ள சூரியன் முன்னே கண்விழித்துப் பயமில்லாமல் வெளிச்சம் தர அரிதான மின்மினி அந்த இருளை நான் ஓட்டுகிறேனென்று வந்ததுபோல, எழுத்தும் அவ்வெழுத்தாலாகிய சொல்லும் அச்சொல்லாலாகிய பொருளும் இம்மூன்றுறுப்பாலாகிய செய்யுள் அலங்காரமென்னும் ஐந்து இலக்கணத்தின் பொருளாகிய சுவை விளைந்த அறிவுள்ள புலவர்முன் என் தமிழ் எவ்விதமாகுமென்பதறியாமற் சொல்லத்தொடங்கினேன்.—எ-று. (௧௨)

ஞானமெய்த்தொண்டனைப்பணிகொள்ளத்தென்
றானிலந்தொழுநன்குமுளாபுரஞ்
சீநிவாசனமர்ந்தசெழுங்கதை
யானறிந்தறிசைக்கலுற்றேனரோ.

(இ-ள்.) ஞானமிகுந்த மெய்மையாகிய அடியவனென்னும் அனந்தநாதனாகிய பரமபாகவதனை ஆட்கொள்ள சம்புத்தீவமெல்லாம் தொழத்தக்கதாய் நன்மைமிகுந்த குமுளமென்னும் தலத்திலே சீநிவாசன் எழுந்தருளியிருந்த நல்ல சரித்திரத்திலே அடியேனுக்குத் தெரிந்தமட்டுஞ் சொல்லலுற்றேன்.—எ-று. ௧௩

வாசுதேவனைவாழ்த்தத்தொடங்கினல்
தாசனைப்பணிகொண்டசரிதையும்
பேசுவாழ்வும்பிறந்தன்புமேவுமென்
றாசைபற்றியறையலுற்றேனரோ.



(இ-ள்.) வாசுதேவனாகிய ஸ்ரீமந்நாராயணனைத் தோத்திரஞ்செய்யத் தொடங்கினல் தாசனாகிய அடியேனிடத்தில் ஏவலைக்கொண்ட சரித்திரத்தையும் அவ்விறைவனுடைய மகிமையையும் வாயாரப்பேசும் வாழ்வுண்டானதால் எவ்வளவேனும் பத்திமார்க்கம் கிடைக்குமென்னும் ஆசையால் இத்தமிழைச் சொல்லுவேன்.—எ-று. இதுகாரணம். (௧௪)

தக்கநூற்றெண்டலங்களிருக்கவே
மிக்கணின்பமுற்றென்புகழ்ந்தரெனில்
சர்க்கரைப்பிள்ளைதன்னைமுத்தாடிடக்
கைக்குமோரிடங்காண்பவரில்லையே.

(இ-ள்.) பூர்வத்திலே மேன்மையாக ஸ்ரீமந்நாராயணனெழுந்தருளியிருக்கும் சுயம்பிரகாசமாயுண்டான திருப்பதிகள் சுவயமென்றும், தேவர்களுக்குப் பிரத்தியக்ஷமான திருப்பதிகள் சையுக்தமென்றும், தவஞ்செய்த ரிஷிகளுக்குப் பிரத்தியக்ஷமான திருப்பதிகள் ஆரிடமென்றும், மானிடராலே நியமித்தது மானிடமென்றும் இப்படி நான்குவகையாய்ச்சொல்கின்ற நூற்றெட்டுத் திருப்பதியுமிருக்க, இத்திருப்பதியை விசேஷமாகப் புகழ்ந்ததெல்தனில்: சர்க்கரையினாலே உண்டாக்கின பிள்ளையை முத்தமிட்டால் எங்குந் தித்திப்பதல்லாமல் ஓரிடத்திற் கைப்பு என்பது தோன்றுமென்பது தெரிந்துசொல்வாரில்லை; ஆகையால் எவ்விடத்திலும் பரவாசுதேவனிருப்பானென்று தியானித்து உறுதியாய்த் தோத்திரஞ்செய்யலாம்.—எ-று. (௧௫)

புதியநூலும்புதியதலமுமென்
னிதயமுற்றிடினீசனிடமெழுத்
துதவுசொற்பொருளுண்டுசெய்வாரிதைத்
துதியுந்தேவுந்தொழுதலுந்தொன்மையே.

(இ-ள்.) புதிய புராணமென்றும் புதிய தலமென்றும் மனத்திலே நினைத்துச்சொல்வோர்களுக்குத் திருஷ்டாந்தம் எப்படியென்றால்: தெய்வமும் தெய்வங்களிருக்கும் தலமும் உயிருடல் முதலாகிய எழுத்தும் அவ்வெழுத்தாலாகிய சொல்லும் அச்சொல்லாகிய பொருளும் புதிதாயுண்டாக்குவாரில்லை, ஆகையால் தோத்திரஞ்செய்வதும் அத்தோத்திரத்திற்கு இசைந்த பெருமாளும் அவரை வணங்குவதும் பழமையாகவே இருக்கும்.—எ-று. (௧௬)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

தருவளர்தென்திருப்பதிமாவளமனந்தன்றனைமாலடிமைகொளல்வடவடுக்கிற், றெரிசனஞ்செய்வித்தன்முன்றேற்றங்காட்டல் செப்பரியமண்ணமுடித்தலுபதேசித்த, லரியினாதனமேசெய்யவந்தவரும்பிழையோடருங்கச்சியான்செயலுங்கண்டத், தருவினையயகற்றியிடர்களையொழித்தல்விழிப்பென்னுமருள்சிறப்புமறிந்தவாவியம்பலுற்றேன்.

(இ-ள்.) விருட்சங்கள் வளர்ச்சிபெற்ற தென்திருப்பதியினிட பெருமைபொருந்திய வளமும், அனந்தநாதனை ஸ்ரீநிவாசமூர்த்தி அடிமைகொண்டதும், அந்த அனந்தநாதனுக்கு வடவேங்கடத்தை மாதவன் சேவிப்பித்ததும், முன் தோற்றத்தை அறிவித்து சொல்லுதற்கரிதான இரண்டு கலியாணஞ்செய்வித்ததும், உபதேசஞ்செய்ததும், அந்த அனந்தநாதன் அருமையாகச்செய்யும் ஆராதனத்தை தான் செய்வேனென்றுவந்த பொய்ஆராதனை ஆன சரித்திரமும், காஞ்சிபுரத்திலிருந்து ஒருபிராமணன் கொண்டுவந்த வசநாபியைக்கண்டகற்றியதும்; கழுத்திலே யொருவனுக்கு மிகுதியான கண்டமாலையை யொழித்ததும், இடர்களை அனேகருக்கு நீக்கினதும், ஒருபிராமணன் பெண்ணுக்குக் கண் கொடுத்ததும், பம்பாநதி தீர்த்தத்தின் பெருமையும் ஆகப்பாயிரமுதற் பதின்மூன்று சருக்கத்தொகையாக எல்லாம் வகுத்துச் சொல்லுவேன்.—எ-று.

விருபாக்ஷிலிங்கனென்பது ஆக்கியோன்பெயர், வராகபுராணத்தில் என்பது ஸ்ரீநிவாசன்பருக்கு அனந்நாதனை மாலடிமைகொண்ட சரிதையை சொன்னதென்பது வழி, பதின்மூன்றுசருக்கமென்பது எல்லை, தென்திருப்பதிபுராணமென்பது நூற்பெயர், தமிழ்க்கவியாலியம்பலுற்றேனென்பது யாப்பு, இத்தமிழை பதின்மூன்றுசருக்கமாக தொகுத்து ஓதிய சரித்திரம் நுதலிய பொருள், ஸ்ரீநிவாசன் பக்தர்களும் அரங்கேற்றுழி இருந்தவரும் கேட்போர், அங்கு வழங்கல் செயல், வினைமாற்றுமென்பது பயன், அரங்கேற்றினகாலம், ஸ்ரீநிவாசன் சந்நிதியென்பது களன், அன்புமேவுமென்று ஆசைபற்றி அறைவேனென்பது காரணமென்பதும் பெற்றாம். (கஎ)

## சிறப்புப்பாயிரம்.

வடமலையானனந்தநாதன் மீதன்புவழங்குசெயல்புகலவினைமா
ற்றுமன்றே, தடமருவுமயூரபுரிமாலிங்கன்றாட்டாமரையைத்துதிவீ
ரசைவாசாரன், படிபுகழுமிலக்கணநான்முழுதுணர்ந்தபாவலர்கள்
புகழ்விருபாக்ஷிலிங்கன், திடமுதவுசீநிவாசன்முன்னேதென்திருப்
பதிபுராணமரங்கேற்றினனே.

(இ-ள்.) வடவேங்கடத்திலிருக்கும் பரமாத்மதேவன் அனந்தநாதன்மீதிலே கிருபைசெய்தருளிய சரித்திரத்தைச்சொல்ல அந்த நாராயணன் வினைகளைத்தீர்ப்பானென்றதை நினைத்துக் கவுரிமாயூரமென்னும் தலத்திலே இருக்கும் மாலிங்கதேவன் பாததாமரையைத் துதிக்கும் வீரசைவசிரோமணி இப்பூமண்டலத்தில் எல்லாரும் புகழும் ஐந்திலக்கணமும் அறிந்தவன், விருபாக்ஷிலிங்கனென்னும் பெயருள்ளவன், அனேக வித்வான்கள் சூழத்தக்கதாகத் திடத்தைக் கொடுக்கும் ஸ்ரீநிவாசப்பெருமாள் சந்நிதியிலே தென்திருப்பதிபுராணமென்னும் பெயர்பெற்ற தமிழை அங்குள்ளவர் கேட்க அரங்கேற்றினன்.—எ-று. ()

க-வது சிறப்புப்பாயிரப்படலமுற்றிற்று.

---

## நாட்டுப்படலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நந்திமாமலையிற்றோன்றிநாகஞ்சந்தகில்பூவேங்கை
தந்திநீண்மருப்பைவாரித்தழற்சுரம்புறவநீந்திச்
செந்திருவிளங்கும்பண்ணைசேர்ந்துயர்வேலைபுக்குச்
சிந்துலாவியவம்பெண்ணைதிகழ்ந்தொளிர்தொண்டைநாடு.

(இ-ள்.) பெருமைபொருந்திய நந்திமலையிலே மேகம்பொழியவுதித்துப் புன்னைமரங்களையும் அகில்மரங்களையும் பூவுள்ள வேங்கைமரங்களையும் யானையின் நீண்ட கொம்புகளையும் இழுத்துக்கொண்டு அனல்வீசும் பாலைநிலங்களிலேயும் முல்லைநிலங்களிலேயும் தவழ்ந்து செந்தாமரையில் வீற்றிருக்கும் இலக்ஷமீகடாக்ஷம் விளங்கிய மருதநிலத்திலோடிப்பாய்ந்து சமுத்திரத்திற்போய்ப்புகுந்து கலக்கப்பட்ட நீரானது மிகுந்த அழகுபொருந்திய பெண்ணையின் கீர்த்தி பிரகாசித்துக்கொண்டு இருக்கும் தொண்டைநாடென்னும் ஒருநாடுண்டு. (க)

நானிலப்பொருளுந்தெய்வநான்மறைப்பொருளாறங்க
மானமூவாறுபுராணமன்புநற்றவமெய்த்தானம்
ஞானமொப்புரவொழுக்கநன்றிநட்பறிவுதூய்மை
தேனணிமலராடக்தசெல்வமுமியைந்தநாடு.

(இ-ள்.) பின்னும் அந்நாட்டின்வண்மை எப்படியென்றால்: மலைபடுதிரவியங்களும் காடுபடுதிரவியங்களும் நாடுபடுதிரவியங்களும் கடல்படுதிரவியங்களும் தெய்வத்தன்மையாகிய நான்குவேதமாகிய அரும்பொருளும் ஆறுசாஸ்திரங்களும் நிலைமையான பதினெண்புராணங்களும் தயையும் நல்ல தவமும் சத்தியமும் தருமமும் ஞானமும் ஒப்புரவும் வணக்கமும் நன்றிமறவாமையும் நேசமும் விவேகமும் பரிசுத்தமும் தேன்பொருந்திய செந்தாமரைப்பூவிலெழுந்தருளியிருக்கும் மகாலட்சுமியளிக்கும் சகலபாக்கியமும் பொருந்தியிருக்கும் அந்தநாடு.—எ-று. (உ)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

முன்னவன்வணங்குமாலடி செய்வருமம்முதிர்சுவைநாற்கவிப்பெருமான்
தன்னிகரிறைவன்றனைநனியிறைஞ்சத்தனித்திருநின்றவூரடைவான்
அன்னவனுலகின்காவலுக்கேகவன்றனைக்காணுமார்வத்தாற்
பின்பவனுறையும்பலதளியெய்தப்புரிந்ததுமப்பெருநாடு.

(இ-ள்.) எப்பொருளுக்கு முன்னவனாகிய ஸ்ரீமந்நாராயணனது உபயபாதங்களை வணங்கி முதிர்ந்த சுவையொடுகூடிய செந்தமிழ்பாடும் நாற்கவிப்பெருமானென்னும் திருமங்கைமன்னன்; தனக்குத்தானே உயர்ந்த புகவானவ

மங்களாசாஸனஞ்செய்யும்படி திருநின்றவூருக்குப்போக, அவர் உலகசம்ரக்ஷணார்த்தமாகப்போயிருக்க அவனாக்காஞுமாகையால் அவர் எழுந்தருளியிருக்கும் பல திருப்பதிகளுக்கும் போகச்செய்தது மப்பெரியநாடாம்.—எ-று. (௪)

நீர்வணன்றனைநீர்மலைக்கேகுகெதியிதுவாமெனப்புகன்ற
சீர்வணத்தொருவன்செந்தமிழ்பாடுஞ்சிறப்பினைக்கடைப்பிடித்தாங்கண்
போர்வணத்தொழிலாழிக்காயுத்தேட்புரவலன்வாழுமச்சிலம்பை
யோர்வனென்றவன்றுளூன்னியோராயுமதிகழித்ததுமந்நாடு.

(இ-ள்.) "நீர்வண்ணன் நீர்மலைக்கே போவேனென்னும்" என்கின்ற திருநெடுந்தாண்டகம்பாடிய திருமங்கைமன்னன் திவ்யப்ரபந்தமேழியருளச்செய்கின்ற உறுதிமேற்கொண்டு போர்த்தொழிலமைந்த சுதரிசனமென்னும் சக்கரமேந்திய பகவான் எழுந்தருளியிருக்கும் திருநீர்மலையென்னுந் திவ்யதேசத்தை மங்களாசாஸனஞ்செய்யக் காத்திருக்கச் செய்தது மந்நாடு.—எ-று. (௫)

அயர்வறுமமரர்க்கிறைவனுகளினல்வரையர்தங்கோலத்தோற்றலை, மயர்வறுமதிநன்னலந்தருங்கதியைவாழ்த்திடன்மரபதன்றெனத்தேர்ந், துயர்வறவுயருநிலைதருஞ்சிங்கப்பிரான்றனையுண்மகிழ்ந்திறைஞ்சுந், துயர்வறுதமிழிற்றிங்கவித்தொடையல்துதைந்திலங்குவதுமந்நாடு.

(இ-ள்.) நித்தியசூரிகளுக்குத் தலைவனாகையால் அவ்விராசகோலத்துடன் எழுந்தருளியிருக்கின்ற தேப்பெருமானைவிட்டு சகலசேதனர்களுக்கும் "மயர்வறமதிநலம்" அருள்கின்ற ஸ்ரீயபதியே நாம் வாழ்த்தப்படும் பரம்பொருளென்று திருவுளத்திலெண்ணி "உயர்வற உயர்நலமுடையவனாய்" அத்திவ்யதேசத்திலெழுந்தருளிய அழகியசிங்கனைப்பாடிய வைபவமே சிறந்துநின்ற தந்நாடு. (௬)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சோழநாடுடைத்துச்சோறுநலங்குமுத்துளதென்னாடு
வேழமுண்டெழின்மாக்கோதைவெற்புநாடினியசான்றோர்
சூழநாடவருமெச்சுந்தொண்டைநாடெனமுன்னவ்வை
வாழுமுத்தமிழோர்நாவால்வழுத்தியதிருநன்றே.

(இ-ள்.) பின்னும் அந்நாட்டுவளம் எப்படியிருந்ததென்றால்: சோழதேசம் அன்னம் உள்ளதென்றும், பிரகாசமான முத்துகளுள்ளது பாண்டிநாடென்றும், யானைகளுள்ளது அழகுபொருந்திய பெருமையுடைய சேரனுடைய மலைநாடென்றும், இனிமையாகிய பெரியோர்கள் நிறைந்திருக்கும் நாடானது யாவரும்புகழும் தொண்டைநாடென்று முன்னே ஔவையார் இயல் இசை நாடகமென்னும் முத்தமிழ் நிறைந்துவாழும் நாவினாலே பாண்டியன்முன்னே சொல்லப்பட்ட இலக்ஷ்மீகரம்பொருந்திய நாடு.—எ-று. (௭)



கண்ணனைக்கோவலூரிற்கண்டுகண்களித்துப்பாடும்
புண்ணியமுதல்[illegible]மூவர்புரிதவமிருந்துமொரு
மெய்ண்ணிலாப்பனுவ[illegible]டியிருக்குமந்திரமென்றிந்த
மண்ணுளோர்புகழு[illegible]ல்வழங்கிறுதிந்நாடே.

(இ-ள்.) பின்னும் இராத்திரிகாலத்திலே மிகுந்த மழைபெய்யும்வேளையில் திருக்கோவலூரென்னும் திவ்யதேசத்தில் பொய்கை பூதத்தார் பேயார் என்னும் ஆழ்வார்கள் மூவரும் ஒருவர்பின் ஒருவராய் முறையே இடைகழியிலே ஓரிடத்தில் எழுந்தருளியிருக்கிற கண்ணனால் நெருக்குண்டு ஞானநேத்திரத்தால் கண்ணனைக் காணப்பெற்றுக் களித்து (வையந்தகளியாவார்கடலேநெய்யாக) என்றும், (அன்பேதகளியா யார்வமேநெய்யாக) என்றும், (திருக்கண்டேன் பொன்மேனிகண்டேன்) என்றும் முறையே மூவராலும் மூன்றந்தாதியும் பாடப்பெற்றும், பின்னும் தவமுடையவர்களும் எண்ணிக்கையில்லாத சரஸ்வதி குடியிருக்கும் வீடென்று இந்தப் பூமியிலுள்ளவர் யாவரும் புகழத்தக்கதாக அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் இம்முப்பாலும் பொருந்திய திருக்குறளென்னும் நூலியற்றிய திருவள்ளுவர் முதலாகிய பெரியோர்களும் அவதாரஞ்செய்த நாடு.—எ-று. (௮)

இருமையுமன்னைக்காக்குமெந்திழையுருத்திராணி
பெருமைசேரிமவான்பெற்றபேதைபார்வதிபவானி
யருமையாயுலகம்போற்றுமம்பிகையாளெண்ணான்கு
தருமமேவளர்த்துயர்ந்தசதிர்பெறுந்தொண்டைநாடே.

(இ-ள்.) இம்மையினும், மறுமையினும் மன்னனைக்காத்து இரக்ஷிக்கும் எந்திழையாகிய உமையவள், உருத்திரனுக்கு மனைவியானவள், பெருமைபொருந்திய மலையரசன்பெற்ற பெண்ணாகிய பார்வதிதேவி, பவானியென்னும் நாமமுள்ளவள், அருமையாய் உலகிலுள்ளவர்கள் தொழப்பட்ட அம்பிகை, அவள் முப்பத்திரண்டுதருமத்தையும் இந்தப்[illegible]னாலே யுயர்ந்தபெருமையைப் பெற்றிருப்பது தொண்டைநாடு.—எ-று. (௯)

திருமலைகச்சியெவ்வுட்டென்னல்லிக்கேணிமற்றும்
வருதலமனைத்தோன்றமகிழ்ந்திடவளித்துமிக்க
தருமமேவளர்த்துயர்ந்ததகைமையோருறைதலாலே
பெருமைபெற்று[illegible]போற்றும்பொருட்டொண்டைநாடே.

(இ-ள்.) பின்னும் திருவேங்கடமென்னுந் தலமும், திருக்கச்சியாகிய காஞ்சீபுரமும், திருவெவ்வுளூரும், அழகுள்ள திருவல்லிக்கேணியும் இதுமுதலாக வரப்பெற்ற பல தலங்களும்தோன்ற மனமகிழ்ச்சியுடனே இடங்கொடுத்தும், பின்னும் மிகுந்த தருமங்களை வளர்த்தும் உயர்ந்த பெருமையுள்ளவர்கள் வாசமாயிருக்கிறபடியினாலே மகத்தாகிய பெருமையைப்பெற்று உலகங்களெல்லாம் புகழ்ந்தும் நிற்பது பெரிதாகிய திருவைவிளங்கிய தொண்டைநாடு.—எ-று.

ஆலையினரவங்கீதமணிச்சிலம்புமலைவேத
வோலமுந்தகர்க்குழும்பூழோங்கமு[illegible]ங்
கோலமாங்குயிலினோசைகுரவை[illegible]ன்சும்மை.
வேலையைவென்றுகொண்[illegible]விக்குமன்றே.

(இ-ள்.) பின்னும் அந்நாட்டின் வளமைப்படியென்றால்: கரும்பு ஆலையின்சத்தமும் சங்கீதத்தின் சத்தமும் மாமர்கள் காற்சிலம்பினொலியும் வேதபாராயணசத்தமும் ஆட்டுக்கிடாக்களும் காடைகளும் மிகுதியாய்ச் சண்டைசெய்கின்ற சத்தமும் உழத்தியர் குரவையாட்டின்சத்தமும் படைமுரசு கொடைமுரசு கலியாணமுரசு என்னும் மூன்று முரசின்சத்தமும் ஆகிய இச்சத்தங்களெல்லாம் ஒன்றாய்க்கூடி சமுத்திரத்தின் சத்தத்தையும் செயித்து மழைபொழியும் மேகசத்தத்தையும் மீறிச்செவிக்கும்.—எ-று. (கo)

நாட்டுப்படலமுற்றிற்று.

ஆக படலம் உ-க்கு திருவிருத்தம்-உஅ.

---

## தென்திருப்பதிப்படலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வளம்பெறுமந்தநாட்டின்மாநிலமகள்கண்ணென்ன
விளம்பிறைதனக்குநேராயிசைவளர்குமுளந்தன்னி
லுளங்குளிரநந்தநாதனொண்மலர்த்தாளைப்போற்றுங்
களங்கமிலடியார்க்குள்ளோர்கவின்பரந்தாமனம்மா.

(இ-ள்.) முன்சொன்ன வளங்களைப்பெற்றிருக்கும் அந்தத் தொண்டைநாட்டின் மகத்தாகிய பூமிதேவிக்கு நேத்திரம்போலவும் இளமையான பிறைச்சந்திரனைப்போல நாளுக்குநாள் வளர்ச்சிபெற்றுப் புகழ்நிறைந்த குமுளமென்னும் ஒருதலமுண்டு. அத்தலத்திலே அரிபத்தியினாற்சிறந்த மனக்குளிர்ச்சியுள்ள அனந்தநாதனென்னும் ஓர் பரமபாகவதனுண்டு. அவ்வனந்தநாதனுடைய பிரகாசமுள்ள தாமரைமலர்போன்ற திருவடிகளைப்பரிந்து தோத்திரஞ்செய்யும் குற்றமற்ற பாகவதர்கள் அநேகருண்டு. அவர்களுள் ஒப்பற்ற கல்வி நலமுதலிய குணங்கள் நிறைந்த பரந்தாமனென்னும் ஒருவருண்டு.—எ-று. (க)

அவன்றிருவரங்கநாதனடிதெரிசிப்பானுன்னித்
தவம்பெறுமன்பர்கூட்டந்தன்புடைசூழவேகி
ப்பைந்தொலைத்தருளும்பொன்னிப்பாணியிற்படிந்தெழுந்து
நவம்பெறுஞ்சோலைதன்னைநாடியுத்தரத்திற்சென்றான்.

(இ-ள்.) அந்தப் பரந்தாமர் நம்பெருமாள் திருவடிச்சேவை சேவிக்க நினைத்து தவமிருந்த பாகவதர்கூட்டம் தன்னைப் புடைசூழ்ந்துவரப் போய்ப்



பாவங்களையெல்லாம் நீக்கி மோக்ஷத்தைக்கொடுக்கும் காவேரிநீரிலே தீர்த்தமாடித் நன்னனுஷ்டான முடித்துக்கொள்ளும் பொருட்டாகப் புதுமைபெற்ற ஒரு சோலையை உத்திரத்திலே கண்டு அந்த இடத்திற்குச்சென்றார்.—எ-று. (உ)

மைவிசும்பிடையிற்செல்லமதிமுடிதவழ்ந்துசெல்லத்
தைவரல்புரிந்துநின்றதளிரமுதங்களூற்றப்
பைவியாளஞ்சுமந்திப்பாருளோருறைகண்மாந்தி
நைவிலாமுனிவோர்வாழுநைமிசாரணியமொத்த.

(இ-ள்.) அந்தச்சோலை கறுத்தமேகங்கள் பக்கங்களிலே சூழவும் சந்திரலோகமட்டு முயர்ச்சியாய் வளர்ந்து சந்திரன் அத்தோப்பினது முடியிலே தவழ்ந்து நடக்கின்றமையால் மேன்மையான அழகுபொருந்திய தளிர்போன்ற கையினாலே அந்த சந்திரன்மேலே தடவி யமுதங்களைக் கீழேயூற்றப் படமுள்ள ஆதிசேஷன் சுமந்துகொண்டிருக்கின்ற பூமியிலுள்ளவர்கள் அத்துளிகளை உண்டு மரணம் நீங்கும்படி வருத்தமில்லாத ரிஷிகள் வாழ்ந்திருக்கும் நைமிசாரண்யத்துக்குச் சமானமாகவிருக்கும்.—எ-று. (ங)

தண்ணறாத்துளிக்குஞ்சோலைத்தலத்துமாலடியார்சூழ்தல்
எண்ணியதொகையைச்சொல்லவிந்திரனளத்தற்கொல்லாக்
கண்ணிமையுற்றாயேன்கண்டவைபுகலேனென்னும்
வண்ணமெய்யன்பர்போற்றும்வைகுந்தமென்னலாமே.

(இ-ள்.) குளிர்ச்சியான தேன் மிகுதியாகத்துளிக்கின்ற மலர்களையுடைய அந்தச்சோலையினிடத்திலே திருமாலடியாரது பல திருக்கூட்டங்கள் சூழ்ந்திருக்கின்றன: அவ்வடியார்கள் கூட்டங்கண்டு இவ்வளவென்றெண்ணித் தொகையாக்கி ஆயிரங்கண்ணுள்ள தேவேந்திரனாலும், இரண்டாயிரம் நாவுள்ள ஆதிசேஷனாலுஞ் சொல்லவரிதாகும்; இமைக்கும் கண்ணுடைய சிற்றறிவினோர் அப்பெருந்தொகையையறிந்து சொல்லமுடியுமோ? ஆனாலும் எனக்குத் தோன்றியமாத்திரஞ் சொல்லுகிறேன்; அழகாகிய மெய்யன்புநிறைந்த அடியார்கள் சூழ்ந்து தோத்திரஞ்செய்யும் வைகுந்தத்திற்குச் சமானமென்றே சொல்லலாம்.—எ-று. (ச)

சோலையினோர்சார்சென்றுசொற்பெறுநியமமுற்றிச்
சீலமார்பரந்தாமன்றான்றிருமாலைப்பரவிவாழ்த்துங்
கோலநல்லமுதாகாதாற்குடித்தவணிருந்தோர்வந்து
சாலவேயுபசரித்துச்சாற்றுகின்றமைமென்றார்.

(இ-ள்) அத்தோப்பிலே ஒருபக்கத்தில்வந்து சொல்லுதற்கருமையான தமது நியமமுடித்துக்கொண்டு ஆசாரம்பொருந்திய பரந்தாமர் திருமாலுடைய ஸ்ரீபாதங்களைத் தோத்திரஞ்செய்யும் அழகிய நல்ல அமுதத்தைக் காதினாலே புசித்து அவ்விடத்திலெழுந்தருளியிருந்த திருத்தொண்டர்களெல்லாம் வந்து

...க வுபசாரஞ்சொல்லி யுமது திருநாமத்தைச் சொல்லியருள்கவென்று கேட்டார்கள்.—எ-று. (ரு)

மாதவனுலகமீன்றான்மாசேனைமன்னன்மாறன்
காதமாமுனிமெய்ஞ்ஞானநல்லுய்யக்கொண்டார்நான்கு
வேதமும்புகழிராமர்மேன்மைசேராளவந்தார்
பூமதறிவெந்திராசன்சொன்முறையிற்றொல்வலிமைபூண்டார்.

(இ-ள்.) அப்படிக்கேட்ட திருமாலடியார்களைப்பார்த்து பராந்தாமர் அருளிச்செய்கின்றார்; ஆதியிலே முத்திக்கு வித்தாகிய மந்திரராஜமாகிய அஷ்டாக்ஷரப்பொருளை முதற்பெருந்தேவாகிய ஸ்ரீமந்நாராயணன் இவ்வுலகங்களையெல்லாம்பெற்ற ஸ்ரீபெரியபிராட்டியாருக்கு உபதேசஞ்செய்ய, அந்த ஸ்ரீதேவியார் சேனைமுதலியாருக்குபதேசிக்க, அவர் ஸ்ரீசடகோபருக்குபதேசிக்க, அவர் ஸ்ரீமந்நாதமுனிகளுக்குபதேசிக்க, அவர் நல்ல மெய்ஞ்ஞானம் விளங்கிய உய்யக்கொண்டாருக்குபதேசிக்க, அவர் நான்குவேதமும் புகழ்கின்ற மணக்கால் நம்பிகளுக்குபதேசிக்க, அவர் முதிர்ந்த அறிவுள்ள பரசமயகோளரியாகிய எம்பெருமானருக்குபதேசிக்க இம்முறைப்படியே முன்னாலே ஆசாரியபரம்பரை நடந்தது.—எ-று. (சு)

கதிரிருள்கடியுமாறுகடலுலகுயிர்கட்கெல்லாம்
முதிர்திருஞானம்வீறிமுதொளிவிசும்பினேறத்
துதியெழுபத்துநால்வர்சொற்றனரெதிராசன்றன்
விதியினிலநந்தநாதன்வீறினன்விண்டுகூற.

(இ-ள்.) சூரியன் பேரிருளை ஓட்டும்விதம்போலக் கடலாற்சூழப்பட்ட உலகத்திற்ற மக்கள் மேன்மையான ஞானமிருந்த பரமபதநாட்டையடையும்படி ஸ்ரீராமாநுசமுனிவருடைய கட்டளைப்படி எழுபத்துநான்கு சிங்காசனாதிபதிகள் உபதேசித்தார்கள். ஸ்ரீசர்வேசுரன் தனது திரோதககடாக்ஷத்தினால் உபதேசிக்க அனந்தநாதசுவாமி மேன்மைபெற்றனர்.—எ-று. (எ)

பொன்னுபதேசம்பெற்றபுகழ்ச்சேனைநாதனென்ன
மன்னுமால்வாக்காலேந்திருவுரைமைபெற்றுயர்ந்துவாழ்வோன்
என்னையாளனந்தநாதனிணையடிக்கடிமைசெய்ய
இந்நிலத்துதித்திருந்தேன்யான்பராந்தாமனென்றான்.

(இ-ள்.) பெரியபிராட்டியார் வாக்கினாலே உபதேசம்பெற்ற மகத்தாகிய புகழ்பொருந்திய சேனைமுதலியாரைப்போல நிலைமைபெற்ற ஸ்ரீநிவாசக்கடவுள் திருவாக்கினாலே பஞ்சசமஸ்காரமும்பெற்று உயர்ந்த வாழ்வுண்டாயிருக்கின்றவராகி என்னை யடிமைகொண்டாரும் அனந்தநாதனென்னும் பெயருள்ளவர், அவருடைய இரண்டுபாதத்திற்கும் அடிமைத்தொழில்செய்ய இப்பூமியினிடத்திலே யான் பிறந்திருந்தேன், என்னுடைய பெயர் பராந்தாமனென்று தன்னைக் கேட்ட திருமாலடியார்களுக்குச் சொல்லியருளினார்.—எ-று.



ஐந்துவளமை என்றது பஞ்சசமஸ்காரத்தை. இதனை—" சக்கரஞ்சங்கி நுபயத்திற் பொறித்தபின்பு தயவுடனேபன்னிரண்டு திருமண்சாத்தித், சிக்கெனவே தாசனென்று நற்பேரிட்டுச் செவிகுளிரமந்திரமு முபதேசித்து, அக்கினியிற்செந்நெலவல் காய்ச்சுங்கூட்டி யாவினெய்யாற்புனற்சனன வோமம்செய்தே, இக்கிரியையைந்தினாற் றிருத்திக்காக்கைக் கெழிற்குருவாயுதித்தனையே யெம்பிரானே" என்றதனாலுமறிக. (அ)

என்றலுமெழுந்திறைஞ்சியிருநர்தவத்தொழும்பர்யாஞ்செய்
தொன்றியதவங்களெல்லாந்தொக்கநின்னுருவேயாக
வென்றிசேர்கிரிமாயன்விளையாட்டையெல்லாமெங்கட்
கின்றியம்பிடுதியென்னவினிதவர்க்கியம்பலுற்றான்.

(இ-ள்.) இப்படி சொன்னமாத்திரத்திலே ஸ்ரீமத் பரமவைதிகமார்க்கத்திற்குரிய தொண்டரொழுந்திருந்து வணங்கித் தோத்திரஞ்செய்திருந்துகொண்டு முன்னாலே நாங்கள்செய்த மிகுதியாகிய தவங்களெல்லாம் இப்போது உமது உருக்கொண்டு வந்தன; ஆகையால் வெற்றிபெற்ற சக்கரதாரனாகிய எங்கள் மாயவன்செய்த திருவிளையாட்டையெல்லாம் எங்களுக்குத் தவமீடேறும்படியாக இப்போது சொல்லியருளவேண்டுமென்று பணிவாகக்கேட்கத் திருச்செவியேற்றுப் பராந்தாமர் அவர்களுக்குச் சாதித்தருளுவாராயினர்.—எ-று. (கூ)

மனவிருள்நீக்கப்பார்மேன்மானிடற்கெண்ணிலாத
தினகரருதித்ததென்னத்திவளொளியறிஞர்நம்முன்
கனிவிலாவுளத்தேனுங்கள்கருத்தறிந்திலனீர்கேட்க
இனிதியானுணர்ந்தவாற்றானிசைப்பலென்றிசைக்கலுற்றான்.

(இ-ள்.) இவ்வுலகின்கணுள்ள மக்கட்பிறப்புடையாருக்கு மனவிருளாகிய அஞ்ஞானத்தை முற்றுமொழிக்கும்படி இளஞ்சூரியர் உதயமாயினாற்போல எழுந்தருளிய எல்லையில்லாத ஞானமுடைய உங்களுடன் அன்பில்லாத மனத்தையுடைய நான் நீங்கள் கேட்கும் அக்கருத்தை யறிந்துசொல்லும் வலியிலேன் ஆயினும் நீங்களனைவரும் ஆசையாய்க் கேட்கிறபடியால் தெரிந்தமாத்திரஞ் சொல்லுகிறேனென்று சொல்லுவார்.—எ-று. (க0)

சொற்றொகைகடந்துவெள்ளைத்துழிலாப்புனைந்தோன்வேதன்
நற்கலைமுனிவரோனோர்கலையறுஞானநான்கு
முற்பெறுவேதமின்னோர்முற்றுறக்காணவொல்லாக்
கொற்பெறுமாழியெம்மான்குணநிலைகூறலாமே.

(இ-ள்.) சொற்களின் கூட்டத்திற்கு எட்டப்படாமல் வெண்மையாகிய சுத்த சந்திரனைத்தரித்த சிவன் பிரமன் நல்ல சாத்திரங்களையுணர்ந்தோர், மற்றவர் குற்றமற்ற மெய்ஞ்ஞானத்திற்கு மூதன்மையான நான்குவேதம் இப்படிப்பட்டவர்கள் முற்றுங்காணமுடியாத அசுரரைக்கொல்லுந் தொழில்பெற்ற

சுதரிசனத்தைஏந்திய எம்பெரியோனது அநந்தகல்யாணகுணங்களை எடுத்துச் சொல்ல யாரால் முடியும்.—எ-று. (கக)

இராசதகுணத்தாற்செய்யவிருங்கமலத்தோனுற்றான்
பொராவருதாமதத்தாற்புரிசடையானுள்மேவிப்
பாராவருசத்துவத்தாற்பாங்குரியாகின்றே
ஆராவணையமலனெம்மானுடல்சிற்சிலவுரைப்பாம்.

(இ-ள்.) இராசதக்குணத்தினுல் சிவந்த பெரிய தாமரைப்பூவிலுள்ள பிரமனுக்குள்ளும், எல்லா நற்குணங்களையுமழிக்கும் தாமசகுணத்தினுல் செஞ்சடையையுடைய சிவனுக்குள்ளும் எழுந்தருளி [illegible] சத்துவகுணத்தினை விரும்பி உபேந்திரனுகி முத்தொழிலையும் நீங்காதுசெய்து சேஷசயனத்தில் அறிதுயில்செய்கின்ற உயர்ந்தோனது திருவிளையாடல்களில் மிகச் சிலவற்றைச் சொல்லுவாம்.—எ-று.

பிரமனுக்குள்ளும், சிவனுக்குள்ளும் உபேந்திரனுக்கும் திருமாலே யந்தரியாமியாயிருக்கின்றனென்பதனை—‘முனியேநான்முகனே முக்கணப்பாவென்பொல்லாக், கனிவாய்த்தாமரைக்கட். கருமாணிக்கமேயென்கள்வா’ எனப் பெரியாரும் பணித்தமையானுமறிக. (கஉ)

மச்சங்கூருமம்வராகம்வாளரிவாமனம்பூ
மெச்சியபரசுராமன்விண்மணிக்குலத்திராமன்
அச்சமில்பலராமன்றண்ணருட்கண்ணன்கற்கிதன்ன
திச்சையாய்த்தசாவதாரமெடுத்தனனிறைவன்மன்றே.

(இ-ள்.) மச்சாவதாரம், கூர்மாவதாரம், ஆதிவராகாவதாரம், ஒளியுற்ற நரசிங்காவதாரம், வாமனாவதாரம், பூமியெல்லாம் புகழ்கின்ற பரசுராமாவதாரம், சூரியகுலத்து ஸ்ரீராமாவதாரம், அச்சமில்லாத பலபத்திராமாவதாரம், குளிர்ந்த கிருபையுடைய கிருஷ்ணவதாரம், கற்கியவதாரம் இப்படி தன் இச்சையினலே பத்தவதாரமெடுத்து விளையாடினன் பரவாசுதேவன்—எ-று.

விண்மணி என்றமை விண்ணின் கண்மணிபோல் சூரியன் விளங்குதலால் என்க. (கங)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மறையவர்க்குமறையுதவிமந்தரமெடுத்துமாதரைகிழுத்தியே
குறைவறப்பிரகலாதனுக்கருள்கொழித்துமோரடியளந்துமா
துறவறத்தியல்புகொண்டுவேந்தர்முடிசூறையாடியுமிலங்கையிற்
சிறையிருந்தவெனதன்னைதன்றுயர்திருத்தினனுயர்கருத்தினன்.

(இ-ள்.) மச்சாவதாரத்திலே சோமுகாசுரனை வெற்றிகொண்டு பிரமனுக்கு வேதத்தை அருள்செய்தும், கூர்மாவதாரத்திலே அமுதங்கடையும்போது பூமி தளர்ந்துபோகாமல் மந்தரகிரியைத் தாங்கியும், வராகாவதாரத்தில் இரணியாக்கனைச்செயித்து மகத்தாகிய பூமியை எடுத்தும், நரசிங்காவதாரத்திலே குறை



வில்லாமல் பிரகலாதனுக்குக் கிருபைசெய்தும், வாமனாவதாரத்திலே பூமியை ஓரடியாக அளந்தும், பரசுராமாவதாரத்திலே பெருமைபொருந்திய துறவறத்தினியல்பாக இருந்துகொண்டே அரசர்கள் தலைகளையெல்லாங் கொய்தும், இரகுராமாவதாரத்திலே இராவணனை வென்று இலங்கையிலே சிறையிருந்த என் தாயாகிய சீதாபிராட்டியார் சிறையையுந் துயரத்தையும் நீக்கியுயர்ந்த குணமுடைய பரவாசுதேவன்.—எ-று. (கச)

பூமிபாரமதகற்றிவானவர்புகழ்ந்திறைஞ்சவனமாகியே
லாமமேவதனெதிர்ஞானநன்னிலைவழங்கியங்கடல்கடைந்துதன்
டாமமேவிடையசோதைமாமடிதவழ்ந்துபூந்துகில்வளர்த்தியே
நேமியாலொளிகரந்துதேர்கடவுநீதியானரியசோதியான்.

(இ-ள்.) பலபத்திராமாவதாரம், கிருஷ்ணவதாரம், கற்கியவதாரம் இத்திருவவதாரங்கள் செய்தருளிப் பூபாரங்களைத்தீர்த்தும், தேவர்கள் புகழ்ந்து வணங்க அன்னவுருக்கொண்டு அழகுபொருந்திய பிரமனெதிரே தோன்றி ஞானமாகிய நல்ல நிலையை யருளிச்செய்தும், அமுதத்துக்காகக் கடலைக்கடைந்தும், பிரகாசமான மேகலாபரணம்பூண்ட இடையுள்ள அசோதைப்பிராட்டியினுடைய மகத்தாகிய மடியிலே தவழ்ந்து விளையாடியும், திரௌபதிக்கு அழகிய வஸ்திரத்தை வளரச்செய்தும், அர்ச்சுனனுக்காகச் சக்கரத்தினலே சூரியனை மறைத்துத் தேரைநடத்தியும் இவ்விதமா யநேகம் திருவிளையாடல்செய்தான் நீதியுள்ள அருமையான சோதிவடிவுடைய அந்த அறவாழியந்தணன்.—எ-று.

அன்னமாய்ப் பிரமனுக்கருமறைகளை யருளிச்செய்தானென்பதனை ‘அன்னமாயருமறைகளருளிச்செய்தவமலனிடம்’ எனப் பெரியாரும் பணித்தமையானும், ‘அன்னமாயருமறைதந்தபாடினன்’ எனக் கம்பநாடர் கூறலானுமறிக. கலி

மாயனந்தனனிசேயன்வேயுலவுவாயனேயனெழினின்மல
காயனன்சதுருபாயன்அன்பர்கள்சகாயனாருள்செய்தாயனைண்
பாயலென்று [illegible]
ஆயிரந்தலையியாளயீமிசையமர்ந்தவானவர்கடலைவனே.

(இ-ள்.) மாயன் நந்தகோபனுக்கு அழகிய திருக்குமாரன், வேய்க்குழலூதிய வாயன், நின்மலமான திருமேனியான், அடியார்களுக்குச் சகாயன், யாவருக்கும் கருணைசெய்கின்ற அழகுள்ள [illegible]த்தன், சதுருபாயமுள்ளான், பஞ்சபாண்டவர்களுக்குச் சகாயன், அவன் படுக்கையாக யோகநித்திரை செய்யும்படி வீசுகின்ற நல்ல ஒளிமிகுந்த மெல்லணையாகிய ஆயிரந்தலையுள்ள ஆதிசேஷன்மேல் அமர்ந்த தெய்வநாயகன்.—எ-று. (கரு)

நாலுவேதனிலைவாலமைத்தபதினாலேனும்பெரியசீலமாந்
தாலமொத்தமதில்வானளாவுதமனியநெடுஞ்சிகரிசொல்லருஞ்
சாலசித்ரமிகுமுத்திரம்மதிதனமணிபதித்துபொன்னுலயக்
கோலமேவுதிருவுருவுகொண்டநகர்குளிர்பொழிற்றிருவரங்கமே.

(இ-ள்.) நாலுவேதத்துக்குரியவனுகிய பிரமதேவன் மனத்தினுலே பண்ணித்த பதினென்றுலோகம்போன்ற பெரிய சிறந்த மதில்களும், சுவர்க்கத்தை அளாவிய பொற்கோபுரங்களும் அளவுசொல்ல அருமையாகிய மிகவும் சித்திரத்தொழில் செய்துள்ள உத்திரத்தின்மேல் சந்திரகாந்தக்கல் பதித்து பொன்னுற் கட்டப்பட்ட ஆலயத்தினது அலங்காரந்தங்கிய சிறந்த அழகுபெற்ற நகரம் குளிர்ச்சியாகிய சோலைகள் சூழ்ந்த திருவரங்கக்கோயிலாம்.—எ-று. (கஎ)

உமையினேடுதன்மக்களோடுமரனேர்ந்துகீர்த்தியம்சேர்தூறங்
கமையினேடுமயனின்பூசனைகள்கடியற்றுநல்வானவர்
தமரதுந்துபிமுழாவினேடுகனிதாமுழக்கவரமாதர்கள்
சமையமாநடமடிக்கவானவர்கடனிமுதல்விழிவளர்ந்தனன்.

(இ-ள்.) தன்மனைவியோடும் குமாரர்களோடும் வந்து சிவன் பெருமானுடைய கீர்த்தியைச்சொல்லப் பெருமையோடு பிரமனின்றுகொண்டு திருவாராதனங்கள் செய்ய நல்லதேவர்கள் பேரோசைசெய்கின்ற துந்துபியினேடு மிருதங்கத்தைக் கொட்டிமுழக்கத் தெய்வப்பெண்கள் அவ்வாத்தியத்திற்கு ஒத்திருக்கும்படி நடனஞ்செய்யத் தேவர்கள் முதல்வன் திருக்கண்வளர்கின்ற தானமாகும் திருவரங்கமென்றது.—எ-று. (கஅ)

பரிதிதாவரியவிருதுமேவுகொடிபகருநாலுமறைமுடிவுணர்
சுருதியாளர்பெறுசரிதையுங்கிருதுசுரர்சமந்திரகீதமும்
இரதியங்குரிசிலுருவநேர்புருடரிரதமாகளிறுகுரகதம்
பெரிதுலாவுமொலிபரவுகச்சிநகர்பெரியரோத்துதிருவாதனே.

(இ-ள்.) சூரியன் தாண்டிநடக்க வரிதாகிய விருதுகளெழுதியிருக்குங் கொடியும், வேதங்களில்வல்ல முனிவர்களுடைய சரித்திரமும், யாகங்களும் தேவர்களுடைய மந்திரகீதமும் அல்லாமல் இரதிக்குத் தலைவனுகிய மன்மதனையொத்த புருடர்களேறுகின்ற தேர், பெரிய யானை, குதிரை இவைகள் உலாவுகின்ற ஒலியுள்ள திருக்காஞ்சியில் எழுந்தருளிய தேப்பெருமான்.—எ-று. கக

சந்திரன்பொலிவமர்ந்தமாமுகவயங்குகந்தரமிலங்கவே
மந்தரப்புயமிருந்தபன்மணிமகிழ்ந்தணிந்ததிருமார்புநற்
சுந்தரக்கமலம்வந்துகந்துமுடிசூடுமெல்லுபயபாதமும்
முந்தையுற்றதனிமுதல்வன்வாழ்வுறுமுதயிந்திரபுரத்தனே.

(இ-ள்.) சந்திரனுடைய வளமையான கிரணங்கள் குடியிருக்கிறதுபோலப் பொருந்திய முகமும், விளங்குகின்ற கழுத்தும், பிரகாசிக்க மந்தரகிரிபோன்ற புயமும், மிகுதியான பலரத்தினுபரணங்கள் மகிழ்ந்தணிந்த திருமார்பும், அழகுள்ள தாமரை மலர்ந்து களித்துக் குடியிருப்பதுபோல் விளங்கும் மென்மையான இரண்டுபாதமும் முதன்மையாகத்தங்கிய ஒப்பற்ற முதற்கடவுள் வாழ்வுமிகுந்த பழய ஐந்திரபுரத்திலெழுந்தருளியிருப்பான்.—எ-று. (உ0)



காவிமைம்முகிலிலங்குதண்ணறைதழைத்துலாவிவருதண்டலை
வாவியங்கமலமிந்திரைக்குமனமகிழவேதினமுமலருமால்
ஓவியங்கணிறைமாடமேல்வளமுமோதுகீதமுதலொன்றியே
கூவுநான்மறையுமேவலின்றியமர்கோவலாமெனமுதலாகுவான்.

(இ-ள்.) மேகங்கள் தாவி மிகுந்த குளிர்ந்த தேன் அதிகமாகப்பெற்று உலாவிவருகின்ற பூஞ்சோலைகளும், குளங்களும், திருமகள் திருவுளமகிழும்படி தினமுமலர்கின்ற செந்தாமரைமலர்களுடைய தடாகங்களும், சித்திரங்கள் நிறைய எழுதிய திருமாளிகைகளும், மேன்மையான வளத்தோடுகூடிய கீதப்பாட்டுகளும் நித்தியமாயுள்ளனவாகி ஒலிக்கின்ற வேதங்களும் ஒழியாமலுள்ள திருக்கோவலூரி லெழுந்தருளியிருப்பான் எம்முடைய முதல்வன்.—எ-று. உக

வேறு.

சித்திரகூடங்கண்டியூர்விளங்குஞ்செம்பொன்செய்கோவினற்குடந்தை, தெற்றியம்பலம்வெள்ளியங்குடிநாங்கூர்தேவனூர்தொகைமணிக்கூடம், உத்தமர்கோவில்கள்வனூர்கூடலூர்வெள்ளக்குளமருநாங்கூர், வித்துவக்கோடுபாபவிநாசம்வெள்ளறையெனும்பெருந்தலமே.

(இ-ள்.) மேலும் திருச்சித்திரகூடமும், கண்டியூரும், விளக்கமான செம்பொன்செய் கோவிலும், திருக்குடைந்தையும், திருதெற்றியம்பலமும், வெள்ளியங்குடியும், திருநாங்கூரும், திருத்தேவனூர்தொகையும், திருமணிக்கூடமும், உத்தமர்கோவிலும், திருக்கள்வனூரும், திருக்கூடலூரும், வெள்ளக்குளமும், அருள்செய்யும் திருநாங்கூரும், வித்துவக்கோடும், பாபவிநாசமும், திருவெள்ளறை என்னும் பெரியதல[illegible]—எ-று. (உஉ)

கோவனெழில்சேர்வானமாமலையகோபிலஞ்சோளசிங்கந்தண்
கோவருத்தனமாறன்விளைநகரிகுறுங்குடிவண்பரிசாரம்
காவளம்பாடிதென்திருப்பேரைகவித்தலந்திருத்தண்காமன்னூர்
கோவில்புள்ளம்பூதங்குடியும்மேற்குளமும்புட்குழியும்வட்டாறும்.

(இ-ள்) பின்னும் ஆகாயமளாவிய அழகுசேர்ந்த வானமாமலையும், அகோபிலமும், சோளசிங்கபுரமும், கோவர்த்தனமும், திருவாறன்விளையும், திருநகரியும், திருக்குறுங்குடியும், வண்பரிசாரமும், காவளம்பாடியும், தென்திருப்பேரையும், கபித்தலமும், திருத்தண்காவும், மன்னூர்கோவிலும், புள்ளம்பூதங்குடியும், மேற்குளமும், புட்குழியும், திருவட்டாறும்.—எ-று. (உங)

வரகுணமங்கைசெங்குன்றூர்தொலைவில்லிமங்கலமயோத்திமணங்கோளூர்,திருமுட்டம்புளியங்குடிதிருத்தஞ்சைசிறுபுலியூர்கணமங்கை, பெருநகர்ப்பார்த்தன்பள்ளிசிமோகூர்பெருங்குளம்வண்வண்நேர்மெய்யம், பிருதிவிண்ணகரம்வாலிவிண்ணகரம்பெரும்புருடோத்தமநாகை.

(இ-ள்.) அவையன்றியும் வரகுணமங்கையும், திருச்செங்குன்றூரும், தொலைவில்லிமங்கலமும், திருவயோத்தியும், திருக்கோளூரும், திருமுட்டமும், திருப்பறங்குடியும், திருத்தஞ்சையும், சிறுபுலியூரும், கண்ணமங்கையும், திருப்பேர்நகரமும், பார்த்தன்பள்ளியும், மோகூரும், பொருநற்குளமும், திருவன்வண்டூரும், திருமெய்யமும், திருப்பிருதியும், திருவிண்ணகரமும், வாலிவிண்ணகரமும், பெருமைபொருந்திய புருடோத்தமமும், திருநாகையும்.—எ-று. ()

சீரகமுறையூர்கோட்டியூரன்பினீர்மலைவதரிகாச்சிரமம்
ஊரகந்திருநாரணபுரமிந்தளூர்துவாரகைகடற்றூனம்
காரகங்குடநாட்டுத்திருப்புலியூர்காட்கரைகோகுலநாவாய்
சாரகேத்திரம்பேர்நைமிசாரணியஞ்சாளக்கிராமம்வேளுக்கை.

(இ-ள்.) திருசீரகமும், உறையூரும், திருக்கோட்டியூரும், அன்பிலும் திருநீர்மலையும், பதரிகாச்சிரமமும், திருவூரகமும், திருநாராயணபுரமும், திருவிந்தளூரும், துவாரகையும், திருக்கடற்றூனமும், திருக்காரகமும், குடநாட்டுத் திருப்புலியூரும், காட்கரையும், கோகுலமும், திருநாவாயும், சாரகேத்திரமும், நைமிசாரணியமும், சாளக்கிராமமும், திருவேளுக்கையும்.—எ-று. உரு

வல்லம்புல்லாணிமதுரைமாண்வெஃகாவைகுந்தவிண்ணகர்நறையூர்
வில்லிபுத்தூர்பாடகநிலாத்துண்டம்விளக்கொளிசோலைமாமலைநல்
அல்லிக்கேணியந்தென்னாட்டுவைகுந்தமாதனூர்திருவிடவெந்தை
மல்லைசீராமவிண்ணகர்தஞ்சைமாமணிக்கோவில்கண்ணபுரம்.

(இ-ள்.) திருவல்லமும், திருப்புல்லாணியும், வடமதுரையும், திருவெஃகாவும், வைகுந்தவிண்ணகரமும், திருநறையூரும், திருப்பாடகமும், நிலாத்துண்டமும், விளக்கொளியும், சோலைமாமலையும், திருவல்லிக்கேணியும், அழகிய தென்னாட்டு வைகுந்தமும், ஆதனூரும், திருவிடவெந்தையும், கடன்மல்லையும், காழிச்சீராமவிண்ணகரமும், தஞ்சைமாமணிக்கோயிலும், கண்ணபுரமும்.—எ-று. (உசு)

அத்தன்வாழ்நின்றையட்டபுயஞ்சீருட்பரமேசவிண்ணகரம்
நித்தியமாநந்திபுரவிண்ணகரநேர்வளரிசையனந்தபுரம்
வித்தைசேர்மூழிக்களமரிமேயவிண்ணகரெவ்வுளூர்முதலாச்
சித்தியைத்தருஞ்சீவரகுணமங்கைதிருப்பதிநூற்றெட்டமிருந்தான்.

(இ-ள்.) யாவருக்கும் பிதாவாகிய பெரியோன் வாழ்ந்திருக்கும் திருநின்றவூரும், அட்டபுயமும், சிறப்புற்ற பரமேஸ்வரவிண்ணகரமும், நித்தியமாகிய நந்திபுரவிண்ணகரமும், அழகு இசைந்துவளரும் கீர்த்தியுடைய அநந்தபுரமும், மெய்ஞ்ஞானக்கல்விமிகுந்த திருமூழிக்களமும், அரிமேயவிண்ணகரமும், திருவெவ்வுளூரும், முதன்மையாகிய சித்திகளைக்கொடுக்கும் சீவரகுணமங்



கையும், இப்படி சொல்லாநின்ற நூற்றெட்டுத் திருப்பதியிடத்திலும் எழுந்தருளியிருந்தான் அப்பரவாசுதேவன்.—எ-று. (உஎ)

எண்ணரும்பரமபதத்திற்பாற்கடலிலிலங்குநூற்றெட்டெனுங்
வண்ணமார்சுயஞ்சைையுத்தமாரிடநன்மானுடமென்னநா
ல... ய, நண்ணிவீற்றிருந்தான்றண்ணுருத்துளிக்குநளினமாதுரத்தினிற்றிகிரி, வெண்ணிலாவெறிக்குஞ்சரிமுகங்கரத்தின்விளங்குமஞ்சனகிரிகடுப்ப.

(இ-ள்.) பின்னும் எண்ணுதற்கரிதான கீர்த்திபெற்ற பரமபதத்திலேயும், திருப்பாற்கடலிலேயும், முன்சொன்ன பிரகாசமான நூற்றெட்டுத்திருப்பதிகளிலும் நீலமேகவண்ணனாகிய எம்பெருமான் சுவயம், சையுத்தம், ஆரிடம், மானிடம் என்னும் காரணத்தால் வீற்றிருப்பான். இவற்றுள் சுவயம் என்பன = ஸ்ரீஆதிபகவன் சுவயமாக வீற்றிருக்கும் தலங்கள், சையுத்தமென்பன - விதிசிவாதி தேவர்களுக்குப் பிரத்தியக்ஷமாகவந்து எழுந்தருளியிருக்கும் தலங்கள், ஆரிடமாவன - பரமரிஷிகளுக்கு பிரத்தியக்ஷமான தலங்கள், மானிடமென்பது-நன்மக்களாலே நியமிக்கப்பட்ட ஸ்தலங்கள், இப்படி நான்குவிதமாயிருக்கிற தலங்களிலேவந்து எழுந்தருளிக் குளிர்ச்சியான தேனைத்துளித்துக்கொண்டிருக்கும் செந்தாமரைப்பூவிலே வாசமாயிருக்கிற பெரியபிராட்டியாரை மார்பினிடத்திலும் சுதரிசனத்தையும் பாஞ்சசன்னியத்தையும் திருக்கரங்களிலும் தாங்கி நீலமலைபோல் விளங்குவான்.—எ-று. (உஅ)

ஆதிநாரணனன்றுள்பலவாடலயர்ந்துதன்னருட்டிருச்செயலாம், காதலர்நூற்றெண்டலத்துநால்வகையாக்கலந்துமிக்கலியுகந்தனிலே, பூதலத்தெழில்சேர்தொண்டைநாட்டகத்திற்புண்ணியவநந்தநாதனுக்காய், நீதியாங்குமுளந்தென்திருப்பதியாய்நிலைக்கநல்லருள்புரிந்துவந்தே.

(இ-ள்.) ஆதியாகிய நாராயணன் முன்னாளில் திருவிளையாடல் குளிர்ந்த கருணையின்செய்கையினாலும் உயிர்கள் உய்யவேண்டுமென்னும் விருப்பத்தினாலும் நூற்றெட்டுத்திருப்பதி இடத்திலும் முன்சொன்ன நான்கு விதமாக் வெழுந்தருளி இருந்ததுமல்லாமல், இக்கலியுகத்திலே பூலோகத்திலழகுசெய்கின்ற யாங்கள்செய்த புண்ணியமே யோருருவமாகவந்ததுபோலத்தோன்றிய அனந்தநாதன் திருவாராதனையைக் கைக்கொள்ளுவதற்காகத் தருமநீதிபொருந்திய அழகிய குமுளமென்னும்பதியைத் தென்திருப்பதியென்னும் நாமம் நிலைக்கும்படி நல்ல கருணைசெய்துவந்து.—எ-று. (உகூ)

அடியவர்க்காவியதுலசஞ்சீவியருமறைதுணிந்தமெய்ப்பொருளாய்ப், படியவர்க்கருளின்மேவித்தென்குமுளப்பதிவயினனந்தநாதப்பேர்க், குடிவளர்சிறப்பினோந்தன்மெய்த்தவத்திற்குண்மகிழ்கொண்டுகோகனதன், விடையவனறியாத்தன்படிவெய்திவிளங்கினென்பர்மிக்குயர்ந்தோர்.

(இ-ள்.) அடியவர்களுக் குயிர்போன்றவனும், அவர்களுக்குச் சஞ்சீவிபோன்றவனுமாகிய பரவாசுதேவன் வேதங்களெடுத்துச் ட்ட மெய்ப்பொருளாய்ப் பூலோகத்தாருக்குக் கிருபைசெய்ய குழுளாபுரத்தில் அனந்தநாதனென்னும் பெயருடன் நல்ல ரியோன்செய்த தவத்திற்கு மகிழ்ந்து பிரமருத்திரேந்திராதிட தன்வடிவத்தை யாவரும் காணும்படி எழுந்தருளியிருக்கின்றமை வார்கள் அறிவார்சிறந்த பெரியோர்.—எ-று. (௰)

அரியமெய்ப்பொருண்முற்குணத்தினால்விளையாட்டனேகஞ்செ
ய்தினியநூற்றெட்டா, விரிதலத்துகந்திக்கலியுககலியுகந்தனிலேவிள
ங்குதென்திருப்பதியனந்தன், பரவவீற்றிருந்தானென் றவையந்தப்
திவளந்தெரிதரவெங்கட், குறையெனமாயனன்பர்கள்வினவவுயர்ப
ரந்தாமனிசைப்பான்.

(இ-ள்.) எவர்க்கு மெட்டப்படாத மெய்ப்பொருளாகிய நாராயணன் சத்துவகுணத்தினாலே திருவிளையாடலெண்ணிக்கை யில்லாமற்செய்து இம் மையாகிய பெருமைமிகுந்த நூற்றெட்டுத் திருப்பதிகளிலே அன்பாக எழு ந்தருளி இருந்தும், இக்கலியுகத்திலே கீர்த்திவிளங்கிய தென்திருப்பதியிலே அந ந்தநாதன் திருவாராதனஞ் செய்யும்படி எழுந்தருளினன் அந்தத்தென்றிருப்பதி யின் பெருமையை அடியேங்களுக்குத் தெரியச் சொல்லியருள்வாய் என்று திருமாலடியார்கள் வினவ உயர்ந்த நிஷ்டையையுடைய பரந்தாமர் அருளிச் செய்வார்.—எ-று. (௧௧)

என்னையாளுடையான்பணிகொளத்திருமாலெழிலுகந்தமருநன்
குழுளம், தன்னையானுரைக்கவல்லனோதெரிந்தசரித்திரஞ்சிறிது
சொல்லுவலென், றுன்னியகாலைப்பரவசமுற்றேயுள்ளழிந்திருந்த
றிவுணர்ந்து, மன்னியவுரோமஞ்சிலிர்ப்பவானந்தமழைவிழிதுளிப்ப
மீண்டிசைப்பான்.

(இ-ள்.) என்னை யடிமையாகப்படைத்த அநந்தநாதருடைய கயிங்கரி யத்தைப் பெற்றுக்கொள்ள ஸ்ரீமந்நாராயணன் அழகாக வீற்றிருக்கும் நலம்பெ ற்ற குழுளநகராகிய தென்றிருப்பதியின் பெருமையைச்சொல்ல அடியேன்வ ல்லனோ? ஆனாலும் எனக்குத் தெரிந்தமட்டுஞ் சிறிதுசொல்லுவேனென்று நினை த்த மாத்திரத்திலே பரவசமாய் மனநிலைகெட்டுச் சும்மாயிருந்தபிறகு உணர்ச்சி யுண்டாய் அந்நிலையில் தங்கிய திருமேனி மயிர்க்குச்செறியக் கண்கள் ஆநந்தக்க ண்ணீர் துளிப்ப மறுபடியும் பரந்தாமர் சொல்லுவார்.—எ-று. (௧௨)

கச்சியிற்றெற்கைகளிகுடக்கிற்கணக்கொன் றுதிருவயிந்திரத்துக் [ல்
குச்சமாம்வடபாறென் றனிக்கோவலூர்க்கிரண்டியோசனைகுணக்கி
அச்செறிந்திடுதென்திருப்பதிபுவிமாதணிநுதற்றிலகமோவிழியோ
மெய்ச்சுமங்கலநாணோமோமுகமோவிதமறித்தோதுவதெவனே.



(இ-ள்.) கச்சிநகரத்திற்குத் தெற்கில் ஐந்துயோசனைதூரத்திலும், கீழ் ச்சமுத்திரத்திற்கு மேற்கில் ஒருயோசனை தூரத்திலும், உயர்வாகிய வடக்கில் திருவயிந்திரபுரத்திற்கு ஒருயோசனை தூரத்திலும், அலங்காரம்பொருந்திய திருக்கோவலூருக்குக் கிழக்கில் இரண்டுயோசனைதூரத்திலும் அடையாளம் தெரியும்படியாகத் தங்கியிருக்கும் தென்றிருப்பதியென்பது; அது பூமிதேவியி னுடைய நெற்றியிலணிந்திருக்கும் திலகமோ அவள் கண்ணோ யாவரும் மெச் சும் அவள் திருமங்கலநாணோ அவள் மார்பிலணிந்த பதக்கமோ அவள் முக மோ, என இன்னவிதமென் றறிந்து சொல்லவல்ல பெரியோர்கள் யாவரோ அதுவெனக்குத் தெரியாது.—எ-று. (௧௩)

ஆதிநான்முகன்முக்கரணமுந்தேவர்களிடவரியவனைவையு
நீதியாற்படைத்திட்டழித்துளேயடங்குநித்தியானந்தவச்சுதனைக்
... இலாதவன்பாற்றன்வயப்படுத்துங்கொள்கையாலந்தமாநகர்செ
மாதவமெந்தப்பதிக்குளதிந்தவளமைகண்டுரைக்குமாறெவனோ. [ய்

(இ-ள்.) வேதமுதலாகிய ஆகமபுராணங்களும், மனம் வாக்குக்காயமெ ன்னும் திரிகரணங்களாலும், தேவர்களாலும் மற்றும் அளவிடப்படாதவன் சக லத்தையும் தன்னீதியினாலே யுண்டாக்கிக் காப்பாற்றி யூழிகாலத்திலே விதிசி வாதி உயிர்களைத் தன்வசத்திலடக்கிவைத்திருக்கும் நித்தியாநந்தசொரூபனாகிய ஸ்ரீநிவாசக்கடவுளைக் குற்றமற்ற அன்பினாலே தன்னிடத்துக்குவந்து எழுந்தரு ளியிருக்கும் தன்மையைப் படைத்தபடியினாலே அந்த மகத்தாகிய தென்றி ருப்பதிசெய்த பெருந்தவம் எந்நகரங்களுக்குண்டு. ஆதலால் அதற்கு உவமான மாகக்கண்டு சொல்லும் பொருள் எதுவோ எமக்குத் தெரியாதென்று பின் னுஞ்சொல்லுவார்.—எ-று. (௧௪)

பின்னைவந்துமோர்பொருள்வியத்தகுமேற்பெட்கிலார்யாவர்
முன்னைவைபோன், முன்னமற்புதவைகுந்தம்பாற்கடலுமுகிறவழ்வே
ங்கடங்கச்சி, மன்னியமாயனுள்முகந்தணுகிமனிதருக்கிகபரந்தரவே,
யின்னதென்குழுளந்தன்வயப்படுத்துமியல்பஃதெவனறிகிலமே.

(இ-ள்.) உலகத்திலே பின்னேவந்த பொருள் அதிசயிக்கத்தக்கதனை அதை விரும்பாதவர் யாவருள்ளார், முன்னே அற்புதமாகிய பரமபதம் திருப்பா ற்கடல் மேகங்கள் சஞ்சரிக்குஞ் சிகரமுள்ள சேஷகிரி திருக்கச்சிமுதலாகிய தல ங்களிலே நிலைபெற்றிருக்கும் வாசுதேவன், இந்த நாளிலே தன்னைச் சந்தோஷ மாகவந்து தெரிசிக்கும் அடியார்களுக்கு இகபரமாகிய பயன்களைக்கொடுக்கும் படி இந்தத் தென்றிருப்பதியானது ஸ்ரீநிவாசக்கடவுளுக்குத் தன்மேலிச்சை வரும்படி செய்துகொண்டவிதத்தை இன்னதென்று நாமறிந்துசொல்ல அறி யோம்.—எ-று. (௧௫)

இக்கலியுகத்திலிருந்தருள்விளக்கவெழினகர்தேடுதற்காகத்
தக்கவாநந்தனுகிவனமெலாந்திரிந்து தாரணியனந்துசோதித்துப்

பக்குவமறிந்துகுழளமாககர்மேற்பரிவுகூர்ந்தரியமர்ந்ததுவோ
திக்கெலாம்பணிய நூற்றெண்பதாகுந்திருப்பதியென்னுமத்தலமே.

(இ-ள்.) இந்தக்கலியுகத்திலே யோரிடத்திலிருந்தும் தன் மகிமையை எங்குந்தெரிவிக்க, அழகான வொருநகரத்தைத் தேடும்பொருட்டாக முன்னே ஸ்ரீராமாவதாரத்திலே வனவாசமாகத் தக்ஷணதிக்கிலே வனங்களெல்லாம் திரிந்தும் பூமியையளந்துஞ் சோதித்து நல்ல இடமென்று பக்குவமறிந்து இந்தக் குழளமாநகரின்மேலே யாசையுண்டாய் எழுந்தருளிவந்து ஸ்ரீநிவாசக்கடவுள் வீற்றிருப்பது வேறென்னமோ தெரியாது; அப்படி திக்குகளெல்லாம் பணிய மகிமை விளங்கியபடியினாலே அத்தலத்தை நூற்றெண்பதாந் திருப்பதியென்று சொல்லலாம்.—எ-று. (கசு)

அளியினமுரன்றுதேன் றுளியருந்துமலர்த்துழாய்மார்பனைப்ப
ணிந்தே,உளமுகந்தடியார்புகலுங்கோவிந்தவோசையாலாநந்தமுறும், துளிபெருகியமைம்முடிமிசைதவழுஞ்சோலைசூழ்கரைபொருதெண்ணீர், வளமிகுபம்பைகேழன்மாநதிநீண்மாலையாய்வணங்குமப்ப
திக்கே.

(இ-ள்.) தேன், ஞிமிறு, சுரும்பு, வண்டு என்னும் நாலுசாதிவண்டுகள் கீதம்பாடிக்கொண்டு தேன்றுளிகளை உண்ணுகின்ற மலருள்ள திருத்துளபமாலையையணிந்த மார்பனாகிய ஸ்ரீநிவாசனை மனமுவந்து பணிந்து நல்ல அடியார்கள் சொல்லுங் கோவிந்தசத்தத்தைக்கேட்டு ஆநந்தமடையும் மழைபொழிகின்ற கரியமேகங்கள் ஆழ்ந்த சோலைசூழ்ந்துள்ள கரையினாலே மோதுகின்ற சலவளமிகுந்த பம்பாநதியும் வராகநதியும் மாலையாக நீண்டு தக்ஷண உத்திரதிக்குகளிலே விளங்கிக்கொண்டிருக்கும் அந்நகர்.—எ-று. (கஎ)

காசினிதனிலோர்காலைநம்மிடத்திற்கருத்துவந்தினிதுவீற்றிருந்தான்
மாசறவுந்தெக்காலமுங்குடியாய்வந்திவணிருந்தனனென்றே
கோசலைமணித்துணைசோதையும்புகழுங்கொள்கையாலந்தமாநகரம்
பூசனைமுன்னேன்புரிந்தவையறிந்துபுகலுவதெவன்கொலோவம்மா.

(இ-ள்.) இப்பூமியிலே ஒருகாலத்திலே நம்மிடத்தில் திருவுள்ளமுகந்து எழுந்தருளியிருந்தான், குற்றமற்ற வேதமுதல்வன் எக்காலத்தும் எம்மிடத்திலெழுந்தருளி குடியாவந்து இருக்கிறனென்று கௌசலாதேவியும் நரசிங்கவதாரஞ்செய்த அழகிய தூணும் ஸ்ரீசோதையும் புகழப்படும்படி பேறுபெற்ற தன்மையினாலே அம்மகத்தாகிய தென்திருப்பதி முன்னாலே செய்த பூசையை அறிந்துசொல்ல அறியோம்.—எ-று. (கஅ)

கோலவராகநூலினிற்பூக்கொள்குணம்பகரத்தியாயத்தில்
தாலமாதினுக்குக்கேழன்மாமகிழ்ந்துசாற்றியவடமலைக்கடவுள்
நீலமேனியன்வீற்றிருந்ததாலந்தநகர்தென்றிருப்பதியாய்ச்[க்கும்.
சாலவேபெயர்பெற்றிருந்ததென்றினிய சதுமறையொப்பகின்றிசை



(இ-ள்.) அழகுமிக்க வராகபுராணத்திலே பூக்கொள் வத்தியாயத்திலே பூமிதேவிக்கு ஆதிவராகப்பெருமான் அருளிச்செய்த மகத்துவம்பொருந்திய வடவேங்கடத்திலிருக்கும் நீலமேகம்போல்பவனாகிய ஸ்ரீநிவாசக்கடவுள் எழுந்தருளி யிங்கே வீற்றிருந்தபடியினாலே அப்பெருமையான குழளநகர் தென்றிருப்பதியென்று மிகவும் பெயர்பெற்றிருந்ததென்று இனிமையாக நாலுவேதமும் ஒப்பும்படி நாள்தோறும் தோத்திரஞ்செய்யும் —எ-று. (ககூ)

பேருலாவியன்பைம்முகிற்குலம்பொழிந்துபெருகுதண்மலர்த்
தருவீழ்த்திப், பாருலாவியநல்லறிஞர்களென்றும்பரிவொடுதோத்திரம்புரியும், நீருலாவியகோதாவிரிகங்கைநீடிசைதனிற்புகழிலங்கும்,
ஏருலாவியபம்பாநதிவடபாலிருந்தருள்வளர்க்குமப்பதியே.

(இ-ள்.) பெருமையாகிய கரிய மேகக்குலங்கள் மழைபொழிந்து அதிகமான மலர்பூத்த மரங்களைத்தள்ளி அங்குள்ள பூமியிலே யுலாவி நல்லறிவுள்ள பெரியோர்கள் இனிதாகத் தோத்திரஞ்செய்யு நீர்நிறைந்த கோதாவிரிகங்கையைவிட மிகுந்த பெருமைவிளங்கும் அழகுபொருந்திய பம்பாநதி உத்தரதிக்கில் இருக்கத் திருமைமிகுந்து விளங்கும் அத்திருப்பதி.—எ-று. (உ0)

முத்தொழிறன்னிற்றிதிபுரிந்திலங்குமுழுமுதல்வீற்றிருந்தேத்தும்
பத்தருக்குலகிற்றாழ்விலாவாழ்வுபகிர்ந்துபின்முத்தியுந்தரலால்
இத்தலமதனிற்றருமதானங்களியற்றிடினொன்றுகோடியதாம் [மே.
எத்தினங்களுமிப்பதியினைக்காண்பார்க்கியையும்பேறினைத்தெனலா

(இ-ள்.) சிருஷ்டி - திதி - சங்காரமென்னு முத்தொழிலிலே திதித்தொழிலைச்செய்து விளங்கும் முழுமுதல்வனாகிய எம்பெருமான் அப்பதியிலே வீற்றிருந்து தன்னைத்துதிக்கும் அடியவர்களுக்கு உலகத்திற் றாழ்வில்லாத பெருஞ்செல்வத்தைக்கொடுத்துப் பின்பு அழியாத இன்பவீட்டைத் தயைசெய்கின்றபடியினாலே அத்தலத்திலே தருமதானங்களைச்செய்தா லொன்றுகோடியாய் வளரும்; ஆகையாலெந்நாளும் அத்தென்றிருப்பதியைத் தரிசித்தபேர்க்கு வரும்பேறு இவ்வளவென்று சொல்ல எம்மாலாகுமோ?—எ-று. (உக)

பாயிரமறைகளோய்விகந்துரைக்கும்பதுமநாபன்றனக்குரிய
ஆயிரநாமத்தொருபெயரிமைப்போதறையினெப்பாவமுமுலையிற்
காயிரும்புண்டநீரெனவொழிதல்கருதியேகடுகிவந்திறைஞ்சிப் [ர்.
போயிருந்திடிற்கோவிந்தசொற்காதிற்புகுமெனத்தேவருமொய்ப்பா

(இ-ள்.) பாயிரமுடைய வேதங்கள் ஒப்பில்லாமல் துலமிட்டுப் புகழ்கின்ற பதுமநாபனாகிய ஸ்ரீமந்நாராயணனுடைய ஆயிரந்திருநாமத்திலே யொருபெயரைக் கண்ணிமைப்போது சொன்னால் செய்த பாவமெல்லாங் கொல்லனுலையிற்காய்ந்த இரும்பிலே தெறித்த நீர்த்துளிபோலொழிதலையெண்ணி விரைந்துவந்து அத்தென்றிருப்பதிக்குப்போயிருந்தால் அடியார்களிடைவிடாமல் தோ

த்திரஞ்செய்யுங் கோவிந்தநாதங் காதினால் கேட்கலாமென்று தேவர்கள் அத்தலத்திற்குவந்து நெருங்குவார்கள்.—எ-று. (௪௨)

பண்ணவர்முனிவரிரவிகண்மதிகள்பரவுமெண்டிசையினிலுள்ளார்
விண்ணவரியக்கருரகரிக்ககரின்விளங்குகோவிந்தவோசையினால்
நண்ணுவரொன்றற்றென்திருப்பதியைநாடிவந்தேதெரிசிக்கும்
மண்ணவரடியைச்சிரத்தணியாகவைப்பதற்கியைந்ததென்மனமே.

(இ-ள்.) தேவர்கள், ரிஷிகள், சூரியர்கள், சந்திரர்கள் பரவியிருக்கும்: எட்டுதிக்கிலுள்ள இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசான என்னும் அஷ்டதிக்குப்பாலகர்; சித்தர், தேவர்கள், கின்னரர், பாதாளலோகத்திலுள்ளவர்கள் இந்தத் தென்திருப்பதியிலே எப்போதும் வந்துவந்து ஒலிக்கின்ற கோவிந்தசத்தம் கேட்கவேண்டும் என்று வந்திருப்பார்களென்றால் இத்தலத்தை மத்தியிலே நினைத்துவந்து தெரிசிக்கும் இந்தப் பூலோகத்திலுள்ள அடியார்களுடைய பாதத்தை ஆபரணமாக அணிந்துகொள்ள மிகவும் சந்தோஷப்படும் என்மனம்.—எ-று. (௪௩)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சங்குசக்கரம்வாடண்டுசார்ங்கமேந்தியகரத்தான்
பொங்காரமலையான்செல்வம்பொழியலர்மேலுமங்கை
மங்கலம்பெருகுஞ்சீநிவாசனிப்பாரிற்றோன்றி
புங்கவனநந்தநாதன்பூசனைக்குகந்திருந்தான்.

(இ-ள்.) திருமாலடியார்களே! சங்கு-சக்கரம்-வாள்-தண்டாயுதம்-வில் இப்பஞ்சாயுதமுந் தரித்துக்கொண்டிருக்கும் கைகளையுள்ளவன், உயர்வாகிய சேஷகிரியில் வாசமாயிருக்கின்றவன், செல்வத்தை மிகுதியாகக்கொடுக்கும் அலமேல்மங்கையென்னும் பெரியபிராட்டியார் மனத்துக்கு மிகுந்த கலியாணகுணத்தைக்கொடுக்கும் ஸ்ரீநிவாசன், அவன் வடதிருப்பதியிலிருந்து இத்தென்திருப்பதிக்குவந்து உயர்வுபெற்ற அநந்தநாதனது திருவாராதனைக்கு உகந்திருந்தான்.—எ-று. (௪௪)

அந்தகல்லடியான்பங்கிலமர்ந்துமுன்றோன்றிநின்று
முந்தியதோற்றங்காட்டிமுடித்திருமணமுந்தூய
சுந்தரமனையடங்குந்தாகிற்கொடிசேரின்வீழ
வந்திடுமிடரைத்தீர்த்துமகிழ்ந்தருள்செய்தான்முன்னே.

(இ-ள்) திருமாலடியார்களே! அந்தரங்கமையுள்ள அநந்தநாதனை ஸ்ரீநிவாசமூர்த்தி அடிமைகொண்டு எதிரிலே தரிசனமாகவந்து நின்று முன்றோற்றத்தைக் காட்டியும், உபதேசமுதலிய பஞ்சசமஸ்காரத்துடன் இரண்டு விவாகஞ் செய்துவைத்தும், தூய்மையான அழகுபொருந்திய அலர்மேலுமங்காபுரத்தில் வீற்றிருந்து விழுமென்று சொல்லித்ததன்றி கொடிச்சிலைபொருந்திய தேரடியில் விழுந்தபோது வந்தெடுத்து இடர்தீர்த்தும் மகிழ்ச்சியாய் மிகுந்த கிருபையைச் செய்தான்.—எ-று. (௪௫)



வாடிவுசேர்யாயனந்தமாதவன்காத்தினாலே
மூடமஃதகலச்சன்மமூங்கையான்பேசக்கண்ணோர்
தடியிடைக்கணுகக்கண்டஞ்சூழ்பிணியகலவெம்பும் [ன்.
விடமகன்றுயிர்ப்பவெண்ணில்வினைகளைத்தொலைத்துவைத்தா

(இ-ள்.) மேலே சொல்லியவை அன்றியும், விசித்திரசத்தியையுடைய எம்பெருமான் அப்பாகவதர் கையினால் தீர்த்தந் திருமண்கொடுக்க அருளிச்செய்து ஒருவனுக்கு மூடந்திரவும், ஜன்ம ஊமை பேசவும், ஒருபெண்ணுக்கு கண்வரவும், கண்டமாலைப்பிணிபகலவும், கொடுமையான விஷம் தீர்ந்துயிர்பெறவும் இப்படி யெண்ணிக்கையில்லாத வினைகளை நீக்கினான்.—எ-று. (௪௬)

இன்னபொன்னகரைக்கண்டியையுந்தோனினைத்துங்கேட்டும்
பன்னியும்வலம்புரி[illegible]டயரிவொடுதொழுதுசென்றும்
அன்னதானங்கள்செய்துமருந்தடம்படிந்துமன்பாய்
மன்னுசத்திரமமைத்துமாற்றினர்வினையகேகர்.

(இ-ள்.) இப்படிப்பட்ட அழகிய நகரமாகிய தென்திருப்பதியை கண்ணினாலே தரிசித்தும், அன்பாக மனத்தினாலே நினைத்தும், காதினாற் சொல்லக்கேட்டும், வாயினால் தோத்திரஞ்செய்தும், காலினால் வலம்வந்து அங்கப்பிரதக்ஷணம்வந்து ஆசையுடனே தண்டன் சமர்ப்பித்தும், அப்பதிக்கு நடந்துவந்தும் அதிலே அன்னதானமுதலாகிய தருமங்களைச்செய்தும், அங்குள்ள அருமையான தீர்த்தங்களிலே முழுகியும், அன்பாக நிலைபெற்ற அக்கிராரங்கள் மடங்கள் சத்திரங்கள் கட்டுவித்தும், செய்வித்தும் வினை தீர்த்துக்கொண்டவர்களைக் கணக்கிட்டுச் சொல்லிமுடியாது.—எ-று. (௪௭)

இந்நகர்தனையிகழ்ந்தோரிவ்வுலகத்திலென்றும்
அன்னமுமகன்றுநோயாலலைந்துடன்மெலிந்துவாட்டிக்
கன்னமிட்டெடவருமேசக்கட்டுண்டுதளைகால்பூண்டு
பன்னருநரகத்துள்ளேபடிகுவரூழிகாலம்.

(இ-ள்.) இந்த திவ்வியதலத்தை மதியாமல் அவமதித்துப் பேசினவர்கள் இவ்வுலகத்திலே என்றைக்கும் உணவில்லாமல் பிணியினாலலைந்து உடலினை த்துவிட்டு களவுத்தொழில்செய்து எல்லாரு மிகழும்படி கன்னமிட்டுக் காலுக்கு விலங்குபூண்டு சொல்லவரிதாகிய நரகத்திலே விழுந்து அனேக ஊழிகாலம் வதைவார்கள்.—எ-று. (௪௮)

மனவாக்குக்காயத்தாலேமகிழ்ந்தந்தப்பதியைநாடும்
புனிதரிவ்வுலகிற்பெண்டுபுதல்வர்கல்யாகனங்கள்
தனமெலிந்துன்பம்நீங்கிச்சகலபோகங்கடுய்த்தும்
எனையுமாள்சீநிவாசனிணையடிமருவுவாரே.

(இ-ள்.) மனோவாக்குக்காயமென்னும் திரிகரணத்தினாலே சந்தோஷமாக அந்தத்தலத்தை நினைத்தும் துதித்தும் வலம்வரும் புண்ணியவான்கள் இந்த உலகத்திலே பெண்சாதிபிள்ளைகள் நல்ல வாகனங்கள் செல்வப்பொருள் இவற்றையெல்லாம்பெற்று, முன்னை வினையினாலேவந்த துன்பம் நீங்கி சகலபோகங்களையும் அனுபவித்து அதன்மேல் என்னையாளும் ஸ்ரீநிவாசனது பரமபதமும் பெறுவார்கள்.—எ-று (௪௧)

திருமறுமார்பனன்பர்தென்திருப்பதியினின்பப்
பெருமையைப்புகலக்கேட்டுப்பெட்புமிக்குவகைபொங்க
அரியமெய்ப்பொருளைப்போற்றியமர்பரந்தாமனேயங்
கருணையோவென்றுவாழ்த்திக்கருத்தொடுமுறைப்பர்மீட்டும்.

(இ-ள்.) பெரியபிராட்டியாரையும், ஸ்ரீவற்சத்தையும் திருமார்பிலுடைய முதற்கடவுளுக்கு அன்பராகிய பாகவதர்கள் தென்திருப்பதியின் பெருமையைச் சொல்லக்கேட்டுப் பரிவுமிகுந்து அரிய மெய்ப்பொருளாகிய நாராயணனைச் சதாநினைக்கும் அருள்பெற்ற பரந்தாமனே! அழகுமிக்க கருணையுடையானே என்று வாழ்த்தி மிகுந்த கருத்துடன் பின்னுஞ் சொல்வார்கள்.

தென்திருப்பதிவளத்தைச்செவிவழிநுகர்ந்தாரந்த
மன்றலிற்பெருநெஞ்சுற்றோம்வயமிகுமநந்தநாதன்
அன்றுதித்ததுவுமாதியாட்கொண்டவாறுஞ்சொல்லித்
துன்றியவினைநீக்கென்றார்தூயநல்லறிஞரம்மா.

(இ-ள்.) தென்திருப்பதிப் பெருமையைச்சொல்லக் காதாகிய வழியினாலே உண்டு அநந்தகலியாணம்பெற்ற மனதுள்ளவர்களானோம்; இனிமேல் வளமைமிகுந்த அநந்தநாதன் முன்னாளிலுதித்ததும், ஸ்ரீநிவாசன் அப்பாகவதனையாட்கொண்டதும் சொல்லி எங்களை அடர்ந்துள்ள வினைகளை நீக்கவேண்டுமென்று கேட்டார்கள் பரிசுத்தமான நல்லறிவுள்ள திருமாலடியார்கள்.—எ-று. (௪௩)

தென்திருப்பதிப்படலம்முற்றிற்று.

ஆக படலம் ௧-க்கு திருவிருத்தம்-௪௩.

---

## ஆட்கொண்டருளியபடலம்.

---

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நாயகனிலகுந்தொண்டைநாட்டினிலுதித்தவாறும்
மாயவனகந்தாட்கொண்டவளமையும்புகலமுன்பின்
வாயருந்தவமேசெய்தவண்மையென்றுலகம்போற்றுந்
தூயவனநந்தநாதன்றொண்டன்மற்றிசைப்பான்மன்னோ.



(இ-ள்.) எங்கள் நாயகனாகிய அநந்தநாதன் எங்கும் பேர்பெற்ற தொண்டைநாட்டிலே திருவவதாரஞ்செய்ததும், ஸ்ரீநிவாசன் திருவுளமுவந்து அநந்தநாதனை யடிமைகொண்ட வண்மையுஞ்சொல்ல முன்னாலே என்னாயானது என்ன அரிதாகிய தவஞ்செய்ததோவென்று சந்தோஷமா யிவ்வுலகமெல்லாந் தொழப்பட்ட தூய்மையாகிய அநந்தநாதனுக்குத் தொண்டனாகிய பரந்தாமன் சொல்லத்தொடங்கினான்.—எ-று. (௧)

நளமிகுதொண்டைநாட்டிளற்பெண்ணைவடபாலீசன்
உளமகிழ்திருவாமத்தூர்க்கோங்குதென்றிசையிற்றண்டேன்
வளமலிபொதும்பர்சூழுமாநிலமகளுக்கின்பக்
குளமெனப்பொலியுஞ்செல்வக்குளத்தூரொன்றுளதுமாதோ

(இ-ள்.) நலமிகுந்த தொண்டைநாட்டிலே நலமான பெண்ணைநதிக்கு வடக்கிலே ருத்திரனுக்கு மனமகிழ்வான திருவாமத்தூருக்கு உயர்ந்த தெற்குத்திசையிலே குளிர்ச்சியான தேன்வளம்பொருந்திய மிகுந்த மலருள்ள சோலைசூழும் பெரிய பூமிதேவிக்கு இன்பமாகிய நெற்றியென்று சொல்லும் பெயர்பெற்றுச் செல்வம்பொருந்திய குளத்தூரென்னும் ஒருநகரமுண்டு.—எ-று. (௨)

அத்திருநகர்க்குநாதன்விர்சம்புகோத்திரத்தோன்
வித்தைநற்குணத்தான்சோதிவிமலனஞ்செழுத்தையுன்னும்
சித்தன்வெண்ணீறுபூசுஞ்சிதம்பரப்பெயரோன்வேட்ட
உத்தமமனையாளுமுயரிலக்குமியாமன்றே.

(இ-ள்.) அந்தத் திருநகருக்கு நாதனானவன் வன்னிகோத்திரத்திலுதித்தவன், வித்தையும் நற்குணமுமுள்ளவன், குற்றமற்ற வகையாக அமைந்த பஞ்சாக்ஷரத்தை மனத்திலே தியானஞ்செய்பவன், வெண்ணீறணிபவன், சிதம்பரமென்னும் நாமமுடையான், அவன் மகிழ்வாகக் கலியாணஞ்செய்த உத்தமமான மனைவியாவாள் இலக்குமியென்னும் உயர்ந்த பெயர்பெற்றவள்.—எ-று. (௩)

அப்பெருந்தவத்தினுடனணியவிற்றருளுமெய்யும்
தப்பதுவிரதம்பூசைதருமமாசாரநேமி
அப்பனுக்கடிமைதானுமறிவுமோருருவாய்க்கூடி
இப்புவிவந்ததென்னவுதித்தனனெம்மையாள்வோன்.

(இ-ள்.) அந்தப்பெருமையான தவமுள்ளவனிடத்து அழகிய இன்பம் அனுபவித்தமையினால் அன்பும் தவறில்லாத விரதமும் திருவாராதனமும் தருமமும் சக்கரப்படைதாங்கிய இறைவனாகிய ஸ்ரீநிவாசனுக்கு அடிமைசெய்யுமிவையெல்லா மோருருவாய்க்கூடி இந்தப்பூமியில் வந்ததுபோல திருவவதரித்தார் எம்மை யடிமைகொள்ளும் அநந்தநாதசுவாமிகள்.—எ-று. (௪)

படிமிசைவினைகளெங்கப்பரிந்தேகிளம்பிதான்றம்
இடபமாதப்பொன்வாரமெழிற்சிங்கஞ்சதயமன்பரிய்

கடமிடவன்னை தந்தைதன் மனத்துவகைபொங்கக்
குடிவந்தான்மாயனென்னக்குழுமளங்கொண்டாடிற்றன்றே.

(இ-ள்.) இந்த பூமியின்மேல் தீயவினைகளெல்லாம் மனதேங்கி தவிக்க, அதை விரும்பியே விளம்பிவருஷத்து ற்றி வைகாசிமாதமும் குருவாரமும் அழகிய சிங்கராசியும் சதயநக்ஷத்திரமும் அன்பாயிந்த அன்பறுமிக்கும் வருஷம் மாதம் இராசி நக்ஷத்திரமுமாகுமென்று நடனஞ்செய்ய, தாயுந்தந்தையு நல்ல மனத்திலே சந்தோஷமிகுதியாக நம்மிடத்துக்கு ஸ்ரீநிவாசன் குடிவந்தானென்று குழுமளகரம் அப்போதுதானே கொண்டாடியது.—எ-று. (௫)

பச்சைமால்ஸ்ரீநிவாசன் பணிவிடைசெய்வதற்கே
இச்சைபாராட்டுவோனுக்கிளவெங்கீராட்டியெங்கள்
அச்சுதாநந்தனன்பாயாதரித்தருண்மெய்ஞ்ஞானம்
நிச்சலுங்காப்பானுக்குநிலக்காப்பன்றிட்டார்மாதோ.

(இ-ள்.) பச்சைநிறமாகிய ஸ்ரீநிவாசக்கடவுளுடைய கைங்கரியஞ்செய்ய வேண்டுமென்று மனதிலே இச்சையை பாராட்டிக்கொண்டிருக்கிற அம்மூர்த்திக்கு இளவெந்நீரிலே திருமஞ்சனமாட்டி எங்களச்சுதாநந்தனே அன்பாய் இங்கு ஆதரித்தருளும் மெய்ஞ்ஞானநிலையைக் காப்பவனாகிய அச்சிறுவனுக்கு நிலைக்காப்பு அப்போது இட்டார்கள்.—எ-று. (௬)

கண்ணருநிலெச்சருட்கிருந்தநாமமிட்டழைப்பார்போலக்
கண்ணனதருளைநன்குகடன்ஞாலகனியிசைக்கும்
புண்ணியவுருவனந்தப்போதமெய்ஞ்ஞானத்து
அண்ணலுக்கன்றேசுப்பராயனென்றறைந்தார்நாமம்.

(இ-ள்.) பெருதற்கரிய பொன்னுக்கரியென்று பெயரிட்டழைத்து, பேதையர்போல ஸ்ரீகண்ணபிரானுடைய அருளைக் கடலால்சூழப்பட்ட நிலவுலகில் நன்கு விளங்கும்படி நிலைபெறச்செய்யும் புண்ணியபுருஷனும் ஒருகாலத்தும் அழிவுபெறாத ஞானத்தையும் ஆனந்தத்தையும் உடையானுமாகிய அவ்வையர்ந்தோனுக்கு சுப்பராயனென்ன நாமகரணஞ் செய்தார்கள்.—எ-று. (௭)

பாதகந்தொலைக்கும்பம்பைக்கரையினிப்படிவாழ்வோர்க்கப்
போதமர்நேசம்போகப்போக்குவித்தாரம்பூட்டி
ஆதிநூற்புரோகிதன்சொல்லரிப்பெயரோதென்றேதித்
தாதுசேர்மலர்வேய்ந்தோங்குதனிச்சிகைதருவித்தாரே.

(இ-ள்.) முழுதினவர்களுடைய பாபங்களையெல்லாம் போக்குவிக்கும் பம்பாநதிக்கரையிலே இந்தப்படி வாழுஞ் சனங்கள் குளிர்ந்தமலர்கள் தங்கிய நேசத்தைப்போக்குவித்துக் கழுத்தில் முத்தாரத்தைபூட்டி வேதங்களையுணர்ந்த புரோகிதனைநோக்கி திருமாலினுடைய கோவிந்தநாமத்தை நாமகரணஞ்செய்



யென்று உத்தமர் சொல்லுதலும் அவ்வாறே புரோகிதர் சொல்லாததுகளடர்ந்த மலர்களணியப்பெற்ற சிகையை வைப்பித்தார்கள்.—எ-று. (௮)

படியிசையன்னைதந்தைபார்ப்பவர்களிப்பப்பைம்பூங்
கொடியிடைமருமன்றாளைக்குறித்தநல்லறிஞர்நெஞ்சைக்
குடியதாய்க்கொண்டசெல்வக்குணமுமப்பரமனிந்த
அடியர்மேனிறுவுமன்புமெனநனிவளர்ந்தான்மன்னோ.

(இ-ள்.) இந்தபூமியின்மேல் தாயுந்தந்தையும் கண்டோர்களும் மனங்களிக்கும்படி பூங்கொடிபோன்ற இடையையுடைய திருமகளானவள் மார்பிலே வீற்றிருக்கப்பெற்ற பரஞ்சுடரினுடைய ஸ்ரீபாதங்களை இடைவிடாது சிந்திக்கும் பரமபாகவதர்களுடைய தூயதன்மையும் பரஞ்சுடராகிய ஸ்ரீயப்பதி இந்த அடியார்பக்கம் வைத்திய அன்பும்போல இவனை வளர்த்துவந்தார்கள்.—எ-று. ( )

தத்துவநிலையிற்றக்கோர்சாற்றுமரியோருமன்னும்
முத்திசேர்மொழியைமுன்னேமொழிந்துநல்லுபாத்தியோது
வித்தைப்பராய்நன்ஞானம்விழியேயுய்விப்பானும்
வித்தையையோதுவித்தான்மேதினிகளிப்பமாதோ.

(இ-ள்.) சத்தியமாகிய பஞ்சவிம்சதி தத்துவ நிலையையுடையதான அறிவுடையோர் சொல்லுகின்ற முத்திவந்த மைந்தற்குரிய ஹரிஓம் என்னும் அம்மூலமந்திரத்தை முன்னே சொல்வித்த உபாத்தியாயர் ஞானமே திருமேனியாகவுடைய ஸ்ரீநிவாசப்பெருமானைத் துதிசெய்து நன்றாக வளர்கின்ற அறிவை வளர்விக்கும் நல்லகல்வியை ஓதுவித்தார் உலகத்தார்கள் களிக்கும்படி.—எ-று.

ஈராறுநாமமோரெட்டெழுத்தினிதுணர்ந்தேயுய்யும்
காரணமறியாதங்கோர்காரியபோதனென்பான்
ஓரைந்தக்கரமும்பன்னிரண்டுநாமங்களுமுணர்த்தினனிப்
பேரருளாளனெங்கள்பிறவிவேரறுப்பானுக்கே.

(இ-ள்.) பன்னிரண்டு திருநாமங்களையும் மந்திரராஜத்தையும் இனி ஸ்ரீநிவாசக்கடவுள் திருப்பவளத்தினாலே உபதேசிக்கப்பெற்றுணர்ந்து பெருவாழ்வடையும் காரணத்தையறியாமல் அக்காலையில் ஒரு காரியகுருவானவன் வந்து அஷ்டாக்ஷரத்தையும் பதினொருமந்திரத்தையும் உபதேசித்தான் உயிர்களிடத்துக் கருணையுடையாராய் அடியேங்களுடைய பிறவிப்பூண்டினை வேரறுக்கத் திருவவதரித்த அநந்தநாதனவாமிக்கு.—எ-று (௧௧)

வணக்கமெய்யன்புகொண்டமாதவன்கமலத்தாளிற்
கணக்கிலாமலைாத்துவுங்கருத்துடையானையூரில்
இணைக்கமாயிலக்கத்தப்பாதெழுதுவோரிடத்திற்சேர்க்கக்
குணக்கிலாவவர்களோடுங்குறிப்பெலாமறியுசாளிஃ

(இ-ள்.) வணக்கமும் மெய்மையான அன்புங்கொண்டு ஸ்ரீநிவாசப்பெருமானது தாமரைமலர்போன்ற ஸ்ரீபாதத்திலே அளவில்லாத நல்லமலர்களை அர்ச்சிக்குங்கருத்தையுடைய சுவாமிக்கு அவ்வூரிலேயிணக்கமாயிருந்து கணக்குகள் தப்பாமல் எழுதுங் கணக்கரிடத்திலே தாய்தந்தையர் கொண்டுபோய்விட, அக்குற்றமற்றவர்களுடனே தாமுமொருவராயிருந்துகொண்டு குறிப்புகளெல்லாமறிந்து எழுதிக்கொண்டு வருகிறநாளிலே.—எ-று. (௧௨)

திருக்குளத்தூர்க்குமேலைத்திசைதனைக்கடுத்ததெற்கண்
மருக்கமழ்வயல்சூழ்கண்டமானடியெல்லையுள்ளே
அரிக்கர்றைதொப்படிக்காயாங்குளக்கணக்கரேகத்
தருக்கமுசார்ந்தசிலத்தாசருங்கூடிச்சென்றார்.

(இ-ள்.) திருவிளங்கியிருக்கும் குளத்தூருக்கு மேற்றிசைக்கடுத்த தெற்க்கே வாசனைக்கமழ்கின்ற கழனிகள் சூழ்ந்த கண்டமானடியென்னுமூரெல்லைக்குள்ளே நெற்களத்தொப்படிக்குச் சமர்த்துள்ள கணக்கர்கள் போங்காலையில் அகங்காரம் மமகாரமில்லாமல் நல்ல ஒழுக்கமுடைய அநந்தநாதசுவாமிகளும் அவர்களோடுகூடி விரைந்து சென்றருளினர்.—எ-று. (௧௩)

களத்திடையவரோடச்சொற்கணக்கெலாமெழுதுங்காலை
இளைப்பருவினையினன்முன்னியைந்துமூக்கிநோயால்
தொளைக்கணுற்றிளம்புலானீர்சொரிந்திடவதுபாரேனென் [ன்.
றுளத்துறிவ்வலக்கணுற்றுங்கொளித்தனன்மேல்பால்வெய்யோ

(இ-ள்.) அந்த நெற்களஞ்சார்ந்து அவ்விடத்திலொப்படியான அந்நெல்லுகணக்கெல்லாம் எழுதுங்காலையில் அளவற்ற இளைத்தலில்லாத முன்னைவினை இப்பிறப்பிலே அமைந்துள்ள நாசிநோயால் அம்மூக்கின் துவாரத்தின்வழியாக மிகுந்த நீர் சுவாமிகளுக்குப் பெருகியோட இம்மகானுபவருக்கு இப்பிணியைப்பார்த்துச்சகியேன் என்று மேற்குத்திசையில் ஓடியொளிப்பான்போலச் சூரியன் அஸ்தமானமானான்.—எ-று. (௧௪)

ஆழ்ந்தனனிரவிகங்குலடர்ந்ததாலையன்மூக்கில்
சூழ்ந்துவெங்குருதிபொங்கத்துகிலினிலேற்றுநெஞ்சம்
தாழ்ந்துநீக்குடைதற்கேகிச்சலந்துளைந்தீரத்தோடு
மாழ்ந்தனுட்டானஞ்செய்துமனஞ்சிறிதயர்தலுற்றான்.

(இ-ள்.) அப்படி சூரியன் மேற்கடலிலழுந்தினதினால் பலதிக்குகளிலும் இருளடர்ந்தது, நம்முடைய ஐயனுடைய திருமூக்கில் வியாதியா லிரத்தம் வடிய அதனைச் சீலையிலொற்றிக்கொண்டு மனந்தளர்ந்து அங்குள்ள குளத்தினில் முழுகி ஈரவஸ்திரத்தோடு கலக்கமுற்று அநுட்டானவிதிகளை முடித்துக்கொண்டு இந்நோய் முன்வினைப்பயனேயென்று திருவுளத்திற் சற்றுக் கிலேசித்தனர்.—எ-று. (௧௫)



உற்றநோயுடலுக்கென்னேயொருசுகநோக்கியென்னும்
பெற்றியாலத்தடத்துப்பேரரசடியின்மாந்தர்
சுற்றுணையூணென்றின்றிநடுநிசிநேரத்தாவா
கற்றவர்புகழுமையன்கண்வளர்ந்திருந்தான்மன்னோ.

(இ-ள்.) அப்படியிருந்து ஆராய்ந்துபார்த்தால் இத்தவியாதியுண்டான தேகத்துக்குச் சுகமேயென்று கருதி அக்குளக்கரையிலிருக்கும் பெரிய அரசமரத்தடியிலே மனிதராகிய நல்லதுணையும் போசனமுமில்லாமல் நடுராத்திரிவேளையிலே ஐயோ பெரியோர்கள் புகழும் என்னையன் கண்வளர்ந்திருந்தான்.—எ-று. (௧௬)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பிறையணிசடிலப்பிஞ்ஞகன்பிரமன்பெரிதுநாளுழந்துமேயுணரா, மறைகளும்யோகமதிஞருஞ்சிறிதும்வயங்கிடப்பெறுகிலாரன்றோ, துறைசெறியன்பின்றென்னெறிக்கன்றித்தோன்றுதன்றோ, மைசான்முதன்மை, இறையெனவியம்பவிங்கிவர்தம்மாலிருங்கடலுலகுணர்ந்ததுவே.

(இ-ள்.) பிறைச்சந்திரனை அணிந்த சடையுடைய சிவனும், பிரமனும் பலநாள் பிரயாசப்பட்டும் அறிந்திலார், வேதங்களும் யோகிகளும் சிறிதும் விளங்கும்படி தம் அறிவில் பெற்றிலார் என்ற ஆச்சரியம் பலவகைப்பட்ட பத்திமார்க்கமாகிய பழையவழியில் அல்லாமல் மற்றவற்றில் தோன்றமாட்டான் ஸ்ரீநிவாசனாகிய முதற்கடவுள் என்று சொல்லுதலை அநந்தநாதசுவாமிகளால் பெரிய கடல் சூழ்ந்த உலகத்தார்கள் அறிந்தார்கள்.—எ-று. (௧௭)

அடிகள்சேர்குழுளந்தென்றிருப்பதியென்றருமறைமுனிவரும்போற்றப், படியளந்திடுகாலேணக்கிநன்கிதனைப்பார்த்தனனீண்டிவன்றன்னான், முடியுமிப்பணியென்றுளத்திடைக்கருதிமுறைமைகண்டரவுபாலுதறி, வடவரையுஞ்சென்றடிதொழக்கருள்வருவனின்பின்னெனத்தொடர.

(இ-ள்.) அப்படியிருக்க அநந்தநாதசுவாமிகளுக்குரிய குழுளநகரத்தைத் தென்திருப்பதியென்று எல்லாரும் புகழும்படி முன்னால் சமுத்திரஞ்சூழ்ந்த பூமியை யோரடியாக அளந்தபோது நல்ல நிலமிதென்று பார்த்திருந்த ஸ்ரீநிவாசன் இவ்விடத்திலே இவனாலே நாம் திருவுளங்குறித்த திருப்பணிமுடியுமென்று திருவுளத்திலே நினைத்தார்; அந்த முறைமையறிந்த ஆதிசேஷனும் திருப்பாற்கடலும் வடவேங்கடமும் அடியேங்களைவிட்டுத் தேவரீர் எங்கெழுந்தருளுகிறீரென்று வணங்கித் தோத்திரஞ்செய்யப் பெரிய திருவடிகள் தேவரீர் பின்னே வருவேனென்று தொடர்ந்தார்.—எ-று (௧௮)

அப்பொழுதகிலநாயகனன்பனருந்துயரந்தனையறிந்தே [ள்ள
எப்பொழுதுந்தன்னிடத்தினிற்பழகியெழின்மருக்கொழுந்துநந்து

செப்பருந்தாசநம்பிபோற்கனவிற்றிருவுருவாகியங்குளத்தில்
ஒப்பறுதிருமண்கம்பிகல்லுடையவ்வுத்தரிகமுமொளியெய்த.

(இ-ள்.) அநந்தாநதசுவாமிகள் கவலைகொண்டிருக்கையில் அவருடைய கவலையை சர்வசகத்காரணன் தெரிந்து எக்காலத்திலும் தன்சந்நிதியில் வசித்து வாடாத புதிய மருக்கொழுந்து சமர்ப்பிக்கும் சொல்லுதலரியதாசநம்பியைப் போலத் திருவுருக்கொண்டு ஸ்வப்பனத்தில் திருமேனியில் ஒப்பற்ற தூவாசத்திருமண்ணும் இடையில் கம்பிவேட்டியும் திருத்தோளில் அந்த உத்தரீயமும் விளங்கும்படி யெழுந்தருளினார்.—எ-று. (௧௯)

பின்னுகோழனையினரம்பைதன்படவின்விரிமருக்கொழுந்து வைத்தடக்கி, மஞ்ஞியகரத்திலெடுத்தெகழிலுலவலந்தொருதுணையு மேயின்றி, இங்கிலேயிருப்பதென்னனத்திருமாதிலங்குமார்பகனனி யியம்ப,என்னையிங்குவந்தாட்கொண்டமெய்விபுதரொய்தியவாறெலா மூரைத்தார்.

(இ-ள்.) பிரகாசமான கோழனையுடைய வாழையினது மடலிலே மிகுந்த வாசனையுள்ள மருக்கொழுந்தைவைத்து நிலைமையானகையில் எடுத்துக்கொண்டு அழகுடனேவந்து ஒருதுணையுமில்லாமல் நீ இந்தவிடத்திலே இருக்கவேண்டிய தென்னவென்று திருமகள் விளங்கிய மார்பனாகிய சர்வசுவாமிகேட்க,என்னைச் சந்தோஷமாக இந்தப்பூமியிலே யாட்கொண்ட மெய்க்கடவுளான அநந்தாநதசுவாமிகள் தன் வரலாற்றையெல்லாஞ் சொன்னார்.—எ-று. (௨௦)

அவையறிந்தலைனிதற்குநீவாடேலகனுமிப்பிணியிற்றையிரவே, உவகையாயென துபணிவிடைக்கினிமேலுன்னையாட்கொள்லனென் றகன்றான்,கவலைகொள்கரிமுன்காத்தகார்வண்ணன்கனவிடைக்கடிதுவந்தருளால், சிவனயன்முதலோர்தெரிகலாப்பரமன்சென்றதெற் றெனவெழுந்திருந்தான்.

(இ-ள்.) அப்படி சொல்லக்கேட்டு அந்தச்சுவாமி சொல்லுகின்றார்: இதற்கு நீ கவலைகொள்ளவேண்டியதில்லை இந்த மூக்கிலிருக்கும் பிணி யின்றிராத்திரியோடு ஒழிந்துபோகும், இனிமேற் சந்தோஷமாக என் திருப்பணிக்கு உன்னை யாக்கிக்கொள்ளுவோமென்று அருளிச்செய்துபோனார்; அவர் போனவுடனே நித்திரைதெளிந்து சிவன் பிரமன்முதலிய தேவர்கள் அறியவொண்ணாத பரந்தாமன் வைஷ்ணவனுருவமாகக் கனவிலெழுந்தருளியதீ என்ன என்று எழுந்திருந்தார்.—எ-று. (௨௧)

குருகிகான்றிடாதவாறநிந்திந்தக்கொள்கைமால்செயவெனவுணரா,அருள்புரிந்ததுமேனடப்பவுந்தெரிவாகனைசயினலனுகல்போற்குணபால், பரிதிவந்துதித்தானென்னையாளுடையோன்பதிபுகுந்தநுசனிவரா, விரதமாயன்றுதொட்டனுசரித்துவிருப்பமுற்றவ்வுழியிருந்தான்.


தாயதந்தையர்கள். திருக்குளத்தார்.



காசிகோபுரம்.
சீனிவாசபுரம்
அனாதநாதசுவாமி.
பம்பாநதி

(இ-ள்.) அப்படி எழுந்திருந்து பார்த்தவுடனே மூக்கிலே இரத்தம் பெருகும்வகையையறிந்து இச்செய்கை திருமகள் நாயகனருளென உணர்ந்துகொண்டு அந்த வேளையிலே சர்வசுவாமி கடாக்ஷம்செய்ததும், மேல்நடக்கிறவிதமும் தெரிந்துகொள்ளவேண்டுமென்கிற ஆசையினாலே வருகிறதுபோற் கீழ்த்திசையிலே சூரியன் உதயமானான்; அப்போது என்னை யாட்கொண்ட அநந்தநாதனும் தன்னூருக்குச்செல்ல, அத்தினம் சனிவாரமாகையால் அன்று முதல் சனிவாரவிரத மநுசரித்து மனமகிழ்ச்சியாய் அந்த இடத்திலே இருந்தார்.—எ-று. (௨௨)

இருந்திடுகாலையரண்மனைச்சிறுகாலெழிற்குமுளப்பதிக்கினிய
அருந்தவத்தண்ணல்குடிபுகுந்தவ்வூர்க்கயலுறுமிடந்தனையுணர்ந்து
திருந்துறுபைங்கூழ்க்கியைந்தநன்னிலங்கடேடிப்பம்பாநதித்தென்பாற்
பரிந்துகோத்திரவமாடயிறுங்குநல்பைங்கூழ்புரிந்தனர்மாதோ.

(இ-ள்.) அப்படியிருக்குநாளில் ஒருநாள் அரண்மனையாருடைய தொந்தரையினால் கவல்பெற்றுக்கொள்ளவேண்டுமென்று நினைத்துக் குமுளநகரத்துக்கு இனிமை அருந்தவஞ்செய்த எம்பெரியார் குடியாகவந்திருந்து அக்குமுளத்துக்குப்பக்கத்திலே தென்பாகத்திலிருக்குமாகிய கலிதீர்த்த குப்பத்துநிலங்களைதெரிந்து திருத்தமாயிருக்கும் இசைந்த நல்ல நிலங்களைத்தேடிப் பம்பாநதிக்குத் தென்பக்கத்தில் பரிவாக, வரகு துவரை சோளம் இவைமுதலாகிய பலபயிர் செய்வித்துக்கொண்டிருந்தனர்.—எ-று. (௨௩)

ஒருபகல்பயிர்செயிடந்தனக்கேகியுழுநிலம்பார்த்துநன்பகற்கண்
வருதலும்பம்பாநதியினீராடிவடகரையினிற்செபம்புரிவாய்ப்
புரியுமாமாயன்செய்யருண்மயக்காற்புற்றரைமீதுகண்வளர்ந்தே
இரவினிற்பானாள்கழிதரவுணராதெழுந்திராதவ்வுழியிருந்தார்.

(இ-ள்.) அப்படி பயிர்செய்துகொண்டு வருகிறநாட்களில் ஒருநாள் பயிரிடுமிடத்துக்குப்போ யழவாகிறதைப்பார்த்து நடுப்பகலானபொழுது பம்பாநதியிலே தீர்த்தமாடி வடகரையிற் பெருமகிழ்ச்சியோடு செபம்செய்கையில் ஸ்ரீபரவாசுதேவன் செய்வித்த அருண்மயக்கத்தினாலே புல்முளைத்த தரைமீது கண்வளர்ந்து இராத்திரி பதினைந்துநாழிகை செல்லுமளவும் துயிலுணர்ந்தெழாமல் அங்குத்தானே நித்திரைசெய்தார்.—எ-று. (௨௪)

பரிதிவானவனோடிளமதியாங்குப்பரிந்துநண்புறுமுவாநாளில்
உருவமேபலவாய்விலங்குகளங்கணுறுதலுமுளந்துளங்காமல்
தெருளொடுவிழிமுன்விழித்தெதிர்நோக்கிச்சிந்தைதானனிதவவாடி
அரிகரியென்றனருயிரோநல்லமலனேயென்றுளங்கரைந்தான்.

(இ-ள்.) இப்படி இருக்குங்காலையிலே சூரியனோடு சந்திரன் உறவுகொளும் நாளாகிய அமாவாசையின் அன்று நடுராத்திரியில் ஸ்ரீநிவாசப்பெருமான் பலபல உருவங்களாகிய மிருகஜாதிகளாகிவந்து பயப்படுத்தவும் அதற்கு ஞா

னமிருந்த அநந்தநாதசுவாமிகள் மனத்திலே பயமில்லாதிருப்பதை அறிந்து மறுபடியும் புலியைப்போலத்தோன்ற, கண்ணை விழித்துக்கொண்டு எதிரேவந்து நிற்க அப்போது மனம்வாடி அரிகரி என்னுயிரே நின்மலசொரூபனே என்று வருத்தமானார்.—எ-று. (உரு)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அத்துயிலின்முன்வடிவோடச்சுதனங்கணுகியுளத்தஞ்சிடேலென்
றத்தனிலையேயடைந்தேமாதரிக்கவிலொன்றேதலன்பனுந்தான்
பத்திவலையினிற்பொருந்தாதுலகமாயையிற்சிக்கும்பாவியேனுங்
கெத்தினமீங்கருள்புரியுப்பணிவிடைவந்தெய்துமெனவிரங்கினைந்தார்.

(இ-ள்.) அருண்மயக்கத்திலே முன்வந்த வடிவமாகிய தாசநம்பியைப்போல அச்சுதாநந்தன் அவ்விடத்துக்கு எழுந்தருளி பயப்படவேண்டாமென்று உத்தமமானநல்ல அபயஸ்தங்காட்டி உன்னை யாதரிக்கவந்தோமென்றுசொல்ல, என்னையன் செல்லுவான்—உம்மிடத்துச்செய்யும் பத்தியாகியவலையில் அகப்படாமல் இந்த உலகமாயையிலே அகப்பட்டு உழலும் பாவியாகிய எனக்கு தேவரீர் முன்னாலே யருளிச்செய்த பணிவிடை எத்தினம்வந்து நேருமென்று இரக்கமாகக்கேட்டார்.—எ-று. (உசு)

அத்தகையதுயரமுணர்ந்தமலனருள்புரிவானின்றுளவந்தோம்,
இத்தரையோருனையென்றன்றொழும்பனென்றேத்துநன்மையினிச்
செய்விப்போம், முத்திநெறியோர்வணங்கும்வடமலைக்குவருகவெ
னமொழிந்துசென்றான், சித்தமுவந்தெழுந்துபணிந்தென்னதவமீ
தெனவேசிந்தித்தானல்.

(இ-ள்.) அப்படி துயரத்தோடு விண்ணப்பஞ்செய்த வார்த்தையைக் கேட்டருளிச் சுவாமி யருளிச்செய்கின்றார்; இப்போதே யுன்னையாளவந்தோம் இந்தப்பூமியுள்ளவர்களுன்னை எனக்கடிமையென்று தோத்திரஞ் செய்யும்படியான நன்மை இனிமேற் செய்துவைப்போம், மோக்ஷவழியை வேண்டும் பெரியோர்கள்வணங்கும் வடவேங்கடமலைக்கு நீவாவென்று திருவுளம்பற்றிப்போனார், அநந்தநாதனும் மனச்சந்தோஷமாக எழுந்திருந்து பணிந்து இது என்னதவமென்று தியானஞ்செய்தான்.—எ-று. (உஎ)

பணிந்தேத்திப்பலபுரிந்துறையுட்னிற்சார்ந்திட்டம்பகநோய்
காண,உணங்கியிருட்டறையணுகியர்நாளுறத்தகுமூணுறக்கமின்றிக்,
குணம்பெரியோனிருப்பமுன்னாளெம்பிரானரசடியிற்கொண்டகோ
லம், இணங்கிவந்திங்கென்செய்தாயுனையினிமேல்வெளிப்படுப்பவி
சைந்தேனென்றான்.

(இ-ள்.) இப்படி பணிந்து பலதோத்திரஞ்செய்து தாமிருக்கும் திருமாளிகைக்குவந்து சேர்ந்த உடனே இரண்டுகண்ணுக்கும் வலிகண்டு வருத்தமாய் வெயிலைப்பார்க்கப்போகாமல் ஓரிருட்டறையில் படுத்துக்கொண்டு ஆறுநாள்வரையும் நித்திரையும் உணவும் இல்லாமல் பெருங்குணமுள்ள சுவாமிக



யிருக்க முன்னே யூருக்குவெளியில் அரசடியிலே வந்த தாசநம்பியைப்போல திருவுருவாகி எம்பெருமான் இணக்கமாய்வந்து இங்கே என்னசெய்கிறாய் உன்னை இனிமேல் வெளியிலே இழுத்துவிடுவேனென்று சொல்லியருளினான்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

என்றதுமரயோனருள்செயுமெல்லையில்லுளோர்வந்துபார்த்
தெழுப்ப,வொன்றுங்கூறுமற்கால்களுங்காமுமுடலொடுவிதிர்விதிர்ப்பு
றலால், நின்றவரிரங்கவூரின்வாழ்வோருநெருங்கிச்சென்றோலமிட்
டலறி,நன்றிதென்றறியாரிப்பிணிதொலையகாடுவாரோதெனுமளவில்.

(இ-ள்.) இவ்விதமாக ஸ்ரீமந்நாராயணன் கருணைசெய்கின்றவேளையில் அந்த மரயிலுள்ளார்வந்து பார்த்தெழுப்ப ஒருவார்த்தையும் பேசாமல் கால்களுங் கைகளுஞ் சரீரத்துடனே நடுக்கங்காண அங்கிருந்தவர்கள் புலம்பியக்கூக்குரலால் ஊரிலுள்ளோர்கள் யாவருங் கூடிவந்து ஒலமிட்டலறி இது நன்மார்க்கமென்றறியாமல் இந்த வியாதியைப்போக்கும் வகையைத் தேடும் வழியேதென்று ஆலோசிக்குமளவில்.—எ-று. (௨௯)

வீட்டுத்தெய்வத்தின்குறையென்னநின்றுவிளம்புவார்சிற்சில
வினர், காட்டிற்சங்கதப்பாடென்றுதான்விளக்கைக்கண்ணிற்பார்த்
துழல்வரம்முருடர், நீட்டியகைகான்மடங்கிலன்சன்னிநிலையென்று
ர்வயித்தியக்கயவர், சூட்டுமந்திரவாதியர்களேவலிற்செய்தொழிலெ
னவுரைத்தனர்தொக்கார்.

(இ-ள்.) அங்குவந்து கூடினவர்களில்சிலர் வீட்டுத் தெய்வக்குறையென்று சொன்னார்கள், காட்டிலே ஐயனார் சங்கதங்கொண்டதென்றார் உலகில் பொய்த் தெய்வம் ஆட்டும் வீணராகி விளக்கைப்பார்த்துக் குறிசொல்லும் முருடர், கைகளையும் கால்களையும் நீட்டிக்கொண்டு முடக்காமலிருக்கிறபடியினாலே இது சன்னிநிலையென்று சொன்னார்கள் வயித்தியக்கீழ்மக்கள்; ஒருவனைக்குறித்துச் செய்யும் மந்திரவாதிகள் ஏவலின்றொழிலென்று சொன்னார்கள்.—எ-று. (௩௦)

மருந்துச்சாடனமேமுதலியவானவரிசையிற்றவாதியற்றிடுங்கால்
தெரிந்துநான்மறையுமோதிடவரியதிருமலைக்கொழுந்தருளுதன்
வருந்துவோர்தமக்காகத்தமேபெருகவளரன்பன்மனத்தகத்துதித்தவ்
விருந்தவர்கருத்துக்குறிப்பெலாமுரைத்தேயென்செயலாமிதென்றுரைத்தான்.

(இ-ள்.) மருந்தும் மந்திர உச்சாடனமும் முதலானவையெல்லாம் முறை தவறாமல் செய்யும்போது நான்குவேதங்களும் உணர்ந்துதுதிக்க அரிய திருமலைக்கொழுந்தாகிய ஸ்ரீநிவாசப்பெருமான் கருணைசெய்கின்றநாதன் அத்திரு க்கின்ற ஜனங்கள் பெருமகிழ்ச்சிகொள்ளும்படி விருத்தியாகின்ற பத்தியையுடைய அனந்தாதசுவாமியினுடைய மனத்திலமர்ந்து அங்கிருந்தவர் எண்ணிய காரியங்களை எல்லாம் சொல்லியருளி இத்தொண்டனுக்குச் சம்பவித்ததையெல்லாம் என்செயலாமென்று சொல்லியருளினார்.—எ-று. (௩௧)

மாயவன்பெயர்த்துமுரைசெய்வானென்றன்வடமலைகொணர்
மின்பின்னிவனைக், கோநிலாவிந்தக்குமுளநன்னகரிற்கூட்டுவமெ
னவருள்கூர்ந்தான், ஆதலாலன்றுதொட்டெமதையனவரவருளக்
குறிப்புணர்ந்து, பேறியாவுரைக்கும்பெற்றிமைதெரிந்துபேசவல்லு
நருமீங்குளரோ.

(இ-ள்.) அத்திருமகள் நாயகன் பின்னும் அருளிச்செய்வார், எமது வடமலைக்கு இவ்வடியார்களைக் கொண்டுவாருங்கோள் பின்பு இவ்வடியவனை இந்தக் குமுளநகரத்தில் வந்துசேரும்படி செய்வோமென்றருளிச்செய்தார்; ஆகையினால் அத்தினந்தொடங்கி என்னையாட்கொண்ட அநந்தநாதசுவாமிகள் அவரவர் மனத்தில் நினைத்தவைகளையெல்லாம் தெரிந்துகொண்டு பின்னை பேதப்படாமல் சொல்லிவருகின்ற தன்மையைத்தெரிந்து துதிக்கவல்லவர்களும் இவ்வுலகத்திலுண்டோ இல்லை.—எ-று. (௯௨)

சலசலோசனனவ்வனந்தநாதனையேதன்பணிகொண்டிடும்பொ
ருட்டாய்,பலருளத்தமைந்தபரிசெலாமுரைக்கும்பண்பதுபடைத்த
னனென்றார், இலகியவந்தச்சரித்திரந்தெரியவிளம்புகவென்னமால
டியார், தலமெலாந்தொழுதுதுதிக்குமப்பெரியோன்தனிமுதலடி
மையோன்சாற்றும்.

(இ-ள்) தாமரைக்கண்ணனாகிய ஸ்ரீநிவாசப்பெருமாள் மெய்யன்பு விளங்கிய அநந்தநாதசுவாமிகளையே தன்திருப்பதிக்கு வருதற்காகப் பலருடைய மனதிலே இசைந்த நிலைகளை எல்லாம் சொல்லும்படியான குணத்தை அருளிச்செய்தானென்று பிரகாசமான அந்தச் சரித்திரந் தெரியச்சொல்லக்கடவீரென்று வந்த திருமாலடியார் கேட்க, உலகமெல்லாந்தொழுது தோத்திரஞ்செய்யும் அந்தப் பெரிய தயாநிதியாகிய அநந்தநாதசுவாமிகளுக் கடிமைபூண்ட பசந்தர்மர் சொல்லுவார்.—எ-று. (௯௩)

திருத்தமார்குணத்தோன்றன்னைமாலடிமைசெய்தனனென்ற
தையறியா, அருத்திசேர்மனத்தாரங்கையிலொன்றைக்காந்துகொ
ண்டண்மியாதென்ன, உரைத்திடுந்தொக்கவினைகளையொழிக்குமுய
ருமுக்காலமும்புகலும், திருத்தமேபுரிந்தானந்தநீர்பெருகநேமியோ
ன்சீர்பலதுதிக்கும்.

(இ-ள்.) அறிவளற்குத் திருத்தமாயுள்ள குணமுடைய அநந்தநாதசுவாமிகளைத் திருமால் அடிமைகொண்டதையறியாமல் அறியும்படி கருத்துள்ள மனமுடையோர் உள்ளங்கையிலே யொருபொருளை ஒளித்துவைத்து மூடிக்கொண்டு இஃதென்னவென்று கேட்க, அதைத்தெரிவிப்பார், எல்லா வினைகளையுமொழிப்பார்; உயர்ந்த முக்காலத்தையுமறிவிப்பார், ஆநந்தமாக நடனஞ்செய்வார்; ஆநந்தக்கண்ணீர்பெருகச் சக்கரதரனாகிய சுவாமியைப் பலவாறு தோத்திரஞ்செய்வார்.—எ-று. (௯௪)



ஆதிநான்முகனைம்முகன்பழமறைகளளப்பருங்குணனுடையமலன்
மாதவனல்லாலெங்கணுமிரண்டாம்வத்துவில்லெனத்திடத்திசைப்பர்
காதலாலடியார்க்கருவினையனுக்குங்காலமதுரைத்தவைகடத்திப் [லூ.
பூதலத்தவர்களுளத்துறுபொருள்களெவற்றையும்புகல்வரப்பொழு

(இ-ள்.) முதன்மையாகிய பிரமனும் சிவனும் பழமையாகிய வேதமும் அளவிடுதலரிய அநந்த கல்யாணகுணங்களுடைய பரிசுத்தனாகிய திருமகள் நாயகனையல்லாமல் வேறு மெய்ப்பொருளில்லையென்று திடமாகச் சொல்லுவார்; ஆசையினோடு திருமாலடியார்களுக்குத்தீவினைகள்வந்து சேர்கின்றகாலத்தை முன்னதாகச்சொல்லி அவற்றை அகற்றுவார்; பூமியிலுள்ள மனிதர்கள் மனத்தில் நினைத்த எண்ணங்களையெல்லாம் சொல்லுவார் அக்காலத்தில்.—எ-று. ()

வேறு.

எந்தவகைக்கெதுவெல்லையிலெவ்வுருவேற்குமதோவதுகொண்
டந்தவகைத்தெரிவிக்கவருள்செயவப்பருவந்தனிலே
சொந்தமெனத்தனியாண்டவன்மேவியசோதிபணிக்கிரியில்
இந்தமனத்துடனெப்படியேகுவனிங்கெறியென்றயர்வார்.

(இ-ள்) இப்படி எந்தகாரியத்துக்கு எந்தவேளையிலே எந்தவடிவம் ஏற்குமோ அப்படிவந்து அநந்தவகைகளைத் தெரிவித்துச் சீநிவாசக்கடவுள் கிருபைசெய்துகொண்டு வருகிறகாலத்தில் அநந்தநாதசுவாமிகள் என்னைத் தனக்குரியபொருளாக என்னையாண்ட ஆதிநாராயண னெழுந்தருளியிருக்குஞ் சேஷகிரிக்கு இந்த அருள்மயக்கம்பொருந்திய மனத்துடனே இந்த வழிகொண்டு எப்படிப்போய்வருவேன் என்று கவலைகொண்டார்.—எ-று. (௯௫)

இத்திறமெண்ணியிருக்கையினர்ச்சகனின்னுருவங்கொண்டு
நெற்றியினுமமுமெண்ணெயுமஞ்சனநேர்பெறவங்கையிலே
வத்திரவெண்மைமதிக்கிரணஞ்செயமாமறையாசியொடும் [யும்
மித்திரனென்னவெய்யண்ணலெதிர்த்திருமெய்ப்பொருள்சென்றறை

(இ-ள்.) இப்படி எண்ணிக்கொண்டிருக்கிறகாலத்திலே மாயவனை நாள்தோறும் அர்ச்சனைசெய்யும் அர்ச்சகருருவமாய் நெற்றிலே திருமண்ணும் எண்ணெயும் மற்றும் திருமஞ்சனப்பொருள்களும் குறைவில்லாமல் கையிலே எடுத்துக்கொண்டு வஸ்திரவெண்மை சந்திரனொளியைப்போற் பிரகாசிக்கப் பெருமைபொருந்திய வேதமந்திரத்தினாலே யாசீர்வாதஞ்செய்து முன்பழகிய சிநேகனைப்போல எம்முடைய பெரிய அநந்தசுவாமிகளுக்கு எதிரே அழகிய மெய்ப்பொருளாகிய ஸ்ரீநிவாசப்பெருமான்வந்து அருளிச்செய்வான். ()

மன்றலிலங்குறுமாமலைநாடிவழிக்கொள்போதோர்முடவன்
ஒன்றியதிவனூரினிலுறையுக்குளவொருடுதிருமண்ணுக்
துன்றியதீர்த்தமளித்தலுமப்பிணிதொலைவுறுகின்னுட்னே
அன்றுமுதற்பிரியமனெறித்துணையாகுவனென்றனனே.

(இ-ள்.) நல்லமணமிகுகின்ற திருமலைக்கு வழிக்கொண்டு நீவருகிற போது உனக்கு முன்னேவந்து நன்மையுலவுகின்ற தீவனூரிலே யொருமுடவனிருப்பான், அவனுக்கந்தப் பிணிநீங்கிப்போம் அதுமுதற்கொண்டு அவனும் வழித்துணையாகவருவான் பயமில்லாமற் போவென்று சாதித்தருளினார் சீநிவாசப்பெருமாள்.—எ-று. (௩௮)

ஆதிமுதற்பொருளிவ்வகையோதிடவப்பொழுதியாத்திரையாய்
மேதினியோர்புகழும்தாமுன்மகிழ்வோடுவெளிப்படலும்
சீதரநல்லடியார்கள்குழுக்கொடுசெயசெயவென்றுதொழப்
பாதகமுட்படுபொய்மைகுலைந்துபதுங்கிடுமின்னவே.

(இ-ள்.) சகத்காரணப்பொருளாகிய சீநிவாசப்பெருமாள் இந்தவகைச் சொல்லியருளக்கேட்டு திருவுளங்களித்துத் தோத்திரித்து அப்பொழுதே திருமலைதரிசனத்துக்கு இந்தபூமி எல்லா புகழுந்தகைமையுடைய விதமுள்ள அநந்தநாதசுவாமிகள் பயணமாய்நடந்தகாலத்திலே திருமாலடியார்கள் துதித்துச் செயசெயவென்று வணங்கப் பாதகத்துக்குட்பட்ட பொய்யானதுகேட்டு ஓடியொளித்து நடுங்கினது அக்காலத்தில்.—எ-று. (௩௯)

ஏகியதிக்கின்மயூரமலைக்கணெதிர்ப்படநோக்கியகன்
றேகையிற்றீவனூர்பூருவதிக்கணித்தொன்றியநீர்நிலையில்
நாகமுகக்கடவுட்குடியுத்தரதக்கரையின்புறமோர்
சோகமகற்றுநிழற்பொலிசோலையின்மாடொலிகேட்டனனே.

(இ-ள்.) அப்படி அடியார்களுந் தானுமாகப் போயினபோது அந்தத் திக்கில் மயில்மலை எதிரேகண்ணுக்குத் தோற்றக்கண்டு அங்கிருந்து போகிற போது தீவனூருக்குக் கிழக்குத்திசைக்கழகுசெய்யும் மிகுந்த ஊற்றுநீர்க்குளத்தருகே கணபதிகோயிலுக்கு வடக்கில் ஓர்புறத்தில் இளைப்பாற்றவல்ல நிழலூற்ற சோலையில் ஓர்சத்தம் கேட்டருளினார் அநந்தநாதசுவாமிகள்.—எ-று. (௪0)

அப்பனருள்செயலாலுடன்வந்தவரவணிகழ்வின்றறிவோம்
இப்புதுமைத்திறமென்றுணிவைக்குறுமேல்வணியல்கழல்கை
தப்பியமுடவனையெய்தலுநோக்கியதாயனையானையவர்
தொப்பறுவந்தனைசெய்திடயாருமதூரொதுசொல்லெனவே.

(இ-ன்.) அச்சத்தத்தைகேட்டபோது அப்பனாகிய சீனிவாசப்பிரானருள்செய்ததைக் கூடவந்தவர்கள் வருகிறவரைக்கும் இவ்விடத்தில் இந்தபுதுமையாகிய திறத்தையறிவோமென்று தாமதித்திருக்கையில் தொழில்செய்கின்றதையும் காலுமில்லாத முடவனைச் சுவாமிகள் நெருங்குதலும் அவனைப்பார்த்து எல்லாரிடத்தும் தாயையொத்த தயையுடையசுவாமி அவனைக்கடாட்சித்துநீயார் உனது ஊர் எதுவென்று கேட்டருளினார்.—எ-று. (௪௧)



பொன்னிநன்னாட்டடியேன்குலமல்கியபூவருள்பாலகன்முன்
கன்னயமாயிருதோளடிகொண்டுகலம்பெறுகாலமதில்
என்னருந்தீவினையான்முடமானதிதற்குளபன்முறைகள்
தன்னிலகன்றிலவேங்கடமேதொழச்சார்ந்தனனென்றண்டிகைமேல்.

(இ-ள். அந்த முடவன்சொல்லுவான் நானிருக்கிறது சோழதேசம், என்குலம் பூமிபாலனாகிய கங்காகுலம், முன்னாலே இரண்டுகைகளும் இரண்டுகால்களும் தொழில்செய்து நடந்துகொண்டு சுகம்பெற்று வாழுங்காலத்தில் என்பிக்கதீவினையாலிப்படி முடமாயினேன், இதற்கு அநேகவைத்திய மந்திரம்முதலிய பலமுறைகளைச்செய்தும் அவற்றால் தீராதபடியினாலே திருவேங்கடத்தைத் தொழவேண்டுமென்று என்வீடுநீங்கிப் பல்லக்கின்மேலேறிக்கொண்டு வந்தேனென்றுசொன்னான்.—எ-று. (௪௨)

ஈதுணியாடலுமெந்தமனத்தருளேய்ந்துதுழாய்திருமண்
யோதருநீருமருத்தியுடற்கதுகோட்டியெழுந்திடெனப்
பாதகமன்றுபுலம்பவவன்புரிபாக்கியமேவிடவே
சீதரநாரணவென்றிடுமஞ்சலிசெய்தெதிர்நின்றனனே.

(இ-ள்.) இப்படி அவன்சொல்லக்கேட்டு என்பிதாவாகிய சுவாமிகள் மனத்திலே தயைபிறந்து திருத்துழாய் திருமண் ஆற்றமுற்றதீர்த்தம் அவனுக்குக்கொடுத்து திருமண்ணைச் சரீரத்திலிட்டு எழுந்திடென்றுசொல்ல பாவங்களெல்லாம் அப்போதே புலம்பியழவும் தான்செய்தபாக்கியம் மேவிடவும் சீதரனே நாராயணனே என்று சொல்லிக்கொண்டு அஞ்சலிசெய்து அவன் முடந்தீர்ந்து எழுந்திருந்து எதிரேவணங்கிநின்றான்.—எ-று. (௪௩)

நின்றவன்முவலம்வந்துபணிந்துநிறைந்தகருத்துடனே
இன்றெனையாண்டிடவிப்படிகொண்டனனீசனெனப்புகழ
அன்றுடன்வந்தவரற்புதமெய்தியநேகவிதம்பரிவாற்
குன்றுகுடைக்கொளுநாளிடுபோதுகூவிமுழக்கினரே.

(இ-ள்.) அப்படி வணங்கிநின்ற சூத்திரனாகிய நடேசனென்பவன் மூன்றுதரம் வலமாகவந்துபணிந்து சந்தோஷமான மனத்துடனே இன்றைத்தினம் என்னையாள இந்தவடிவாய்வந்த கடவுளேவந்தாரென்று தோத்திரஞ்செய்திரக அவன்பின்னே வந்தவர்களனைவரும் ஆச்சரியங்கொண்டு அநேகவிதமான ஆசையுடனே மலையைக் குடையாகப்பிடித்துப் பசுக்களையும் ஆயரையும் காப்பாற்றினநாளையிலே கோபாலர்கள்செய்த சந்தோஷமான ஆரவாரம்போலக் கோவிந்தநாமத்தை அதிகமாக முழக்கினார்கள்.—எ-று. (௪௪)

என்பவநீக்கிடவந்தபராற்பரவிச்சிவிகைக்குளெழிற்
றென்புறவேறெனவேண்டலுஞ்சீதரன்சேவடிக்கன்பானான்
இன்புமடைந்திடவேறுவன்மாமலைபிதென்மனம்புகுதா
தன்பவென்சொலியேகிடுபோதவனடிதொழுதென்பகர்வான்.

(இ-ள்) அப்படிக் கோவிந்தாவென்ற பேரொலியுடனே தோத்திரஞ் செய்து முடம்நீங்கினவன் சொல்லுவான் என்பாவத்தை நீக்கவந்த நற்குணங் களுக்கிருக்கையான சுவாமிகளே! இந்தப் பல்லக்கின்மேல் அழகாகத் தேவரீ ரெழுந்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்துகொண்டான், அச்சொல்லை க்கேட்டு அது எனக்கு ஒவ்வாது; அப்பனே எல்லாத்தெய்வங்களிலுமுயர்ந்த திருமகள்நாயகனிடத்து என்மனம் இன்பமடையும்படி. ஏறுவேனே அல்லாமல் இப்பல்லக்கிலேற மனம்செல்லாதென்று அருளிச்செய்து செல்லுகையில் அந்த முடவன் சுவாமிகளுடைய ஸ்ரீபாதங்களை வணங்கிநின்று விண்ணப்பஞ் செய்வானாயினன்.—எ-று. (சசு)

பாவிபடுந்துயரந்தனைநீக்கியபங்கயநீளடியின்
ஏவலெனத்திருமாமலைகாணஎளியான்றெரிசித்திடவே
நீவரமேதருவாயெனநின்மனநேர்படிசெய்திடென
ஆவலுடன்வருதண்டிகையூரினனுப்பிநடந்தனனே.

(இ-ள்.) பாவியாகிய நானனுபவிக்குந் துயரத்தையொழித்த தாமரைம லர்போன்ற விசாலமானபாதத்துக்குப் பணிவிடைசெய்துகொண்டு தேவரீர் பின்னால் திருமலைதரிசனஞ் செய்கிறவரைக்கும் நான் தேவரீரைத்தரிசனைசெய் துவரும்படியாய் வரந்தருவீரென்று விண்ணப்பஞ்செய்துகொள்ள அவ்வையன் உன்மனத்துக்கிசைந்தபடி செய்யென்று நியமித்தனர். மறுபடியும் அவன் ஆசை யுடனேறிவந்த பல்லக்கைத் தன்னூருக்கனுப்பிவிட்டுக் கூடநடந்தான்.—எ-று.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அஞ்சனைமகன்விமானமாறெடும்பாடியாடித்
தஞ்சமாய்த்தாசர்கூடித்தப்புச்சேகண்டிசங்கம்
விஞ்சியகீதநாககரமொத்துவிளங்குசின்னம்
எஞ்சலில்பேரிகாளமிவைமுதற்கருவியெல்லாம்.

(இ-ள்.) அஞ்சனாதேவிகுமாரராகிய திருவடிகளெழுந்தருளியிருக்கும் விமானம் ஆறுமெடுத்துக்கொண்டு பாடியாடிச் சந்தோஷமாக தாசர்கள் கூடி க்கொண்டு தப்புசேமக்கலஞ் சங்கம் மிருதங்கியானசங்கீதம் நாககரம் தாளமுழ வின க்கமான திருச்சின்னம் இணைப்பில்லாத பேரிகை இவைமுதலியவாத்தி யங்கள்.—எ-று. (சஎ)

கூடியேமுழக்கவின்பங்கோவிந்தவோசைபொங்க
வாடியபைங்கூழ்கண்டமழையெனவையன்பாதம்
கூடியமுடியார்க்குமுழக்கொளுமாந்தரெல்லாம்
தேடியசெல்வம்பெற்றவாறெனச்சூழ்ந்துசென்றார்.

(இ-ள்.) அந்தவாத்தியங்களெல்லாங்கூடி கேட்டபேர் செவிகளுக்கி ன்பமாக ஒலிக்கவும் கோவிந்தத்திருநாம ஓசை எங்குமிகுதியாக வொலிக்கவும் வாட்டமானபயிர்கள் மழையைக்கண்டதுபோல என்னையன் திருவடிகளை



எல்லாருஞ் சிரத்திற்சூட்டிக்கொண்டு போனபெருஞ்செல்வப்பொருள் எதி ரேவந்து கிடைத்ததுபோல் எம்பெரியாராகிய சுவாமிகளைச் சூழ்ந்துக்கொ ண்டு நடந்தார்கள்.—எ-று. (சஅ)

இச்சிறப்புடன்மூன்றுநாளிருநதிப்பாலியாடி
கச்சிநற்சிகரக்கோயில்கண்டுகண்களித்துப்போற்றி
மெச்சிடும்வீதியாவும்விருப்புடனினிதுநோக்கி
உச்சியிற்றங்கியப்பாலுளமகிழ்ந்தேகினாரே.

(இ-ள்) இவ்வகைச் சிறப்புடனேநடந்து மூன்றுநாள் பெருமைபொ ருந்திய பாலாற்றிலே தீர்த்தமாடி பெருமாள் கோவிலாகிய திருக்காஞ்சிநகரத்து க்குப்போய் கோபுரங் கோயில்களையும்தரிசித்து தேப்பெருமாள்முதலிய பெரு மாள்களையும் மங்களாசாசனஞ்செய்துகொண்டு கச்சிவீதிகளையெல்லாஞ் சந் தோஷத்துடனேபார்த்து நடுப்பகலில் அங்கேயிருந்து அப்பால் மனமகிழ்ச்சி யுடனே நடந்தார்.—எ-று. (சகூ)

சராசராவுயிர்களெல்லாந்தனிப்படைத்தளித்தழித்துக்
கரிசலியுறைதக்கவந்தகருணையங்கடவுடபோற்றிப்
பராசரவியாசபட்டர்பாலராயோங்கத்தக்க
சிராமவனுதித்தகூரத்தோர்சிசிலைத்துப்போனார்.

(இ-ள்.) நடக்கின்ற உயிர்கள் நடவாத உயிர்கள் எல்லாந் தனக்குள்ளே யுண்டாக்கிக்காத்து அழித்து அதிக்கையுள்ள மலைபோன்ற கவேந்திரனைக்காக்க வந்த கருணைக்கடலாகிய அருளாளப்பெருமாளையணங்கி ஸ்ரீவியாசபட்டரை யும் ஸ்ரீபராசபட்டரையும் இந்த உலகத்திலே தன்திருக்குமாரர்களாக விளங் கும்படிபெற்று காமனைக்கலியுக்கமாகிய மாசற்ற [illegible] முடைய ஸ்ரீகூரத்தா ழ்வான்திருவவதாரஞ்செய்தருளின [illegible] திவ்வியதேசத்திலே இராவு தங்கியப்பாற்சென்றருளினர்.—எ-று. (ருo)

அணிவகுத்தரக்கரோடுமருஞ்சமர்புரிந்தசூரன்
பிணிமுகமா [illegible]
மணமுடித்தரியகோலமறவர்தங்கொடியைவேட்டான்
தணிகைபிங்கிதுவென்றெண்ணித்தங்கினரவ்விராவே.

(இ-ள்.) அசுரரை அணிவகுத்துவந்த சூரசமனைக்கொல்லவே, அவன்மயி லாகவர அம்மயிலை வாகனமாகக்கொண்டு பிறைபோலும் நெற்றியையுடைய தெய்வயானையைக்கலியாணஞ்செய்து மறுபடியும் அழகுபொருந்திய குறவர் மகளாகிய வள்ளியம்மையை மணஞ்செய்துகொண்டு முருகக்கடவுள் வசிக்கி ன்ற தணிகைமலை இதுவாகுமென்று திருவுளத்திற்கொண்டு அவ்விராத்திரி அங்கேதங்கினர்.—எ-று. (ருக)

பிற்பகல்நகரிநாராயணபுரம்பிறங்கவைகி
அற்புதனன்பரோடுமருநெறிகடந்துபுக்கார்

இப்புறமனுகும்வேலையின்பமாமலைமுன்றோன்றப்
பொற்புடன்வணங்கியெங்கள்புண்ணியமூர்த்திசொல்லும்.

(இ-ள்.) மறுநாள் பெருமையானநகரி நாராயணபுரத்திலேவசித்து ஞானவைராக்கியமுடைய அநந்தாழ்வாமிகள் திருத்தொண்டர் கூட்டத்தோடும் அருமையான காட்டுவழியைக்கடந்து புத்தூருக்கப்பால் போகிறபோது இன்பமாகிய திருமலைமுன்னே தோன்றக்கண்டு அழகாய்வணங்கி எம்புண்ணியமே யோருருவாகிவந்த மூர்த்தியானவர் சொல்லுவார்.—எ-று. (௫௨)

மாயையாமிருளிற்புக்குமனவிகாரத்திற்கட்டுண்
டோய்விலாதுமூசலாடலெடுத்திடுபாவிக்குந்
தாயினுமன்புகூர்ந்துதண்ணளிபுரிந்ததேவன்
பாயலோதவிசோவூரோபரமபதத்துருவந்தானோ.

(இ-ள்.) அறியாமையென்னப்படும் இருளிலேபுகுந்துகொண்டு சித்தவிகாரத்திலே கட்டுப்பட்டு ஒய்வில்லாமல் ஊஞ்சலாடுகிறதுபோல உடலெடுத்துக்கொண்டு திரிகிறபாவியாகிய நாயேனுக்குத் தாயைப்பார்க்கிலும் அதிகமாய் அன்புகொண்டு நிரோதகமாயருள்செய்த தேவநாயகன் திருக்கண்வளரும் திருவணையோ அல்லது சிறிய சிங்காதனமோ அல்லது அவனிருக்கும்பரமபதமோ இந்தச் சேஷகிரியின்வடிவம்.—எ-று. (௫௩)

ஏனநினைந்துருகியேத்தியெய்தியப்பதிபுகுந்து
கனவிருள்கன்றுயின்வைகறையினிற்றுயிலுணர்ந்து
வனமலைகடந்துபோனார்வடமலைவடிவையெல்லாம்
மனமொசென்றுறைக்கண்டான்மற்றொன்றுங்காண்கிலாதான்.

(இ-ள்.) இப்படி நினைந்துருகித் தோத்திரஞ்செய்துவணங்கியப்பாலந்தபுத்தூருக்குப்போய் இராத்திரியங்கிருந்து பின்பு விடியற்காலத்திலெழுந்து நடந்து வனங்களையும் மலைகளையுங்கடந்து போகையில் திருமகள் எப்போதும் வசிக்கிற திருமலைவடிவையெல்லாம் நன்றாக மனம்பொருந்தக் கண்ணினாலேகண்டார் மற்ற உலகப்பொருள்களை காணாதவராயினார்.—எ-று. (௫௪)

வேறு.

முடிக்கவடுகொப்பமுகின்முடியதண்டலைகள்சிலிமுகங்களோடு
வடிப்பறவைகளைகனிகளருந்தவிடமின்றிமணமருளுற்றேங்கிக்
கொடுப்பவனாத்தகைக்கினதுபுசிப்பறிவெல்விசுத்தமுறுங்கொள்கைபோல
அட்டற்புலிமேயரிக்கணங்களார்ப்பறிஞலவையலக்கணகலுமன்றே.

(இ-ள்.) அத்தன்மையராய் அநந்தாழ்வாமிகள் எழுந்தருளுகையில்; மேலுள்ளமரக்கிளைகள் மறையும்படி கார்மேகங்கள் கவிந்துகொண்ட சோலைகளிலுள்ள மயில்களோடு நல்லவுருவமுடைய பக்ஷிகள் அரும்புகளையும் கனிகளையும் உண்ணுகற்று இடம்பெறுமல் மனமயங்கித்துன்பப்படுகையில் மிகுந்த பராக்கிரமமுள்ள சிறந்தபுலிகளும் சிங்கக்கூட்டங்களும் செய்கின்ற பெருமு



ழக்கங்கேட்டுக்கொடுக்கின்ற வள்ளலைமறிக்கின்றவர்களைப்போற் கவிந்துநின்ற அம்மேகங்கள்பயந்து விலகியோடுவதினால் அம்மயில்முதலியவைகள் சங்கடம் நீங்கிமேயும்.—எ-று. (௫௫)

ஆனனமம்பகந்தொங்கையடிபாணிமுளரியாயவங்களாகத்
தூநிறமாளவொலிச்சிலம்பிரங்கநெற்கதிர்மெய்துவளச்சென்றே
கானமந்தியூழ்ங்கமலத்தணிமுத்தாரத்தியெனக்கவினத்தாங்கிப்
பானுன்யங்கைமாலடியார்தமக்குமுகமன்பகரும்பான்மைபோலும்.

(இ-ள்) பின்னும் அந்நாட்டிலே கழனியின்வளமெப்படியிருக்கிறதென்றால் முகமும் கண்ணும் தனபாரமும் பாதமும் கையுமிந்த அவயவங்களெல்லாந் தாமரைப்பூவும் அரும்புமாகவும் தூய்மையானநிறமுள்ள அன்னங்கள் கூறுவது சிலம்புசத்தமாகவும் நெற்கதிரொன்னுஞ் சரீரந்துவளும்படியா யெதிர்நின்று இசைபாடும் வண்டுகள்காலினாலே யுழுகின்றகமலத்திலே சங்குகளீன்ற முத்தைமுத்தாரத்தைப்போலஅழகுவிளங்க ஏந்திய மருதநிலமாகிய பெண் திருமாலடியவரான என்னையனுக்கு உபசாரஞ்செய்வதுபோலிருக்கும்—எ-று.

பங்கயத்துநாகுவயிறுளைந்தலறித்தவழ்ந்துமனம்பரிந்துவேக
அங்கமலைச்சவுரிபடையெனமருத்துவம்புரியவன்பினீன்ற
பொங்குமணியண்டனிநல்கினையானீயென்னப்பொருதுவெள்ளிச்
சங்குகளிலாமலரைத்தேடிநம்பொருட்டணையிற்றங்குமாலோ.

(இ-ள்.) பின்னும் தாமரைப்பூவிலே சங்குகள் கருப்பவேதனையினாலே வயிறுவலியெடுத்துக் கூவிக்கொண்டு மிகத்தவழ்ந்து ஏறியிருக்க அதைக்கண்டு இறைவன் சங்கமேந்திய இடத்திருக்கரம்போலுற்றது இச்செந்தாமரையென்று நினைப்பர் அம்முத்துகளை தங்கள் முட்டைகளென்று யோசித்து அந் வயலிலேயிருக்கிற அன்னங்கள் சங்குகளில்லாத தாமரைமலரைப்பார்த்து அதனுடைய வாசனையுள்ளபொகுட்டிலே தங்கியிருக்கும்.—எ-று. (௫௭)

இமையவர்தங்குழுமீட்டுமியல்வளர்தப்பாற்கவருமென்னவெண்ணி
கமலவனப்பாசடைமீப்பாவமல்கியேயுணர்ந்துகடவுள்வைகும்
அமைவருவெற்பரண்புக்குப்பல்லுருவம்பாற்கடல்பெற்றமைந்ததென்ன
உமைபங்கனொண்சடையினுறுநீரிற்றூய்மையிருமுத்தப்பொய்கை.

(இ-ள்.) திருப்பாற்கடற்றன்னிடத்தில் தேவர்கூட்டம் தன்னிலுள்ள வளப்பங்களை கவர்ந்துகொண்டு போகுமென்று எண்ணிச்செந்நிறமாகிய தாமரைமலர்களும் பச்சையிலைகளும் தன்மேல்பரவும்படி நிறைந்து ஸ்ரீநிவாசப்பெருமான்வசிக்கின்றமூங்கில்வளர்ந்த திருவேங்கடமாகிய அடைக்கலத்தானத்தையடைந்து பலவுருவம்பெற்று அடைந்ததுபோலக் காணப்பட்டும் உமாபதியினுடைய அழகிய சடையிலுள்ள கங்கைநீரிலும் சுத்தமுள்ள நீர்நிறைந்த முத்துகள்நிறைந்த குளங்கள்.—எ-று. (௫௮)

இப்பழையவளமைசெறிந்திரும்பூதாவிளைப்பதாநீத்தேகுமேல்வை, அப்புகிறைபொன்முகரியச்சுதன்றன்முடியிலுறுமன்பினாலே; செப்பரியசேடனிரண்டாயிரங்கண்ணுறனந்தச்செழுநீர்போன்று, கப்பணங்கொண்டணுகுதொண்டர்கண்முன்வினையறமாய்த்துக்கழிக்குமன்றே.

(இ-ள்.) இப்பழமையாகிய வளமைநிறைந்து அதிசயம் உண்டாகும் அந்த இடத்தைவிட்டு அப்பாற்போகும்போது முன்போல முகரிநதி சேஷகிரியினிடத்து ஜலம்நிறைந்துவருவது எப்படி இருக்கின்றதென்றால் நித்தியமாகிய ஸ்ரீநிவாசப்பெருமாள் தன்னுடைய சிரசிலேவாசம்பண்ணும் சந்தோஷத்தினாலே பெருகிவரும் ஆநந்தக்கண்ணீருக்குச்சமமாய் திருமலைக்குக்காணிக்கை கொண்டுவருகிற அடியார்கள் பழவினையை முற்றும் அறக்கடிந்து மோக்ஷத்தைக்கொடுக்கும்.—எ-று. (௫௯)

இன்னமலையைக்காணாஉமகிழ்ந்திறைஞ்சுமினியதொண்டர்கற்பகக்கா, மன்னியொருநாற்கோட்டைராவணமூர்குவர்நந்திவன்மைமிக்க, வெண்ணிடைமீதுவர்தரவேசாலகனியூர்குவரால் விரிநீர்வையப்பி, னெண்ணினிதன்பெருவளமேயாரளவிட்டியம்பவல்லாரெண்ணுங்காலே.

(இ-ள்.) இப்படிப்பட்ட திருமலையைக்கண்டு களிப்போடுவணங்கிய நல்லடியார்கள் கற்பகச்சோலைநிழலில் தங்கி நான்குதந்தங்களையுடைய ஐராவதயானையின்மேலேறி நடத்துவார், நந்தியினுடைய வலிமையிருந்த முதுகிலேறிநடத்துவார், அன்பினால் என்று நூல்கள் சொல்லுகின்ற கடல்சூழ்ந்த நிலவுலகத்திலே இத்திருமலைவளப்பங்களை அளவிட்டு எவர்கள் சொல்லவல்லவர்கள் ஒருவருமில்லை.—எ-று. (௬௦)

அந்நதிவெள்ளத்தமிழினருள்வெள்ளத்தாழ்ந்தாதல்போலக்கீர்தோய்ந்து, நன்னியமமுடிக்குதலவ்வனந்தன்றன்பெயரையினிநாட்டுவானென், றுன்னிமகிழ்நாக்கிரண்டாயிரக்கண்ணினீராட்டவுள்ளத்தூயோன், என்னறிவேயெனப்பாராட்டிக்கைகூப்பித்தோத்திரஞ்செயின்பம்போலும்.

(இ-ள்.) அந்தப்பொன்முகரிநதி வெள்ளத்திலே ஸ்ரீநிவாசப்பெருமானுடைய பேரருள்வெள்ளத்திலே மூழ்கியிருக்கிற அநந்தநாதசுவாமிகள் நீராட்டஞ்செய்தருளி நித்தியானுஷ்டானங்களை முடித்துக்கொள்ளுதல் இவ்வநந்தநாதன் தன் திருநாமத்தை இனியிவ்வுலகத்தில் நிலைபெறச்செய்வானென்று தன் இரண்டாயிரம் கண்களினின்றும் ஆநந்தக்கண்ணீர்பெருகிவழிய மனத்தூய்மையுள்ள அநந்தநாதன் வேறல்லன் என்னறிவே ஒப்பாவானென்று கைகூப்பித் தோத்திரஞ்செய்கின்ற இன்பத்தையொக்கும்.—எ-று. (௬௧)

இந்தவிதமன்பணியமம்புரிந்தாவந்தவருமெழிலினீராடிச்
சிந்தைமகிழ்ந்தலையின்றலைமேலுமலைகப்புகுந்தொல்லுக்காலே

47-பக்கம்-திருச்சானூர்-அலர்மேல்மங்கைநாயகியை சேவித்து-அப்பாலே போகிறார்



அப்படித்திருப்பதி-கோவிந்தராஜப்பெருமாளை-சேவித்து— அப்பாலேபோகிறார்



ச்சகமுஞ்சநார்த்தனருடைமைப்பவயனார்க்கமுதந்தாலாமென்று
முந்துவடமொழிப்புலவர்மெய்த்துறலாற்பாற்கடலேயக்கிராரம்.

(இ-ள்.) இந்தவிதமாக தமையுற்ற என்னையன் அனுஷ்டானஞ்செய்து
க்கொண்டு கூடவந்தவர்களையும் அழகியசீரிலே தீர்த்தமாடக்கட்டளையிட்டு மன
மகிழ்ச்சியாய் அன்னஞ்சமைத்து அமுதுசெய்து அலர்மேல்மங்கைபுரத்துக்குப்
போகிறபோது ஸ்ரீநிவாசப்பெருமானுடைய திருவுளமுகப்பாக விதிசிவாதிதே
வர்களுக்கு அமுதுதருவதிலும் முதன்மையாகிய சமஸ்கிருதபாஷைபேசுகின்
வர் நெருங்குவதிலும் திருப்பாற்கடலை ஒத்திருக்கின்ற ஸ்ரீவைஷ்ணவ அக்கி
ராரத்தைக்கண்டார்.—எ-று. (சுஉ)

ஆயவளமறிந்தப்பாளடக்குமேல்வையினாறுநியமாயீன்ற
தாயையருட்டடங்கைதனைக்காணவருமன்புமிகுதாயனொன்னும்
நேயமகவினுக்கிரங்கிநேர்கின்றுதரிக்குமந்நிலைமைபோன்ற [சீ.
தூயவமுதக்கருணைமணிச்சோதிப்பசுங்கிளியைத்தொழுதுசென்று

(இ-ள்.) அந்தப்பார்ப்பனச்சேரியிலுள்ள வைபவத்தைநோக்கிக்கொ
ண்டு நடக்கும்போது அஜசங்கராதியுயிர்களைப்பெற்ற தாயை கருணையுடைய
தந்தையைக்கண்டு சேவிக்கிறவர்களும் அன்புமிகுந்த தனியனாகிய ஆசைமிகு
ந்தபுத்திரனுக்கு உள்ளமிரங்கி நேரேநின்று ஆதரிக்கின்றநிலைமைதோன்றும்படி
சுத்தமாகிய அமிர்தம்போலும் இனிமையுள்ளகருணையாகிய அழகிய சோதியை
வீசுகின்ற பசுங்கிளியையொத்த அலர்மேல்மங்கைத் தாயைத்தரிசித்து நடந்தார்.

இக்கவிதந்தொழுதுசென்றுமென்னன்ரசனொனமாயனெழில்சே
ரன்பன், அந்தவிதம்தெரிந்தனமேல்ரவிகிரிதெரிசனங்கண்டருளிய
ண்ணல், சிந்தைமகிழ்ந்திருந்ததுவுந்திருமார்பனவர்க்கினிமைசெய்த
வாறுஞ், சுந்தரஞ்சேர்பெருங்குணத்தோரடியோங்களுமகிழச்சொ
ல்லாயென்றார்.

(இ-ள்.) இந்தவிதமாகத்தொழுது அப்பால் நடந்தான் என்னரசனென்று
சொல்லக்கேட்டு திருமாலுக்கழகு பொருந்திய அடியார்கள் சொல்லுகிறார்கள்
அநந்தநாதன் அவதாரஞ்செய்ததும் அவனைத்திருமாலடிமைகொண்ட வண்ண
முந்தெரிந்து கொண்டோம், இனிமேற் சேஷகிரிதரிசனங்கண்டருளி நமதண்
ணல் மகிழ்ச்சியாயிருந்ததுவும், திருமறுமார்பன் அவருக்கு நன்மைசெய்தவகை
யும் அழகுபொருந்திய பெரிதான குணத்தையுள்ளவனே அடியேங்கள் மனமகி
ழ்ச்சியாகச் சொல்லுவாயென்று கேட்டார்கள்.—எ-று. (சுச)

அச்சுதன்றனடியவருமன்புபுரிந்தவைகேட்குமவிலையுண்ணி,
செச்சைமுந்தனிறைமலையைத்தெரிசனஞ்செய்தெங்காண்ணறிகழ்
ந்தஞான, நிச்சயம்பெற்றிடுவகையைத்தெரிந்தவரைச்சொல்வனெ
ன்றுநெறிவிளங்க, மெச்சுபுகழனந்தநாதன்றொண்டனருள்சூரந்து
விளம்பலுற்றான்.

(இ-ள்.) அப்படி திருமாலுக்குப்பெருமையாகிய அடியவர்களன்புநிறைந்தமனதுடனே இப்படி. கேட்குமுணர்வைநினைத்து ஆனபமுதலாகியபூஞ்சோலைநிறைந்த மலையைதரிசனஞ்செய்து எங்களண்ணல் பிரகாசமான ஞானநிச்சயம்பெற்றவகையை தெரிந்தமாத்திரம் சொல்வேனென்று அந்த நிலைமை விளங்க உலகமெல்லாம்மெச்சும் புகழ்பெற்ற அநந்தநாதனுக்குத் தொண்டனுகிய பரந்தாமன் இருபைமிகுந்து சொல்லலுற்றுன்.—எ-ன். (சுரு)

ஆட்கொண்டருளியபடலம் முற்றிற்று.

ஆக படலம் ச-க்கு திருவிருத்தம்-கசச.

---

## திருமலைத்தரிசனப்படலம்.

புதுச்சோலைசூழ்சேரின்புறமுறைவிரன்பர்குழாம்புணரிநீந்தி
அதித்தூயன்செல்லவடித்திருப்பதியின்மணிக்கொடிகளாடச்சூழ
மதிட்டேவிச்சிகரிநெடுமாடங்காசிபன்குடும்பவளமையோர்ந்து
துதிச்சேடகிரிமதலையெண்ணிலாவின்றதெனத்தோற்றங்கண்டான்

(இ-ள்.) கேளுங்கள் திருமாலடியார்களே! அப்படி அவர்மேலுமங்கைபுரம் விட்டு புதுமையாகிய சோலைகள்சூழ்ந்த பேட்டைகளும் கடைவீதிகளும், அடியார்கள் கூட்டமாகிய சமுத்திரத்தையுங்கடந்து அதிக தூய்மையானவர் நடக்கும்போது கீழ்த்திருப்பதியிலே பிரகாசமான மணிக்கொடிகளாடத்தக்கதாகச் சூழ்ந்திருக்கும் மதில்களுந்தாவிக் கோபுரங்களு நீண்டமாடமாளிகைகளும் மெப்படி இருக்கிறதென்றால் காசிபமுனிவரது குடும்பமிகுதியன்றோ; நாமுமப்படியே செய்வோமென்று துதிபெற்றசேஷகிரியெண்ணிக்கையில்லாத வீடுகளைப்பெற்றதுபோன்ற தோற்றங்கண்டானென்னையன்.—எ-று. (க)

தணப்பரியவினைக்களைகட்டொருபழையவினைக்கடலைத்தாண்டச்செய்யுங், குணத்திருவேங்கடத்தடிவாழ்திருப்பதிப்பொன்னிலவுமிழுங்கோதிலாத, மணிச்சிகரப்பாவைவளைந்தரிக்கொழுந்துதிருச்செவிக்குவளரிவ்வன்பன், குணிப்பறுமன்பதையுடனேவரவுரைக்குங்கொள்கையெனுங்குறிப்பைக்கண்டான்.

(இ-ள்.) பின்னுந்தணிப்பதற்கரிதான ஆகாமியவினைகளை வொறுத்துச் சஞ்சிதவினையென்னுங் கடலைத்தாண்டச் செய்விக்குங்குணம்பொருந்திய திருவேங்கடத்தடியிலேயுள்ள கீழ்த்திருப்பதியிலே பொற்பிரகாசத்தை வீசுங்குற்றமற்ற அழகான கோபுரத்திலிருக்கும் கோபுரந்தாங்கிப்பொம்மைகள் எப்படியிருக்கிறதென்றால் உடலைவளைத்து மலைக்கொழுந்தாகிய ஸ்ரீநிவாசக்கடவுள் திருச்செவிக்கு வளர்ச்சியான இந்த அன்பன்கணக்கிலாதகூட்டத்துடனே வருகிறனென்றுசொல்லுங்குறிப்புப்போற் கண்டான்.—எ-று. (உ)



குருமணிகளிமைக்குமொளிதழைக்குமுயர்மாடமிசைக்கொடிகளாடல், வரமுதவுமபயகரவலக்காரன்மெய்ஞ்ஞானவாரியெங்கள்,பரமனருட்டிருப்பதியிதென்றன்பன்றனைமனம்பரிவாய்க்கூவி, விரிக்கரங்கடமைநீட்டியொல்லைவாவென்றழைத்தும்விதமேபோன்ற.

(இ-ள்.) பின்னும் பிரகாசமான இரத்தினங்களி னொளிவீசித்தழைத்திருக்கும் உயர்ந்தமாடங்கள் மீதிலே கொடிகளாடுகின்றது எப்படியிருக்கின்றதென்றால்: வரங்களைக்கொடுக்கும் அபயகரவலங்காரன் மெய்ஞ்ஞானமூர்த்தியம்போன்றவன் எங்கள்பரவாசுதேவன் இருபையாயெழுந்தருளியிருக்கும் திருப்பதியிதுவென்று அன்பனை மனப்பரிவினுலே கூவி விரிந்த கைகளை நீட்டிச் சீக்கிரமாக வாவென்றழைக்கும் விதத்தைப்போலிருக்கும்.—எ-று. (௩)

கண்டவுடனிருகரமுங்குவித்திறைஞ்சிமுளிண்முளைப்பூங்கமலைகாதல், கொண்டனிறத்தவவெழிலச்சுதமுகுந்தமணிமார்பகோவிந்தாவுன், தொண்டரையும்பணியவகையறிந்திலேனென்றுருகித்தோத்திரித்துப், பண்டுமுடமகன்றவன்றன்குழுவோடெடந்தப்பதியிற்புக்கான்.

(இ-ள்) இப்படியாகக் கண்டவுடனே இரண்டுகைகளையுங் குவித்துத்தொழுது தாமரைமொக்குபோன்ற தனபாரமுள்ள செந்தாமரைப்பூவிலிருக்கும் பெரிய பிராட்டியாருக்கு நாதனே! மேகம்போலுமேனியனே! அச்சுதனே! முகுந்தனே! [illegible] மார்பனே! கோவிந்தனே! உன்தொண்டரையும் உன்னையும் பணியும்வகை யறியேனென்று உருகமாய்த் தோத்திரித்துமுன்னே முடந்தீர்ந்தவனது கூட்டத்துடனே தானும் நடந்து அந்தக்கீழ்த்திருப்பதி வீதிக்குப் போயினர்.—எ-று. (௪)

பாடாதகிள்ளைகளும்பாடுகின்றகிள்ளைகளும்பதியைச்சூழ்ந்தே
யோடாதவெந்திரமுமோடுகின்றவெந்திரமும்பரோகக்
கூடாதவாரணமுங்கூடுகின்றவாரணமுங்குறித்துமெய்யிற்
சூடாதமாலைகளுஞ்சூடுகின்றமாலைகளுந்தொகையின்றம்மா.

(இ-ள்.) அந்த கீழ்த்திருப்பதி வளமையெப்படியென்றால் பாடாதகிள்ளைகளான குதிரைகளும் பாடுகிற கிள்ளைகளான கிளிகளும் ஊரைச்சுற்றியோடாத வெந்திரமான மதிளுறுப்பும், ஓடுகின்ற வெந்திரமானதேர்களும் ஆகாயத்திலே பறக்கக்கூடாத வாரணமாகிய யானைகளும்ஆகாயத்திலே பறக்கக்கூடிய வாரணமாகிய கோழிகளும் நினைத்துச் சரீரத்திலே சூட்டக்கூடாத மாலைகளாகிய ராசாக்கள்வீடுகளும் சூட்டிக்கொள்ளுகின்ற மாலைகளாகிய பூமாலைகளும் கணக்கிட்டுச் சொல்லக்கூடாது.—எ-று. (௫)

விரிகடற்றோன்றியபொருளைமாயன்கட்டுறுபொருளைவேதத்துள்ள,வரியவருத்தப்பொருளைவென்றவாவனைய்பொருளையறிவோர்

மென்றும், திருமறுமார்பத்தவனை நினையாதமாந்தர்கட்டென்றி டைகுழ்வைப்பின், வருசனனக்கணக்கையுணர்ந்திடி னுமிதன்றெருகைதெரிக்கவல்லார்யாரே.

(இ-ள்.) பின்னையு மெப்படியென்றால் விரிவானகடலிற்றோன்றிய பொருள்களையும் ஆதிநாராயணன் வயிற்றிலேயடக்கின பொருள்களையும் வேதத்திலுள்ள அருமையான அருத்தப்பொருள்களையும் வென்ற கடைவீதியிலிருக்கும் பொருளைக் கணக்கிட்டறிவோமென்றால் திருமறுமார்பனை நினையாத ஒருவன் குளிர்ச்சியான சமுத்திரஞ்சூழ்ந்த பூமியில் சனன மெடுத்தகணக்கைத்தெரிந்துசொன்னாலும் இந்தக்கடைவீதியிலுள்ள பொருளின்கணக்கை யறிந்துசொல்லவல்லவர்கள் யார்.—எ-று. (௬).

நீடுமணிவெயிலெறிக்குமெழின்மாடத்தோவியங்கள் னிரைகள்வேதந், தேடரியமெய்ப்பரமனிப்பதியில்யாவருக்குந்தெரியநின்று, நாடியவணிருப்பதுவேபாக்கியமென் றுணர்வுபெற்று நயந்தோரெல்லாங், கூடிவந்தைம்பொறியடக்கிவரையடியிற்றவங்குயிற்றுங்கொள்கைமானும்.

(இ-ள்.) பின்னையு மிகுந்த ரத்தினவெயிலெறிக்கும், அழகுபொருந்திய மாடங்களிலே சித்திரங்கள் வரிசைவரிசையாயிருக்கின்றது எப்படி யிருக்கின்றதென்றால் வேதந்தேடியுந் தெரியவரிதான மெய்க்கடவுள் இந்தத் திருவேங்கடத்திலே யாவருக்குந் தெரியும்படியாயிருந்தான், ஆகையினாலே அதைப்பார்த்து அவ்விடத்திலே போயிருக்கின்றதே நல்லபாக்கியமென்று அறிவுபெற்ற பெரியவர்களெல்லாங்கூடி அவ்விடம்வந்து ஐம்புலனுமடக்கி மலையடியிலே தவஞ்செய்வதுபோலிருக்கின்றது.—எ-று. (௭)

வேதவொலிதேரொலிமும்முரசொலியாழொலிகிருத்தர்யிடற்றிற்றோன்றுங், கீதவொலியாம்பலொலிவாசியொலிசிலம்பணிந்தகிளர்பூண்மாதர், பாதவொலிவேழவொலியாவணப்பேர்படைத்திந்தப்பதியிற்றங்கு, மோதவொலியைத்தணிக்குமதைத்தணிக்குங்கோவிந்தவொலியுமாதோ.

(இ-ள்.) பின்னையும் வேதசத்தந் தேர்சத்தம், படைமுரசு, கொடைமுரசு, கலியாணமுரசின்சத்தம் ஆடுகிறவர்கள் குரலிற்றோன்றிய சங்கீதசத்தம் யானைசத்தம் குதிரைசத்தம் பெண்கள் காற்சிலம்பின்சத்தம் பிரகாசமான ஆபரணம்பொருந்திய தேவதாசிகள் காலின்சத்தம் ஆயர்குழற்சத்தம்; இந்த சத்தங்களெல்லாம் கடைவீதியென்று பேர்வைத்துக்கொண்டு இந்த பட்டணத்தைச்சூழ்ந்திருக்குஞ் சமுத்திரசத்தத்தையும் அழிக்கும், அந்த சத்தத்தை அழிக்கும் அடியார்கள்சொல்லுங் கோவிந்தசத்தம்.—எ-று. (௮)

சகங்குயிலுங்கனிபாடமயிலாடவனமிரண்டுதொழிலுங்கற்க [ல்லுஞ்
வகத்தரியைத்தொழுதுவரம்பெறவிந்நகர்க்குவந்த தொக்குஞ்சொ



சகம்புகழுங்குரலாடனடைக்குவமம்புகலரியதையலார்கண் [றே.
முகங்கரங்கண்டனஞ்சரண முளரிக்காடலர்ந்ததெனமொழியற்பாற்

(இ-ள்.) பின்னையுங் கிளியுங் குயிலும்பாட மயிலாட அன்னம்பாடலாடலிரண்டுங்கற்க நினைத்து ஆதிநாராயணனைத்தொழுது வரம்பெறவே இந்நகருக்குவந்ததற்குச் சமானமாயிருக்கும். அது எதுவென்றால், சொல்லப்படும் பூமிபுகழுங் குரலும் ஆடலும் நடைக்கு முவமைசொல்லவரிதான பெண்களிருக்கிறது பின்னும் அந்தப்பெண்கள் பெருமையே அப்படியென்றால் முகம் கைகண் தனம் பாதங்கள் தாமரைக்காடுமலர்ந்ததுபோல் இருக்கிறதென்று சொல்லலாம்.—எ-று. (௯)

கள்ளொழுகும்பூந்தாதுமடற்பாளைத்தெங்கிளநீர்கவினத்தாங்கி, யொள்ளொளிநீண்மணிமாடவீதிதொறுநிரைசெறிதலொண்பூண்மாதர், தெள்ளமுதத்திருமார்பன்றரிசனப்பேறடையவருந்தெளிந்தோர்தங்கட், கெள்ளரியவழிவருத்தந்தீரநறும்புனற்கலசமீவோரொத்த.

(இ-ள்.) பின்னுந் தேனொழுகும் பூந்தாது மிகுந்த மடல்விரிந்த பாளைபொருந்திய தென்னமரங்கள் இளநீரை அழகுபெறத்தாங்கிக்கொண்டு பிரகாசம்பொருந்திய மிகுதியான மணிகளிழைத்த மாடமாளிகைநிறைந்த வீதிதோறும் வரிசைவரிசையாயிருப்பது எப்படியென்றால் உயர்ச்சியாகிய ஆபரணமணிந்தபெண்கள் தெளிவான அமுதம்போன்ற சொல்லையுடைய இலட்சுமிவசிக்குமார்பனைத்தரிசனஞ்செய்யவருந் தெளிவான அடியார்களுடைய சொல்லுதற்கரிதான வழிநடந்துவந்த வருத்தந்தீர வாசனையான சலத்தைக்கலசங்களிலேவைத்துக்கொண்டு கொடுக்கின்றவரைப்போலிருக்கும்.—எ-று. (௰)

படியிமையோரொருகால்வந்தச்சுதானந்தனெங்கள்பரமநாதன், குடியிருக்குமிந்நகரைத்தெரிசித்தாலெழுதோற்றக்குழும்புதேயந்து, கெடுமெனவேநால்வேதமோதுமெனிலச்சேடகிரியின்கண்ணேயிடைவிடாவந்தனைசெய்துறைவோர்தம்பெருமையெடுத்தியம்பலாமோ.

(இ-ள்.) பின்னையுமிந்த வுலகத்திலுள்ளவர்கள் ஒருகாலத்திலேவந்து அச்சுதானந்தன் யெங்களுக்குப் பரமபதநாதனுகிய சீநிவாசக்கடவுள் குடியிருக்கும் இத்தலத்தைத் தரிசித்தா லெழுவகைத்தோற்றத்தினால்வருங்கலக்கந்தேய்ந்து கெடுமென்று நான்குவேதமுஞ்சொல்லுமென்றால், அந்தச் சேஷகிரியினிடத்திலே யிடைவிடாமல் தரிசனஞ்செய்துகொண்டிருப்போர் பெருமையை என்றாலும் சொல்லக்கூடுமோ.—எ-று. (௧௧)

இன்னவளங்களைக்கண்ணுற்றென்னையன்வீதிகெழியேருமேக்கை, துன்னுமதிட்சிகரிமணிமண்டபங்கள்விழிக்கெதிரேதோன்றக்

கண்டே, யன்னதிருவாலயத்துச்சித்திரகூடத்தாசையரிக்கட்செவ்வாய்ச், சொன்னவனப்புண்டரிகவல்லிமலர்த்தாளிணையுந்தொழுதான்மன்னே.

(இ-ள்.) இப்படி பழமையாகிய வளங்களைத்தெரிசித்து எம்பெருமான் வீதிவழியாகப் போகும்போது மிருதியான மதில்களுங் கோபுரங்களும் அழகான மண்டபங்களுங் கண்ணுக்கெதிரே தெரியக்கண்டு அந்த அழகான ஆலயத்துக்குள்ளே புகுந்து தில்லைக்கோவிந்தராசனையுஞ் செவ்வரிபடர்ந்த கண்ணுஞ் சிவந்தவாயுமுள்ள தங்கநிறமான புண்டரீகவல்லித்தாயார் மலர்ப்பாதங்களையுந் தொழுதான்.—எ-று. (௩௨)

தொழுதங்தப்பதிநீங்கிநறைவிரியுமாமலர்த்தேன் றுளித்துநற்றண்
ணிழலளித்துத்தேகவிடாய்த்தென்றலைதயாற்றியின்பனேயன்ன
வழிவருந்துமடியவரையாதரிக்குந்தண்பொழி லுமஞ்சுலாவுஞ்
செழுமணிமண்டபந்திகழுமாழ்வார்தீர்த்தக்கரையிற்சென்றான்மாதோ.

(இ-ள்.) இப்படித்தொழுது அந்தத்திருப்பதியைவிட்டுநடந்து வாசனையிருந்த மகத்தாகியமலர்கள் தேனைத்துளித்து நல்லகுளிர்ந்த நிழலைக்கொடுத்து தேகவிடாயைத்தென்றற்காற்றினாலே நீக்கி இன்பமான சினேகனைப்போலே வழிநடந்து வருந்தும் அடியார்களை யாதரிக்குந்தோப்புகளும், மேகங்கள் சஞ்சரிக்குஞ் செழுமையான அழகுபொருந்திய மண்டபங்களும் பிரகாசித்துக்கொண்டிருக்கும் ஆழ்வார் தீர்த்தக்கரைக்கு வந்தார்.—எ-று. (௩௩)

வேறு.

கடம்பொழிந்துயர்கரிதனக்கிடர்செயுங்கடுவல்
லிடங்கரைத்தடிந்தருள்புரியரியடியிணையை
நெடுங்கரங்குனிந்தலரினாற்பூசிக்குநெறிபோற்
றிடங்கொணூகம்வாய்வருங்குருகூரனற்றீர்த்தம்.

(இ-ள்.) அந்த ஆழ்வார்தீர்த்தமெப்படியிருக்கின்றதென்றால் மதம்பொழிந்து உயர்ச்சிபெற்ற கஜேந்திரனுக்குமுன்னே இடர்செய்யுங் கொடியவலிமையுள்ள முதலையை சங்கரித்துக் கிருபைசெய்யும் ஆதிமூலநாதன்பாதங்களை அந்தக் கஜேந்திரன் அளவான துதிக்கையை நீட்டிவளைத்துச் சலத்தினாலே பூசைசெய்யுமார்க்கம்போலேயிருந்தது. அது எதுவென்றால் இடம்பொருந்திய திருமலையினிடத்திலேயிருந்து ஜலம்பெருகிவரும் ஆழ்வார்தீர்த்தம்.—எ-று ௩௪

எண்ணிலாப்பெருவளமைகண்டினிதுவந்திறைஞ்சி
யண்ணனற்குருகூரன்புட்கரணிநீராடி
கண்ணன்மாதவன்கேசவன்மாயவன்கருத்தி
னண்ணமாலருண்மயக்கமுற்றவனணிநடந்தான்.



(இ-ள்.) இப்படி எண்ணிக்கையில்லாத பெருமையான வளங்களைக் கண்டு இனிமையான சந்தோஷத்துடனேதொழுது அண்ணலாகிய நம்மாழ்வார் தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து கண்ணன் மாதவன் கேசவன் மாயவனாகிய சீநிவாசமூர்த்தி கருத்திலே வந்திருக்க மகத்தாகிய அருள்மயக்கத்துடனே யென்னையனடந்தான்.—எ-று. (௧௫)

அருணம்பல்லுகமரிகரியுழுவைமாவரம்பை
விரிமலர்ச்சினைசண்பகம்பாதிரிவேங்கை.
பருதியங்கிரணம்பொலிபலமணிவளர்நீ
டரவமாமலையடித்தலந்தனையணுகினனே.

(இ-ள்.) இப்படிநடந்து மான்கள் கரடிகள் சிங்கங்கள் பன்றிகள் புலிகள் மாமரம் வாழைமரம் மிகுந்த மலர்கள்பொருந்திய கிளைகளையுற்ற சண்பகமரம் பாதிரிமரம் வேங்கைமரங்களுடன் சூரியனைப்போலே கிரணங்களும்பொருந்தியபலரத்தினங்களெல்லாம் தங்கியிருக்கும் சேஷகிரியின் அடிக்கோபுரத்துக்குவந்தான் என்னையன்—எ-று. (௧௬)

பேர்தனிந்திரனிருடியர்தவமிகுபுலவோர்
வேதகேடியுந்தெரிவருமெய்ப்பொருளெங்கள்
மாதவன்றிருமகள்மணவாளன்வாழ்பொருப்பை
யோதுநன்னெறிமேவுநல்லறிவெனக்குளதோ.

(இ-ள்.) கேளுங்கள் திருமாலடியார்களே பிரமன் தேவேந்திரன் ரிஷிகள் தவமிகுதியான தேவர்களும் வேதங்களுந்தேடியுந் தேடவரிதாகிய மெய்ப்பொருள் மாதவன் இலட்சுமி நாதன் ஸ்ரீநிவாசமூர்த்தி அவ னெழுந்தருளியிருக்கும் மலையின்பெருமையைச்சொல்ல நன்மார்க்கமுள்ள நல்லறிவெனக் கிருக்கின்றதோ ஆனாலுந் தெரிந்தமாத்திரஞ் சொல்லுகிறேன்.—எ-று. (௧௭)

நாகமாக்கடல்வெளிப்படக்கண்டுளநடுங்கி
நாகமாமலர்ச்சினைகளிலேறிப்பின்னகைக்க
நாகமாடியவகையறிந்துடனிநலிந்து
நாகமாதவர்சரணடைந்தின்புறநயக்கும்.

(இ-ள்.) நாகமென்னும் யானைகள் சமுத்திரம்போலே வெளிப்படக் கண்டு மனம்நடுங்கி நாகமென்னும் புன்னைமரத்திலே மலர்பொருந்திய கிளைகளிலே யேறிக்கொண்டு மறுபடியுநகைக்க அந்தமரத்திலே நாகமென்னும் பாம்புகளாடிக்கொண்டிருக்கிற விதத்தையறிந்து உடல்நடுங்கி நாகமென்னும் குரங்கின் கூட்டங்கள் அந்தமலையிலே தவஞ்செய்யும் ரிஷிகள் பாதத்திலே யடைக்கலம்புகுந்து சந்தோஷமாக இருக்கும்.—எ-று. (௧௮)

நேமிப்புள்ளுணுங்கிரணத்தனைமன்னிநிலவ
நேமிசண்பகந்தேக்ககில்சந்தனநிறைந்து

சேயிருழிடத்தினிதுதன்பெயரினைசிறுவு
சேயியோன்வளைக்கரத்தணிமெய்ப்பொருணிலையம்.

(இ-ள்.) பின்னுஞ் சக்கிரவாளப்பட்சிகள் புசிக்கப்பட்ட கிரணத்தையு டையசந்திரனைப்போல ரத்தினங்கள் வெயில்விட்டெறிக்க மூங்கிலுஞ் சண்பக முந் தேக்குமகிலுஞ் சந்தனவிருட்சங்களுநிறைந்த சமுத்திரஞ்சூழ்ந்த பூமியினி டத்திலே இனிமையாய் தனித்து திருநாமத்தை நிலைநிறுத்திக்கொண்டிருக்குஞ் சக்கரமும் பிரகாசமானசங்குங் கையிலே தரித்துக்கொண்டிருக்கும் மெய்ப் பொருளாகிய சீநிவாசமூர்த்தி யெழுந்தருளியிருக்குஞ் சந்நிதியாகிய திருவே ங்கடமலை.—எ-று. (௧௯)

ஆலம்பாடலமல்லிகைதாழைமாவரம்பை
யாலம்பாதிரிகுடசமந்தாழைமாவலரி
கோலமாலதிசெச்சைபன்னகத்தின்குலமய்
கோலமாலதிசெச்சைதேக்ககிலெலாங்குலவும்.

(இ-ள்.) பின்னையும் ஆலமரம் பாதிரிமரம் மலைமல்லிகைமரம் தென்ன மரம் மாமரம் வாழைமரம் நீர்ப்புங்கைமரம் மூங்கில்வெட்பாலை மரந்தாழை ம கந்தாகிய அலரிமரம் பாக்குமரம் சிறுசெண்பகமரம் வெட்சிமரம் புன்னைமரக் குலம் அழிஞ்சில் மல்லிகை துளபங் தேக்குமரம் அகில் இவைகளெல்லாமிரு ந்து கூடிக்கொண்டிருக்கும் அந்தமலையில்.—எ-று. (௨௰)

மந்தியூன்றினவல்லியங்கனிகளைப்பழுக்க
மந்திகாய்த்திடமாங்கடேனுண்டுளமகிழத்
தந்திவெண்ணிறந்தனியறிகருகிறந்தழைக்குந்
தந்திகெற்றருந்தட்டைகள்பாடுமெச்சயிலம்.

(இ-ள்.) குரங்கு கனிகளை மழுக்க, புலிகள் மாமிசம் புசிக்க, வண்டுகள் தேனைக்குடித்து மனமகிழ,மாங்கள் காய்த்திருக்க யானை கருநிறந்தழைக்க,ஒப் பற்ற சிங்கம் வெள்ளையாயிருக்க, தந்திபொருந்திய வீணைகள்பாடு மூங்கிலில் நெல்விளையும் அந்தமலையில்.—எ-று. (௨௧)

வாரணந்திருமலைக்குவந்தாலெனமலிந்த
வாரணங்களோங்கோசையோடணுகியவழியிற்
றோரணங்கண்மென்கொடிபுஞ்சலாடிடத்துவன்றி
தோரணங்களைக்கட்டிவைத்தெனநனிதோன்றும்.

(இ-ள்.) பின்னையும் சமுத்திரமானது திருமலைத்தரிசனத்துக்கு வந்த துபோல் மிருந்தயானைக்கூட்டங்கள் மலிந்தசத்தத்துடனே வருகிறவழியிலே குரங்குகள் மேன்மையான பசுங்கொடிகளிலே யூசலாடிக்கொண்டிருக்க அந்த க்கொடி திவண்டிருக்கின்றது எப்படியிருந்ததென்றால் யானைவரும்வழிக்குத் தோரண மிகவுங்கட்டிவைத்ததுபோலிருந்தது.—எ-று. (௨௨)



வேதண்டத்தினில்வாழ்கிரிபிணையரிவேங்கை
வேதண்டத்தினைவெருட்டியாக்குலமெனமேய்க்குங்
கோதண்டத்தினாலரக்கர்வெஞ்சேனையைக்கொன்ற
கோதண்டத்தனைவெல்லுமிம்மலையுறுங்குரங்கே.

(இ-ள்.) பின்னையும் அந்தமலையிலேவாழ்கின்ற பன்றி, மான், சிங்கம், புலி, யானைகளைபுமிரட்டி பசுக்குலம்போலேமேய்க்கும் அதெதுவென்றால், கோதண்டமென்கிற வில்லினாலே அரக்கர்சேனையைச் சங்கரித்த கோவாகிய இரகுநாயகனுடைய தண்டமாகிய குரக்குச்சேனைகளையெல்லாம் வெல்லும் இந்த மலையிலிருக்கும் குரங்குகள்.—எ-று. (௨௩)

அருவிமாதங்கமரிக்குலமம்மலையரவம்
அருவியாதங்கமரிக்குலமம்மலையரவம்
கருவியஞ்சுகந்திலகமார்பாசிற்கலாபங்
கருவியஞ்சுகந்திலகமார்கொடிச்சியர்கலாபம்.

(இ-ள்.) பின்னையுந்தினைத்தாளும்பொன்னுங் குரங்கின் குலமும் அழகு நிறைந்த பாம்புகளும்பொருந்திய மலையினிடத்தே யாறுகளும் யானைகளும் சிங் கக்குலமும் மேகம்பொழிகின்ற சலமும் இவையுடைய சத்தங்களுங்கூட்டமா ன கிளிகளும் மஞ்சாடிமரம் ஆத்திமரத்தின் பக்கங்களிலே மயில்கூவுகின்ற சத்தமும்மேகங்களஞ்சப்பட்ட தலைமயிரும் திலதம்பொருந்திய நெற்றியுமுள்ள குறப்பெண்கள் காமக்கூச்சலு மிகுந்திருக்குமந்த மலையில்.—எ-று. (௨௪)

வண்டிமஞ்ஞைமாமரங்கடேன்சிறைமுகமலர்ந்து
கொண்டுமேல்விரித்தெழுந்துகாய்த்துத்துயில்கூரும்
விண்டுமாமுடியீதினிற்றிருநடம்விளக்கும்
பண்டுநல்லடியார்செயுந்தவமெனப்பழுக்கும்.

(இ-ள்.) பின்னையும் வண்டுகள் மயில்கள் மகத்தாகியமரங்கள் தேனைக் கொண்டு சிறகைக்கொண்டு அரும்புகள் மலர்ந்துகொண்டு மேலெழும்பி சிற கை விரித்தெழுந்துகாய்த்து நித்திரைசெய்யும் மயில்கள் மலையின் மேல் டனம் பண்ணிக்கொண்டிருக்கும் மரங்களானவை பழவடியார்கள்செய்யப்ப ட்ட தவத்தைப்போலேயிருந்துபழுக்கும். இவற்றின் பொருளைக்கொண்டுவி ட்டதெப்படியென்றால் வண்டுகள் தேன்குடித்து மேலாகிய நித்திரைசெய்துகொண் டிருக்கு மயில்கள் சிறகைவிரித்தெழும்பி மலையினது உச்சியிலே நடனஞ்செய்து கொண்டிருக்கும் மரங்கள் அரும்புகள்மலர்ந்து காய்த்துப் பழைய நல்லடியார் கள் செய்த தவமிகுதியைப்போலே பழுத்துக்கொண்டிருக்கும் அந்தமலையில்.

விண்டலக்திரொளிமுடிமணிகள்பூண்விதுவா
மெண்டகைக்குடையுருவியுத்தரிகமொள்ளிலைமூட்
கொண்டவேல்சமந்தனைவருபிரிந்திராகொளலுன்
மண்டலாதியன்றனைமொத்ததாவமாமலையே.

(இ-ள்.) பின்னும் ஆகாயத்தினிடத்திலேயிருக்கும் சூரியன் பிரகாசமான கிரீடமாகவும் அந்தமலையிலிருக்கு மிரத்தினங்கள் பதக்கங்களாகவும் சந்திரனெனப்படுபவனே கனம்பொருந்திய குடையாகவு மலையாறுகளுத்தரியமாகவும் விளக்கமான இலையுமுள்ளும் பொருந்திய வேலென்னுமாத்தைச்சுமந்துக்கொண்டிருக்கிறபடியினாலேயும் அனைவர்களுங்கொடுக்கும் காணிக்கையைக்கொள்ளுகிறபடியினாலேயும் ஏகசக்கிராதிபதியான அரசனுக்குச்சமானமாக இருக்கும் அந்தச்சேஷகிரி.—எ-று. (உசு)

கையுங்கூந்தலுங்காந்தளுங்கொன்றையுங்கழைதோ
ளையநுண்ணிடைவல்லியர்தொண்டைவாயரம்பை
துய்யவாமமஞ்ஞானகடிதடமெனதுலங்கித்
தையலார்களையொத்ததுவேங்கடசயிலம்.

(இ-ள்.) பின்னையுங்கைகள் காந்தளாகவும் கூந்தல் கொன்றைக்காயாகவும் மூங்கில்தோளாகவும் உண்டோ இல்லையோவென்று சொல்லும் நுண்மையான இடைகொடியாகவும் ஆதொண்டைப்பழம் வாயாகவும் வாழை தூய்மையான தொடையாகவும் அழகானசுனைநிதம்பமாகவும் பிரகாசித்துக்கொண்டிருக்கிறபடியினால் பெண்களுக்குச் சமானமாகவிருக்கும் அந்தத்திருவேங்கடமலை. ()

மங்குலும்பிறைவலைதொண்டைமதிசங்குவளைவான்
பொங்கரந்தடியரம்பைமாந்தளிர்பொருவும்பொருப்பி
னங்கைமார்திகலஞ்சொலிற்பதந்தொடைநடுவுங்
கொங்கைதோள்களமுகமிதழ்விழிநுதற்குழலே.

(இ-ள்.) மேகம் பிறை வலை கோவைப்பழஞ் சந்திரன் சங்கு மூங்கில் பிரகாசமான *மலை யுடுக்கை வாழைமரந் தளிரிவைகளைப்போலேயிருக்கும் அந்த மலையிலேயிருக்கும் பெண்களிட அழகிய நலத்தைச்சொல்லுமிடத்திலே கால் தொடையிடை தனந்தோள் கழுத்து முகம் வாயிதழ் கண் நெற்றி கூந்தலும்.()

தோலிலாவியகொன்றையுங்காந், ளுஞ்சூடி
[illegible]வயென்றரியமுத்தாடி
நீடுசுனைகதிருலவியவளிளகிலவைக்
கூடியேவிளையாடுவரிறவுங்குமரர்.

(இ-ள்.) பின்னையும்மலரிதழ்பொருந்திய கொன்றைப்பூவையும் காந்தட்பூவையுஞ்சூடி சிற்றுடைகட்டி நல்லமரப்பாவையொன்று அருமையானமுத்தமிட்டு நீண்ட குளிர்ச்சியான கிரணங்களுலவிய வளர்ச்சியுள்ள இளம்பிறைச்சந்திரனைப்பிடித்து இப்படியாக விளையாடுவார்கள் அந்தமலையிலிருக்கும் குறவர் மக்கள் —எ-று. (உக)

ஓங்குருன்றவர்மதலையர்கடிதுசென்றேறி
தூங்கல்மாமருப்பினைதொடக்கடிந்ததுதொடரக்



கோங்கரும்பெடுத்தோச்சுவார்கறைமலர்கொழிக்கும்
வேங்கையைக்கொடுவேங்கையைமுடுக்கியவிறலோர்.

(இ-ள்.) பின்னையும் உயர்ச்சிபெற்ற அந்த மலையிலிருக்குங் குறவர்மக்கள் விரைவிலோடி யானையின் கொம்பைப்பிடித்து அந்த யானையைத் தூரத்த பயப்படாமற் கோங்குமரத்தின்மேலேறிக்கொண்டு அதன் அரும்பையெடுத்து யானையின்மீதெறிந் தோட்டிவிடுவார்கள்; அவர்கள் தீரமோவென்றால் வாசனையான மலர்மிகுந்த வேங்கைமரக்கொம்பை யொடித்துக்கொண்டு புலிகளையோட்டும் திறமையுள்ளவர்கள்.—எ-று. (௩௦)

கோதிலாதசந்தனச்சுனையதனிடைக்குளித்துச்
சீதமென்கனிசெழுங்கிழங்கினியநற்றேற
லேதமற்றவச்சுதன்றிருவடிமனத்திருத்து
மாதவர்க்குவந்தினிதுவக்தளித்திடுமந்தி.

(இ-ள்.) குற்றமில்லாத சந்தனச்சுனையினிடத்திலே குளித்து குளிர்ச்சியையு மென்மையுமுள்ள கனிகளையுங் கொழுமையான கிழங்குகளையு மினிமையான நல்லதேனையுங் குற்றமற்ற ஸ்ரீவாசன்றிருவடியை மனத்திலேவைத்துக்கொண்டு தவஞ்செய்யும் ரிஷிகளுக்குச் சந்தோஷமாகக் கொண்டுவந்துகொடுக்குங் குரங்குகளந்த ரிஷிகள்தவத்தின் மகிமையினால்.—எ-று. (௩௧)

வாமமென்குறக்கொடிச்சியர்கிழங்ககழ்மனத்தாற்
பூமலர்ச்சொரிகொன்றைநற்றாரிடைப்புகவே
சேமமின்றியேபாலுவாற்கைத்தழுஞ்சேயை
மாமயிற்பெருஞ்சிறகினுலிரங்கியேமறைக்கும்.

(இ-ள்.) பின்னும் மழகுபொருந்திய மேன்மையான கூந்தலுடைய குறப்பெண்கள் கிழங்குகல்லவேண்டுமென்கிற மனத்தினாலே பூமலர்மிகுந்த கொன்றைமரத்து நல்லபுதரினிடத்துக்குப்போக அந்தவேளையிலே யாருங்காப்பாரில்லாமற் சூரியகிரணத்தினாலே திகைத்து அழுகிற குறப்பிள்ளைகளை மகத்தாகிய மயில்கள் பெரியசிறகினாலே இரக்கமாய்வந்து மறைத்துக்கொண்டிருக்கும். ()

சந்திராதித்தரணிமணிச்சிகரத்திற்றலமு
மெந்தைவாழ்மலையென்றறிந்தெழிலுறுமியக்கர்
வந்துபூசைசெய்தேறுலவியசுமுலரை
மந்தியக்குறமாதருக்களித்துளமகிழும்.

(இ-ள்.) பின்னுஞ் சந்திரசூரியர் அழகான ரத்தினங்கள்பொருந்திய சிகரத்திலே தவழ்ந்துகொண்டுதிரியும் எந்தையாகிய ஸ்ரீனிவாசக்கடவுளெழுந்தருளியிருக்கும் மலையென்றறிந்து அழகுபொருந்திய கின்னரர்வந்து பூசைசெய்கின்ற தேன்பொருந்திய வாசனையானமலர்களைக் குரங்குகளெடுத்துக்கொண்டுபோய் குறப்பெண்களுக்குக்கொடுத்து மனதுசந்தோஷமாயிருக்கும்.—எ-று.

அ

கோதிலாதமர்முகிற்குலமுலவியகுன்றத்
தோதுசெந்தினைப்புனத்தினிற்பறவையையோச்சு
மாதர்மென்மொழிகேட்டுணவகற்றியேமகிழ்ந்து
காதிஞனுகர்க்தேபசுங்கிளியதைக்கற்கும்.

(இ-ள்.) பின்னும் குற்றமற்ற பெருமையான மேகக்குலங்கள் சூழ்ந்திருக்கும் அந்தமலையிலே சொல்லாநின்ற சந்திரனைப் புனத்திலே பட்சிகளைப் போட்டுக் குறப்பெண்களிடம் மேன்மையானசொல்லைக்கேட்டு தான் தினைக்கதிர் புசிப்பதைவிட்டு சந்தோஷமாய்க் காதிலேலே புசிப்பதுபோல் அழகுபொருந்திய பசுமையான கிளிகளந்தச்சொல்லைக் கற்றுக்கொள்ளும்.—எ-று. (௬௪)

எள்ளிலாதசெங்காந்தள்களினர்போலேற்பக்
கொள்ளையாய்க்குருகூரன்புட்காணிநீர்கொழித்தே
யொள்ளுலாமலர்த்தேன்கனிகாயுதவுதலால்
வள்ளியோர்களையொத்ததுவேங்கடமலையே.

(இ-ள்.) பின்னையுமெப்படியென்றால் குற்றமற்ற செங்காந்தட்புட்பங்கள் தரித்திரவான்களைப்போலே கைநீட்டிக்கொண்டுகேட்க, மிகுதியாக ஆழ்வார் புட்கரணிநீரைக்கொடுத்துப் பிரகாசம்பொருந்திய மலர்களுந் தேன் கனி காய் இலை கிழங்கு மூங்கில்நெல் இவைமுதலாகிய அநேக வஸ்துகளைக் கொடுப்பதால் இடைவிடாமற்கொடுக்கும் வள்ளியோர்களுக்குச் சமானமாயிருக்கும் அந்தத் திருவேங்கடமலை.—எ-று. (௬௫)

இத்தகைப்பெருவளமணிமலைகளினிருக்கு
மெத்திசைக்கணும்புகழடிக்கோபுரத்திறைஞ்சிப்
பத்தர்தம்விடாயகற்றுமண்டபம்பலபார்த்துச்
சித்திகாட்டியமுதற்கிரிகடந்தெளிசென்றான்.

(இ-ள்.) இத்தகைமையான பெருமைபொருந்திய வளங்கள் மலிந்திருக்கும் அந்தமலையினிடத்திலே யிருக்கின்ற எந்தத்திக்கும் புகழும் அடிக்கோபுரத்தைத்தொழுது திருமாலடியார்களுக்கு விடாய்தீர்க்கும் பலமண்டபங்களைப் பார்த்துச் சித்திகளைக்கொடுக்கு முதல்மலை வழிகொண்டு கடந்தான்.—எ-று. ()

வேறு.

பன்னகவரைமேற்சிகரியைக்கடந்துபத்தர்களொடுந்தடமேகி
யுன்னதக்கலு[illegible]சிங்கமஞ்சனத்தோடுந்துகாளுறுகள்கடந்திட்
டொன்னலர்க்[illegible]மேறெனுமெதிராசனுவந்திடநாரணங்கலந்து
தன்னையாளு[illegible]தற்பரனிருந்ததடமலைப்பதியினிற்சார்ந்தான்.

(இ-ள்.) [illegible]னுஞ்சேஷகிரியிலிருக்குங் காலிகோபுரத்தைக்கடந்து அடியார்களோடே வழிகொண்டு உயர்ச்சிபொருந்திய கருடமலை சிங்கமலை யஞ்சனமலை காளியாறுமுதலிய வெல்லாங்கடந்து மறுபடியும் பரசமயமென்னுஞ்



சத்துருக்களுக்கு இடியையொத்த எதிராஜனிருக்கு மலையையுங்கண்டு நாராயணமலையிலேபோய் தன்னையாளாகவுடைய ஸ்ரீநிவாசக்கடவுளிருக்கும் திருமலைப்பட்டணத்தைச் சேர்ந்தானென்னையன்.—எ-று. (௬௭)

நாகஞ்சண்பகம்புன்காலிவாசந்திகரந்தமாலதிகன்னிகாரஞ்
சாகமந்தாரஞ்சேக்மிலஞ்சிசந்திரதிலகமாபனசந்
காகதுண்டந்திந்திருணிசாதேவங்கடுக்கைகூவிளமத்தியிலந்தை
பூகஞ்சம்பீரங்குஞ்சராசனமார்பூதவம்பிலாங்கலிவேங்கை.

(இ-ள்.) பின்னுமந்த திருமலைப்பட்டினம் எப்படியிருக்குமென்றால், புன்னைமரங்கள் சண்பகமரங்கள் காசாமரங்கள் கருக்குவொளிமரங்கள் நாரத்தைமரங்கள் இருசண்பகமரங்கள் கோங்குமரங்கள் தேக்குமரங்கள் மந்தாரைமரங்கள் கொன்றைமரங்கள் மூங்கில்கள் வகுளமரங்கள் சந்தனமரங்கள் மாமரங்கள் பலாமரங்கள் அகில்மரங்கள் புளியமரங்கள் குழிநாவல்மரங்கள் வில்வமரங்கள் இலந்தைமரங்கள் கமுகுமரங்கள் எலுமிச்சமரங்கள் அரசமரங்கள் அத்திமரங்கள் ஆலமரங்கள் தென்னமரங்கள் வேங்கைமரங்கள் முதலிய பலமரங்களும்.—எ-று. (௬௮)

மல்லிகைகடம்புமருக்கொழுந்தலரிமௌவல்கேதகைசெச்சையனங் [கங்
குல்லைமாதுளங்கம்வலம்புரிபன்னீர்குருக்கத்தியகலியாணி
முல்லைசெவ்வந்திப்பவளமல்லிகையுமுருக்கவிழ்நறுநறைகொழிக்குஞ் [ஞ்
சொல்லுதற்கரியவுத்தியானங்கள்சூழ்ந்திலங்கியதிருப்பதியே.

(இ-ள்.) மல்லிகை கடம்பு மருக்கொழுந்து அலரி வனமல்லிகை தாழை வெட்சி இருவாட்சி துளபம் மாதுளை நந்தியாவட்டம் பன்னீர் குருக்கத்தி பட்டிச்செடி முல்லை செவ்வந்தி பவளமல்லிகை இவைகளெல்லாம் அரும்பி முருக்கவிழ்ந்து வாசனை மிகுந்திருக்கும் சொல்லுதற்கரிதாகிய நந்தவனங்களுஞ் சூழ்ந்திருக்கும் அந்தத் திருமலைப்பட்டணத்தில்.—எ-று. (௬௯)

கொண்டலைச்சுமந்துகொண்டுமாதவர்க்கேகொழுங்கனிசினைவ
ளர்ந்தளிக்குந், தண்டலைதனைவிட்டிங்குவந்த[illegible]சரண[illegible]
போற்றடங்கண், மண்டலத்தடிதோயாக்கடவுளர்கள்வணங்கினர்
சித்திரச்சிகரி, வண்டுளபத்தோளிங்கெழுந்தருளாவாகுவிவனந்தன
மதில்கள்.

(இ-ள்.) பின்னுமெப்படியென்றால், மேகத்தைத் தலையிலே சுமந்துக்கொண்டு பாரம்பொறுமல் ரிஷிகளுக்குக் கொழுமையான கனிகளை மாத்திரங்கொடுக்குந் தோப்புகளுந் தன்னைவிட்டிங்கேவந்தெழுந்தருளிம்புகள் வளர்ந்துகொடுக்குந் தோப்புகளுந் தன்னைவிட்டிங்கேவந்தெழுந்தருளியிருக்கும் ஸ்ரீநிவாசக்கடவுள் பாதத்திலேவந்து திருப்பாற்கடலான்று சரணையிருக்கும் ஸ்ரீநிவாசக்கடவுள் பாதத்திலேவந்து திருப்பாற்கடலான்று சரணடைந்ததுபோலிருக்குந் தடாகங்களும் பூமியிலே கால்வையாத தேவர்கள் ஆகாசவீதியிலேவந்து வணங்குவனபோலச் சித்திரங்களிருக்குங் கோபுரங்களும் வண்மையான துளபமாலையணிந்த மாயவன் இந்த மலையைவிட்டெங்கும்

போகாமல் ஆதிசேஷன் வளைந்துகொண்டதுபோலொத்த திருமதில்களும் அனேகம்.—எ-று.

(௪0)

மைம்மலைமிசையோர்மரகதப்பெருமாவருட்கிரிகுடிபுகுந்தடியார்
பொய்மலைவகற்றுந்திருமணக்கோலப்பொலிவுவீற்றிருந்தாசர்ளுஞ்
செய்மணிப்பச்சைவயிரம்பொன்னிலங்குஞ்சிகரிவைகுந்தவிமான
மெய்மலிவளமைசிற்றறிவுடையேன்விதமறிந்தோதுவதரிதே.

(இ-ள்.) பின்னையுமொரு கரிய மலையின்மேல் ஒருபெருமையான மகத்தாகிய மரகதமலைவந்து குடியிருந்ததுபோலச் சேஷகிரியின்மீதிலே ஸ்ரீநிவாசமூர்த்தியடியவர்கள் பொய்யான பிறவியையறுக்கத் திருக்கலியாணக்கோலமாக வீற்றிருந்து அரசாளுமிடத்திலே செம்மையான மணிகள் பச்சைகள் வயிரம் பொன்முதலியன பிரகாசிக்குஞ் சிகரமுள்ள வைகுந்தவிமானமும், மெய்ம்மை மலிவான வளமைபொருந்திய அந்தக்கோயிலின் சிங்காரத்தையுஞ் சிற்றறிவுள்ள நானின்னவிதமென்றறிந்து சொல்லுவதரிது.—எ-று. (௪௧)

மணிடபம்பொன்னருடகம்பந்திண்மதிட்பெருவாவணங்கொடித்தேர், கூடமெக்கோயின்மருங்குசூழ்ந்திலங்குங்குணமெலாங்கண்டுகண்களித்துண், ணுடியெம்பெருமான்பதியெனத்தொழுதுநற்புனற்சுவாமிபுட்கரணி, யாடியேவேடன்பூசனைபுரியுமாதிவாராகனைத்தொழுதான்.

(இ-ள்.) பின்னும் மாடமாளிகைகள் மண்டபங்கள் தங்கக் கருடகம்பங்கள் பெருமையான மதில்கள் தெருக்கள் கடைவீதிகள் கொடிபொருந்திய தேர்கள் அந்தக்கொடியின்பக்கங்களிலே சூழ்ந்திருக்கும் வனங்களையெல்லாங் கண்டு கண்களிகூர்ந்து மனத்திற்சந்தோஷமாய் ஸ்ரீநிவாசதேவனிருக்குமூரென்று தியானித்து வணங்கி நல்ல நீர்மலிந்த சுவாமி புட்கரணியிலே தீர்த்தமாடி முன்னாளில் வேடன் பூசைசெய்த ஆதிவாராகமூர்த்தியைப் பணிந்தான் என்னையன்.—எ-று. (௪௨)

கோவிந்தவோசைமுழங்கிடுஞ்சிகரிவாயலில்வந்தனைபுரிந்து, சோதிசேர்கம்பத்தடிதொழுதெழுந்துசுந்தரன்திருவருள்குறித்துத், தீதுதாசரொலிக்குமாத்தானந்திகழ்மணிமண்டபங்கடந்தே, யாதியும்பொருட்செங்கமலநேரிலங்குமடிபணிந்தகங்குழைந்தறைவான்.

(இ-ள்.) அப்படி ஆதிவாராகனைத்தொழுது மறுபடி மகத்தாகிய தவமிருந்த அடியார்கள் கோவிந்தவோசைமுழக்குங் கோபுரவாசலிலே வணங்கி பிரகாசம்பொருந்திய துவஜஸ்தம்பத்தடியிலே தெண்டன்சமர்ப்பித்தெழுந்து ஸ்ரீநிவாசக்கடவுள் திருவருளை நினைத்துக் குற்றமற்ற அடியார்கூட்டஞ் சந்திக்கும் பிரகாசம்பொருந்திய அழகுள்ள ஆஸ்தானமண்டபத்தைக்கடந்து ஆதிமூலக்கடவுளாகிய ஸ்ரீநிவாசதேவன் தரிசனங்கண்டு செந்தாமரைமலர்



போலே பிரகாசமான திருவடியிலே தெண்டன்சமர்ப்பித்து மனங்குழைந்து தோத்திரஞ்செய்வான் என்னையன்.—எ-று. (௪௩)

வேதநாயகனேவிண்ணவர்க்கரசேவிளங்குமெய்ஞ்ஞானசிற்சுடரே, யாதியேதுருவனெழின்மலர்க்கமலவாலயத்தமர்ந்தமெய்ப்பொருளே, சோதிமாமணியேயென்றனையாளுஞ்சுந்தரானந்தவாரிதியே, தீதிலாவன்பர்க்கருண்மழைபொழியுங்கொண்டலேதிருமலைக்கொழுந்தே.

(இ-ள்.) வேதத்துக்கு நாயகனே! தேவர்களுக்கு ராசனே, விளக்கமான மெய்ஞ்ஞான சிற்சொருபவிளக்கே, முதல்வனே, துருவனது அழகுள்ள மனமாகிய தாமரைக்கமலமென்னுங் கோவிலிலே குடியிருந்த மெய்ப்பொருளே, மகத்தாகிய பிரகாசமான சந்திரனே, என்னையாளும் அழகுள்ள ஆனந்தக்கடலே, குற்றமில்லாத அடியார்களுக்குக் கிருபையாகிய மழையைப்பொழியு மேகமே, வடமலைமுடியிலே வீற்றிருக்கும் பொருளே.—எ-று. (௪௪)

அஞ்சனமலையேயடியவர்க்கமுதேயம்புயமாதருந்தவமே
யெஞ்சிலாவிடங்கரிடத்தைவிற்சிக்கியெழினிலைகலங்கிமெய்தளர்ந்தே
நஞ்சமுன்னவனேமூலமேபரமேதனிமுதலேயெனவழைக்கு
நெஞ்சரவரசுக்கருண்மழைபொழியுங்கொண்டலேதிருமலைக்கொழுந்தே

(இ-ள்.) நீலமலையே அடியார்களுக்கமுதமே தாமரையிலிருக்கும் பெரிய பிராட்டியார்செய்த வருந்தவமே இளைப்பில்லாத முதலையின்கையிலே அகப்பட்டுக்கொண்டு அழகான நிலைகலங்கி சரீரந்தளர்ந்து அபயமபய முதல்வனே ஆதிமூலமே பரமே ஒப்பற்ற தனிமுதலேயென்றழைக்கும் கசேந்திரனுக்குக் கிருபைமழையைப்பொழியு மேகமே வடமலைமுடியில் வீற்றிருக்கும் பொருளே.—எ-று. (௪௫)

மண்டலந்துதிக்கும்பிரகலாதனையென்மன்னவன்சராசரமேல்கீழ், முண்டிசையெங்குமுளனெனமணித்தூணிடத்துதித்தெழுந்தகற்பகமே, கண்டிடாநிலையேயிர்க்குணவடிவேகனைகடிந்தொளிர்பெறுவிவேகக், குண்டலத்தெழுந்தருண்மழைபொழியுங்கொண்டலேதிருமலைக்கொழுந்தே.

(இ-ள்.) இந்த பூமியெல்லாந்துதிக்கும் பிரகலாதன் என்மன்னவனை ஸ்ரீமந்நாராயணமூர்த்தி சராசரங்களிலும் ஆகாயத்திலும் பூமியிலும் எட்டுதிக்குமாகியவெங்கும் நிறைந்திருப்பாரென்று சொன்னவசனத்தைக் காப்பாற்ற மாணிக்கங்களிழைத்த தூணினிடத்திலே யுதித்துவந்த கற்பகத்தருபோன்றவனே யாவருங் காணப்படாத நிலையே முக்குணமுமில்லாதவடிவமே மாயையென்னும் கனையைவெட்டிப் பிரகாசமான விவேகமென்னும் ஆகாயத்திலெழுந்து அங்கே அருண்மழையைப்பொழியுமேகமே வடமலைமுடியில் வீற்றிருக்கும்பொருளே.—எ-று. (௪௬)

தாணியேபுனலேமுளரியேயொளியேதாவருவான்மேதனியே
பரவுமெய்ஞ்ஞானப்பதின்மர்களென்னும்பருப்பதமீதினிலந்த
காணமதற்றுக்கவின்பெறவிளங்கிக்கணிப்பிலாதுயர்ந்திடுபத்திக்
குரவைநீர்பருகியருண்மழைபொழியுங்கொண்டலேதிருமலைக்கொழுந்தே

(இ-ள்.) பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசமென்னும் பஞ்சபூதவடிவமே ஒருவனே மிகுந்த மெய்ஞ்ஞானம்பொருந்திய பத்தாழ்வார்களென்னு மலையின்மீதிலே அவர்களைந்தக் காணத்திலேயுதித்து அழகுபெறவிளங்கிக் கணக்கில்லாமலுயர்ந்தவர்கள் பத்தியென்னுஞ் சமுத்திரசலத்தைப் புசித்துக் கிருபையாகிய மழையைப்பொழியுமேகமே வடமலைமுடியிலே வீற்றிருக்கும்பொருளே.—எ-று. (௪௭)

அருமறைக்கணியேபூரணவறிவேயப்பனேயொப்பிலாமணியே,
மருமலர்கொழிக்குங்குங்குமப்புயனே மாதவத்திலங்கும்வெண்ணில
வே, யுருவமேயருவேயுண்மையேயுணர்வேயுலகெலாம்புகழ்குந்தி
யளித்த, குருகுலவேந்தர்க்கருண்மழைபொழியுங்கொண்டலேதிரு
மலைக்கொழுந்தே.

(இ-ள்.) அருமறையான வேதத்துக்கு ஆபரணமே நிறைந்த அறிவேயென்னப்பனே ஒப்பில்லாத மாணிக்கமே வாசனைமிகுந்த மலர்களை அணியுங் குங்குமப்புயனே அடியார்செய் பெருந்தவத்திலே விளங்கிய வெண்ணிலவேயுருவமேயருவமே உண்மையே உணர்வே உலகமெலாம்புகழுங் குந்திதேவிபெற்ற குருகுலத்தரசர்களான பாண்டவர்களுக்குக் கருணைமழைபொழியுமேகமே வடமலைமுடியில் வீற்றிருக்கும்பொருளே.—எ-று. (௪௮)

எல்லையின் றுயர்ந்தபேரின்பச்சலதியெழுந்ததெள்ளமுதமேயெ
ழிலே, முல்லைவாழாயரினைய்ருள்ளமுளரியம்பொருட்டுறைபவ
மே, வல்லவாளரக்கர்கோத்திரச்சமனேவானவர்க்கினியகாவலனே,
துல்லைமார்பகனேயருண்மழைபொழியுங்கொண்டலேதிருமலைக்கொ
ழுந்தே.

(இ-ள்.) எல்லையில்லாமலுயர்ந்த பேரின்பக்கடலிலுண்டாகிய தெளிவானஅமுதமே! யழகே முல்லைநிலத்தலைவராகிய ஆயமாதர்களுக்கினிமையானவனே! துளபமணிந்தமார்பனே! கிருபைமழையைப்பொழியுமேகமே! வடமலைமுடியிலே வீற்றிருக்கும்பொருளே.—எ-று. (௪௯)

துணரணிகமழும்பூஞ்சோலைசூழ்மதுரைதோன்றியதோன்றலே
யெவையு, மிணையிலாப்பொருளேயென்றனாருயிரோயாவருஞ்செய்
தவப்பயனே, புணரிசூழிலங்காபுரிதனிபுரக்கும்புகழிராவணனுட
னுதித்த, குணநிதிக்கமுதேயருண்மழைபொழியுங்கொண்டலேதிரு
மலைக்கொழுந்தே.



(இ-ள்) பூங்கொத்துநிறைந்த வாசனையான பூஞ்சோலைசூழும் வடமலையிலேபிறந்த பெருமையுள்ள கண்ணனே யாவுமிணையில்லாத பொருளே என்னாருயிரோ யாவருஞ்செய்தவப்பயனே சமுத்திரஞ்சூழ்ந்த இலங்காபுரியை ஏகசக்ராதிபத்தியஞ்செய்யும் புகழ்பெற்ற இராவணனுடனேபிறந்த குணநிதியாகிய விபீஷணாழ்வானுக்கு அமுதமே கிருபைமழையைப்பொழியு மேகமே வடமலைமுடியிலே வீற்றிருக்கும்பொருளே.—எ-று. (௫௦)

புலனுயிர்ப்படக்கியுண்ணிலவுமணிபூரகத்தமர்ந்தபேரின்பச்,
சலதியிற்படிந்திட்டுலகமாயையையகன்றமெய்யன்பர்களென்னு, ம
லர்தலையுலகம்பொதுவரப்புரக்குமன்னவர்செவ்விமாமணத்திற், குல
வியவடிவேயருண்மழைபொழியுங்கொண்டலேதிருமலைக்கொழுந்தே.

(இ-ள்.) ஐந்துபுலனையும் வாயுவையுமடக்கி யுள்ளே பிரகாசமான மணிபூரகவீட்டிலே யமர்ந்திருக்கும் பேரின்பச்சலதியிலே ஸ்நானஞ்செய்து பிரபஞ்சமென்னு மாயையைநீக்கவறிந்த மெய்யடியார்களென்னும் விரிந்த இடத்தையுடையவுலகத்தை யொருவருக்குங்கொடாமற்றானே காக்குமன்னவனே மகாலட்சுமிமன்த்திலே குலாவிக்கொண்டிருக்கும் வடிவமே கிருபைமழையைப் பொழியுமேகமே வடமலைமுடியிலே வீற்றிருக்கும்பொருளே.—எ-று. (௫௧)

நீலமார்த்தாண்டனுறழ்திருமேனிநிறைந்தபொன்னிலவுமி
ழ்முடியும், பாலமேலொளிர்கத்தூரியந்திலதம்பாணியிலைம்படைம
ணிமா, மாலைமார்பகமுமிருபுயமும்வாமுதவியதிருப்பதஞ்சேர், கோ
லமேயடியார்க்கருண்மழைபொழியுங்கொண்டலேதிருமலைக்கொழுந்தே

(இ-ள்.) நீலநிறமான சூரியனைப்போன்ற திருமேனியும் விசாலமான பொற்பிரகாசம்பொருந்திய கிரீடமும் நெற்றியின்மீதில் பிரகாசமான கஸ்தூரித்திலதமும் கையிலே பஞ்சாயுதமும் அழகான இலட்சுமியும் மாணிக்கமாலையும் பிரகாசிக்கு மார்பமுஞ் சதுர்ப்புஜமும் வரங்களைக்கொடுக்குந் திருப்பாதமும்பொருந்திய கோலமாகிய அழகுள்ளவடிவமே அடியார்களுக்குக் கிருபைமழையைப்பொழியுமேகமே வடமலைமுடியிலே வீற்றிருக்கும்பொருளே.எ-று.

கேசவமுகுந்தவாமனகருடகேதனவச்சுதானந்த
தேசிகவடிவேசின்மயானந்தத்தேவனேமூவருமானவனே
யாசிலாமுதலேயரிகமோகாராயணபுருடோத்தமனேயி [ழுந்தே.
கோசலைமகனேயருண்மழைபொழியுங்கொண்டலேதிருமலைக்கொ

(இ-ள்.) கேசவ முகுந்தா வாமனா கருடகேதனா அச்சுதானந்தா ஆசாரியவடிவமே சின்மயானந்தத்தேவனே பிரமா விஷ்ணு உருத்திரனானவனே குற்றமற்றமுதலே அரிகமோகாராயணனே புருஷோத்தமனே சக்ராயுதனே கோசலாதேவிக்கு மகனே கிருபைமழையைப் பொழியு மேகமே வடமலைமுடியில் வீற்றிருக்கும் பொருளே.—எ-று. (௫௩)

விளித்திடுமரிவைதுகிறாவருவோய்விசயனுக்கிரதமூர்ந்தவனே, களித்துனேத்துதிக்குஞ்சவரிநெஞ்சகத்திற் கலந்திருந்தினியதெள்ளமுதங், துளித்திடுஞ்சோதியணிமணிவிளக்கேதொன்மையுன்றொண்டராங்கடலிற், குளித்திடவடியேற்கருண்மழைபொழியுங்கொண்டலேதிருமலைக்கொழுந்தே.

(இ-ள்.) துயரமுற்றழைக்குந் துரோபதைக்கு வஸ்திரம் வளரச்செய்தவனே அருச்சுனனுக்குத் தேர்கடத்தினவனே சந்தோஷமாயுன்னைத் தோத்திரஞ்செய்யுஞ் சபரிமனத்திலே விளங்கியிருந்த இனிமையான தெள்ளமுதத்தைக் கொடுக்குஞ் சோதியே அழகான மாணிக்கவிளக்கே பழமையான உன்னடியார்களென்னுங் கடலிலேகுளித்திட அடியேனுக்கு கிருபமழையைப் பொழியுமேகமே வடமலைமுடியிலே வீற்றிருக்கும்பொருளே.—எ-று. (௪௯)

என்றுதோத்திரஞ்செய்தெழினறைகொழிக்குமிணையடிக்கமலமாமலரை, மன்றலம்பகத்துக்குநற்றெரிசித்துவளமலிஞானமாம்மணியே, யன்றருந்தழைசேர்குஞ்சராசனத்தினடியினிலருளியபடியே, யின்றெனையாள்வரவெனமனத்துன்னியிறைவன்மந்திரப்புறத்திருந்தான்.

(இ-ள்.) இப்படியாகத் தோத்திரஞ்செய்து அழகிய வாசனைமிருந்த இரண்டு பாததாமரைமலரை நேத்திரோச்சவமாகத் தெரிசித்து வளமைமிருந்த ஞானமாணிக்கமே முன்னாளிலே அருமையாகிய தழைமிருந்த அரசமரத்தின் அடியிலே அருளிச்செய்தபடி இத்தினமே யென்னை ஆளவேண்டுமென்று மனத்திலே தியானித்து சீநிவாசமூர்த்தி சந்நிதானத்துக்கு முன்னொருபுறத்திலிருந்தான் என்னையன்.—எ-று. (௫௰)

பழமையோர்க்கருளும்பாமனைப்பண்ணிப்பகற்பொழுதகற்றவக்காயிற், கிழவர்பொற்றிருக்காப்பிடவிசிகிருதகிருத்தியஞ்செய்திடவுடனே, வழிகடைத்துணையோர்கும்கொடுவந்துமருவுமில்விடைவிடுத்தன்பாய்த், தொழுதுபோசனஞ்செயெனஆமன்பழுதுதுய்த்தவனவர்க்கிதுதொகுப்பான்.

(இ-ள்.) அங்கிருந்துகொண்டு பழைய அடியார்களுக்குக் கிருபைசெய்யும் பரவாசுதேவரைத் தோத்திரஞ்செய்து பகற்பொழுதெல்லாம் நீங்க அக்கதவு திருக்காப்பிட ராத்திரியிலே கிருதகிருத்தியஞ் செய்தவுடனே வழித்துணையாய்வந்தவர்கள் அழைத்துக்கொண்டுபோய்த் தாங்கள் வந்திறங்கியிருக்கும் வீட்டிலேவிட்டு அன்பாகத்தொழுது போசனஞ்செய்யவேண்டுமெனச்சொன்னவுடனே அழகிய மாயவன் கிருபையென்னும் அமிர்தத்தைப் புசித்த வென்னையன் அவர்களுக்கு ஒருவசனஞ்சொல்லுவான்.—எ-று. (௫௧)



பாவியானுய்யக்கருணையாலப்பன்பணித்தருளாமுனம்புசியே
னீவிருண்டிடுமென்றுரைத்திராவகற்றிநெருங்கியதீர்த்தங்களாடி
யாவலாயறுநாட்பகற்பொழுதெல்லாமருமறைமுதல்வனைமுன்னோர்
நாவினும்பாடும்பனுவலாற்புகழ்ந்துநற்சினகரம்பொருட்கூபம்.

(இ-ள்.) என்னையன் அடியார்களுடனே சொல்லுகின்றான் பாவியாகிய நான் கடைத்தேறும்பொருட்டாகச் சீநிவாசநாதன் எனக்கு வாக்குச்சொல்லாதவரைக்கும் நான் அமுது புசியேன் நீங்களனைவரும் புசியுங்களென்று சொல்லியன்றிராத்திரிசென்றபிறகு அந்தத்தலத்துக்குச் சமீபத்திலிருக்கிற தீர்த்தங்களிலே ஸ்நானஞ்செய்து ஆசையுடனே ஆறுநாட்பகற்காலமெல்லாம் வேதத்துக்கு முதல்வனாகிய பரவாசுதேவனை முன்னோர்கள் நாவினாலேசொன்ன திருவாய்மொழிமுதலான பாடலினாலே தோத்திரஞ்செய்துகொண்டு கோவிலையும் பங்காருபாவியாகிய பொன்கிணற்றையும்.—எ-று. (௫௭)

பொன்னின்வார்சோதிவைகுந்தமானம்பொருந்துமானந்தநன்னிலயம், பன்னியதொண்டரடிப்பொடிசூழ்சண்பகத்திருவாசலை வலமாய்ச், சொன்னமேவிளங்குந்துசத்தம்பத்தருகிற்றுதிசாணுகியடைந்தே, சன்னிதிதிருக்காப்பிடும்பொழுதகன்றுசாரிடந்தங்கவோரிரவில்.

(இ-ள்.) பின்னையும் பொற்பிரகாசமான வைகுந்தவிமானமிருக்கும் ஆனந்தநிலையத்தையுந் தோத்திரஞ்செய்யுந் தொண்டரடிப்பொடி சூழ்ந்த சண்பகத்திருவாசலையும் வலமாகவந்து பொற்பிரகாசமான துஜஸ்தம்பத்தருகிலே சாணுகியடைந்து தோத்திரஞ்செய்து சந்நிதிக்கதவு திருக்காப்பிடுகிறவரைக்குமிருந்து இராத்திரிகாலத்திலே தானிருக்குமிடத்துக்குப் போயிருந்து வருகிறநாளையிலோரிராத்திரியில்.—எ-று. (௫௮)

வந்தெங்களண்ணலிருந்திடுமனையில்வளர்வயிராகிபோன்னச், சுந்தரமிலங்குஞ்செஞ்சடைமுடியிற்றுலங்கவெண் சட்டைமெய்க்கணிந்து, கந்தமாமலரங்கரத்துமான்பச்சைகவின்பெறவடியருக்கிரங்கு, மிந்திராகொழுநனெழினகையிலங்க வன்பனுக்கெதிரணுகினனே.

(இ-ள்.) அப்படிவந்து எங்களண்ணலிருக்கிறவீட்டிலே யிருக்கும் வளர்ச்சியான வயிராகியைப்போலே அழகுபொருந்திய சிவந்த சடை தலையிலே பிரகாசிக்க வெண்மையான சட்டை சரீரத்திலேயணிந்து வாசனைபொருந்திய தாமரைமலர்போன்ற கையில் இருஷ்ணைசலப்பட்டையை அழகாகப்பிடித்துக்கொண்டு அடியார்களுக்கிரக்கம்பொருந்திய பெரியபிராட்டி நாயகனான சீநிவாசதேவன் அழகுபொருந்திய நகையுடனே அநந்தநாதன் முன்னே தோன்றினான்.—எ-று. (௫௯)

விண்ணவர்க்கமுதமளித்தமெய்ப்பரமன் விளம்புவானுன்றனலாகும்
வண்ணநற்பணிகளறைகுவோமினிநீவாழூர்க்கேகெனவழங்கத்
திண்ணமாயிங்கனிருப்பனுண்டனுகித்திரிந்துழலேனெனவடியா
ருண்ணினைந்துருகிவந்துவந்தடைந்தேயுய்யும்வாறுக்கிடமதுவே,

(இ-ள்.) அப்படிவந்த தேவர்களுக்கு முன்னாளிலே அமிர்தங்கொடுத்த மெய்யாகிய கடவுள் திருவாய்மலர்ந்தருளுவார் உன்னாலேகட்டக்கிற அழகு பொருந்திய நல்ல திருப்பணிகளை யினிமேற்சொல்லுவோம் நீயிருந்துவாழு மூருக்குப்போவென்றுசொல்ல, அந்தத் திருப்பணி தேவரீர் கடாட்சிக்கின்றவரைக்கு மிங்கேயிருப்பேன் அவ்விடத்துக்கு நான்போயலைந்து திரிந்துழலமாட்டேனென்று என்னையன்சொல்ல அடியார்கள் மனவுருக்கத்துடனேவந்து தெரிசிக்கப் பலனைக்கொடுக்குமிடம் நீயிருக்குமிடமே யாமென்றுசொல்லிப் பின்னு மருளிச்செய்வார் சீநிவாசமூர்த்தி.—எ-று. (௬௦)

நீயிருந்திடுமூர்தென்திருப்பதியாய்நிலைக்கவந்தவணினியுறைவோம், போயிருக்கதுகாருண்டிவைக்கொருகாற்புகுவையிப்பதியிலென்றருளப், பேயனைவ்வாறுழல்வனோனித்தப் பேதையேனிடர்தொலைத்திடுவா, யாயனேதுளேப்புண்வேயனேயெனப்பொன்னடிதொழுதருந்ததிசெய்தான்.

(இ-ள்.) நீயிருக்குங் குழுளநகரைத் தென்திருப்பதியென்று பேர்கிலைக்கும்படியாய் நாம் அவ்விடத்துக்குவந்து இனிமேலிருப்போம் ஆகையினாலே நீயவ்விடத்துக்குப்போயிருந்து நாம் அவிடத்திற்கு எழுந்தருளுகிறவரைக்கும் வருஷத்திற் கொருதரம் இந்த திருமலைக்குவந்து போவென்று கடாட்சிக்க, அப்போது என்னையன் ஏழையாகிய நாயடியேன் அப்படியே செய்வேன், என்னப்பனே பேதையேனிடரை நீக்குவாய் ஆயனே இசைபொருந்திய துளையுள்ள வேய்ங்குழலிசைத்த வேணுகோபாலனேயென்று பொற்பிரகாசமான பாதத்திலேபணிந்து அருமையான தோத்திரஞ்செய்தான்.—எ-று. (௬௧)

ஆயபின்மறுநாட்சுவாமிபுட்கரணியாடிப்பாரணம்புரிந்தின்பமேயவுள்ளத்தோன்வேங்கடந்தொழுதே விடைகொண்டுமால்வரைப்பதிகாண், டூயமாநதிநாடிவைவெலாங்கடந்துதனைவருவோரொழிந்த, நேயமாங்குழுளநகரில்வந்திருந்தானிமலனையிடைவிடாநினைவோன்.

(இ-ள்.) இப்படிநடந்தபிற்பாடு மறுநாள் வராகபுட்கரணியிலே ஸ்நானஞ்செய்து பாரணஞ்செய்து இன்பம்பொருந்திய மனமுள்ளவன் திருவேங்கடத்தைநப்பணிந்து விடைகொண்டு பெருமைபொருந்திய மலைகளு மூர்களுங் காடுகளும் தூய்மையான நதிகளும் நாடுகளும் இவைகளையெல்லாங்கடந்து தன்னைவந்தவர்களுடனேயுந் தனக்குமிருந்த நேசமான குழுளநகருக்குவந்திருந்தான் நிமலனாகிய சீநிவாசமூர்த்தியை யிடைவிடாமல் நினைக்கும் அநந்தநாதன்.—எ-று. (௬௨)



வேறு.

வந்துதாளின்வணங்கியமாக்களுக்
குந்துதீர்த்தமுடன்பிரசாதமுந்
தந்துதீவினைதன்னையகற்றியே
யுந்தையின்புறமிருக்கின்றவெல்லையில்.

(இ-ள்.) அப்படி வந்திருக்கின்றகாலத்தில் தன்பாதத்திலேவந்துவணங்கிய மனிதருக்கு மகிமையான தீர்த்தத்துடனே பிரசாதமுங்கொடுத்து அவரவர் தீவினைகளைநீக்கி யென்னையனாகிய அநந்தநாதன் சந்தோஷமாயிருக்கிறகாளில்.—எ-று. (௬௩)

தேவனன்புன்மகிமைதெரிந்துளா
ராவலாய்வந்தடியிணைபோற்றியே
பாவமேவிடுவல்வினைபாற்றிவே
நீவந்தெம்மனைநில்லெனவேண்டுவார்.

(இ-ள்.) சிலசேதேவற்கன்பனாகிய என்னையன் மகிமையைத் தெரிந்துகொண்டவர்கள் ஆசையாகவந்து இரண்டுபாதத்திலும் வணங்கி பாவங்கள்மேலிட்டுவருகின்ற எங்கள் வல்லமையான தீவினையோடும்படி நீவந்து எங்கள்வீட்டி [illegible] யிருக்கவேண்டுமென்று வேண்டுவார்கள். ()

வேண்டுவாரில்லிலே [illegible] செய்
தாண்டுவெண்டிருமண்கொடுவிலமினி
நீண்டசங்கொடுசேமிபூராமமும்
பூண்டிருக்குங்கோலம்பொருந்தியே.

(இ-ள்.) அப்படி வேண்டிக்கொள்ளுகிறவர்களுடைய வீட்டுக்குப் போய் நல்ல சுத்திசெய்வித்து அவ்விடத்திற் சுவரிலே வெண்மையான திருமண்ணினாலே திருக்கோயில்போலவும் கொடிதாகிய சங்குசக்கரமும் திருநாமமுமெழுதி குற்றமற்ற சித்திரங்களுமெழுதி.—எ-று. (௬௫)

பந்தன்மாமலராற்செய்துபைந்துழா
யந்தமாகவருச்சித்தாராதனை
சிந்தையின்புறமுற்றிகழ்ந்தேவனை
வந்தனைபுரிந்தேயிவாழ்த்தியே.

(இ-ள்.) பின்னையும் புட்பபந்தல் போடுவித்து பசுமையான திருத்துளபத்தினாலே அழகுபொருந்த அருச்சித்து ஆராதனையு மனச்சந்தோஷமாகச்செய்து நன்மைபொருந்திய சீநிவாசமூர்த்தியை வந்தனைசெய்து அநேகவிதமாகத் தோத்திரஞ்செய்து.—எ-று. (௬௬)

சொல்லொணுதபிணிகளுந்தொல்வினை
யொல்லையோடியொளிக்கவருள்புரிக்

தொல்லையின்னதானங்களீவித்தவ்
வில்லுளோர்மனத்தின்பம்பொருத்தியே.

(இ-ள்.) சொல்லுதற்கு அருமையான பிணிகளும் பூருவவினைகளும் சீக்கிரத்திலே யோடியொளிக்கும்படியாகக் கிருபைசெய்து கணக்கில்லாத அன்னதானங்களையுஞ்செய்வித்து அந்தவீட்டிலுள்ளவர்களுடைய மனத்துக்குச் சந்தோஷம்வரும்படி செய்வித்து.—எ-று. (௬௭)

இந்தவண்ணமெழிலுலகுள்ளவர்க்
கெந்தையார்செய்திருக்கின்றவெல்லையில்
விந்தைமேவியவேங்கடங்காணவே
சிந்தைகொண்டுசெலுநெறிசென்றனன்.

(இ-ள்.) இந்தப்பிரகாரம் அழகானவுலகத்திலே இருக்கிறவர்களுக் கெந்தையாகிய அநந்தநாதன் இப்படி செய்துகொண்டிருக்கிறகாலத்திலே அழகுபொருந்திய திருவேங்கடதரிசனத்துக்காக மறுவருஷம் புரட்டாசிமாதம்வந்தவுடனே மனச்சந்தோஷமாய்த் திருமலைக்கு வழிகொண்டு நடந்தான்.—எ-று.

சென்றுபாலருட்டாய்தனைத்தேடிய
கன்றுபோலமாங்கால்மண்டபத்திடை
யின்றிராவிவண்டங்கவினிதெனத்
துன்றுமன்பதைசூழவிருந்தனன்.

(இ-ள்.) அப்படி நடந்து பாலைக்கொடுக்குந் தாயைத்தேடிய இளங்கன்றுபோல மாங்கால் மண்டபத்தினிடத்துக்குப்போ யின்றிராத்திரி யிவ்விடத்திலே யிருந்துபோகிறது நன்மையென்றெண்ணி நெருக்கமான அடியார் கூட்டங்கள் சூழத்தக்கதாக இருந்தான்.—எ-று. (௬௯)

பத்தருக்கெதிர்தோன்றும்பராபர
வத்தனுக்கெந்தைமீதுறுமன்பிறாற்
சித்திகாட்டுஞ்செயலுளத்தெண்ணியே
சத்திரத்திற்சதிர்பெறமேவுவான்.

(இ-ள்.) அப்படியிருக்கிறவேளையிலே அடியார்களுக்கெதிரே தோன்றும் பராபரனாகிய ஸ்ரீநிவாசக்கடவுளுக் கெந்தையன்மீதிற்பொருந்திய அன்பினாலே சித்திகாட்டுஞ் செய்கையை மனத்திலே நினைத்து அந்த மாங்கால்மண்டபத்துக்கு அழகுபொருந்தத் தோன்றுவான்.—எ-று. (௭௰)

படிபுகழ்ந்திடுபன்னிருநாமமும்
வடிவுமஞ்சள்வளக்கம்பியாடையு
நெடியவேதியனேனமாதவ
னடியர்போற்றிடுமையன்முன்றோன்றினன்.





# திருமலைத்தரிசனப்படலம்.

(இ-ள்) இந்தப்பூமியெல்லாம்புகழாநின்ற துவாரகாமமும் அழகுபொ
ருந்திய வளமான மஞ்சள் பட்டுவேஷ்டியும் அழகிய உத்தரீயமுந் தரித்துக்கொ
ண்டு மிகுந்த வேதந்தெரிந்த பிராமணனைப்போலே சிவாசக்கடவுள் அடியா
ர்களெல்லாம் பணியும் என்னையன் முன்னே யெழுந்தருளினான்.—எ-று. (எக)

அந்தநாதன்றனன்பனுக்கோதுவா
னிந்தமண்டபத்திலொருமூங்கையான்
வந்தனன்திருமண்டீர்த்தநல்கிநீ
யெந்தனுமையைப்புகவென்றனன்.

(இ-ள்.) அப்படிவந்த சிவாசநாதன் தன்னன்பனுகிய அநந்தனைசனு
க்குச் சொல்லுவார், இந்தமண்டபத்திலே ஒருமை வந்திருக்கின்றான் அவனுக்
குத் திருமண் தீர்த்தமும் உன்கையினுலே கொடுத்தென்பெயரைச் சொல்லச்
சொலமென்றார் சிவாசக்கடவுள்—எ-று. (எஉ)

அன்னவாறுசெய்வேனென்றறைந்தனன்
துன்னுவோர்களைச்சோதித்தறிந்தரி
சொன்னமூங்கையனைக்கண்டுதொல்வினை
யின்னறீர்க்கும்விதத்தையியம்புவாம்.

(இ-ள்.) அப்படிசொன்னமாத்திரத்திலே அந்தப்பிரகாரஞ்செய்வேனெ
ன்றுசொல்லியெழுந்திருந்து அங்கேநெருக்கமாய்ப் படுத்திருக்கிறவர்களையெல்
லாஞ் சோதித்து அறிந்துகொண்டு பரவாசுதேவன் சொன்ன ஊமையைக்
கண்டு அவனது ஊழ்வினை யிடுக்கண்களைத் தீர்க்கும்விதங்களைச்சொல்லுவாம்.

அங்குளாரையழைத்திவனூரொடு
தங்குமூர்பெயர்சாற்றவறிந்துபின்
பொங்குகின்றபுதுப்புனலாட்டியே
எங்கணுயகன்றன்முனிருத்தினான்.

(இ-ள்) அங்கேயிருக்கிறவர்களை அழைத்து இவனூரொன்று கேட்க
அவனிருக்கு மூர்ப்பெயரும் அவன்பெயருஞ்சொல்ல அறிந்து பின்பு நிறைந்த
புதுமையான சலத்திலே ஸ்நானஞ் செய்வித்து எங்களுக்கு நாயகனெதிரே
யுட்காரவைத்துக்கொண்டனன்.—எ-று. (எச)

திருமண்டீர்த்தமுஞ்சேரவொன்றாய்க்குழைத்
தொருமையாயவனுள்ளிற்புகட்டுவித்
துருவமீதிலொளிருறப்பூசியே
அரிநராயணவென்றுரையாடென்றான்.

(இ-ள்.) பின்பு திருமண்ணும் தீர்த்தமு மொன்றாய்க்குழைத்து மன
மொருமையாக அந்தவூமைக் குள்ளுக்குங்கொடுத்து அவன் சரீரமெல்லாம் பிர
காசமாய்ப்பூசி அரிநாராயணவென்று சொல்லுகவென்றான் என்னையன். (எரு)

என்றகர்லெயெழுந்தந்தழுங்கையா
னன்றுகன்றுநாராயணகேசவ
குன்றுதாங்கியகோவிந்தனேயெனச்
சென்றெனையன்றிருவடிபோற்றினன்.

(இ-ள்.) அப்படி சொன்னமாத்திரத்திலே எழுந்திருந்து அந்தவுமையய
ன் நல்லது நல்லது நாராயணா கேசவா கோவர்த்தனகிரியையெடுத்த கோவிந்த
னேயென்று வலமாகவந்து என்னையன் றிருவடிகளைப் போற்றினன்.—ள்-று.()

வேங்கடக்கிரிமேவிடிவ்விணை
நீங்குமென்னநெறிவருகாலயி
லீங்குவந்தெனையாண்டருளின்பவென்
றோங்கியேபுகழ்ந்துள்ளமுவந்தனன்.

(இ-ள்.) அப்படி பணிந்து பின்னையுஞ் சொல்லுவான், திருவேங்கடத்
துக்குப்போனால் இந்த வினையொழிந்துபோகுமென்று வழியிலே வருகிறபோ
து எனக்கெதிராகவந்து என்னையாண்டு இரட்சிக்குமின்பனே கோவிந்தாவெ
ன்று கூவித் தோத்திரஞ்செய்து மனச்சந்தோஷமானன்.—எ-று. (எஎ)

இந்தநேர்மையறிந்தங்கிருந்தவர்
வந்துகூடிவணங்கியெம்மாயனே
யுந்தன்பாதமுவந்துகண்காணவே
எந்தமாதவஞ்செய்தனம்யாங்களே.

(இ-ள்) இப்படி நடந்த காரியத்தை யங்கே யிருந்தவர்களெல்லாம் பா
ர்த்து என்னையனிடத்திலேவந்து கூடி வணக்கஞ்செய்து எங்கள் சீநிவாசமூர்
த்தியே யுன்பாதத்தை கண்களிகூர நாங்கள் தரிசிக்க வென்ன தவஞ்செய்
தோமென்று சொன்னார்கள்.—எ-று. (எஅ)

இன்னவாறுபுகழ்ந்துளத்தின்பமுற்
றென்னையாளுடையானையிறைஞ்சியே
முன்னமுங்கையன்றன்னைமுதலினோர்
தென்னுலாவுந்திருமலைசென்றனர்,

(இ-ள்.) இந்தவிதமாகப்புகழ்ந்து மனம் சந்தோஷம்பொருந்த என்னை
அடிமையாளாக வுள்ளவனது பாதத்திலேவணங்கி முன்னாலே ஊமையாயிருந்
தவன் முதலானோர்கள் கூடிக்கொண்டு அழகுபொருந்திய திருமலைக்குப் போ
னார்கள்.—எ-று. (எகூ)

தேசிகேசனெனத்தகுசீரியோன்
ஆசிலாவெதிராசனன்றூமையைப்
பேசுவித்தநிறமெனப்பேணியத்
தாசினூமையைபேசக்காட்டினனரோ.



(இ-ள்.) ஆசார்யவர்ய அக்கிரகண்ணியரான குற்றமற்ற எதிராசர் அன்
று ஒரு ஊமையைப் பேசுவித்துத் தனது வைபவத்தை வெளியிட்டாற்போல
அநந்தநாதனும் பகவத்கடாட்சத்தை விளக்கத் தானும் ஒரு ஊமையைப் பேசு
வித்தான்.—எ-று. (அ0)

சங்குமாழியுந்தாங்கியசெங்கையான்
மங்கைமார்பன்மலர்க்கமலப்பதம்
எங்களண்ணலிதயத்திருத்தியே
புங்கமாமலைபோற்றிவந்தூருற்றான்.

(இ-ள்.) சங்குசக்கராயுதந்தரித்த சிவந்த கையையுடையவன் பெரியபிரா
ட்டியார் வீற்றிருக்கு மார்பையுடையவனது தாமரைமலர்போன்ற சிலம்பணி
ந்த பாதத்தையே எங்களண்ணல் மனத்திலே தியானித்துக்கொண்டு உயர்ச்சி
பெற்ற திருமலையைப் போய்ப்பணிந்து குமுளநகரம்வந்து சேர்ந்தான்.—எ-று.

ஊரிடத்திருந்துத்தமன்றன்னையாள்
பேரருட்கடலான்கதைபேசியே
யாரிடத்தினிலேகினவனலா
லோருருத்தன்னுள்ளத்தினிலுன்னலான்.

(இ-ள்.) அப்படி ஊரில் வந்திருந்துகொண்டு அந்த உத்தமன் தன்னை
யாளும் பெரிய கிருபைக்கடலான சீநிவாசமூர்த்தி சரித்திரத்தைப் பேசிக்கொ
ண்டு ஆரிடத்திற்போனாலும் அந்த மாதவனையேயல்லாமல் ஒருவடிவத்தையுந்
தன் மனத்தினினையான்.—எ-று. (அஉ)

அன்னசோதியருண்மயக்கத்தினாற்
பொன்னனீன்றபுதல்வனைப்போலவே
யுன்னையன்றியொருவருலகினிற்
பின்னுமுன்னுமிலையெனப்பேசுவார்.

(இ-ள்.) பின்னுமந்தச் சோதிமாதவன்செய்த அருண்மயக்கத்தினாலே
இரணியன்பெற்ற பிரகலாதனைப்போல சீநிவாசமூர்த்தியே யுன்னையல்லாம
ல் வேறொருதெய்வம் உலகத்திலே முன்னுமில்லை, பின்னுமில்லை என்றுசொல்
லுவான்.—எ-று. (அ௩)

தன்னுளேதனைத்தானறிந்திப்புவி
யென்னமாயமிதென்றுநகைசெய்வான்
றன்னுசோதிமுன்றோன்றியபோதெலா
மன்னுமோவியமானவியப்பினால்,

(இ-ள்.) பின்னையுந் தனக்குள்ளே தன்னைத்தானே தெரிந்துக்கொண்டு
இந்தப்பூமி யென்ன மாயாவிசித்திரமென்று நகைசெய்வான் மிகுந்த சோதிப்

பிரகாசமான மாயவன் வந்து தரிசனங் கொடுக்கும்போதெல்லாம் நிலைபெற்ற சித்திரம்போலே இருப்பான்.—எ-று. (அச)

கல்வியோர்தினம்பாம்புகடித்திடச்
செவ்வியோனைநினைக்கின்றசிந்தையா
லவ்வுயிரோனதுணர்ந்திலனுகையா
லவ்விடந்தனக்காரமுதானவே.

(இ-ள்.) அப்படியிருக்க, ஒருநாள் பாம்பு வாயினாலே கவ்விக்கடிக்க அழகுபொருந்திய ஸ்ரீநிவாசமூர்த்தியை நினைக்கின்ற மனத்தையுள்ள தவமிருந்தவன் அதை மனத்திலே கட்டைசெய்யாமலிருந்தான்; ஆனபடியினாலே அந்த விஷம் நீங்கித் தேவாமிர்தத்துக்குச்சமானமாயிருந்தது.—எ-று. (அரு)

படியினோர்தொழில்பார்த்திலனுகையான்
மிடிவந்திங்குமிரட்டுமென்றெண்ணியே
யடிமைகொண்டவனுளக்கடமையால்
வடிவுபொன்னைவழங்கநினைத்தனன்.

(இ-ள்.) அப்படியிருக்கிற காலையிலே இந்தப்பூமியிலே ஒருதொழிலும் இவன்செய்யவில்லையாகையினாலே தரித்திரம்வந்து இவனிடத்திலே மிரட்டுமென்று நினைத்து அடிமைகொண்டவனுக்கடமையென்று சொல்வதுபோல ஸ்ரீநிவாசமூர்த்தி யென்னையன் வீட்டுச்செலவுக்குத் தனங்கொடுக்கத் திருவுள்ளத்தில் நினைந்தான்.—எ-று. (அசா)

வளவனூருக்குவண்குணதிக்கிலே
யளவிலாதவையாத்தோப்புப்பாதையி
னளிரொண்ணீர்ப்பெண்ணைநன்னதித்தெற்கிலே.
தெளிவுனூமூலைசெட்டிசெய்சத்திரம்.

(இ-ள்.) அப்படிநினைத்து அந்தத் தொண்டைநாட்டிலே வளவனூருக்கு வண்மையான கீழ்த்திக்கிலே கணக்கில்லாத விருட்சங்களுள்ள ஐயாத்தோப்பைச்சேர்ந்த பாதையிலும் ஒப்பற்ற குளிர்ச்சிபொருந்திய சலமுள்ள பெண்ணைநதிக்குத் தென்புறத்திலே அறிவுவிளங்கிய உண்ணாமூலைசெட்டிசெய்த சத்திரத்திலும்.—எ-று. (அஎ)

நீண்டகச்சிநெடுந்தெருவிக்கிர
வாண்டிமேற்குவழிச்சம்புநீழலின்
பூண்டசோலைப்புதுப்பட்டடைலைத்தெற்கி
லாண்டபாதையரசடியாமரோ.

(இ-ள்.) பின்னையும் விசாலமான கச்சித்தெருவிலும் விக்கிரவாண்டி பாதைக்குமேற்கில் நாகமரத்துநிழலிலும் அழகானதோப்புள்ள புதுப்பட்டுத் தெற்கெல்லையிலேயிருக்கும் பாதையில் அரசடியிலும்.—எ-று. (அஅ)



வளிபுரித்தெற்குவார்வழிசேர்குளத்
தினியதிண்கரையிவ்வயினற்பொருண்
மனிதர்வைத்துமறந்துவழிச்சென்று
ரனையதையற்கருள்வழிகேண்மினோ.

(இ-ள்.) பின்னும் வளித்தாம்பாளையத்துக்குத்தெற்கில் நீண்ட வழியைச் சேர்ந்த குளத்தின் இனிதான பலமுள்ள கரையினும் இவைமுதலாகிய அநேக இடங்களிலே நல்லபொருளை வழிநடக்கு மனிதர் வைத்து மறந்துபோகச்செய்து அந்தப்பொருளை யென்னையனுக்குக்கொடுத்த வகையைக் கேளுங்கள். ()

எந்தவேளைக்கெம்மாத்திரமீவதோ
வந்தவேளைக்கியையவருளுவா
னிந்தமாதனத்தின்புறத்திராமலே
சொந்தமாயவன்றாளைத்துதிசெய்வான்.

(இ-ள்.) எந்தெந்தவேளைக்கு எம்மாத்திரங் கொடுக்கவேண்டுமோ அந்தகாலங்களுக்குத்தக்க செலவுக்குச்சரியாக மாயவன்வந்து கொடுப்பிக்க அந்த மகத்தாகிய பணத்தின்மேலிச்சைகொண்டிராமல் தனக்குச்சொந்தமாக அந்த ஸ்ரீநிவாசமூர்த்தி பாதத்தை தோத்திரஞ்செய்துகொண்டேயிருப்பான்.—எ-று.

அந்நாளிலரும்பொருளன்பினால்
முந்துசீர்மங்கைமன்னன்முயல்வதற்
கந்தமில்பொருளெந்தையருள்வபோல்
அந்திலெந்தையகமகிழ்ந்தீந்தனன்.

(இ-ள்.) முன்னாளில் அரங்கவிமான மதில் கட்டுவதற்காகத் திருமங்கைமன்னன் திரவியமிகுதியும் கடாக்ஷித்ததுபோல இந்நாளிலும் இவ்வனந்தநாதன் தென்றிருப்பதியாகிய திருக்குமுளங்கண்டருள மிருந்த நிதிக்குவியலைத் தேடிக்கொடுத்தான் ஸ்ரீநிவாசமூர்த்தி.—எ-று. (கூக)

ஓதநீர்ப்புவியோர்கள்புகழ்ந்திட
வேதநான்குமிதித்தபரம்பொரு
ளாதிமாயனளித்தசெல்வங்கொடு
கோதிலாதகுணத்தனிருக்குநாள்.

(இ-ள்.) சமுத்திரஞ்சூழ்ந்த பூலோகத்தார் புகழ நான்குவேதங்களையும் உண்டாக்கின பரம்பொருளாகிய மாயவன்கொடுத்த பொன்னைக் கைக்கொண்டு குற்றமில்லாத குணமுள்ளவனிருக்கிற நாளையில்.—எ-று. (கூஉ)

எங்களண்ணற்கிதயந்தெளிந்திடத்
துங்கமாதவன்முந்தியதோற்றத்தி
னிங்கிதம்பெற்றிருந்தவளவிலா
மங்களத்தொடுவந்துவழங்கினான்.

(இ-ள்.) அப்படியிருக்கிறகாலத்திலே எங்களண்ணலுக்கு மனந்தெளிய உயர்ச்சிபெற்ற மாதவன் முன்சனனத்திலே சந்தோஷமாக மிகுந்த வளமைகளையெல்லாம் மங்களகரமாகவந்து சொன்னார்.—எ-று. (கரு)

முந்துதோற்றமொழிந்தனன்மாலென்று
மெந்தையேயதியம்பெனவன்பர்தஞ்
சிந்தைதேறத்திருவனந்தன்பதஞ்
சந்ததம்பணிதாசனியம்புவான்.

(இ-ள்.) அப்படி சொல்லக்கேட்டு முன்தோற்றத்தைத் திருமாலருளிச்செய்தாரென்று மெங்களையனே அதைச்சொல்லென்று திருமாலடியார்கேட்க, அவர்கள் மனந்தேறத்தக்கதாகத் திருவனந்தநாதன் பாதத்தை யெந்நேரமும் பணியும் பரந்தாமன் சொல்லுவான்.—எ-று. (கசு)

திருமலைத்தரிசனப்படலம் முற்றிற்று.

ஆக படலம் ௪-க்கு திருவிருத்தம்-உ௲அ.

---

## முன்தோற்றமுரைத்தபடலம்.

---

இருந்தகாலையிறைவனொருபக
லருந்தவத்தடியானுக்கருளுவான்
பொருந்துபாரினியற்கைபுரிந்திடத்
திருந்தமணஞ்செய்துகொளென்றனன்.

(இ-ள்.) அப்படியிருக்கிறநாளையிலே பரவாசுதேவன் ஒருநாள் அருமையான தவத்தையுடைய தன்னடிமையான அநந்தநாதனுக்கு அருளிச்செய்வார். இந்த பூமியில் இயல்பாகிய இல்வாழ்க்கையைநடத்தத் திருத்தமாக நீ கலியாணஞ்செய்துகொளென்றார்.—எ-று. (க)

கணங்கொடேவர்கள்கற்பகமேபுனை
யிணங்குநல்லறிவோர்தமியணையடி
வணங்கிவாழ்வதுவாழ்வன்றிமாதரை
மணஞ்செய்தென்பயனென்றுமயங்கினான்.

(இ-ள்.) அந்தப்பரவாசுதேவர் அப்படியருளிச்செய்ய அநந்தநாதனை என்னையன் மனத்திலெண்ணுகிறான், கூட்டம்பொருந்திய தேவர்களுக்குக் கற்பகம்போலொத்த ஸ்ரீமந்நாராயணமூர்த்தியே யுன்னை யிணங்கிய நல்லறிவுள்ள அடியார்கள் திருவடியை வணங்கிவாழ்வது வாழ்வேயல்லாமல் பெண்களைக் கலியாணஞ் செய்துகொள்வதி லென்னபலனென்று மயங்கினான்.—எ-று. (உ)



வேறு.

இவ்வாறுன்னியெனையாண்டோனிருக்கக்கணித்ததொழிற்கெவரு
மொவ்வாவொனவேதியன்வடிவாயொருசெங்கரத்திற்புத்தகமுஞ்
செவ்வாய்பகவான்றிருநாமஞ்செப்பும்பொலிவுமுளதாகி
யெவ்வாகமமுந்துதித்திடமொலின்பனெதிரேதோன்றினனே.

(இ-ள்.) இந்தவிதமாக நினைத்து என்னையாளவந்தவ னிருக்கிறவேளையிலே சோதிடத்தொழிலுக் கெவரு மொப்பில்லாமலிருக்கும் பிராமணவடிவமாகி யொருகையிலே புஸ்தகமுந்தாங்கி சிவந்த வாயினாலே பகவத்சங்கீர்த்தனஞ்செய்யும் வளமைபொருந்திய எந்தவேதங்களும் புகழ்ந்து தோத்திரஞ்செய்யுஞ் சீநிவாசக்கடவு ளென்னையனுக்கெதிரே யெழுந்தருளினான்.—எ-று. (௩)

வந்தமறையோன்றனைத்துதித்துவணங்கிநல்லாசனங்கொடுத்தே
யெந்தப்பதிநீயிருக்குமிடமெழிற்பேரென்னேவுரையென்னக்
கந்தக்கமலத்திருநாதன்கழறுமெனதூர்வடதேசஞ்
சிந்தைத்தொழிற்சோதிடனருகுஞ்சீநிவாசன்பெயரென்றான்.

(இ-ள்.) அப்படிவந்த பிராமணனைப் புகழ்ந்துவணங்கி நல்ல ஆசனங்கொடுத்து எந்தவூர் தேவரீர் இருக்குமிடம் அழகாகிய நாமதேயமென்ன சொல்லுமையாவென்று என்னையன்கேட்க, வாசனைபொருந்திய செங்கமலத்திலே வாசமாயிருக்கும் பெரியபிராட்டியாருக்கு நாயகனாகிய சுவாமி யருளிச்செய்வார், என்னூர் வடதேசம் நான் செய்யுந்தொழில் சோதிடம், என்பெயர் சீநிவாசாசாரியனென்று சொன்னார்.—எ-று. (௪)

கணிதந்தெரிந்தோயென்சனனகாலமுறைப்பனைதயுணர்ந்து
மணமுண்டிலையென்றியம்பென்னமறையோனுனதுமுற்பவத்தின்
குணமும்விளையுமிப்பிறவிக்கொள்கைதனையும்புகன்றிடுவே
னணிசேர்மாயன்றிருவடியினன்புற்றவனேயெனப்பகர்வான்.

(இ-ள்.) அப்படி அருளிச்செய்யக்கேட்டு சோசியத்தொழிலெல்லாந் தெரிந்துகொண்டிருக்குந் தேவரீர் என் சனனகாலத்தைச் சொல்லுகிறேனெனதறிந் தெனக்குக் கலியாண முண்டில்லையென்று அருளிச்செய்யவேண்டுமென்று கேட்க, அதற்கு அந்தப்பிராமணர் சொல்லுகிறார்; உனக்குமுன் சனனகாலத்திலே நடந்த காரியங்களையும் அந்த அனுபவத்தொடர்ச்சியினாலே யிந்தப்பிறப்பிலே நடக்கிற காரியங்களையும் உன்முகத்தைப்பார்த்தவுடனே சொல்லுவேன் அழகுபொருந்திய மாயவன் திருவடியிலே அன்புள்ளவனேயென்று அருளிச்செய்வார்.—எ-று. (௫)

கதையொன்றுரைப்பனாதிசேணிகச்சிப்பதிமேற்சிகரிக்கண்
துயிலுறியினுந்தரபாலிழுலகுக்குமனையோன்வயிட்டினவன்
மதிசேராசாரியருடன்வடவேங்கடத்துக்கான்றினுக்கான்
டதிசந்தோடத்துடன்சென்றேயாதிகாதன்றனைப்பணிவோன்.

(இ-ள்.) ஒருகதை சொல்லுகிறேன் அதை நன்றாய்க்கேளும், காஞ்சிபுரத்திலே வரதராசர்சந்நிதி மேலைக்கோபுரத்துக்குச் சமீபத்திலே புசழுள்ள கிழக்குமேற்குவீதியில் வடபாரிசத்திலே பிரகாசித்திருக்கு மொருவீடுண்டு, அந்த வீட்டுக்குடையவன் ஒரு வைஷ்ணவப்பிராமணன் விவேகமிகுந்த ஆசாரியபுருஷன் அவன் திருவேங்கடத்துக்கு வருஷாவருஷம்போய் அதிக சந்தோஷமாகத் திருவேங்கடமுடையானைத் தரிசனஞ் செய்துகொண்டுவருவான். (௬)

சீநிவாசன்றனைப்பூசைசெய்வோன்வேதத்தமிழ்க்குணாக
ளுணையின்றிச்சொல்லவல்லோனெனிரும்புராணவாகமங்க
ளானகலைகளுணர்வுள்ளோனவன்காதலிகளிருவரொடுந்
தேனும்பாலுமென்மகிழ்ந்துசீடர்பலருந்தொழவாழ்ந்தான்.

(இ-ள்.) பின்னும் அந்தச் சீநிவாசமூர்த்தியை யாராதிக்கிறவன் தமிழ்வேதமாகிய திருவாய்மொழிப்பிரபந்தத்துக்குக் களங்கமில்லாம லுரைசொல்லவல்லவன் மற்றும் விளக்கமான சகலபுராண ஆகமங்களுந் தெரிந்தவன் அவன் இரண்டுபெண்சாதியுடனே தேனும் பாலும்போற் கூடிக்கொண்டு அநேக சீடவர்க்கங்களும் பணியும்படி யாயிருக்கிற நாளில்.—எ-று. (௭)

அன்னான்மாதர்மதலைகளங்கணிபூடணங்கள்மிகப்பூண்டோர்
நன்னாடெருவீதியிலனுகநானுமாக்கள்கண்ணுற்றிம்
மின்னுகின்றமணிப்பணிநம்வீட்டிற்கள்வர்கொடுசென்று
ரின்றொன்றேயறிந்தோமென்றிசைத்தாரவ்வூரிறைவனுக்கே.

(இ-ள்.) அப்படியிருக்கிறநாளையிலே ஒருநாள் அவன்பெண்சாதியின்ளைகள் அதிகமான ஆபரணங்களைப்பூண்டுகொண்டு அன்று விசேஷவுற்சவதினமாகையினாலே வீதிக்குவர, சகலசனங்களும் பார்த்து இந்தப்பிரகாசமான பூஷணங்கள் நம்முடைய வீட்டிலே திருடர்முன்னாள் திருடிக்கொண்டுபோனார்களே அந்தப்பூஷணமிதுவேயென்றும் அதனை யின்றுதாமறிந்தோமென்றும் ஓடி அந்தவூர் அதிகாரிக்குச் சொன்னார்கள்.—எ-று. (௮)

ஒருசில்காவற்காரர்களைக்கூவிப்புகலவவர்கூடிப்
பெரியமறையோனகமிகவும்பேதித்திடச்சூழ்ந்தணைந்து
விரிபொற்பணிகளுனக்குவந்தவிதமேதென்றங்கவர்கேட்ப
வுரியசீடரெனக்களித்தாருண்மையிதுவென்றவனுரைத்தான்.

(இ-ள்.) அப்படி சொல்லக்கேட்டு, அந்த ஊருக்கெசமான் காவற்காரரை யழைப்பித்துச்சொல்ல அவர்கள் கூடிக்கொண்டு இந்த வேதோத்தமனை பிராமணன்வீட்டை மனம் பேதிக்கும்படியாய்வந்து சுற்றிக்கொண்டுள்ளே நுழைந்து இப்படி யிருந்த பூஷணங்களுனக்குவந்த விதமேதென்றுகேட்க இந்தப்பிராமண னெனக்குரித்தான சீஷர்கள் கொடுத்தார்கள் இது நிச்சயமென்று சொன்னான்.—எ-று. (௯)



உரைத்தவுடனச்சீடர்களையோடிப்பிடித்துவருத்தஞ்செய்
தருத்தியோடிப்பூடணங்களாரார்மனையிற்கவர்ந்தீரென்
றருத்துக்கேட்டயனகடுங்கியுள்ளதெல்லாமவர்புகலப்
பெருத்தமறையோனிவ்வசட்டுப்பிரட்டர்களைத்தன்றொண்டாக்கி.

(இ-ள்.) அவனப்படி சொல்லக்கேட்டு அந்தக்காவற்காரர் அவன் சிஷர்களையோடிப்பிடித்து நீங்கள் ஆசையுடனே யிந்தப்பூஷணங்கள் ஆரார் வீட்டிலே திருடினீர்களென்று கண்டித்துக்கேட்க, அவர்கள் பயந்து திருடினவரலாறெல்லாஞ்சொல்லக் காவற்காரர் சொல்லுகிறார்கள் இந்தப்பிராமணன் அசடுள்ள புரட்டர்களைத் தனக்குச் சிஷராக்கிக் கொண்டானென்று பின்னுஞ் சொல்லுவார்கள்.—எ-று. (௧௦)

ஊரிலுள்ளபொருளெல்லாமோடிக்கொணர்பினென்றுரைத்து
வாரித்தனதுமனையின்கண்வைக்குமறையோன்றனையின்னே
பாரிலவமானம்பெருகப்பண்ணுவோமென்றுரைதையறிந்தவ்
வாரியன்றான்விதிவயமோவந்தோவந்தோவெனவயர்ந்தான்.

(இ-ள்.) ஊரிலேயுள்ள பொருள்களையெல்லா மிவர்களைத் திருடிக்கொண்டுவரச்சொல்லி வாரித்தன்வீட்டிலே வைத்துக்கொண்டிருக்கு மிந்தப்பிராமணனை யிந்தக்ஷண மிவ்வுலகமறிய மிகவுமவமானஞ்செய்யவேண்டுமென்றார்கள்; அதை யிந்தப் பிராமணன்கேட்டிது என்விதிவசமோ ஆச்சரியமாச்சரியமென்று அதிகவிசனங்கொண்டான்.—எ-று. (௧௧)

தளர்வுற்றிந்தச்சமுசாரச்சலதியொழித்தேதுறவறத்தின்
வளமைத்திருவேடந்தாங்கிவருத்தமொழிப்போமெனவெண்ணி
யொளிர்தக்கணதேயத்திற்சென்றுலகமளந்தான்றாணினைந்து
ளிர்நீர்நிறைகாவிரிக்கரையினண்ணியையாற்றிருந்தனனே.

(இ-ள்.) அப்படி மனந்தளர்ந்து இந்தச்சமுசாரமாகிய சமுத்திரத்தைக் கடந்து துறவறத்துக்கு யோக்கியமான திருவேடம்பொருந்தி யிந்தவருத்தத்தையொழிப்போமென்று நினைத்து அப்பொழுதே சந்நியாசியா யழகான சோழநாட்டுக்குப்போய் ஆதிநாராயணன்திருவடியை தியானித்துக்கொண்டு குளிர்ச்சியான சலநிறைந்த காவிரிநதிக்கரையிலே திருவையாறென்னுந் தலத்திலே போயிருந்தான்.—எ-று. (௧௨)

இருந்தசிவனடியரொடுமிணங்கித்தவக்கோலம்புனைந்து
பொருந்துதொண்ணூற்றுவயதுபோக்கியிருபத்தேழுதின
மருந்துமுணித்திரையின்பெரியபிட்டைதனைச்சாதித்
திருந்துமறையோனுடலகற்றிச்சென்றான்பின்னுமுரைசெய்வாம்.

(இ-ள்.) அப்படியிருந்துகொண்டு சிவனடியார்களுடனே யிணங்கித் தவவேஷத்துடனே தொண்ணூற்று வயதுசென்றபிறகு இருபத்தேழுதினம்

அன்னம் நித்திரையில்லாமல் கிஷ்கடையிலிருந்து திருத்தமானருணமுன்னே அத்தப்பிராமணன் சிவனைவிட்டுவிட்டான் இன்னுஞ்சொல்லுகிறேன் கேளென்று சொல்லுவான்.—எ-று. (கக)

திருடர்க்குபதேசம்புரிந்ததீமையாலிப்பூமியின்க
ணொருவமெடுத்தேயனுபவங்களொழிப்போன்சைவகிலேமற்று
னாரிபத்தியினலவ்வண்ணம்கன்பனுகிமுன்விலையா
லிருவரிவையமைமணந்திண்டிருந்தேயின்பவீடடைவான்.

(இ-ள்.) அந்த திருடருக்கு உபதேசஞ்செய்த பாபத்தினாலே இந்தப்பூமியிலே ஜெனனமெடுக்கப்பெற்று முன்னனுபவங்களை யொழிக்கும்பொருட்டாக ஒரு சைவாசாரனாயிருக்கின்றான்; இனிமேல் அரிபத்தியினாலே அந்த சீநிவாசருக்கடிமையாகி முன்விட்ட குறையினாலே இரண்டுபெண்களைக் கலியாணஞ்செய்துகொண்டு வாழ்ந்திருந்து இன்பமான மோட்சமடைவான்.—எ-று. ()

என்றேயுரைத்திக்கதையுரைத்தேயிருவர்மனைவியுராதனன்
முன்றேற்றத்தையுணர்வித்தோமுதுகச்சியினிலறிவெனவே
குன்றேர்கவிகையாப்பிடித்தகோமானந்தவுருக்கரப்ப
வின்றேயருள்செய்தவன்மாயனென்னவன்பனுளமகிழ்ந்தான்.

(இ-ள்.) இப்படியாகச் சொல்லியிருந்த கதை நீ முன்னாலே பிறந்திருந்தது ஆகையால் இந்தச் ஜெனனத்துக்கு இரண்டுபெண்சாதி யுனக்குண்டு, முன்ஜெனனத்தை யறிவித்தோம்; இதற்கு திருஷ்டாந்தம்—தெய்விகம்விளங்கிய காஞ்சிபுரத்துக்குப்போ யறிந்துகொள்ளென்று சொல்லி மறையவே, வந்து சொல்லிப்போனவன் மலையைக் குடையாகப்பிடித்த நாராயணனென்று அதிக சந்தோஷங்கொண்டான் எவ்வையன்.—எ-று. (சு)

இதுவோவெனதுபிராரத்தமென்னையாளும்பரமன்ற
ளிதுவோவெரியேனெனவுள்ளத்தெண்ணிப்புதுவைமாநகரின்
மதிமாமுகமுத்தம்மையெனுமாதைமணஞ்செய்தானொருநா
ளதிசேர்பதன்வந்தருளின்பகல்லன்பனுக்கோதினதுரைப்பாம்.

(இ-ள்.) மறுபடி வணங்கித் தோத்திரஞ்செய்து இதுவோ வென் பிராரத்துவம் என்னையாளும் பரமபுருஷன் கிருபை யெப்படியோ தெரியாதென்று மனத்திலே நினைத்துப் புதுவைமாநகரத்திலே பூரணசந்திரோதயம்போல அழகுபடைத்த முகமுடைய முத்தம்மாளென்னு மொருபெண்ணை விவாகஞ்செய்துகொண்டிருக்கிறகாலையிலே யொருநாள் கங்கையைத் திருவடியிலே தரித்திருக்கிற சீநிவாசமூர்த்திவந்து தன்னருளா லவ்வின்பத்தினாலே தனக்கடிமையாகிய அந்தநாதனுக்கு அருளிச்செய்த வகையைச் சொல்லுவேன். (கக)

குளஞ்சேரக்நீரப்பொலிவுங்கோலத்திலகத்திருமுகமு
மூளங்கூர்மஜியக்குறடுரிஞ்சுமொளிர்செஞ்சரத்தின்முத்திரையு



மிளம்பூங்காவியாடையினைசயெழி லுத்தரியமினிதிலங்க
வளஞ்சூழ்தத்துவாதியெனமால்வந்தன்பர்க்கிலைசொருட்டும்.

(இ-ள்.) நெற்றியிலே ஐங்காரம் பிரகாசிக்கவும் அதின்மீதிலே அழகாகிய திலதம்பொருந்திய திருமுகஞ் சந்தோஷமாகப் பொதியமாமலையிலுதித்த சந்தனக்கட்டையாலிழைத்த செஞ்சந்தன முத்திரையும் இனிமையான பூங்காவியுடையும் அழகான உத்தரியமு மினிதாகப்பிரகாசிக்க வளமையிருந்த தத்துவாதிப்பிராமணரூபமாய்ச் சிவவாசமூர்த்திவந்து தன்னடிமையான அந்த நாதனுக்குச்சொல்லுவார்.—எ-று. (௧௭)

வடநாட்டிருக்குமொருமறையோன்மதலையில்லாக்கலையினாற்
றடிநேரிடையாமனைவிபெருஞ்சுமையையெடுக்குமொருமனித
னொடுமூவருஞ்சேர்ந்தடைந்தவர்களூரையூர்க்கேகவருநெறியி
லடியாளாளையுளத்தினினைந்தணைந்தானெனச்சந்தேகமுற்றான்.

(இ-ள்.) வடதேசத்திலிருக்கும் ஒருபிராமணன் பிள்ளையில்லாத கவலையினாலே யுடுக்கைபோன்ற இடையுள்ள பெண்சாதியும் பெரிய சுமையெடுக்குமொருமனிதனுடனு மிவர்கள் மூவரு மிராமேசுவரத்துக்குப்போய் சேவித்தாங்களிருக்கு மூருக்குப்போக வருகிறவழியிலே தன்பெண்சாதியை அந்தச் சுமையெடுக்கிறவனைக்கலந்து புணர்ந்தானென்று சந்தேகங்கொண்டானென்று பின்னுஞ் சொல்லுவார்.—எ-று. (௧௮)

இந்தமறையோன்மனைவிசுமையெடுப்போனிவர்மூவருங்கூடி
வந்துவிளங்கம்பாடிதென்பால்வளமாகதிசேர்பனைப்பொதும்ப
ரந்தத்தலத்தினாளமத்தியானநீழற்குறையுங்காற்
சந்தேகத்தானிருவர்சிரந்தரிக்கவாளைக்கைப்பிடித்தே.

(இ-ள்.) அந்தப்பிராமணனும் அவன் பெண்சாதியும் சுமையெடுக்கிறவனும் ஆகிய மூவருங் கூடிக்கொண்டுவந்து விளங்கம்பாடிக்குத் தெற்கேயிருக்கிற வளமான ஆற்றங்கரைசேர்ந்த பனந்தோப்பினிடத்திலே காலைமத்தியானத்துக்கு நிழலுக்கு வந்திருக்கிறபோது அந்தச் சந்தேகத்தினாலே பெண்சாதியையும் மூட்டைசுமப்பவனையுங் கழுத்தையறுக்கக் கத்தியைக் கையிலே பிடித்துக்கொண்டு.—எ-று. (௧௯)

வெகுளியிருந்தவ்விருவருளவிமலமறியாதம்மறையோன்
றகைமையன்றிவருகாலைதவிப்பானவணீயணுகியன்று
னகமதிருக்குஞ்சந்தேகமகற்றிவாவென்றருள்புரிய
வகிலமுதலேயெனதுமொழியவனெவ்விதமுட்கொள்ளுவனால்.

(இ-ள்) அப்படி கத்தியை யெடுத்துக்கொண்டு கோபமிருந்து அந்த இரண்டுபெயருடைய களங்கமற்ற மனத்தையறியாமல் அந்தப்பிராமணன் தாமத்தையெண்ணாமல் வருகிறபோது தவிப்பார்கள் அங்கே நீபோய் அவன் மன

த்திலிருக்குஞ் சந்தேகத்தைத் தெளியவைத்து வாவென்று அருள்புரிய அப்போ தென்னையன் சகலத்துக்கு முதல்வனே என்விசேஷத்தை யவன் எவ்விதமாக வுட்கொள்ளுவானென்று தியானிப்பான்.—எ-று. (உ0)

கொலைசெயிடத்திற்சென்றக்காற்கொடியேன்காணத்துணிபாணைந்த
நிலைபிலிருக்கினியாரொனுமங்கெதிவந்திடில்வீண்பழிசுமந்தே
யுலைகுவேனோவெனாவிதியோச்சவறியேன்சனகனெதிர்
சிலையையிறுத்தோயிப்பணியான்செய்யேனென்றுதியானித்தான்.

(இ-ள்.) பின்னையுங் கொலைசெய்கிற இடத்துக்குப்போனால் கொடியவனாகிய யான்பார்க்க அவனை வெட்டிப்போடுவான் அந்த இடத்திலே நானிருக்கிறபோதெவராயினும் அந்தவழிவந்தால் நான் கொன்றுபோட்டேனென்று அவன் சொன்னால் அந்தப்பழியைச் சுமந்துழலுவேனோ வெனது விதியையோட்ட வகையறியேன் சனகமகாராசன் சபையினெதிரே வில்லையொடித்தவனே இந்தவேலை நான் செய்யமாட்டேனென்று தியானித்தான்.—எ-று. (உக)

குடக்குக்கடலிற்பரிதிபுக்ககூரிரவிலமுதுண்டு
படுக்கைமனையிற்கண்வளர்ந்துபானுமுதிக்குமுனமெழுந்தே
யடுக்குமுயற்சிப்பணிசெயுங்காலருளார்மயக்கந்தொடநடந்து
வடக்கிற்செல்வோர்மரந்தடுக்கிவளரொன்னையன்வீழ்ந்தனனால்.

(இ-ள்.) அப்படி தியானித்து மேலைக்கடலிலே சூரியனஸ்தமானமான பிற்பாடு இருள்சேர்ந்த இராத்திரிக்கு அமுதுகொண்டு படுக்கைவீட்டிலே கண்வளர்ந்து சூரியனுதயத்துக்குமுன்னே யெழுந்திருந்து தனக்கடுத்த வுயர்ச்சியான தொழிலைச்செய்துகொண்டிருக்கிற சமயத்திலே அருள்மயக்கந்தோன்றி அந்தமயக்கத்துடனே நடந்து வடக்குமுகமாகப்போகிறபோது ஒருமரந் தடுக்கி வளர்ச்சியான வென்னையன் கீழேவிழுந்தான்.—எ-று. (உஉ)

வீழ்ந்தகாலைமுன்வந்தமெய்யோடரிசென்றென்மொழியைத்
தாழ்ந்துகேளாதிருப்பதுவுந்தகவோவவரையணுகியவர்
சூழ்ந்தவினையையொழிக்குங்காற்சோதித்தறியப்பூனைமல
ராழ்ந்ததுதாளிப்பழத்தையடக்கிக்காத்திற்சொல்லென்பான்.

(இ-ள்.) அப்படி விழுந்தவுடனே சீநிவாசக்கடவுள் முன்வந்த திருவுருவுடனேவந்து என்வார்த்தையை வணங்கிக்கேளாமலிருக்க வழக்குத்தகுமோ, ஆகையினாலே நீயவ்விடத்துக்குப்போய் அவர்களைச் சூழ்ந்தவினையை நீக்குகிறபோது அந்தப்பிராமணன் உன்னைச்சோதிக்கவேண்டி இடக்கையிலே பூனைப்பூவையும் வலக்கையிலே தாளிப்பழத்தையும்வைத்து மூடிக்கொண்டு இத்தைச்சொல்லென்பான்.—எ-று. (உங)

இடக்கைமலர்மற்றொருகரத்திலிருக்குங்கனியின்பெயரியம்ப
வடக்கிச்சிற்றமவன்புகழ்வானதலென்றருளவவ்வனவே



படத்திற்பெரியபாம்பணைமேற்பள்ளியோயென்றடிதொழுது
தடத்தேநடந்தவ்வுழியிரெருதருவின்மறைந்தங்கிருவனால்.

(இ-ள்.) அந்தப்படியாக இடக்கையிலே பூனைப்பூவும் வலக்கையிலிருக்குந் தாளிப்பழத்தின்பெயரும் நீசொன்னால் அவன்கோபத்தையடக்கி யுன்னைப்புகழுவானீபோய்வாவென்று சொன்னமாத்திரத்திலே பெரியபடம்பொருந்திய பாம்பின்மீதிலே பள்ளிகொண்டவனேயென்று அடிதொழுது வழிநடந்து அந்த இடத்துக்குப்போ யவர்களிருக்குமரத்தின் மறைவிலேயிருந்துகொண்டு அந்தவிருத்தாந்தமறிவானாயினன்.—எ-று. (உச)

வலவனுரைத்தபடிமூவர்வந்தப்பனைத்தோப்பினிலிறங்கி
நலகடவிடாயகற்றியபின்னங்கையும்மானையும்பிடித்து
நிலையமரத்திற்பிணித்திருவருகந்துபுணர்ந்திருள்ளபடி
நிலையைச்சொல்லுமெனமறையோனெருப்பாய்விழித்துப்பற்கடித்தான்

(இ-ள்.) அப்படியிருக்க ஆதிநாராயணமூர்த்திசொன்னபடி அந்தமூன்றுபேரும்வந்து அந்தப்பனந்தோப்பிலிறங்கி நலமாகத் தேகவிடாய் தீர்த்தபின்பு தன்பெண்சாதியையும் ஆனையும்பிடித்து மனதுடன் ஒருமரத்திலேகட்டி நீங்களிருவரும் ஒருமித்துப் புணர்ந்தீர்கள், உள்ளபடி சொல்லுமென்று நெருப்பெழும்படி கண்ணைவிழித்துப் பல்லைக்கடித்தான் அந்தப்பிராமணன்.—எ-று. (உரு)

கலங்கிச்சமையாள்மொழிபகர்வான்கசட்டுமறையோயென்னுரைகே
ளிலங்குமுடலைத்தொட்டறியேனிணங்கமனத்திலெண்ணுகிலே
னலங்கொள்சரசவார்த்தைதனைநாவாற்புகன்றதானல்லிவ்
வலங்கற்குழலாளையளித்தவனையெனவேய்புள்ளுவ

(இ-ள்.) அந்தவேளையிலே மனங்கலங்கிச் சமையான்சொ ஒப்பிராமணனே என்சொல்லைக்கேள் இந்த அம்மாளுடைய த்தைத்தொட்டதுமில்லை யிணங்கவேண்டுமென்று மனத்தி நலமான சரசவார்த்தையை நாவினாலே நான்சொன்ன கூந்தலையுடையஇந்த அம்மாளை என்னைப்பெற்றதா

பாதபூசையுந்தனக்குப்பணிவாய்ச்செ
மோதுநெறியினடக்குங்காலுன்று
நிலாதவிம்மாதின்றிறத்தின்கற்
மேதுதவமோவிவர்சமையையெ

(இ-ள்.) பின்னையுமுனக்குப் லுஞ்சொல்லாநின்ற வழியிலேநடக்கு காலமும் குற்றமில்லாத இ யையறிந்து முன்னாலே யென்னதவ கைப்பெற்றோமென்று மனமகி

சிறியேனுனதுபணிவிடைகள்செய்யுந்தகைமையாதலினால்
வெறிவேயின்றியிம்மாதைவிரும்புவேனோவிதிவசமோ
வறியேனினியானென்செய்கேனதியாயங்காணீதுளத்திற்
குறியாதெங்கடமைவிடுதிகொடியமறையோயென்றனனால்,

(இ-ள்.) பின்னுஞ் சிறியேனுகியநான் உன் பணிவிடைகளைச்செய்யுந் தகைமையுள்ளவனானபடியால் பயமில்லாமல் இவ்வன்னையை விரும்புவேனோ இனி என்விதிவசமெப்படியோ தெரியாது இனிநானென்னசெய்வேன் இது அநியாயம் இதை,மனத்திலேநினைக்காமல் எங்களைவிட்டுவிடு கொடியபிராமணனேயென்று சொன்னான்.—எ-று. (௨௮)

தெரிவைபுகல்வாள்பத்தாவேதெய்வமக்கென்றெண்ணுகின்ற
வுரியமனத்தையுடையேனுன்னுபயபதப்பூசையைப்புரிவேன்
பாபுருடனாயிச்சிக்கும்பாவஞ்சுமக்கப்பெறுவேனோ
குருவேயென்றுமலர்ச்செவ்வாய்குழறியுரைசெய்தழுதனளே.

(இ-ள்.) மறுபடியுமந்தப் பிராமணன்பெண்சாதிசொல்லுவாள் பர்த்தாவே தெய்வமக்கென்று என்னுகிற உரித்தானமனமுள்ளயான் உன்னிரண்டு பாதத்தையும் பூசைசெய்கிறநான் பாபுருஷனாயிச்சித்து அந்தப்பாவத்தைச் சுமக்க மாட்டுவேனோ என்குருவேயென்று மலர்போன்ற சிவந்தவாய் குழறியழுதாள்.—எ-று. (௨௯)

மறையோனுரைப்பான்விபசாரமனங்கொண்டிருக்குமாதருக்குத்
துறைமேவொருசத்தியந்தெய்வந்தூய்மையேதுமலமருந்துங்
கறைவாய்ஞமலிகாற்றமறிகருத்துமுண்டோவுனக்குநல
ாறுமோநும்முயிரைநீக்குவேனிப்பொழுதென்றான்.

ிப்படிச்சொல்லி யழுதவளைப்பார்த்து அந்தப்பிராமணன் ரமனம்பொருந்தியிருக்கும் பெண்களுக்கு நல்லவழியேது மேது பரிசுத்தநினைவேது மலத்தைப்புசிக்கும் நறை ற்றமறியும் புத்தியுண்டோ; அதுபோல் உனக்கு நல்ல ிடோ வுங்களுயிரைநீக்குகிறேன் இப்போதுதானே (௩௰)

ந்துன்றியிருக்கக்கண்டாயோ
ிமறையோனெங்கள்சிரந்தனிலே
றியேனறியவிதிவசத்துக்
ேனுவினேனெனக்கரைந்தான்.

கிறவன் சொல்லுகிறான் யாங்களிரு ட்டதுண்டோ அங்களை யெந்தவிதத்தி



லேயறிந்தாயல்லது பிரமதேவனெங்கள் தலையிலேயமைத்தது இப்படியோ இன்னதென்று தெரியமாட்டேன் பொல்லாத விதிவசத்துக்கு உம்மைவெறுக்கவேண்டியதில்லை சகசேனுன மாதவனிருக்கிறானே இல்லையோவென்று மனமுருகிறான்.—எ-று. (௩௧)

இந்தமொழிகேட்டரங்கத்திலேகாதசியுச்சவத்தரியை
வந்துசேவித்தனைவருமாய்வரும்போதென்பின்வாராம
லெந்தவிடத்திற்சென்றுபின்னுவிருக்குமனைக்குவந்தீரென்
றந்தமறையோன்பெருங்கள்வாவறைவாயென்றானவன்புகல்வான்.

(இ-ள்.) இந்தச்சொல்லைக்கேட்டு பிராமணன் சொல்லுகிறான் ஸ்ரீரங்கத்தி லேகாதசியுச்சவத்திலே அழகிய மணவாளனைச்சேவித்து நாமனைவருமாய் வருகிறபோது என்பின்னேவராமல் எந்தவிடத்திற்குப்போயிருந்து பின்பு நானிருக்கும்வீட்டுக்கு வந்தீர்கள் கள்வனே இதைச்சொல்லென்று அந்தப்பிராமணன்கேட்க அந்தச்சமைக்காரன் சொல்வான்.—எ-று. (௩௨)

ஐயாநீவீதியின்மறையோரனேகருடன்சென்றதினாலு
மையவிரவிலெப்போதும்வந்துவழக்கமிலதாலும்
செய்யகருடமண்டபத்திலேவழிதப்பியதாலுஞ்சுற்றிப்பின்
ஐயருனக்குச்சிகரிவழிதொடர்ந்துவீடுதொறுமலைந்தோம்.

(இ-ள்.) ஐயா நீர் வீதிவழியாயனேகம் பிராமணர்கூட்டத்துக்குள்ளே போய்விட்டதினாலும் இருள்மிகுந்த இராத்திரியானதினாலும் எப்போதும்வந்து வழக்கமில்லாததினாலும் செவ்விதானகருடமண்டபத்திலே வழிதப்பித்தினை த்து ஆலயத்தைச்சுற்றிவந்து பின்பரிசுத்தமான கிழக்குக்கோபுரவாயிலின் வழியேவந்து வீடுகள்தோறும் அலைந்தோமென்று பின்னுஞ்சொல்வான். (௩௩)

வடித்தபுகழுத்தரவீதிவலைந்தபின்சித்திரத்தெருவி
னிடத்தேநடக்கநீயங்கேயிருந்துகூவுங்குரல்கேட்டுத் [யோ
தடத்தையறிந்தில்வந்தடைந்தோமென்றுரையேனைமறை
னடுத்தமொழியையறைந்திலையிதவத்தமென்றுபகருவனால்.

(இ-ள்.) அப்படியலைந்து மறுபடியும் குற்றமில்லாதபுகழ்பெற்ற உத்தரவீதியைச்சுற்றிப் பின்பு சித்திரவீதியிலேநடந்துவருகிறபோது நீயவ்விடத்திலேயிருந்து கூப்பிட்டசத்தங்கேட்டு வழியறிந்து நீயிருக்கும் வீடுவந்தோமென்சொன்னது பொய்யல்லவென்றுசொல்ல அப்போது அந்தப்பிராமணன் நீநடந்ததைச் சொல்லவில்லை, இது அபத்தமென்று பின்னுஞ்சொல்லுவான். ( )

வாவிநகரிற்குடக்காற்றில்வனஞ்சேர்கரையினுவாவிரவி
லேலப்பண்ணிகாரவமுதினையந்தேயுண்டுசமையெடுத்துச்
சிலமுடனென்பின்வந்தீர்திருமாமறையோருடன்கூடிக்
கோலவீதிதனிற்சென்றுகுறிவையொடுமோரிலம்வந்தேன்.

(இ-ள்.) வாலிகொண்டபுரத்திலே மேற்குத்திக்கிலேயிருக்கிற வளமை பொருந்திய ஆற்றங்கரையிலே பருவத்தின்றிராத்திரி பலகாரவமுதுசெய்து சுமையெடுத்துக்கொண்டு நல்லொழுக்கத்துடனே என்பின்னே நீங்களிருவரும் வருகிறபோது நான்பிராமணர்களுடனே கூடிக்கொண்டு அழகுபொருந்திய பிராமணவீதியிலேநடந்து குதிரையுடனே யொருவீட்டுக்குவந்து சேர்ந்தேனென்று பின்னுஞ்சொல்லுவான்.—எ-று. (௯௫)

பரிமேற்சுமையையிறக்கற்குப்பார்த்தேதிகைப்பநீயுமிந்தக்
குருவைமறவாப்பெண்ணுமெங்கேகூடியிருந்தீரெனமறையோய்
விரிபொற்கோயிலருகினிலேமேவும்போதிப்பதிவிரதை
தெருவின்வாந்திசெய்தேபின்புதெளிவிலாமேமயர்வுற்றாள்.

(இ-ள்.) அப்படிவந்து குதிரையின்மேலிருக்கிற சுமையை யிறக்கப்பார்த்து உன்னைக்காணுமல் நான்திகைத்துக்கொண்டிருக்க நீயுங் குருவைமறக்கிறதில்லையென்றுசொன்ன இந்தப்பெண்ணும் எங்கே கூடியிருந்தீரகளென்று பிராம்மணன்கேட்கச் சுமையாள்சொல்லுவான் ஓபிராமணா! பொற்பிரகாசம் பொருந்திய கோயிலுக்குப்பக்கத்திலே வருகிறபோது இந்தப்பதிவிரதை தெருவிலே வாந்திசெய்து மிகுந்த மயக்கமடைந்தாளென்று பின்னுஞ்சொல்வான்.—எ-று. (௯௬)

தெளிந்தபின்றைநதிக்கேகித்தேகசுத்திசெய்தரிய
கிளர்ந்ததவத்தாள்வருமளவுங்களாயிவள்பின்சென்றணுகி
வளம்பெற்றோங்குமுன்னிடத்தில்வரவக்கேரஞ்சென்றதென
விளைந்தகோபத்தொடுமறையோன்விழித்துநோக்கிப்புகலுவனுல்.

(இ-ள்.) அந்தமயக்கந்தெளிந்தபிறகு நதிக்குவந்து தேகசுத்திசெய்துகொண்டு இந்த அரிதாகிய நிறைந்ததவமுள்ள பதிவிரதைவருகிறவரைக்குங் காத்திருந்து இந்தம்மாள் வந்தபின்பழைத்துக்கொண்டு வளமையாக உயர்வுபெற்ற உன்னிடத்துக்குவர அந்நேரஞ்சென்றதென்றுசொல்ல மிகுந்தகோபத்துடனே அந்தப்பிராமணன்கண்ணை விழித்துப்பார்த்துச்சொல்லுவான். ()

நெருநலிரவில்விழுப்புரத்திநேர்மையாகத்துயில்காலைத்
தெருவின்மூன்றுஞ்சாமத்திற்றிண்ணைமீதிலிருவோரும்
ஒருமையாகப்பேசுமொழியுள்ளதுரைப்பாயெனக்கேட்ப
பெரியசுமையாள்பகருவான்பிரட்டோய்கடையிற்படுத்திருந்தேன்.

(இ-ள்.) நேற்றிராத்திரி விழுப்புரத்திலே நேர்மையாக நித்திரைசெய்கிறபோது தெருவிலே மூன்றுஞ்சாமத்திலே திண்ணைமேல் நீங்களிருவருமொருமையாகப் பேசிக்கொண்டிருந்ததை யுள்ளபடிசொல்லென்றுகேட்கப் பெரியசுமையாளன் சொல்வான் புரட்டுப்பிராமணா! கடையிலேபடுத்துக்கொண்டிருந்தேனென்று பின்னையுஞ்சொல்வான்.—எ-று. (௯௮)



அடியேன்றுயிலுங்காலையிலிவ்வரியவிரதைவீதிக்குக்
கடிதாயேகவருங்காலைக்கபாடந்திறக்கப்படாமையினுற்
கொடியேன்பெயரைவாயாரக்கூவச்செவியிற்கேட்டெழுந்து
நெடியகதவந்திறந்தனுப்பநெறியிற்பரிகண்டிடனையமைத்தாள்.

(இ-ள்.) அப்படி நித்திரைசெய்யும்போது இந்த அருமையான பதிவிரதைவீதிக்குச் சடுதியாய்ப்போகவருகிறவேளையிலே கதவுதிறக்கப்படாமையினாலே கொடியேனாகிய என்பெயரை வாயாரக்கூவியழைக்க நான்காதிலே கேட்டெழுந்திருந்து நெடிதாகிய கதவைத்திறந்தனுப்பினேன் வழியிலே குதிரைகட்டியிருந்ததைக்கண்டு என்னை இந்த அம்மாள் கூப்பிட்டாளென்று பின்னுஞ்சொல்லுவான்.—எ-று. (௯௯)

சென்றுகுதிரைதனைவிலக்கித்தெருவினேகிவருமளவும்
நின்றுவாயற்படியிலிந்தநிலையாட்கைகால்சுத்திசெய்து
பின்னுமுள்ளேகினதறிந்துபிறங்குகபாடந்தனையடைத்தே
யின்றுவிளைவதறியாமலிருந்தேன்சயனித்தெனவுரைத்தான்.

(இ-ள்.) மறுபடிநான்போய்க் குதிரையைவிலக்கி வீதிக்குப்போய்வருகிறவரைக்கும் வாசற்படியிலிருந்துகொண்டு இந்நிலைமையுள்ளவள் கைகால் சுத்திசெய்துகொண்டு பிறகு உள்ளேபோனதறிந்து உயர்ச்சியானகதவைமூடிக்கொண் டின்றைக்கிப்படிவிளையுமென்பது அறியாமல் படுத்துக்கொண்டிருந்தேனென்று சொன்னான்.—எ-று. (௱)

திருடத்தெரிந்தபோதனைத்திட்டத்தெரியாதுளதோவென்
றுரியவுங்கண்சொல்லுமொழியுறுதியாகச்செய்தனையே
கரியகுழலார்களையினிதாய்க்களவிற்புணர்ந்தாயந்தரிய
வொருவர்வினவப்புகலுவரோவொவ்வாதுனதுமொழியென்றான்.

(இ-ள்.) அதுகேட்டுப் பிராமணன்சொல்வான் திருடத்தெரிந்தபேருக்குத் திட்டத்தெரியாதிருக்குமோவென்று உங்கள்சொல்லுஞ்சொல்லை யுறுதியாகச் செய்துவைத்தாயானாலுங் கருமையான கூந்தலையுடைய பெண்களையின்பமாகக் களவினாலேகூடினால் அதுதெரிய ஒருவர்கேட்டாற் சொல்லுவார்களோ ஆகையினாலே உன்வார்த்தையை நானொத்துக்கொள்ளுவதேயில்லையென்று சொன்னான் பிராமணன்.—எ-று. (௱௧)

என்னதுளத்தின்செயலுணராதிருந்தாலரியவசிட்டன்மனை
யன்னதுனது பன்னிகுணமறியாதெங்களிருவரையு
மின்னதருவிற்பாசத்தாலிறுகப்பிணித்துக்கழுத்தறுப்பா
லுன்னிக்கொலைபூணுவதறமோவுயர்ந்தோயென்றான்சுமையாளும்.

(இ-ள்.) என்மனத்தின்குணத்தை நீயறியாதிருந்தாலும் அருமையாகிய வசிஷ்டர்பெண்சாதியான அருந்ததிக்குச்சமானமான பெண்சாதிகுணம் தெரி

யாமல் எங்களிருவரையும் இந்தமரத்திலே கயிற்றிலிறுகக்கட்டிக் கழுத்தை யறுக்கனினைத்துக் கொலைசெய்வது தருமமோ உயர்ந்தசாதியிலேபிறந்தவனே யென்றான் சுமையாள்.—எ-று. (௪௨).

என்னுயகனுக்கிதுதெரியாதென் றுமனத்திற்றுன்பமுறேல்

நன்னுவளனையிப்பிறப்பினமதுவிதியின் வயத்தாலே

யின்னுளிவர்க்குநிச்சயமென் றிருப்பவினிநாமென்செய்வோ

முன்னோர்க்காபத்தொழித்தருளுமுராரிமுகுந்தனடித்துணையே.

(இ-ள்.) அப்போது அந்தப்பிராமணன் பெண்சாதி சுமையாளைப்பார்த்துச் சொல்லுவாள் என்புருஷனுக்கு இதுதெரியாதென்று மனத்திலே நீதுன்பப்படவேண்டுவதில்லை நல்லசத்தியவசனமுள்ளவனே இந்தப்பிறப்பிலே நம்விதிவசத்தினாலே வந்ததிப்போது இவருக்கு இதுநிச்சயமென்றிருக்கிறபடியால் இனிமேல் நாமென்னசெய்வோம் முன்னே பெரியவர்களுக்குவந்த ஆபத்தைத்தீர்த்துக் கிருபைசெய்த முராரிமுகுந்தனுகிய ஸ்ரீமந்நாராயணமூர்த்தி பாதமேதுணையென்று பின்னையுஞ்சொல்லுவாள்.—எ-று. (௪௩)

பரமன்சருவசீவதயாபரனனுதையிரக்ககனென்

றரியவாசாரியர்பெயரிட்டழைப்போனென்னுதனுக்குநம்மேற்

பிரியமுறச்செய்திலனென்றுபேசமறையோனரியேது

கிரியேதெனவாட்கரங்கொண்டுகிட்டிவந்தான்சிரந்துணிக்க.

(இ-ள்.) பரப்பிரமசொரூபன் சருவசீவதயாபரன் அநாதரட்சகனென்று அருமையாக பூர்வாசரியர்கள் பெயரிட்டழைக்கப்பெற்றவன் என்னுயகனுக்கு நம்மேல் தயவுவரும்படியாய்ச் செய்யவில்லையென்றுசொல்லப் பின்பு அந்தப்பிராமணன் சொல்லுவான் அரியேது கிரியேது உங்களைவிடுவேனோ வென்று கத்தியைக் கையிலேயெடுத்துக்கொண்டு தலையையறுக்கும்படி கிட்டிவந்தான்.—எ-று. (௪௪)

வேறு.

இருவருரையுளறியழமுருடமறையவனனுநவிதுசமயமென சினைவிரி, தருவினடியுறுபெரியனிரணியனதனிமதலைசகலபொருளினுமுரகரி,யுரியனெனமொழியதமனியமணிகணிலவுபொழியொருதறியிலெழுமரியையனேர்,புருவமிசைநெறியநலதரளநகைநெறுநெறெனபுயமசையமொழிதலுறுயவே.

(இ-ள்.) அப்படியவன் கிட்டவந்தமாத்திரத்திலே பிராமணத்தியுஞ் சுமையாளும் வாய்குழறியழ முரட்டுப்பிராமணனும் பின்னையுங்கிட்டிவரவித்து சமயமென்று கிளைகள்விரிந்த மரத்தின்மறைவிலேயிருந்த பெரியவனுகிய என்னையன் இரணியனுடைய அழகானபிள்ளையாகிய பிரகலாதனன் சகலபொருளினுமுரகரியாகிய பகவானிறைந்திருப்பானென்றுசொல்லஅப்போது பொன்னுபிரத்தினங்களும் பிரகாசிக்குமொருதூணிலேயிருந்து நரசிங்கரூபம் வெளிப்ப



ட்டதுபோல் புருவத்தை நெறித்துக்கொண்டு நல்ல முத்துகளைப்போன்ற தந்தங்களை நெறுநெறென்று கடித்துக்கொண்டு புயங்களசைய பொடாபொடாவென்று மகாகோபத்துடனே தோன்றினன்.—எ-று. (௬௫)

முழுவலொளிதிகழுபுவியதிரதருவருசிலையுமுறியவதிசடுதியுடனே, கறுவியவணுணுகிமறையவனுரியசிரமதணிகரியகுடுமியையொருகையா, லிறுகபொடுகிறுகிறெனவுடலலையவுதறிநிலைபிரியதரையினிசைகுனியவைத், தறையபளபளவெனவலறியவனுளநகைமயவனுமரிவையுமகிழவே.

(இ-ள்.) பின்னையுஞ் சிறுநகை பிரகாசிக்க பூமியதிர மரத்திலேயிருக்கிற கிளைகள்முறிய அதிசடுதியுடனே யதட்டிக்கொண்டு கிட்டிவந்து அந்தப் பிராமணன் சிரத்திலேயிருக்குங் கறுப்பான குடுமியை யிறுக வொருகையினாலேபிடித்து கிறுகிறென்று உடலலைய வுதறி நிலைதளரத் தரையின்மீதிலே குனியவைத்துப் பளபளென்று அறைய அலறிய அந்தப்பிராமணனுள்ள சமையாளு மந்தப் பிராமணத்தியுஞ் சந்தோஷமாக.—எ-று. (௬௬)

கரப்டையைவிடவிழிருவிழிமுடுகிவிரிவுபுகைகனலமொழிதழையவெனது, பெரியனடபயலேகொலைபுரியநினைவுளவுனதுயிரியவுடனைவிடுவனோ, வரிவைசமையவனிருவருடைநிலைமையறிதியெனாவவனதனிசிகழிவிடவே, பிரமைகொடுவசடமறையவனலறிபொறிதளரபிதறுமுயிருறுபிணமெனவே.

(இ-ள்.) பின்னையுமந்தப் பிராமணன் கையிலிருந்த கத்தியைத் தட்டிவிட்டு இரண்டுகண்களும்புகைந்து அக்கினிப்பொறி மிகவும் பறக்கவுஞ் சத்தத்துடனே யதட்டி யென்னையாளவந்த அனந்தநாதன் சொல்லுகிறான் அடபயலே கொலைசெய்யநினைந்த உனக்குப் பிரியமாகிய வுடலைவிடமாட்டேன் இந்தப்பெண்ணுஞ் சமையாளுமிருக்கிற நிலைமையதெரியாமலிப்படி செய்யலாமோவென்று அழகான குடுமியைவிடப் பிரமைகொண்டு அந்த அசட்டுப்பிராமணன் அலறி ஐம்பொறியுந்தளர்ந்து பதறி உயிரிருக்கும் பிணம்போலிருந்தான்—எ-று.

பெரியவனதிருகரமுழுதறியவனெதிரனுகிபிரளயமிதெனமுடுகியே, யரியபடையொருகைகொடுமுருடவசடனவினியறையுமொருமொழியுளதுகேள், விரிமதுரகுணனிவனனுளமுமதிவதனமதிவிரதைநிலையறியகிலையித், தருவினெடுமுடவிறுகவரியுமறையவனுதுதலைவரிவனெனுமளவிலே.

(இ-ள்.) அந்தவேளையிலே என்னையாளவந்த பெரியவன் இரண்டுகைகளுமுதறி விசிறிக்கொண்டு அந்தப்பிராமணனுக் கெதிரேவந்து ஒரு பிரளயகாலமிதுவென்று சொல்வதுபோல ஆரவாரித்து அந்த அரிதாகிய சூரியைக் கையிலெடுத்துக்கொண்டு அடாமுரடா அசடனானவனே இனி நான் சொல்லு

மொருவார்த்தையைக்கேள், விரிந்த மதுரகுணமுடையாள் இந்தச் சுமையாள்; இவள் மனமுஞ் சந்திரப்பிரகாசம்போன்ற முகமுள்ள இந்தப் பதிவிரதை நிலைமையும் அறியாமல் இந்த மரத்திலுடனே உடலிறுகக்கட்டின பிராமணனே உன் கழுத்தையறுத்துப் போடுகிறேனென்று சொன்னான்.—எ-று. (௬௮)

அருவிரதையுணாபுகலுமுயிருதவிபுரியும்டியவாசவருணிலாமே, தருமகுணவமுதவிரணியன்றுயிரகலவொருதறிமிசையிலிரு நருகுபரனே, மருமலரினெழிலணியுமொருதருவினிலுமொறுமறையவருதிருவடிவமே, வரமருளுமெனதுனதுசரணணியுமிலவெனவது மனமகனை முனிவுபுரியேல்.

(இ-ள்.) அப்படி சொன்னமாத்திரத்திலே அந்த அருமையான பதிவிரதை சொல்லுவாள். எங்களுக் குயிருதவிசெய்யவந்த கர்த்தனே, அடியார்களுக் கிராசனே, இருமைக்கு ஒரு துணையுமே, தருமகுண அமுதமே, இரணிய னுயிர் போகும்படியாய் முன்னே யொரு தூணிலே எதிராகவந்த பராபரனே, வாசனையுள்ள மலர்பொருந்திய அழகுள்ள ஒருமாத்திலே இப்போது பின்னுமறைந்திருந்துவருந் திருவடிவமே எனக்கு வரங்கொடுமென்று உன்பாதத்தைப்பணிய எனக்கு கையில்லையாகையால், எங்களைக் காப்பாற்றினதுபோல என் புருஷனையுங் கோபிக்கவேண்டாமென்று சொன்னாள்.—எ-று. (௬௯)

னை இறைவனுளமுவகையொடுபடையைவிசிறியவனிருவருமுபிணியறவிடுத், தனகபடமறையவனையனுகிகொலைபுரியுமினையசட்வுனதுயிருதவினே, னினியபதிவிரதைபுகலரியமொழியதனையுணியெனலுமறிவுளதெரிவைதன், மனமுருகிபுருடனடிதொழுதுபகருவனிஃதுமனிசவுருவெனவுணர்வுறேல்.

(இ-ள்.) அந்தப்பிராமணத்தி அப்படி சொன்னமாத்திரத்திலே வுன்னையன் மனச்சந்தோஷத்துடனே கையிலிருந்த கத்தியை எறிந்துவிட்டு அப்போதே கட்டியிருக்கும் அந்த இரண்டுபேரையுங் கட்டவிழ்த்துவிட்டு அந்தக்கவடுபொருந்திய பிராமணனைக் கிட்டிப்போய் கொலைசெய்ய நினைந்த அசடனே! உன்னுயிரையுமுதவினேன், அஃதெதினாலே என்றால் இந்த இனிமையான பதிவிரதைசொன்ன அரிதான சொல்லையெண்ணி நின்று சொன்னமாத்திரத்திலே இந்த அறிவுள்ள பிராமணத்தி தன் மனச்சந்தோஷமாய்ப் புருஷனுக்கு நமஸ்காரஞ்செய்து சொல்லுவாள், இது மனிதவுருவென்றே நினையாதேயென்றே பின்னுஞ் சொல்லுவாள்.—எ-று. (௭௰)

வேறு.

அந்நாளொருதூணிலமர்ந்தபிரா
னிந்நாண்மரமேவியிருந்தனனு
முன்னுலுமெனுலுமுரைக்கவரி
தென்னையகவிப்புதுமைத்திறமே.



(இ-ள்.) முன்னாள் பிரகலாதனுக்காக ஒருதூணிலே எழுந்தருளியிருந்த பெருமான் இப்போது ஒருமரத்திலேயிருந்து வெளிவந்தனன், உன்னாலேயும் என்னாலேயும் சொல்லவரிதாகும் என்னையகனே இப்புதுமையாகிய மகிமையென்று பின்னுஞ் சொல்லுவாள்.—எ-று. (௭௧)

நையுமனமேவியநாயனையே
யுய்யும்படிவந்துதவுங்கருணை
யையன்புகலும்வழியன்புடனே
செய்யென்றுபகர்ந்தனள்சேயிழையே.

(இ-ள்.) கவலைபொருந்திய நையுமனமுடைய நாயையொத்த என்னை பிழைக்கும்படிக்குவந்து கருணைசெய்யுமென்னையன் சொன்னபடி அன்பாகக்கேளென்றுசொன்னாள் அந்தப்பிராமணத்தி.—எ-று. (௭௨)

புன்சொன்மறையோனதுபுந்தியினிற்
பன்சொல்வரவின்றிபயத்துடனே
நன்சொற்புகலும்வகைநாடரியா
னென்சொல்வதுசொல்லுமினென்றனனே.

(இ-ள்.) அந்தச்சொல்லைக்கேட்டு புன்மையானசொல்லையுடைய பிராமணன் அந்தமனதிலே யொன்றுமேலும் பலசொல்சொல்ல வாய்வராமலும் பயத்துடனே நல்லவார்த்தைச் சொல்லுகிறவகையுந் தெரியாமல் என்னசொல்லுகிறீர் சொல்லுமென் றென்னையனைக்கேட்டான்.—எ-று. (௭௩)

அம்மாமறையோனதறைந்திடவே
யம்மாதவனென்றுநயப்புடனே
யிம்மேதினியோர்களிறைஞ்சமொழிற்
பெம்மானருளுந்திருபேசுவனே.

(இ-ள்.) அந்தப்பிராமணன் அப்படிச்சொன்னமாத்திரத்திலே நமது தவமேயுருவமாகவந்த பெரியவனென்று சந்தோஷமாக இந்தப்பூமியோர்களெல்லாம்பணியும் அழகுடைய பெருமானாகிய அனந்தநாதன் அந்தப்பிராமணன்மீதிலே கிருபைவைத்து இப்படியாகச்சொல்வார்.—எ-று. (௭௪)

தொழிலாறுமுவந்தருடொன்மைநெறி
வழுவாநிலைமாமறையோர்வளமை
யழியாநலகற்பினலாடனைநீ
பழிசெய்யவினைந்திடுபான்மையதோ.

(இ-ள்) ஓதல், ஓதுவித்தல், யாகஞ்செய்தல், யாகஞ்செய்வித்தல், தானம் வாங்கல், தானமீதல். ஆகுமிந்த ஆறுதொழிலும்சந்தோஷமாகச்செய்து அருமையாகியவேதவழிவழுவாமல்நிலைமையாயிருக்கின்றன பெருமைபொருந்தியபிராமணர்தொழில். அதைவிட்டு அழிவில்லாத கற்புள்ளவளையும் இந்த ஆளையும்பழி

செய்யும்படி உன்மனமிசைந்ததெச்சாஸ்திரப்படியோவென்று பின்னுஞ்சொல்லுவான்.—எ-று. (௫௫)

மாதைக்கொலைசெய்பவர்மாகிரயம்
போதப்பெறுவாரிவண்பூருவகன்
னீதிப்பெருநூலினிசுழ்த்தலறிந்
தேதொப்பகினைந்தனையென்மறையோய்.

(இ-ள்.) பின்னும் பெண்ணைக்கொலைசெய்தவர்கள் மகத்தாகிய நாகத்தைமிசவும் பெறுவாரென்று பழமையாகியதருமசாஸ்திரத்திலே சொல்லியிருக்கிறதையறிந்து மிந்தக்காரியஞ்செய்ய நினைத்தாயே ஓய்! பிராமணாவென்று பின்னுஞ்சொல்லுவான்.—எ-று. (௫௬)

இம்மாதிவனைத்தொடவல்லனுமீ
சும்மாகினைவுற்றதெனச்சொலவே
வம்மாமறையோனவிதந்தெரிதற்
கெம்மானெடியம்புவனிறைவா.

(இ-ள்.) இந்தம்மானிவனைத்தொடவேயில்லை இது அபத்தம் சுகமேதகமாகநினைத்துக்கொண்டாயென்று சொல்லக்கேட்டு அந்தக்கொடுமையாகிய பிராமணன் இந்த விதத்தைத்தெரியும்பொருட்டாக வன்னையனவனுடனே ஒருவார்த்தைசொல்லுவான்.—எ-று. (௫௭)

தூயநரிவரென்றனைநின்சொனிலே
தேயாதொருசோதனைசெய்வனதை
வாயாரமகிழ்ந்துவழங்குநலையோ
னீயேபரனென்றுநினைத்திடுவேன்.

(இ-ள்.) நல்லபரிசுத்தமுள்ளவர்களிவர்களென்று சொன்னீரே அப்படி நீர் சொன்னசொல்லினிலைமைகுறைவில்லாமல் ஒருசோதனைசெய்வேன் அதைமனவாயினாலே சந்தோஷமாகச்சொன்னதுன்னையே பரவாசுதேவனென்று நினைப்பேனென்று சொன்னான்.—எ-று. (௫௮)

என்றேமறையாயோனிடத்திலவன்
சென்றேநலவெண்மலர்செங்கனியுங்
குன்றாமலிடக்கைவலக்கைகொடு
நின்றேபுனையாவிதனேர்மைபெற.

(இ-ள்) இப்படியென்றுசொல்லி அந்தப்பிராமணன் மறையோனிடத்துக்குப்போய் நல்ல வெண்மையுள்ள பூவைப்பூவையிடதுகையிலேவைத்துக்கொண்டுவந்து நாரத்தங்கனியை வலதுகையிலே வைத்துக்கொண்டுவந்து நின்று தன்மனத்திலே காணமில்லாமல் இதைச்சொல்லக்கேட்டான். (௫௯)



இதநூதனையின்கனியிக்கையிலே
புதிதாகியவெண்ணிறப்பூவைமலர்
பதிதாவெனவோச்சிப்பருங்காமே
லதிராகவறைந்தனனையனுமே.

(இ-ள்) அவனப்படிகேட்டமாத்திரத்திலே இது நூதனையின்பழம் இந்தக்கையிலே புதுமையாகியவெண்ணிறமான பூவைப்பூவிரதபங்கஞ்செய்யப்பட்டதேயென்று ஓங்கியவனுடைய பெரியகையின்மீதிலே அதிராக அடித்தானென்னையன்.—எ-று. (௬௦)

அதுகண்டுபயத்துடனம்மறையோ
னிதியேகருணாலயநேமியனே
மதிமேவியவானுதன்மற்றிவனை
விதியோவிதுசெய்தனன்வெம்பிழையே.

(இ-ள்.) அந்த அதிசயத்தைக்கண்டமாத்திரத்திலே மனபயத்துடனே அந்தப்பிராமணன்நிதியே! கருணாலயனே! சக்கரந்தாங்கியகையுள்ளவனேயென்று தோத்திரஞ்செய்துநல்லபுத்தியுள்ளவனுதலாகிய பெண்ணையும் இந்தச்சமையா வையும் விதிவசத்தினாலேபோய் இந்தக்கொடுமையாகிய பிழையைச்செய்தே னென்று பின்னுஞ்சொல்வான்.—எ-று. (௬௧)

அறியாமையினன்மனையாடனையுங்
குறியாதிதுசெய்தனன்கொள்கையினல்
வெறியாதருளேதரவேண்டுமிதை
யறையாதிவருக்குநாயன்பவெனு.

(இ-ள்.) நான்தெரியாமையினாலே என்பெண்சாதியையுமிந்த ஆனையுங்குறித்துப்பாராமல் இந்தவேலைசெய்தபடியினாலே லென்மீதுதாங்கள் கோபியாமல் கடாட்சஞ்செய்யவேண்டுமென்று சொல்லி இந்தவார்த்தைஇவர்களிருவரும் பிறருக்குச்சொல்லாமலும் தேவரீரிவர்களுக்குச்சொல்லவேண்டுமென்றுசொன்னான்.—எ-று. (௬௨)

முன்னாளொருமைப்படிமூவருமே
யென்னாளுநடந்திடுவீரிதனைச்
சொன்னாலவருக்கிருகாய்விழிபோ
மின்னேயெனவையனெழுந்தனனே.

(இ-ள்.) அதுகேட்டு அனந்தநாதன்சொல்லுகிறான் முன்னாளிலேயிருந்த ஒருமைப்படி நீங்கள் மூவருமெந்நாளும் அப்படியேநடந்துகொள்ளுங்கோள்! இதையுங்கள் மூவருக்குள்ளே யாதாமொருவர் வெளியிலேசொன்னால் அவர்களுக்கு இரண்டுகண்ணும் உடனேகெட்டுப்போமென்றருளி என்னையனெழுந்திருந்துநடந்தான்.—எ-று. (௬௩)

முதலையகவென் றுமொழிந்துநடக்
கதிவேகமொடெந் தடமன்றிவளர்
பதியேகநினைந் துபடர்ந்திடவு
மெதிரேவருமோர் நெறியின்புறவே.

(இ-ள்.) அப்படியெழுந்திருந்து ஆதிமூலமே யென்றுசொல்லி அதி வேகமாகநடந்து வழிப்பேபோகாமல் குறுக்குவழியாகவளர்ச்சி யானதன்னூருக் குப்போக நினைந்து நடக்கிறபோது சந்தோஷமாகும்படி யெதிரேயொருவழி வந்தது.—எ-று. (௬௪)

வழிகண்டுநடந்துவரும்பொழுதிற்
றழுவும்பசிதானுறவோர்புளியங்
குழுதன்றுகுளக்கரைமீதுபடுத்
தெழவுந்திடமின்றியிருந்தனனே.

(இ-ள்.) அப்படிவந்த வழியைக்கண்டுநடந்து வரும்பொழுது மிகு ந்தபசிதாகத்தினாலே புளியமரங்கள் நெருங்கியிருக்கும் ஒருகுளக்கரை மீது படுத்துக்கொண்டு எழுந்திருக்கத்திடமில்லாமலிருந்தான்.—எ-று. (௬௫)

இவனித்துயர்மேவியிளைத்தவகைக்
கவனித்துகடற்படுவோனெனவெல்
லவனத்தமனஞ்செலவேயிருள்வந்
தவனித்தலமெங்குமடர்ந்ததுவால்.

(இ-ள்.) இப்படியென்னையன் இந்தத்துயரம் பொருந்தி யிளைத்தவகை யைநினைத்துச் சமுத்திரத்திலேவிழுகிறவன்போலே அழகுபொருந்திய சூரி யன் அஸ்தமனமாக இருள்வந்து இந்தப்பூமியெங்கு மூடிக்கொண்டது.-எ-று.()

ஒளிருஞ்சிவிகைக்கொடுமொன்பதின்மர்
நளிரத்தடகண்ணிடவிப்பெரியோன்
களைகொண்டுறல்கண்டுகடுக்கனொடு
மிளிரும்முருகுங்கொளவேண்டினரால்.

(இ-ள்.) அப்படி யிருள்மூடிக்கொண்டவேளையிலே பிரகாசம்பொருந் திய வெறும்பல்லக்கை யெடுத்துக்கொண்டு ஒன்பதுபேர் போகியர்கள் வந்து குளிர்ச்சியான அந்தகுளத்தைச்சேர அப்போது இந்தப்பெரியவனை அனந் தநாதன்களையினாலே படுத்திருக்கிறதைக்கண்டு கடுக்கனையும் முருகையுங் கா ப்பையும் பறித்துக்கொள்வோமென்று சந்தோஷமானார்கள்.—எ-று. (௬௭)

ஆரோதனியாகவநாதியைநேர்
பார்மீதுபடுத்தனனித்திரையா
மேலர்காதணிகொண்டிடலாமிவணீர்
பாரீர்நெறிமூவிரெனப்பகர்வார்.



(இ-ள்.) அப்படிநினைத்துச்சொல்லுகிறார்கள் யாரோதனியாக அநாதி யைப்போலே தரையிலேபடுத்துக்கொண்டு நித்திரையாகவிருக்கிறான்; அழகு பொருந்திய கடுக்கனும் முருகுங் காப்புங் கழற்றிக்கொள்ளலா மொருவரு மிங்கேவாராமல்வழிபாருங்கள் மூன்றுபேரென்றுசொன்னார்கள்.—எ-று. (௬௮)

தென்பாலொருவன்செலத்தென்வடபா
லன்போடிருவோர்புகவாறுபெய
ருன்பேரெதுவூரெதுவோதெனலும்
பின்போர்மொழிபேசிலனையனால்.

(இ-ள்.) அந்தப்படி தெற்கேயொருவன் போக அழகுபொருந்திய வட க்கே அன்புடனேயிருவர்போய் வழிபார்க்கமற்ற ஆறுபேருங்கூடிவந்து உன் பேரென்ன ஊரென்ன சொல்லென்றுகேட்கப் பின்பு ஒருவார்த்தையுஞ் சொல் லாமலிருந்தானென்னையன்.—எ-று. (௬௯)

கொலைசெய்யநினைந்திடுகொள்கையறிந்
தலைவின்றியமாமனனோடுறைவா
னலனல்லவுமக்கிதுநைந்திருகண்
ணிலைகெட்டிடுவீரினிநீவிரெனா.

(இ-ள்.) ஆனபடியினாலே யந்தபோகியர்கொலைசெய்ய நினைத்தார்கள் அதையறிந்தென்னையன் தயிரியமானமனத்துடனே சொல்லுவான் உங்களுக்கு இது நலமல்ல இரண்டுகண்களுங் கெட்டுப்போவீர்கள் நீங்களிந்தயோசனை செய்யவேண்டாமென்று சொன்னான்.—எ-று. (௭௦)

தொடர்மாதவர்நேர்வலிசொல்லுதிநீ
படுமோவிழியென்றொருபாவியெழுந்
திடமுள்ளொருகாலிலிருந்தசெயற்
றடுமாறிவிழுந்துதவித்தனனே.

(இ-ள்.) அப்படி சொல்லக்கேட்டு தவம்பொருந்திய ரிஷிகளைப்போ லே வல்லமைசொல்லுகிறாய் கண்கெட்டுப்போமோ பார்ப்போமென்று ஒரு பாவியெழுந்திருக்க அப்போது ஒருகாலிலே காரைமுள் அவனுக்கு நறுக்கெ ன்றுதைக்க அவன் செய்கைதடுமாறி கீழேவிழுந்து தவித்தான்.—எ-று. (௭௧)

கடித்துப்பலைக்காரமுளைக்கையினாற்
பிடித்துப்பிடுங்கும்பொழுதேவடநற்
றடத்தைத்தெரிகின்றனர்சந்ததிகண்
டடுத்தவ்வகைமெல்லவறைந்தனரால்.

(இ-ள்.) அப்படி விழுந்தவன் பல்லைக்கடித்துக்கொண்டு அந்தக்காரை முள்ளைக்கையினாலே பிடித்துப்பிடுங்கின வேளையிலே வடக்குவழிபார்க்கப்

போன இரண்டுபேரும் மனிதர் சந்தடிகண்டோடிவந்து அந்தவார்த்தையை மெல்ல இவர்களுடனேசொன்னார்கள்.—எ-று. (௭௨)

நின்றாறுவோருநினைந்துரைவா
ருன்றானையுரைத்திடினார்கொடுபோ
யின்றேவிடுவோமெனவின்புறவே
நன்றேய்குமுளாககொன்றனனால்.

(இ-ள்.) அதுகேட்டு அவ்விடத்திலிருந்த ஆறுபேரும் யோசனைசெய்து சொல்லுவார்கள் உன்னுரைச்சொன்னால் அங்கே கொண்டுபோயிப்பொழு தே விட்டு விடுவோமென்று சொல்ல என்னையன் சந்தோஷமாகச் சொல்லு வான்—எ-று. (௭௩)

சென்றேவடதிக்கினிலின்றனுகி
யென்றீவினைதன்னினிருத்தலென
வொன்றோதுவமோப்பறுதண்டிகையி
னின்றேயெதிரூரிலிருந்திடுவோம்.

(இ-ள்.) வடக்குத்திசைக்குப் போயிருந்தேன் இங்கேவந்து என்றிவி னையினாலே யிருக்கிறேனென்று என்னையன் சொல்லக்கேட்டு போகியர்கள் சொல்லுகிறார்கள் ஒருகாரியஞ் சொல்லுவோங்கேள் இந்த ஒப்பற்றபல்லக்கின் மீதிலேறிக்கொண்டா லிப்போதுதானே யெதிரேயிருக்கிற ஊரிலேகொண்டு போய்விடுமோமென்று சொன்னார்கள்.—எ-று. (௭௪)

அன்பெப்படியோவெனவச்சிவிகை
யின்பத்தியெடுத்துவளித்திபொருள்
பின்பற்றுவமென்றுபிதற்றிமனத்
தென்புக்கொடுசென்றனர்திண்ணெறியே.

(இ-ள்.) அப்படி சொல்லக்கேட்டு உங்களன்பெப்படியோ அப்படி செய்யுங்களென்றென்னையன் சொல்ல அந்தப்பல்லக்கின்மீதெடுத்துக்கொ ண்டு கடுக்கனும் முருகும் காப்பும் பின்னாலேபறித்துக் கொள்ளுவோமென்று பிதற்றிக்கொண்டு மனத்தென்புடனே பெருமையான வழியிலேகொண்டு போ னார்கள்.—எ-று. (௭௫)

எரிபோகியவொங்குமிறக்கிவிடா
தருநற்புளியங்குளம்விட்டணிவிக்
கிரவாண்டிகடந்துகிளர்ந்தவிழுப்
புரதெற்குவெளிப்புறம்புக்கனரே.

(இ-ள்.) அப்படி இக்குணமுள்ள போகியர்கள் எங்கும் பார்க்காமல் அருமையான நல்ல அந்த புளியங்குளம் விட்டுப்புறப்பட்டு விக்கிரவாண்டி க டந்து கிளறவானவிழுப்புரத்திற்கு தெற்குவெளியிலே வந்தார்கள்.—எ-று. ()



இளையாதவருந்தையெனச்செலவே
களையாற்றுயில்கொண்டிருகண்ணைவிழித்
துளமாபயமுற்றெனையாளபவனல்
வளமால்கவசத்தைவழுத்தினனே.

(இ-ள்.) அப்படி இளைப்பில்லாத போகியர்கள் வாயுவேகம்போலே நடக்கும்போது களையினாலே நித்திரைசெய்துமதையடியும் இரண்டுகண்ணையும் விழித்துப்பார்த்து மனத்திலே மிகுந்தபயமுண்டாகி என்னை ஆளவந்த அநா தநாதன்நல்லவளமான நாராயணகவசத்தைத் தோத்திரஞ்செய்வான்.—எ-று. ()

கயமுன்வருகாரணனேயிவனுன்
செயலெப்படிசெப்புவதென்றுவழிக்
கயல்மேலொருமண்டபமங்கறிவுற்
றியலெவ்விடமோவெனவெண்ணினனே.

(இ-ள்.) கஜேந்திரனுக்குமுன்வந்து வுயிரளித்தகாரணனே யுனதுசெ யலை யெப்படிசொல்வதென்று எண்ணிக்கொண்டிருக்கிறபோது வழியின்பக் கத்திலே மேற்புறமான ஒரு மண்டபத்தைக்கண்டு இந்தவிட மெந்தவிடமோ வென்று எண்ணினான்.—எ-று. (௭௮)

தூயன்புகழ்துன்னியநன்னமசி
வாயன்செயுமண்டபமாமிதுதென்
னேயம்பெறுதண்டலைநீர்த்தடம்வாழ்
தேயங்குளமாபுரிதிண்ணமிதே.

(இ-ள்.) அப்படி யெண்ணிப்பார்க்கத் துணிந்து தூய்மையான புகழ் மிகுந்த நல்ல நமசிவாயப்பிள்ளை செய்வித்த மண்டபமாகும் இதற்கப்புறம் அது குபொருந்திய தோப்புங்குளமுஞ் சத்திரமும் குளத்தூர்க்குச் சமீபமாக இரு க்குமென்று நினைத்துக்கொண்டான்.—எ-று. (எக)

வேறு.

இவ்வகைமனத்திலெண்ணியென்னாசிருப்ப
வெவ்வழியெண்ணிக்கொளுவதென்னவொருபோகி
யொவ்விலதிவண்மலயொர்த்தகழிமண்ணி
லவ்வகைமுடிப்பதெனவங்கவரறைந்தார்

(இ-ள்.) இப்படி மனதிலேயெண்ணி என்னாசிருக்கிறவேளையிலே எந்தவிடத்திலே இந்தக்கடுக்கனும் முருகுங்காப்பும் பறித்துக்கொள்ளுகிறதெ ன்று ஒருபோகிசொல்ல இவ்விடத்திலே சரிப்படாது உயர்ந்தமலட்டாற்று மணலிலே அந்தவேலைசெய்கிறதென்று மற்றபோகிகள் சொன்னார்கள்.—எ-று.

அன்னவனுரைத்தமொழியையனறிவுற்றே
முன்னெனதுநற்பணிமுயன்றிடுதியென்றே

சொன்னவனைப்பது துடைக்கநீனைவாறே
வென்னவகைசெய்யினவனில்லதலவென்றான்.

(இ-ள்.) அவர்கள் சொன்ன வார்த்தையைக்கேட்டு என்னையறுனா அநந்தநாதனறிந்து முன்பு என் திருப்பணிவிடை நீசெய்வாயென்றுசொன்ன பரவாசுதேவருண்டாக்கினதையழிக்க நினையாமேயல்லது எந்தவிதஞ்செய்தா லுமவனையல்லாமல் வேறில்லையென்று நியானித்தான்.—எ-று. (௮௧)

எங்குமவனென்றுதிசையெட்டையறிஞான்று
தங்குருளாககரிசத்திரமடுத்தா
ரிங்கெனதுஊரிவனிருட்பவிடுமென்னச்
சங்கையறுபாவியர்சடுக்கெனநடந்தார்.

(இ-ள்.) பின்னையுமெங்கு நிறைந்திருக்கின்றவன் அந்தமாதவனையல் லாமல் வேறேயில்லையென்று எட்டுத்திசையும் பார்க்கிறபோது தானிருக்குங்கு ளத்தீர் சத்திரத்திற்கருகேவந்தார்கள்; இதுதா[illegible]ன்னூர்? இங்கேயிறங்குகிறே ன் விட்டுவிடுங்களென்று என்னையு[illegible]கே[illegible]கயில்லாதபாவிகளாகிய அந் தப்போகிகள் சடுக்கென்றுநடந்தார்கள்[illegible]பாயிருந்[illegible]ன்னையன் (௮௨)

வாடிநடைகண்டவுட[illegible]திசைகுதிப்பக்
கூடியவர்சூழ்தரக்குளக்கரையிருக்கு
நாடுபுகழ்சத்திரநயந்தவயிராகி
யோடிவரவேண்டுமெனவோசையொடுகூவ.

(இ-ள்.) அவர்கள் நடக்கிறதைக் கண்டவுடனே மனம்வாடி பூமியி லேகுதிக்க அந்த போகியர்கள் கும்பலாகச்சூழ்ந்துக்கொள்ள அந்தவேளையிலே அனந்தநாதன் குளக்கரையிலேயிருக்கும் இந்தப்பூமிபுகழும் சத்திரத்திலிருக் கும் வயிராகியையோடிவாவென்று சத்தமாய்க்கூவும்வேளையிலே.—எ-று. (௮௩)

குஞ்சரமழைக்கவருகோறுயிரளிக்கு
நெஞ்சொடுபெருந்தடிகிறுத்திபுயமீதே
விஞ்சுவயிராகியெனவேடமொடுதோன்ற
வஞ்சிமிகநெஞ்சமவாப்பொழுதகன்றார்

(இ-ள்.) அந்தவேளையிலே கஜேந்திரன்முன்னே ஆதிமூலமென்று கூப் பிட்டபோது வந்தபரவாசுதேவன் உயிர்கொடுக்குங் கருத்துடனே வொருபெ ரியதடியைத் தோளிலேவைத்துக்கொண்டு புகழ்பெற்ற அச்சத்திரத்திலிருக் கும் வயிராகியைப்போலே திருவுருவங்கொண்டு வரக்கண்டுமிகவும் மனத்தி லேபயமுண்டாகி அந்தப்போகிகளோடிப்போனார்கள்.—எ-று. (௮௪)



வந்தவயிராகிமவுனத்தொடுவளைத்தே
சுந்தரமிருந்தலவசுற்றியெதிர்நிற்ப
வெந்தமருளாளனரியென்றுணர்கிலாம
லந்தமறுகோபமொடதட்டிவசைகூறும்.

(இ-ள்.) அப்படிவந்த வயிராகிவாய்பேசாமல் அனந்தநாதனை ஒருசுற்று சுற்றிவந்து மிகுதியான அழகுபொருந்த எதிரேநிற்க வென்னைக்கிருபையுட னே யாண்டவன் சீநிவாசமூர்த்தியென்று தெரியாமல் மிகுந்தகோபத்துடனே சத்திரத்திலிருக்கும் வயிராகியென்று நினைத்து அதட்டி வசையானசொற்க ளைச்சொல்லுவான்.—எ-று. (௮௫)

கூலியுனைநான்லவுகொண்டலறுபோது
நீவருதலின்றியிதுநேரமெதுசெய்தாய்
பாவியசடானதுபயந்துமிகவுந்தன்
சீவனமிழ்தென்றுகவிக்கனைபுரிந்தே

(இ-ள்.) உன்னைக்கூலி நாளைவுகொண்டு அழைக்கிறவேளையிலே நீ வராமலித்தேரமென்னசெய்தாய் பாவி நீ யசடாயிருந்தெதென்றல் மிக வும் பயந்து சீவனையமுதமென்[illegible] நினைத்திருந்தாருமென்று பின்னை யுஞ்சொல்வான்.—எ-று. (௮௬)

சத்திரமிருந்திலசாதயினைத்தான
வத்திரமளித்துவழிவந்தவனையன்பாய்ச்
சித்தமொடுபோடணைசெயுந்தகைபுரிந்தாற்
குத்திரமனத்துரியகொள்கையிலையுற்றாய்.

(இ-ள்.) உன்னை எங்கள் சத்திரத்திலே வைத்து நல்ல சாதமும் இனி தான வஸ்திரமுங்கொடுத்து இந்தவழியாய்வருகிறவனையன்பான மனத்து டனே போஷணைசெய்யும்படியாய் உன்னைவைத்திருந்தால் அதைவிட்டு வஞ் சக நெஞ்சைப்பொருந்தி இப்படியிருந்தாயென்று சொன்னான்.—எ-று. (௮௭)

இப்படிபுகன்றபொழுதின்பவயிராகி
யப்பனுருவாய்மறையவண்ணலெனவுன்னி
மெய்ப்பரமனீயனுகுவேடமறியாமற்
செப்பியமொழிக்கினிதுசெய்தியருளாளா.

(இ-ள்.) இப்படி சொல்லுகிறவேளையிலே இன்பமான வயிராகிரூபமா ய்வந்த சீநிவாசமூர்த்தி அருவமாய்மறைய, அப்போது வைகுந்தநாதனென்று நினைத்து என்னையன் சொல்லுகிறான்; மெய்ப்பரனே அருளாளனே நீவந்த திரு வுருவமறியாமல் நான் சொன்ன வார்த்தைக்கு நன்மைசெய்வாயென்று பின் னுஞ் சொல்லுவான்.—எ-று. (௮௮)

புங்கமிகுஞானபரிபூரணமுராரி
யெங்கனுமயிர்முனையிருப்பவிடமின்றிச்
சங்கையறவெள்ளினுறுதயிலமெனநின்றாய்
மங்கலமிலங்குதிருவண்டுளபமாலே.

(இ-ள்.) உயர்ச்சிபெற்ற மிகுந்த ஞானபரிபூரண முராரியே! எங்கு மயிர் முனையிருக்கவு மிடமில்லாமற் களங்கமற எள்ளுக்குளெண்ணெய்போல நிறைந்துள்ளவனே அநந்தகல்யாணகுணனே திருத்துளபமாலையை யணிந்தவனே யென்று பின்னுந் தோத்திரஞ்செய்வான்.—எ-று. (௮௯)

நாலுமறைதேடவரிதானதிருநாதா
கோலவடியார்களெதிர்கூடுமருட்குன்றே
நீலமுகிலேபெருமைநிபெரநேமி
தாலமதிலென்னையினிதாளவரிதாயே.

(இ-ள்.) நான்குவேதமுந் தேடித்தேடித் தெரிய அரிதாகிய பெரிய பிராட்டிக்கு நாதனே அழகுள்ள அடியார்களெதிரே விளையாடும் கிருபைக்குன்றே நீலமேகமே பெருமைமிகுந்த பராபரனே சக்கராயுதனே இந்தப்பூமியிலே என்னை இனிமையுடனே யென்னையாளவந்த தாயானவனே யென்று பின்னுந் தோத்திரஞ்செய்வான்.—எ-று. (௯௦)

ஆதிபரஞானவமுதானவிறையேயென்
மாதுயரகற்றவருமன்னவமணிப்பொற்
சோதிநிலவேயுனதுதொன்மையறிவாரார்
நாதவடிவேயெனநடித்துளமகிழ்ந்தான்.

(இ-ள்.) ஆதியாகிய பரமஞான வமுதவடிவமான இறையவனே! என்னுடைய மகத்தாகிய துயரத்தை நீக்கவந்த மன்னவனே! தங்கத்திலிழைத்த இரத்தினம்போன் சோதிப்பிரகாசமுள்ளவனே உன்னுடைய பழமையான திருவிளையாட்டை யறிகிறவார்கள், நாதசொரூபமேயென்று ஆனந்தநடனஞ்செய்து மனமகிழ்ந்தான்.—எ-று. (௯௧)

அச்சுதனையேதொழுதரும்புனலருந்தி
யிச்சையொடுசந்திரமியையந்ததலநண்ணி
மெச்சுவயிராகியைவிருப்பொடுமழைப்ப
வச்சமொடுவந்துருவமிந்திதுபுகன்றான்.

(இ-ள்.) இப்படி யனேகவிதமாய் அச்சுதானந்தனைப்பணிந்து கொண்டாடி யங்கிருந்த தடாகத்திலே சலந் தாகத்துக்கருந்தி ஆசையுடனே சந்திரமிருக்குமிடத்திலவந்து யாவருமெச்சும் வயிராகியை யன்புடனேயழைக்க, அவன் பயத்துடனேவந்து அனந்தநாதனென்று அறிந்துசொல்லுவான்.—எ-று.



வந்திவணடைந்தவிதமென்னெனவழங்க
வந்தவயிராகிமுதலங்குறைவோரெல்லாஞ்
சந்தடியறிந்துபயசஞ்சலமதாலே
யெந்தநரரோவெனவிருந்தனமியைந்தே.

(இ-ள்.) இவ்விடத்திற் கிந்தவேளையிலேவந்த வயணமென்னவென்று கேட்க, நடந்த விருத்தாந்தமெல்லாம் என்னையன் சொல்லக்கேட்டு அந்த வயிராகிமுதலான அங்கிருந்தவரெல்லா மிங்கே நடந்த சந்தடியறிந்து பயமின சஞ்சலத்தினாலே எந்த மனுஷரோ யாரோவென்று எண்ணிக்கொண்டிருந்தோமென்று பின்னுஞ்சொல்லுகிறார்கள்.—எ-று. (௯௩)

நீயெனவறிந்திலேயெனவோத
வாயபொழுதேயவரொட்புரியிலேயன்
பாயமுதுகொண்டினியபண்பனுறவென்னற்
போயபகல்வேகமொடுபொற்பு—றலிக்கான்

(இ-ள்.) எங்களுக்கு மிகுந்த நேசமானவனே நீயென்று தெரிந்திலமே யென்று அவர்கள் சொல்ல, அப்போதுதானே யவர்களை கூட்டிக்கொண்டு குளத்துருக்குப்போய் அன்புடனே அமுதுண்டு இனிமையான குணமுள்ளவிருக்க, நேற்றுப்போய் மறைந்த சூரியன் வேகமுடனே அழகா யுதையமானான்.—எ-று. (௯௪)

பானுவுமுதித்திடபரிந்தவனெழுந்தே
நான்முதனேமவிதிநன்றதுபுரிந்து
தேனுலவுசோலையணிதென்குழளமேவி
யானவனுபோகமொடுகண்புடனமர்ந்தான்.

(இ-ள்.) அப்போது சூரியனுதயமாக அன்புடனே எழுந்திருந்து ஸ்நானமுதலிய நியமவிதிகளை முடித்துக்கொண்டு [illegible] சோலைசூழுங் குளாபுரிக்குவந்து ஞானபோகங்களுக்கிடமான எண்ணியன் அமர்ந்திருந்தான்.—எ-று. (௯௫)

ஏதமறவில்வுழியிருந்தவெழில்கன்னி
மாதமனுகத்திருமலைக்கதிபனான
நாதனடிகண்டுதொழநண்பரொடுகூடிச்
சோதிமலர்மங்கையுறைதொன்னகரடைந்தான்.

(இ-ள்.) குற்றமற்ற அந்தவிடத்திலே இருக்கிறகாலத்திலே அழகான மாசிமாதம்வர திருமலைக்கதிபனாகிய சீநிவாசக்கடவுளினுடைய பாதத்தைக் கண்டுபணிய அனந்தநாதன் சினேகரோடுங் கூடிக்கொண்டு பிரகாசம் நிறைந்த அலர்மேலுமங்கை பாதத்தைச் சேர்ந்தான்.—எ-று. (௯௬)

அம்பவளவாய்மயிலினைத்தொழுததன்பிற்
செம்பதுமபுட்கரணிதென்கரைகுணக்கி
னும்பரணிமாடமதிதொண்டெருக்குறட்டிற்
கும்பலினொடுநின்துயில்கொளும்பொழுதினம்மா.

(இ-ள்.) அந்த அலர்மேலுமங்கை புரத்துக்குவந்து அழகான பவளம் போன்ற தோகைமயில்போல வடிவமுள்ள பெரியபிராட்டியாரைத்தொழுது அதன்பின்பங்கிலிருக்கும் பதுமசரசாகிய தீர்த்தத்துக்குத் தென்கரையிற் கீழ்த்திசையிலே உயர்ந்த மெத்தைவீட்டினுடைய தெருத்திண்ணையி லனேகங் கும்பலுடனே நித்திரைசெய்யும்போது.—எ-று. (கஎ)

கூலமிசையின்றுயில்கொளத்தகைமையன்றே
யோலமொடிடிந்துவிழுமோதினமெனச்செங்
கோலவிழியண்ணலிதுகூறவளரன்ப
னேலவறிவுற்றுடனெழுந்திவையிசைப்பான்.

(இ-ள்.) அப்படி நித்திரைசெய்யும்போது இந்தத்தெருத்திண்ணையின் மீதிலே நித்திரைசெய்யத்தகாது; இது சத்தத்துடனே இப்போது இடிந்துவிழப்போகிறது இது சொன்னோமென்று செந்தாமரைபோல அழகுமிகுந்த கண்ணையுடைய சீனிவாசக்கடவுள் சொல்லக்கேட்டு வளர்ச்சியான அன்பனை அனந்தாதன்றிந்தவுடனே எழுந்திருந்து இதை யங்கிருக்கிறவர்களுடன் சொல்வான்.—எ-று. (க

இம்மனையிடிந்துவிழுமிவ்வயினிருப்ப
தம்மகலனன்றெனவுரைந்தமொழிகேளா
தெம்மையகல்வித்தினிதிருப்பமனமெண்ணி
சும்மவிதுவென்றுவினைசூழ்பவருரைத்தார்.

(இ-ள்.) இ...இடிந்துவிழு... இவ்விடத்திலிருக்கிறது நலமல்ல... அங்கிருக்கிறவர்கள் கேளாமல் எங்களைப் பயங்காட்டிச்சொல்லி தாங்களிருக்க மனத்திலெண்ணிப் பொய் சொல்லுகிறு சொல்லி இனிமேல் வரப்பட்டு வினைசூழ்ந்தவர் அங்கேதானே இ... கள்.—எ-று.

உரைத்தமொழிதன்னையிவருட்கொளிலரன்னே
யருந்தமிதுபின்தெரியலாகுமெனவத்திண்
டெருத்திணையொழிந்தருகுசேருமவரோடங்
கிருப்பவுருமொன்றெனவிடிந்ததுவிழுந்து.

(இ-ள்.) மறுபடி நாம் சொன்ன சொல்லை இவர்கள் உட்கொள்ளாமலேயே இந்தவார்த்தை பின்னாலே தெரியலாகுமென்று அந்தப்பெரிய தெரு



39-பக்கம்- கஎ-பாட்டு-3-வது-அனந்தநாதசுவாமிகள்அலர்மேல்மங்காபுறம்வடமேயிடிந்துவிழுந்தது



103-பக்கம்



104-பக்கம்

ணையைவிட்டு அப்பாலே தன்னேசருடனே கூடிக்கொண்டு போயிருக்க அந்தவேளையிலே இடிவிழுந்ததுபோல் அந்த வீடிடிந்து விழுந்தது.—எ-று. (௪00)

அந்தவொலிகேட்டவணடைந்தவரவ்வளவிற்
றெருந்தமுளதன்னகரிசூழ்பவருடன்சொற்
குந்தமதமாசகடுகுண்டைமுதலெல்லாம்
புந்திதிகில்கொண்டுபுடைபோள்ளௌவகன்ற.

(இ-ள்.) அந்தவீடிடிந்து விழுந்த சத்தத்தைக்கேட்டு அங்கிருந்தவரும் அந்த வீட்டிலுள்ளவரும் அந்த ஊரிலேயுள்ளவரும் திருமலைக்குப்போகிற சனங்களுங் குதிரை யானை வண்டி எருது முதலானவையெல்லா மனம் திடுக்கிட்டு ஊருக்குப்புறத்திலே கூவிக்கொண்டு ஓடிப்போயின.—எ-று. ௪0௧

அன்னபயமுற்றசனரப்புறமடைந்தே
யென்னபுதுமைச்செயலிதென்றுணரவவ்விற்
பின்னமுறுகாலைவருபேரொலியெனச்தென்
றுன்னவதிலுற்றவருடற்குணமுரைப்பாம்.

(இ-ள்.) அப்படி பயந்தோடின சனங்கள் அப்பாலேயிருந்துகொண்டு இந்தச்சத்தம் என்னபுதுமையென்று ஆளைவிட்டுச்சோதிக்க அந்த வீடிடிந்தவேளையிலேயுண்டான பெருஞ்சத்தமென்றறிந்து அவ்விடத்துக்குவந்து பார்க்கும்போது அதிலிருந்தவர்கள் சரீரமிருந்த குணத்தைச் சொல்லுவாம்.—எ-று. ()

சரணமுறிவோரொயிறுதண்குடல்சரிந்தே
குருதிபொழியோர்முறையங்கூவியழுவோருஞ்
சிரமுடையவெம்மறலிசேனைபுடைசூழப்
பெரியமனையுள்வெளிபிணங்குலவினின்ற.

(இ-ள்) காலொடிந்தவரும், பல்லுடைந்தவருங், குடர்சரிந்தவரும், உதிரம்பெருக அபையமபயமென்று கூவியழுகிறவருந், தலையுடைந்தவரும், உயிர்போனவர்களுமாக இயமன்சேனைசூழ்ந்துநிற்க அந்த பெரியவீட்டிற்கு உள்ளும் வெளியும் பிணம் நிறைந்திருந்தன.—எ-று. (௪0௩)

இன்னவகைகண்டவணிருந்தவர்களெல்லா
முன்னமிவர்சொன்னமொழிகூறுமுணராமற்
[illegible]வெனவுணர்ந்தெதென்றதெனவையன்
றன்னையுறுவோர்தொழுதுசாலவுரைசெய்வார்.

(இ-ள்.) இந்த அதிசயத்தைக்கண்டு அங்கிருந்தவர்களெல்லா முன்னமே இவர்சொன்ன பேச்சைக்கேளாமற் பொய்யென்றெண்ணியிப்படிவந்ததென்று சொல்ல எனதன்னுடனேவந்த நண்பர்பணிந்து தோத்திரஞ்செய்து பின்னுஞ்சொல்லுவார்கள்.—எ-று. (௪0௪)

எங்களுயிரிவ்வுலகிருப்பவருள்செய்த
புங்கவனெனத்தொழுதுபோற்றவலரிப்பான்
மங்கைபுரம்விட்டுதிருமாமலையடுத்தே
செங்கமலைநாதனிருசேவடிபணிந்தே.

(இ-ள்.) எங்களுயிர் இந்தவுலகத்திலிருக்கும்படியாய்க் கிருபைசெய்த உயர்ச்சியுடையவனேயென்றுதொழுது அவர்கள் தோத்திரஞ்செய்ய இப்பால் அலர்மேல்மங்கைபுரம்விட்டுத் திருவேங்கடத்திற்குப்போய்ப் பெரியபிராட்டி நாயகளுகிய சீநிவாசமூர்த்தியினுடைய திருவடியையுந் தொழுதான்—எ-று. ()

புங்கமொடுதென்பதிபுகுந்துவளர்காலை
மங்கலமிலங்குமறுவச்சரமடுப்பக்
கொங்குலவுசோலைவடகுன்றனுறுமின்பர்க்
கங்கருணைநாதனடியன்பொடுபணிந்தான்.

(இ-ள்.) அப்படி தரிசனஞ்செய்து வுயர்ச்சியாகத்தானிருக்குங் குரு புரிக்குவந்திருக்கிறகாலத்திலே மங்களப்பிரகாசமாக மறுவருஷம்வர மரந் தப்பொடியுள்ள பூஞ்சோலைசூழுந்திருக்குந் திருவேங்கடத்துக்குப்போய் அன் பர்களுக்கழகான கிருபையுள்ள சீநிவாசமூர்த்தி பாதத்தை தரிசனஞ்செய்து அன்புடனேபணிந்தான்.—எ-று. (கoசு)

சேவடிபணிந்துபதிசெல்லவருகாலை
யாவணமதிற்சிலவருச்சனைசொரூப
மேவலறிந்தோருருவிலையளித்துக்கைக்கொண்
டாவலொடுவந்ததற்காராதனையமைத்தான்.

(இ-ள்.) சீநிவாசதேவனது சிவந்ததிருவடிகளை தெரிசனஞ்செய்து ப ணிந்து தன்னூருக்குவரும்பொழுது கடைத்தெருவிலே யாராதனைசெய்யும் விக்கிரகங்கள் இருக்கிற சிலவற்றையறிந்து ஒருவிக்கிரகத்தை விலைகொடுத் துவாங்கிக்கொண்டு சந்தோஷமாகத் தன்னூருக்குவந்து அதற்காராதனைசெ ய்தான்.—எ-று. (கoஎ)

இவ்வுருவாராதனையியற்றலதுமின்றை
திவ்வியகல்வடிவுளதுசெப்புவமெனச்செக்
கொவ்வையிதழிந்துமுகக்கோதைமறுமார்ப
னவ்வகையுரைபபனெனநண்ணியிவையென்னும்.

(இ-ள்.) அப்படியாராதனைசெய்து வருகிறகாலத்திலே யிந்தவுருவை நீயாராதனைசெய்யவேண்டாம் பின்னாலே ஒரு திவ்விய சொரூபமிருக்கிறது நாம் அது சொல்லுவோமென்று சிவந்தகோவைக்கனிபோன்ற இதழுஞ் சந் திரன்போன்ற முகமுமுள்ள இலட்சுமியைப்போலே மார்பிலேயொருமச்சம்



பெற்றிருக்குஞ் சீநிவாசக்கடவுளப்படிசொல்ல என்னையன் யோசனைசெய்து சொல்லுவான்.—எ-று. (கoஅ)

என்செயலுமுன்னையலதில்லெனவொரையன்
தன்கையினிலவ்வுருவுதானமதளித்தே
யொன்பதுமதிச்செலளவுற்றதவமின்றிப்
பின்புரிவதேதெனப்பெருங்குணனிருந்தான்.

(இ-ள்) என் செயல் உன்னையல்லாமல் வேறில்லையென்று நினைத்து ஒரு பிராமணன்கையிலே யிந்தவிக்கிரகத்தைத் தானமாகக்கொடுத்துவிட்டு ஒன்பது மாதவரைக்கும் பூசை நியமவிதி யில்லாமல் யினிமேற் செய்யவே ண்டிய தென்ன வென்று பெரிதான பண்புள்ளவனுகிய என்னைய னிருந் தான்.—எ-று. (கoகூ)

கேசரிமுதிச்செலகிரிக்கணுகிமாயன்
வாசமலரஞ்சரண்வழுத்திதெரிசித்தே
யாண்சயுளமேவருணமாண்டொறுமிணங்கிப்
பேசும்வயிராகிமனைபெட்பிறெடுபுக்கான்.

(இ-ள்.) அப்படியிருக்க மறுமருஷம் ஆவணிமாதம்வர வடமலைக்குப் போய் மாயவனது வாசனையான மலர்போன்ற பாதத்தைத் தரிசித்துத் தோ த்திரித்து ஆசை மனத்துப்பொருந்த முன் வருஷங்கள்தோறும் வழக்கமாக வந்திருக்கும் ஒரு பயிராகி மடத்துக்குப் பெருமையுடனே போயிருந்தான் என்னையன்.—எ-று. (ககo)

வந்தபதமுன்னருண்மயக்கமுறக்காதிற்
சுந்தரமிலங்குமணியார்சோதிக்கடுக்கன்
சந்தபட்டஞ்சிதனிப்பாதரேணுவபையக்
தந்தகாவச்சினணிசந்தனம்பல்காரம்.

(இ-ள்.) அப்படி வந்திருக்கிறவேளையிலே முன்வரும் அருள்மயக்கந் தோன்ற காதில் அழகான இரத்தினமிழைத்த சங்குசக்கரக் கடுக்கனுஞ் சுந் தரமான இடையிலே பட்டஞ்சியுடையும் உத்தரீகமுந் தரித்துக்கொண்டு ஸ்ரீபாதரேணுவும், அபயஸ்தமும், பலகாரமும், இவைமுதலானவையும். (ககக)

இந்தவிகையங்கைகொடுமெங்கடிருநாதன்
அந்தமிலச்சக்கிதியினருச்சகனையொப்ப
வந்தெனதுதந்தையொடுவண்மையையுரைப்பான்
விந்தைமறையோனொருவன்விட்டுனுமதத்தோன்.

(இ-ள்.) இந்தவிதங்களைக் கையிலே எடுத்துக்கொண்டுபோய் பிரா ட்டிநாதனை சீநிவாசநாதன் அந்தத்திருக்கோவில் அருச்சகனைப்போலேவர்

து என்னையனுடனே வண்மையாக வொருகதை சொல்லுவான் அழகுபொ ருந்திய பிராமண னொருவன் வைஷ்ணவனென்று பின்னுஞ்சொல்லுவான் ()

அன்னவன்குலத்துளாருச்சனைபுரிந்த
தொன்மைசீநிவாசனெனத்தோன்றியசொரூபம்
பன்மறையதன்செயல்பகரவரிதம்மா
நன்மையின்றிப்பூசைகணடத்துவனசெவ்வி

(இ-ள்.) அந்தபிராமணன் குலத்துப் பெரியவான்வீட்டிலே அருச்ச னைசெய்துகொண்டுவந்த பழமையான சீநிவாசமூர்த்தியென்று ஒரு சொரூ பமுண்டு அதன் பெருமையை வேதத்தினாலேயும் பன்னிச்சொல்ல அரிதா யிருக்கும், அதை அந்தப்பிராமணன் நன்மையில்லாமற் பூசைநடத்திக்கொண் டுவருகிறகாலத்தில்.—எ-று. (௧௧௩)

நாடிவந்துகண்டிவணலம்பெறவிளங்கும்
பாடிசெலவுன்னியொளிர்பானுமறைபோதில்
வாடலையகற்றுசீநிவாசனைத்திருப்பூங்
கூடையிற்கச்சாயவர்க்கங்கூடவைத்திருந்தே.

(இ-ள்.) அந்தப்பிராமணன் இந்தத்திருவேங்கடத்தை நாடிவந்து தெ ரிசித்து அவனிருக்கும் ஊருக்குப்போக நினைத்து பிரகாசமான சூரியன் மறை ந்த இராத்திரிகாலத்திலே வாட்டமகற்றும் அந்தச் சீநிவாசமூர்த்தியை திருப் பூக்கூடையிலே கச்சாயவர்க்கத்துடன் கூடவைத்திருந்தான்.—எ-று. (௧௧௪)

நித்திரைபுரிந்தனனன்னேரமதிலாகங்
குத்தமகச்சாயவகையுள்ளுறுதலாலே
யத்திருப்பூங்கூடைதனடியினிற்கடித்தே
சித்தமொடருந்திபுழைசெய்தகன்றதம்மா.

(இ-ள்.) அப்படிவைத்துக்கொண்டு நித்திரைசெய்கிறவேளையிலே எலி வந்து உத்தமமான கச்சாயவர்க்கம் உள்ளேயிருக்கிறபடியினாலே அந்தத்திருப்பூக் கூடையை அடியிலே கடித்துச்சந்தோஷமாய்ப் பலகாரத்தைப்புசித்துத் துவா ரஞ்செய்து போய்விட்டது.—எ-று. (௧௧௫)

கோகநகைபின்புறங்கொழுநன்வருமுன்னைப்
போகமுதவுங்கடவுள்புட்கரணியாடப்
போகியங்கிருந்தமுன்னெலிப்புழைக்கூடாலே
வாகுளநீரிற்சீநிவாசனெழுந்தாற்றான்.

(இ-ள்.) அப்படிபோனது இந்தப்பிராமணனுக்குத் தெரியாமல் தாமரை மலருக்கு இன்பமுள்ளநாயகனான சூரியனுதயத்திற்கு முன்னமேயெழுந்திருந் து போகத்தைக்கொடுக்குஞ் சுவாமிபுஷ்கரணியிலே ஸ்நானஞ்செய்யப்போ னான் அந்தத் திருப்பூக்கூடையைப்படியிலேவைக்க முன்னெலிசெய்த துவாரத் தினாலே அழகானசலத்திலே சீநிவாசமூர்த்தியெழுந்தருளினார்.—எ-று. (௧௧௬)



அந்தவகைகண்டிலனவ்வையனெழின்மாயன்
சுந்தரப்பொற்சந்நிதியைத்தொழுதடுத்து
வந்தவரொடும்பவனவண்சிகரியெய்தி
சிந்தையினினைந்தமிழ்துசெய்வமெனநின்றான்.

(இ-ள்.) அப்படிசலத்திலே சீநிவாசதேவனெழுந்தருளினதுதெரியாமல் அந்தப்பிராமணன் திருப்பூக்கூடையை யெடுத்துக்கொண்டு திருவேங்கடமு டையானுடைய அழகான சந்நிதியைத்தொழுது தன்னைவந்தவருடனே கூடிக் கொண்டு காலிகோபுரத்துக்குவந்து சந்தோஷமாக அமுதுசெய்ய அவ்விடத்தி லிறங்கினான்.—எ-று. (௧௧௭)

வேதியர்களியாவருமிருந்தவருட்பூசை
கோதறவியற்றவிவன்கூடையைத்திறப்ப
நாதனைக்கண்ணுற்றிலன்முன்னண்ணுமிடமெல்லாஞ்
சோதனைசெய்தாலயந்தொழுதுவந்துநின்றான்.

(இ-ள்.) அப்படி கூடிவந்த பிராமணர்கள் யாவருமிருந்த ஆராதனை யைக்குற்றமறச் செய்திருக்கிறபோது இவன் திருப்பூக்கூடையைத் திறந்துபா ர்க்கச் சீநிவாசப்பிரானைக்காணாமல் முன்னிருந்தவிடமெல்லாஞ் சோதித்து ஆல யத்துக்குவந்து தொழுதுநின்றான்.—எ-று. (௧௧௮)

சிரானனமறைத்துபடுத்தேயெழுந்துபோய்ப்பின்
புராதனவருச்சனைபுரிந்தனையினித்தென்
றராதலம்புகழவருதன்மைமிகுசாலக்
கிராமபூசைசெய்யெனக்கிளத்தினனெம்மாயன்.

(இ-ள்.) அப்படி தொழுது படுத்தவன் தலையையு முகத்தையுமறைத் துக் கொண்டு சற்றுநேரமிருந்து மறுபடியெழுந்திருந்துபோய் முன்னாலே சீநி வாசனை யாராதனை செய்தனையே, இனிமேல் இந்தப் பூமியெல்லாம் புகழுந்தன் மையான சாலக்கிராமத்தைப் பூசைசெய்யென்று சொன்னார் பெருமாளென்று கூடவந்தவர்களுடனே இந்தப்பொய்யைச்சொன்னான்.—எ-று. (௧௧௯)

என்றுபலர்மெச்சிடவியம்பியுறையூரிற்
சென்றனனவன்[illegible]திருக்கனைவோதி
நன்றுலவுசீடர்கணயந்துமனைசென்று
லன்றுளதுபூசைசெயும்வசனடனேமட்.

(இ-ள்.) இந்தப்படி பலபெயரு மெச்சச்சொல்லித் தானிருக்கு மூர்க் குப்போனான் அவனிடத்திற் குற்றமென்னவென்று கேட்டால் நன்மையான

சேஷர்கள் தன்வீட்டுக்குவந்தால் அன்றைக்கு அந்தவிக்கிரகத்துக்குச் சிறிது பூசை செய்வான் மற்றவேளையில் பூசை செய்யான் அந்த அசட்டையமயிப்படி.—எ-று. (௧௨௦)

அவ்வுருவாகனெதிரன்புறுகற்றீர்த்தத்
திவ்வியமண்டபத்தடிசேர்படியின்மார்ப
மெவ்வளவவ்வளவீரிலெலுஞ்சலநின்றுன்
செவ்வியினூராதனஞ்செய்துவருகென்றான்.

(இ-ள்.) பின்னுஞ்சொல்லுவார் அந்த சீனிவாசமூர்த்தி ஆதிவராகசுவாமி சந்நிதிக்கெதிரே அன்பான நல்ல சுவாமி புஷ்கரணியில் தீர்த்தமண்டபத்துப் படியில் மார்பளவு சலத்திலே களங்கமற வெழுந்தருளியிருக்கிறார் அதை அழகாயெடுத்துப் பூசைசெய்துகொண்டுவாவென்றருளினர்.—எ-று. (௧௨௧)

அன்னமொழியைச்செவியினமுதமெனவுற்றே
யென்னசெயலென்றெழுந்திறைஞ்சியவன்சென்று
தொன்மையுறிவிக்குமலர்தோய்ந்துலவுகாலே
மன்னுகருப்பூரசினிவாசனையறிந்தான்.

(இ-ள்.) அந்தவார்த்தையைக்காதிற்கு அமுதம்போலே கேட்டுஇதென்ன ஆச்சரியமென்றெழுந்திருந்து தெண்டன்சமர்ப்பித்து அந்தத்தீர்த்தத்துக்குப்போய் பூர்வக்கியானங்களையுந் தெரிவிக்கும் அப்புஷ்கரணியிலே முழுகிப் பார்க்கிறபோது விலைபெற்ற கர்ப்பூர வாசனையுள்ள சீனிவாசக்கடவுளை யென்னவன்கண்டான்.—எ-று. (௧௨௨)

கண்டவுடனேவளர்கருத்துவகைபொங்கி
யண்டர்பணிமெய்ப்பொருளையங்கையினெடுத்துக்
கொண்டுவதனத்திடைகுலாவுவகைசெய்து
மண்புகழவோங்குகுமுளாககர்புகுந்தே.

(இ-ள்.) அப்படி கண்டவுடனே வளர்ச்சியான மனத்திலே சந்தோஷம்பொங்கத் தேவர்களெல்லாம் பணியும் மெய்யாகிய பொருளை அழகிய கையினலெடுத்து முகத்திலொற்றிக்கொண்டு அநேகஸ்தோத்திரஞ் செய்து பூலோகமெல்லாம் புகழ்ந்துகுமுளமென்னு மகத்தாகிய நகரத்துக்கு வந்தான்.—எ-று. ()

இப்படியின்மாதவமியற்றுமடியார்கள்
செப்பரியகான்மறைதெரிந்துவ[illegible]ரேலா
ரொப்பரியபூசைபுரியொண்பொருளைகாயே
னெப்படியாராதனைசெயற்றிடுவலென்றான்.

(இ-ள்.) அப்படி வந்திருந்துகொண்டு இந்தப்பூமியிலே பெரிய தவமிருந்த அடியார்கள் சொல்லுதற்கரிய நாலுவேதமுந்தெரிந்து வளர்ச்சியாகிய சா



ஸ்திரங்களையுமறிந்தவர்கள் ஒப்பற்ற பூசைசெய்யும் இந்த சீனிவாசமூர்த்தியை நாயடியே னெப்படி யாராதிப்பே னென்று பின்னையுஞ் சொல்லுவான்.—எ-று.

சிலவிதிமந்திரசெபந்தவநியான
மேலவழியோடுபுரியின்பமிலனென்றே
கோலமொடுகந்துவருகோனைவெதிர்வைத்தே
சால்விதனைச்சொலிதவிர்த்துருகுகாலே.

(இ-ள்.) ஆசாரம், அர்ச்சனை, விதிமுறை, மந்திரம், செபம், தபம், தியானம் இந்த வழியாகச்செய்ய மன்புமில்லாதவனுனென்று அழுதுபொருந்தச் சந்தோஷத்துடனே தன்னிடத்துக்கெழுந்தருளிவந்த சீனிவாசப்பிரானை யெதிரே வைத்துக்கொண்டு இப்படி அநேக விதமாகச் சொல்லித் துதித்துக்கொண்டிருக்கிறவேளையில்.—எ-று. (௧௨௩)

தேசுலவுமெய்க்கடவுள்சென்றிலையுரைப்பா
னேசமுறுசேடகிரியின்வருவராக
னீசனெனுமென்னைமுன்னெயினன்வளரன்பாய்ப்
பூசனைபுரிந்தரியபுண்ணியமிருந்தான்.

(இ-ள்.) அழகுநிறைந்த மெய்க்கடவுளாகிய சீனிவாசமூர்த்தி யெழுந்தருளிவந்து சொல்லுவார் ஆதிசேஷ நல்ல திருமலையிலிருக்கும் ஆதிவராகசுவாமியாகிய என்னை முன்னாலே வேடன் வளர்ச்சியுள்ள அன்பினாலே பூசைசெய்து இனிமையான மோட்சம் பெற்றானென்று பின்னையுஞ் சொல்லுவான்.

[illegible]கமிருகம்பறவைதொல்லைதிருவானோர்
புங்கவர்தானவர்புகன்றவர்களெல்லாக்
இங்கணதிசென்னியவைத்தவயைவித்தன்
பொங்குதிரைசூழ்புவியிற்பூசனைபுரிந்தார்.

(இ-ள்.) பின்னையு முயர்வுபெற்ற [illegible] பழமையான ரிஷிகள் தேவர்கள் மிருகங்கள் பக்ஷிகள், இராட்சதர் இப்படி சொல்லப்பட்டவர்களெல்லாஞ் சந்திரனையுங் கங்கையையுஞ் சிரத்திலேதரித்திருக்கும் பரமசிவனையுமென்னையுங் குளிர்ச்சியான அலைபொருந்திய சமுத்திரஞ் சூழ்ந்த பூலோகத்திலே [illegible] ஆராதனைசெய்தார்களென்று பின்னுஞ் சொல்லுவான்.—எ-று. (௧௨௪)

அன்னவகையாதுமனனையமதுருமத்
சொன்னபடிசெய்கெனத்தொழுதவர்களைப்போ
லன்னெறியிலெனைகடக்குமவகைகாமே
பன்னவதிகிலையைப்பசார்த்தவண்மறைந்தான்.

(இ-ள்.) அனபடியினாலே இறைவன் நீ மனத்திலே சந்தேகப்படாமல் நான் சொன்னபடி யாராதித்துவாவென்று அன்பாய்ச்சொல்ல என்னையன்றோ

ல்லுவான் அவர்களைப்போலே பந்தியும் விவேகமு மெனக்குப் போதாதென்று சொல்ல அவைகள் செவ்வையாய் நடக்கும்படி நாமேயுனக்கு அறிவிப்போமென்று சொல்லி அந்தவிடத்திலே அநுபமானூர் சீநிவாசக்கடவுள்.-எ-று.

பன்முறைபுகழ்ந்தவன்பகருமொழிகேளா
வுன்செயலறிந்திலனென்றுன்னியெனதைய
னன்புடன்மலர்த்துளபநாளமநுகொண்டே
யன்புவளருள்ளமொடருச்சனைபுரிந்தான்.

(இ-ள்.) இப்படிப் பலவிதமாக, வேதசாஸ்திரம் புகழுஞ் சீநிவாசக் கடவுளருளிச்செய்த வார்த்தையைக்கேட்டு உன்செயலெப்படியோ தெரியாதென்று நினைத்து என்னையன் நல்லசலமும் புஷ்பமுந் திருத்துழாயுங் கஸ்தூரியுங் கொண்டு அன்புமிகுந்த மனத்துடனே ஆராதனை செய்துகொண்டு வந்தான்.—எ-று. (கஉகூ)

இப்பெரியபூசனையியற்றிவருகாலை
மெய்ப்பரமனுடலின்விதந்தெரிகருத்தோர்
வெப்பவினைவிட்டகலமெல்லடிபணிந்தார்க்
கப்பெரியதீமையையறுத்தினிதளித்தான்.

(இ-ள்.) இப்படிப் பெருமையான ஆராதனைசெய்துகொண்டு வருகிற நாளையிலே மெய்ப்பரமனாகிய சீநிவாசமூர்த்தி திருவிளையாடலின் விதத்தையறிந்த மனமுள்ளவர்களாய்க் கொடிதாகிய வினைகள் நீரும்படி வந்து மேன்மையானபாதத்திற் பணிந்தவர்கள் பெரியதீமைகளை யெல்லாமறுத்து இனிமையான கடாட்சஞ்செய்து கொண்டு வந்தான்.—எ-று. (கஙO)

இன்னவகைமாயனருளெய்திவளரன்பன்
றன்னையுலகத்துநெறிதாழ்வறநடப்ப
முன்னொருமணச்செயன்மொழிந்தநுமுடித்தோன்
பின்னுமொருமாமணம்பெறவருள்புரிந்தான்.

(இ-ள்) இந்தப்படிக்கு சீநிவாசக்கடவுள் கடாட்சஞ்செய்து வளர்ச்சியான தன்னன்பனுக்கு உலகமுறை தாழ்வில்லாமல் நடக்க முன்னாலேயொருவிவாகஞ் செய்துகொள்ளச்சொல்லி அதற்குக் கிருபைசெய்தவன் மறுபடியுமொருகலியாணஞ் செய்துகொள்ளும்படியாய்க் கிருபைசெய்தான்.—எ-று.()

முந்தியொருபெண்மணமுடித்ததுவுமல்லா
லெந்தவிதம்பின்வதுவையிசனைமைவித்தான்
றெந்தொமெனவென்றுவளர்தொல்லறிஞரொல்லா
மந்தவகைதன்னையறிவித்திடுமினென்றார்.

(இ-ள்.) அப்படிச் சொல்லக்கேட்டு திருமாலடியார்கள் சொல்லுகிறார்கள் முன்னேயொருபெண்ணைக்கலியாணஞ் செய்துகொண்டது மல்லாமல்



எந்தவிதமாக மறுபடியுமொரு விவாகஞ்செய்ய சீநிவாசமூர்த்தி கிருபைசெய்தார், அப்படி தொந்தார்த்தமாகச்செய்யவேண்டியதென்னவென்று வளர்ச்சியான அறிவுள்ளவர்களெல்லோரும் அந்தவகைகளை யெங்களுக்கு நன்றாய்ச் சொல்லவேண்டுமென்று கேட்டார்கள்.—எ-று. (கஙஉ)

நாரணன்றொழும்பர்களையந்தினிதியம்ப
வாரணனளித்தவளரம்புதிவளைந்த
தாரணிபராவணந்தன்றன்னடிதவணைந்தக்
கோரணியெனப்பரவுமின்பனுரைசெய்வான்.

(இ-ள்.) திருமாலடியார்கள் அப்படி சந்தோஷமாகக்கேட்கப் பிரமதேவருண்டாக்கின நீண்ட சமுத்திரம் வளைந்த பூமியெல்லாம் பணியும் அநந்தனாதனுடைய திருவடிகளை மனத்திற்கு அழகான ஆபரணமாகநினைத்துக்கொண்டு பணியும் இன்பனாகிய பரந்தாமன் சொல்லுவான்.—எ-று. (கஙங)

முன்தோற்றமுரைத்தபடலமுற்றிற்று.

ஆக படலம் ௬-க்கு திருவிருத்தம்-௬௭௪.

## திருமணப்படலம்.

செந்திருவருங்குமுளத்தென்பதியிடத்தே
வந்தடிபணிந்தவர்கள்வல்வினையகற்றிச்
சந்தமிலங்குவரந்தந்துறையுளாளிற்
கந்தமலரோனையருள்கண்ணனிலைவெண்ணும்.

(இ-ள்) கேளுங்கள் திருமாலடியார்களே?. மகாலட்சுமிவளர்ந்திருக்குங்குமுளமென்னும் அழகிய தென்திருப்பதியினிடத்திலே வந்து சீநிவாசமூர்த்தி பாதத்தைத்தரிசித்தவர்கள் வல்வினைகளையெல்லாந் தீர்த்து எந்நேரமும் பிரகாசமுள்ள வரங்களைக் கிருபைசெய்துகொண்டு வருகிறகாலத்திலே வாசனைபொருந்திய தாமரையிலே யிருக்கும் பிரமதேவனைப்பெற்ற பரவாசுதேவன் திருவுளத்திலேயெண்ணி நருகாரியஞ்செய்வார்.—எ-று. (க)

இன்னமிவனோர்மனையிசைக்குமணமேவ
முன்னைவிதியாலதுமுடித்தருள்வதென்றே
பன்னகவணைக்கடவுள்பண்புறுமெமண்ணல்
தன்னதிடமுற்றுவருதன்மையுரைசெய்வாம்.

(இ-ள்.) அந்தக்காரியமென்னவென்றால், இன்னமொரு பெண்ணை விவாகம் இந்த அநந்தநாதன் செய்துகொள்ளப் பூர்வத்தொடர்ச்சி யிருக்கிறபடியினாலே அதை முடித்தருளவேண்டுமென்று திருமலைக்கடவுளாகிய சீநிவாசமூர்த்தி

நல்ல குணம்பொருந்திய என்னன்னையிடத்துக்குவந்து மேல் நடக்கிற காரியங்கள் அநுக்கிரகஞ்செய்ததை நான் சொல்லுவேன்.—எ-று. (உ)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

இருவர்மனே யுனக்கென்வேயியம்பியசொற்படிமுன்னேரினிய மாதை, யொருமையுடன் வேட்டனையேயினிதுகுலத்துதித்தரிவை யுளகேரபால, னரியதங்கையிலக்குமியென்னிசைநாமம்பெற்றிருக் குமவளேயன்பாய்த், திருமணஞ்செய்திடென்னவெம்பெருமானிவையு ணர்ந்துசெப்பலுற்றான்.

(இ-ள்.) அப்படி சீனிவாசமூர்த்தி அக்கிநாதனிடத்துக்குவந்து இரண்டு பெண்சாதி உனக்குண்டென்று முன்னே நாமருளிச்செய்தபடி ஒருபெண்ணை ஒருமையுடன் நீ விவாகஞ்செய்துகொண்டனை. இப்போது உன்குலத்திலே தோன்றிய அரிவுள்ள கோபாலனுக்குப் பிரியமான தங்கை இலட்சுமியெனும் பெயருள்ளவளை அன்பாகத் திருக்கலியாணம் செய்துகொள்ளென்று சொல்ல, என்னையாளும் பெருமானுகிய அக்கிநாதன் அதைக்கேட்டு மனத்திலே யோசித்துச்சொல்லுவான்.—எ-று. (௩)

பொய்வாழ்க்கையகற்றியுனதடியாரிடத்தெந்நாளும்பொருந்தி மேவும், மெய்வாழ்க்கையெனக்கருள்வாயிதுவேண்டேனன்றியுயிர் விடுவேனென்றே, கையாருமேமியினைப்பணிந்தொன்பான்றினமன த்தைக்கழிக்குங்காலைச், செய்யாளையுரந்தரித்ததனிக்கடவுண்முன் றோன்றிச்செப்பலுற்றான்.

(இ-ள்.) பொய்வாழ்க்கையான சமுசாரத்தைவிட்டு உன்னடியாரிடத்திலே எந்நாளுங் கூடியிருக்கு மெய்வாழ்வைத்தரவேண்டும்; இது எனக்குத் தேவையில்லை. அப்படியல்லவென்றால், உயிரை விட்டுவிடுவேனென்று திருக்கையிலே சக்கரப்படையைத் தரித்திருக்கும் திருமாலைப்பணிந்து தோத்திரஞ்செய்து ஒன்பதுநாள்வரைக்கும் அன்னமில்லாமல் வைராக்கியஞ் செய்துகொண்டிருக்கிறவேளையிலே மகாலட்சுமியை மார்பிலே தரித்துக்கொண்டிருக்கும் ஒப்பற்ற சீனிவாசமூர்த்தி வந்து திருவுளம்பற்றினார்.—எ-று. (௪)

உன்னதவின்படியின்னாட்கழித்துமெய்வாழ்க்கையுதவிச்செய் வோ, முன்னமுநாமியம்பிநடப்பரிலரிதியாகமொழியக்கேளா, யெ ன்னதடியாரொருவன்மூத்திதனக்கில்லறத்தையிழக்கவேண்ட, வின் னமொருமனையையணைக்கவன்மயலாலிறக்கநெறியிருப்பதென்றாம்.

(இ-ள்.) உன்மனத்தின்படிக்குச் சிறிதுநாள்போனபிறகு என்னடியாருடனேசேர்ந்திருக்கு மெய்வாழ்வையருளிச்செய்வோம். பூர்வவிதிவசத்தைத்தள்ளி நடக்கிறவர்கள் இந்தவுலகத்திலில்லை, அதற்கொரு திருஷ்டாந்தஞ்சொல்லுகிறேன் கேள், அடியேன்னவென்றால்முன்னுலேயெனக்கடிமையானவனொரு



வன் மோட்சத்துக்காக இல்லறத்தை வெறுத்துவிடவேண்டுமென்று நினைக்க நீ இன்னமொரு பெண்ணைக் கலியாணஞ்செய்து அவள் மோகத்தினாலே இறக் கும்படியான விதி உனக்கிருக்கிறதென்று நாம் சொன்னோம்.—எ-று. (௫)

அவ்விதியையென்றவத்தாலறுக்கவொட்டாதிருப்பனெனவட விக்கேகி, நவ்வியுமிலைகனிகாய்கிழங்கருந்திப்பெருந்தவத்தைநட த்துங்காலைச், செவ்வைமறையோனொருநாள்பழம்புசித்தோர்குளத் திறங்கித்தெண்ணீர்மாக்கிக், கல்வையொழிசிக்கைந்தியொடிக்குயிலுற் றானந்தடத்துக்கரையிதம்மா.

(இ-ள்.) அப்படி சொல்லக்கேட்டு அந்தவிதியை என் தவத்தினாலே சேரவொட்டாமலிருப்பேனென்று நினைத்துக் காட்டுக்குப்போய் அழகுள்ள இலை, கனி, காய், கிழங்கைப்புசித்துக்கொண்டு பெரியதவத்தை நடத்திவருகிற காலத்திலே திருத்தமான வேதந்தெரிந்த அந்தப்பிராமணன் ஒருநாள் பழங்களைப்புசித்து ஒருகுளத்துக்குப்போய் சலம்சாப்பிட்டுக் களங்கமற்ற மனத்துடனே நித்திரைசெய்தான் அந்தக்குளக்கரையின்மேல்.—எ-று. (௬)

அந்தவனத்துறுவேடர்களிக்கரியமணமதுசெய்விப்பவர், சிந்தைதனிலறிந்துமுக்காலத்தெரியவினியுணர்க்குஞ் செழுங்குறப் பெண், வந்திவளைவதுவைமுடிப்போனிறப்பனென்றுமிகவழங்க லோடு, மிந்தவிதியேனமக்கென்றவளைக்கைப்பற்றிடுவோனிரியல் போனான்.

(இ-ள்.) அப்படி நித்திரைசெய்கிறகாலத்திலே அந்தவனத்திலேயிருக்கிற வேடர்கள் ஒரு அழகான பெண்ணுக்கு அருமையாய் விவாகஞ்செய்யவும் போதுதன்மனத்தினாலேமுன்றுகாலமுந்தெரிந்து குறிசொல்லுஞ்செழுமையான ஒருகுறப்பெண் அவ்விடத்திற்குவந்து இவளைக்கலியாணஞ்செய்துகொள்ளுகிறவன் உடனே இறந்துபோவானென்று மிகவுஞ் சொல்லக்கேட்டு இந்தவிதி நமக்கேனென்று அவளை விவாகஞ்செய்யவந்தவன் ஓடிப்போனான்.—எ-று. (௭)

அவனைப்பின்றொடர்ந்தெயினர்காணுமலக்குளத்திலுறங்குமவ னை, யிவனைக்கண்டிழுத்துச்சென்றிக்குறத்திசொன்னமொழியினை ப்பார்ப்போமென், றெவருக்குமறிவித்தப்பெண்ணைவிவாகம்புரிச் சாரானதுதேவன், கவனித்தபடிமுடித்தெனமறைபோனுளம்வெ ருவிக்கதறினனே.

(இ-ள்.) அப்படி அவனோடிப்போக அவனைத் தொடர்ந்துகொண்டு பின்னேவந்த வேடர் அவனைக்காணாமல் அந்தக்குளத்திலேவந்து தூங்கும் இந்த பிராமணனைக்கண்டு இழுத்துக்கொண்டுபோய் இந்தக்குறத்தி சொன்ன வார்த்தையைப் பார்ப்போமென்று எல்லோர்க்குமறிவித்து அந்தப்பெண்ணை இந்த ரிஷிக்கு விவாகஞ்செய்வித்தார்கள், என்னுடைய தேவன் திருவுளப்படி முடித்ததென்று மனத்திலேபயமுண்டாய்க்கதறியழுதான் அந்தப்பிராமணன்.—எ-று.

வேடரதையறிந்தன்னையஞ்சாலும் விடுவதிலே வெட்டுவோமென், றோடிவரவிவளையினிவெறுப்பதெனவிதிதொலைப்போருலகிலுண்டோ, காடணுகியிருந்துமிதுவந்ததென்றேயருமறையோன் கருத்திலெண்ணிக், கூடியிவளுடனுறைவேனெனவவருக்கினியவுரைகூறினனே.

(இ-ள்.) இவளழுகிறதை வேடர்பார்த்து நீயழுதாலும் உன்னை விடுகிறதில்லை வெட்டிவிடுவோமென்று அவர்களோடிவர இவர்களை இனிமேல் வெறுக்கவேண்டியதென்ன விதியையொழித்தவர்கள் உலகிலில்லை. ஆகையால்காட்டிலே வந்திருந்தும் இப்படி வந்ததென்று அந்தப்பிராமணன் மனத்திலே நினைத்து அவர்கட்கிசைந்தவனைப்போல் இவளுடனே கூடியிருக்கிறேனென்று அந்த வேடர்களுக்கு உபசாரவார்த்தை சொன்னான்.—எ-று. (கூ)

கன்னிமணமொருமையுடனேமுடித்துவேடரொலாங்கலைந்துசென்று, றன்னபொழுதிவளையகன்றம்மறையோனொழுங்கோடியடவிசேர்ந்தே, யின்னமெவரனுருவரோவென்றுபயந்திருப்பமுனமொழினல்லா, முன்னியிருவருமொழிந்தாரிவளாகாதெனவனத்துளோட்டினரே.

(இ-ள்.) அதுகேட்டு வேடர் சந்தோஷமாய் அந்தப்பெண்ணுக்கு மிவனுக்கும் ஒருமையுடனே விவாகஞ்செய்வித்து அவரவர்களிருக்குமிடத்துக்குப் போனார்கள். அந்தவேளையிலே இவளையொழித்துவிட்டு அந்தப்பிராமணன் எழுந்து ஓடிப்போய்க் காட்டைச்சேர்ந்து இன்னமெவராகிலும் வந்திழுக்கப் போகிறார்களென்று பயந்துகொண்டிருக்க, அந்த வேடர்களெல்லாம் இவளைக் கலியாணஞ்செய்யவந்த இரண்டுபேரும் ஓடிப்போனார்கள், இவளிங்கே யிருக்கலாகாதென்று அவளையுங் காட்டிலே யோட்டிவிட்டார்கள்.—எ-று. (க0)

எனதுசிரத்தயனெழுதுவிதியையிதோவென்றவளுள்ளேங்கிவாடி, தனிமிருகமுலவுவனத்திலேகனிகாயருந்தியுழலுநாளிலந்தத், தனமறையோனிருக்குமாரணியத்திலணுகிடுமச்சமையந்தன்னிற், கனமழைகூருவளியாலோடுமெல்லை யொருகுகையைக்கண்டின்புற்றாள்.

(இ-ள்.) அப்படி யோட்டிவிட்டமாத்திரத்திலே என்தலையிலே பிரமதேவன் எழுதினது இப்படிபோலென்று மனம்வாடி. யழுதுகொண்டு மிருகங்களிருக்கும் வனத்திலே இலை கனி காய் கிழங்குகளைப் புசித்துக்கொண்டு திரிகிறகாலத்திலே ஒருநாளந்த வொப்பற்ற பிராமணனிருக்கும் வனத்துக்குப்போகிற சமயத்திலே மேகமழைபொழிந்து பெருங்காற்றுடன்வரக்கண்டு ஓடுகிறபோது ஒருமலையின் குகையைக்கண்டு சந்தோஷமானாள்.—எ-று. கக

குகைபுகுதுமம்மறையோனதற்குமுனமணுகியதிற்குந்திநெஞ்சம், புகையவிழித்திருப்பவிவடன்னையறிந்திங்குவரப்போகாதென்



ன, தகமையுளோயெங்குசெல்வேனாதரிப்பாயுன்றனுங்கேசரணமென்று, னகைபுரிந்துன்பேரூரேதெனக்கேட்பவேடுவப்பெண்ணவிலலுற்றாள்.

(இ-ள்.) அந்தக்குகைக்குள்ளே இவள்போக, முன்சொன்ன பிராமணன் அதற்குமுன்னே அதிலேவந்து நுழைந்து குந்திக்கொண்டு மனத்திலே துக்கத்துடனே விழித்துக்கொண்டிருக்க, இவளைக்கண்டு பெண்களிங்கே வரப்போகாதென்று சொல்லத் தகைமையுள்ளவரே! இந்தவேளையிலே நானெங்கே போவேன் என்னை ஆதரிக்கவேண்டும் உனக்கேயடைக்கலமென்று வேடுவப்பெண் சொல்ல பிராமணன்நகைத்து உன்பேரென்ன உன் ஊரெங்கேயென்று கேட்க (கஉ) அந்த வேடுவப்பெண் சொல்லுவாள்.—எ-று.

ஆதிநாணடந்தவெலாமுரைப்பவின்றுவிதிவயம்வந் தடுத்ததென்றே, யோதியேயெம்பெருமானுரைத்தபடியாகுமெனவுறங்குமெல்லைப், பூதம்போல்வேடுவச்சிகாமமிகுந்திருகரத்தாற்புல்லமையற், கேதிலாநெஞ்சினுழைந்தருமறையோனுடற்றவகிடட்டிற்றம்மா.

(இ-ள்.) முன்னாணடந்த விருத்தாந்தமெல்லாமிவள் சொல்லக்கேட்டு இன்று விதிவசம் வந்தடுத்ததென்றுசொல்லி எம்பெருமான்சொன்னபடியே யாகுமென்றுநினைந்து நித்திரைசெய்யும்போது பூதம்போலே அந்தவேடுவச்சிகாமமிகுந்துவந்து இரண்டுகையினாலுந்தழுவிக்கொள்ள ஆசைநோயானது விதியினாலே குற்றமற்ற மனத்திலேநுழைந்து அந்தப்பிராமணனுடைய சரீரத்துக்கு (கங) அவஸ்தையைக்காட்டிற்று.—எ-று.

ஊமனைப்போலறிவகன்றுபெருங்காமக்கடலிடையேசுழன்றுவாடி, நமதுமனைவியையணைத்தானுங்குபிலையெனவவடனலங்கொண்டோதி, லமையும்விதியாற்புரளவங்கொருபாம்பிருந்துகவ்வவரிமுகுந்தா, வுமதுசெயலென்றலறிவிட்டேதரியபரமபதமுற்றானன்றே.

(இ-ள்.) அப்படி அறிவில்லாதவனைப்போலே புத்தியைவிட்டு பெரிதான காமக்கடலிலே மனஞ்சுழன்றுவாடி பின்பு நம்முடையபெண்சாதியையணைத்தால் பகை, பழி, பாவம், அச்சம் என்னு நான்குமில்லையென்று அவளுடனேசேரும்போது விதிவசத்தினாலேபுரள அங்கொருபாம்பிருந்துகடிக்க அரிமுகுந்தா! உன் செயலிதுவோவென்றுசொல்லி உயிரைவிட்டு யாவராலுஞ்சொல்லற்கரிதான பரமபதம் பெற்றான்.—எ-று. (கச)

இவ்விதமேகருளாரகையினிம்மொழியையிதயத்தெண்ணி, செவ்வியவடன்னைமணஞ்செய்தெனதுதொண்டனெனத்திகழ்வாயென்ன, வவ்வியமின்மனத்தோடிருப்பதற்கிங்கிருதாமதனுற்சோர்ந்தே, யெவ்வமடைந்துழல்வதலாலுன்னடிமைத்தொழில்புரியவிலையாதென்றான்.

(இ-ள்.) இப்படி பூமியிலே அதிசயரூபமும் ஆசையையுமுடைய பாரத்திலே எண்ணி அந்த அழகானபெண்ணைக் கலியாணஞ்செய்து மணஞ்செய்து கொண்டவனென்று பெயர்பெற்றிருப்பாயென்ன குற்றமில்லாமனத்துடனே யிருப்பதற்கு இங்கே யிரண்டு பெண்களையுமே சேர்ந்து கலியாணமுடைந்து வருதல் வதல்லாமல் உன்னடியைத்தொழும் செய்யுமடியாரென்று என்னையன் சொன்னான்.—எ-று. (௧௫)

பாரதத்துளாரணிய பருவத்தோகியச் சருக்கம்பார்த்தாலிந்தக்
கோதியலாருமெனசின்செயலென்பிருந்தனனென்னையனிப்பாற்
காரொழிலிலேவதியன்போன்முன் னுரைத்தகோபாலன்கனவிற்போந்தே
யேர்வளரொண்மதலைசுப்பராயனுக்குன்றங்கைதனையீவாயென்றான்.

(இ-ள்.) இப்படி சொல்லக்கேட்டு சீநிவாசமூர்த்திசொல்லுகிறார் பாரதத்திலே ஆரணியபருவத்தில் கவுசிகச்சருக்கம்பார்த்தால் இந்தகோதையறியலாமென்றுசொல்ல உன்செயலெப்படியோவென்றிருந்தான் என்னையாளையுடையா ட்கொண்ட அந்தநாதன்; இப்பால் கரிய மேகம்போன்ற சீநிவாசமூர்த்தி பிராமணனைப்போலே முன்சொன்ன கோபாலன்சொற்பனத்திலேபோய் அழகுள்ள என்பிள்ளையான சுப்பராயனுக்கு உன்தங்கையை விவாகஞ்செய்துகொடென்று கேட்டார்.—எ-று. (௧௬)

அந்தமொழிகேட்டெழுந்துதோத்திரித்திவ்வதிசயமவ்வாடித்தில்
வாழும், பந்துவர்க்கத்துடன்புகன்றானிலக்குமிபுகழ்ந்துடனேபரி
வுகூர்ந்து, முந்துவிதிகூட்டியதான்போலுமெனத்தவர்த்துமணமுடிப்
பேனென்ன, விந்தைமணிப்பணியணிந்துழையிடை தண்மதிமுகத்தா
ள்விரதம்பூண்டாள்.

(இ-ள்.) கோபாலன் அந்தவார்த்தையைக்கேட்டு எழுந்திருந்து தோத்திரித்து இந்த அதிசயத்தைத் தன்வீட்டிலிருக்கும் பந்துவர்க்கத்துடனே சொல்ல அதை லட்சுமியம்மாளறிந்து ஆசையுடனே முன்னேவிதிகூட்டியிருக்கிறபடியினாலே மோகமிருந்து அவனை விவாகஞ்செய்துகொள்ளுவேனென்று அழகான இரத்தினாபரணமணிந்து உடுக்கைப்போன்ற இடையுங் குளிர்ந்த சந்திரனைப் போன்ற முகமுமுள்ளவள் விரதம்பூண்டாள்.—எ-று. (௧௭)

வெண்பிறைக்குங்கரும்பிறைக்குங்கொங்கைக்குந்தென்றலு
க்கும்விரிநீர்சூழ்ந்த, தண்கடற்குங்கருங்குயிற்கும்பகையாகவிரதமா
பாங்கியாகடாவகண்டிந்தப், பண்பினைக்கோபாலனுக்குப்பகரவொ
ருபூசுரனைப்பணிந்தேயெங்கள், வண்குலத்தைவிளக்குசிகாமணிக்கு
மணம்புகன்றிவணிவருகவென்றான்.

(இ-ள்.) அப்படி விரதம்பூண்ட ஆசையினாலே வெண்மையான சந்திரனுக்குங்கருப்புவில்லுக்கிராசனான மன்மதனுக்கும் மகரந்தப்பொடியையளாவி வருகின்ற தென்றலுக்கும் விரிந்த நீர்சூழ்ந்த குளிர்ச்சியானகடலுக்கும் கரிய குயிலுக்கும்



கும் பகையான விரதத்தைக்கொண்டாள்; அதைக்கண்டு பாங்கிமார்கள் இந்தக் குணத்தையெல்லாங் கோபாலனுடனேசொல்ல அவன் ஒருபிராமணனை யழைத்துப்பணிந்து எங்கள் வண்மையானகுலத்தை விளக்கவந்த சிகாமணியாகிய அனந்தநாதனுக்கு மணஞ்சொல்லிவாவென்றனுப்பினன்.—எ-று. (௧௮)

மறையவனங்குமுளபுரிக்கணுகுங்காலஞ்சகுனவளங்கண்டெ
ய்த, னிறையவன்பாற்செலத்தொழுதுமுகமனுரைத்தெப்பதியீரிங்
குவந்த, தறைதியெனவருந்தநிலேசிலக்குமியுன்றிருத்தாளையன்புற்
றுந்தண், ணறைமலர்கொண்டருச்சிக்கவெண்ணிமணம்புரிவலென
நயந்தாளென்றான்.

(இ-ள்.) அப்படியே அந்தப்பிராமணன் அழகான குமுளநகருக்கு வரும்போது நல்ல சகுனங்களைக்கண்டு எங்களிறைவனாகிய அனந்தநாதனிடத்துக்குவர என்னையன்தொழுது உபசாரவார்த்தைசொல்ல எந்தவூரிலிருந்து நீரிங்கேவந்தீர் அதைச்சொல்லுமென்றுகேட்கத் திருவல்லிக்கேணியிலிருக்குங் கோபாலன் தங்கை அருந்ததிக்குச்சமானமான இலட்சுமியம்மாள் உம்முடைய திருவடியை அன்பினால் குளிர்ச்சியும் வாசனையுமுள்ள மலரினாலே அருச்சிக்கும்பொருட்டாகநினைத்து உம்மைக் கலியாணஞ்செய்துகொள்ளுவேனென்று ஆசைகொண்டாளென்று பின்னையுஞ்சொல்லுவான்.—எ-று. (௧௯)

பின்னுமஞ்சக்கரனவருக்குரைத்தவகைபுகலுதலும் பெரியோ
னோர்ந்து, முன்னவன்றன்செயலெனமுதுமறையோன்றனைப்பா
ர்த்துமொழிவானந்தக், கன்னிகையிங்கணுநின்மணமுடிப்பலென
வதுதெரிந்தகாதுமேவிச், சொன்னநெறிகூறுதலுமுவகையெனும்
பெருங்கடலிற்றுளைந்தார்மன்னோ.

(இ-ள்.) பின்னுமழகாகிய சங்குசக்கராயுதந்தரித்த கையினையுடைய சீநிவாசமூர்த்தி கோபாலனதுசொற்பனத்திலருளிச்செய்த வயணங்களுஞ்சொல்லக்கேட்டு இந்தப்பெரியவனினைத்து முன்னவனாகிய பரவாசுதேவன்செயலென்று பிராமணனைப்பார்த்து அந்தக்கன்னிகை இவ்விடத்திற்குவந்தால் கலியாணஞ்செய்துகொள்ளுகிறேனென்றுசொல்ல அப்படிசொன்ன வார்த்தையைக்கேட்டு அந்தப்பிராமணன் சடுதியாய்வந்து கோபாலனுடனே யங்கேநடந்தவர்த்தமானங்களைச் சொன்னமாத்திரத்திலே எல்லோருஞ் சந்தோஷமென்னும் பெரியகடலிலே முழுகினதுபோலிருந்தார்கள்.—எ-று. (௨௦)

சிந்தைமகிழ்ந்திவுளிமணிச்சிவிகைகவிகைகணெருங்கத் திருநே
மின்னுஞ், சுந்தரஞ்சேரிலக்குமியைச்சேடியர்கள்புடைசூழத்தூ
யோர்வாழ்த்தக், கொந்துமலர்வனமாலிபார்த்தசாரதிபதத்தைக்கு
ம்பிட்டேத்தி, யந்தமிகுந்திருவல்லிக்கேணியெனும்பெருநகர்விட்ட
கன்றார்மன்னோ.

(இ-ள்.) அப்படிமனத்திலே சந்தோஷம்பெற்று குதிரை யழகான பல்லக்கு குடைகள்நெருங்க மகாலட்சுமிக்குச்சமானமான அழகுள்ள இலட்சுமியம்மாளைப் பாங்கியர்கள் புடைசூழத்தக்கதாகப் பெரியோர்கள்வாழ்த்த கொத்துக் கொத்தாய் மலர்களையுடைய துளபமாலையணிந்த திருவல்லிக்கேணியிலிருக்கும் பார்த்தசாரதிப்பெருமாள் திருவடியைக்கும்பிட்டுத் தோத்திரஞ்செய்து அழகுமிருந்த அந்தத் திருவல்லிக்கேணியென்னும் பெரியநகரத்தைவிட்டு அப்பாலேவந்தார்கள்.—எ-று. (உக)

அரியநகர்சிலகடந்துமறைபுகழும்பாலாற்றிலணுகித்தோய்ந்து, விரிமலர்த்தண்டலைமருதம்வரைக்கானம்விட்டகன்றுவிளங்குஞ்செல்வ, மருவியதென்திருப்பதிசென்றங்குள்ளாரெதிர்க்தூழுகமன் கூறப் பின்,னிருநிலமும்பணிசீநிவாசனிணையடிமலரையிறைஞ்சினரே.

(இ-ள்.) அப்படிவந்து அருமையானபட்டணங்கள் சில கடந்துவேதங்கள்புகழும் பாலாற்றுக்குவந்து தீர்த்தமாடியிருந்த மலர்களையுள்ளதோப்புகளும் மருதநிலங்களும்மலைகளுங் காடுகளும்விட்டுகடந்து செல்வமிகுந்திருக்குந்தென்திருப்பதிக்குவந்து அங்குள்ளவரெதிர்கொண்டு உபசாரவார்த்தைசொல்லப் பின்புவந்து பெருமையான பூமியெல்லாம்புகழுஞ் சீநிவாசமூர்த்தியினுடைய இரண்டு திருவடித்தாமரையையுந்தொழுதார்கள்.—எ-று. (உஉ)

தென்னரித்திங்களினாவோர்பந்துவர்க்கங் கூடி நன்றுடெனிந்துள்ளோர்ந்து, மன்னணிப்பல்லியமுழங்கத்திருமணக்காலுட்டிக்காவணமுஞ்செய்வித், தின்னரம்பைநகமுகுபலாங்கைநரிலாங்கனிக்ர ..கனொழிற்பூமாலை, மின்னியசித்திரத்துகிலுந்தாபனமேற்கட் டிபலவிதமுஞ்செய்தார்.

(இ-ள்.) மறுபடி அழகுபொருந்திய ஆவணிமாதத்திலே பிராமணருளும் பந்துவர்க்கங்களுங்கூடி நல்லநாள்பார்த்து நிலைபெற்றவாத்தியம் முழங்கத்திருமணக்கால் நாட்டிப்பந்தலுமியற்றுவித்து இனிமையான வாழைக்கமுகுபலா தாழை தென்னங்குலை முதலியவும் அழகானபூமாலைகளும் பிரகாசமான சித்திரப்புடவைகளும் கண்ணாடியு மேலேகட்டிப் பலவிதவலங்காரஞ் செய்தார்கள்.—எ-று.

சோதிக்கூண்டெடுக்கிவிளங்குங்காவணநாப்பண்டுெிற்காலுட்டி யோதருமுத்திரி யுவியெழிற்பந்தோரணங்கட்டி யுலகமெச்சும் கோதறுவெண்டாளமணிவெளியேவுந்துகிலிமையக்குருலவவெண்டண்,டாதுலவுநறுமலர்மாலைகறைற்றிமணவறையமைத்தாரன்றே.

(இ-ள்.) விளக்குக்கூண்டுகளாக்கி பிரகாசமான பந்தலுக்கு நடுவே வளக்கால்நட்டு சொல்லற்கரிதானஉத்திரம்பரப்பி அழகுபொருந்திய பசுந்தோரணங்கள்கட்டி உலகமெல்லாம் புகழுங் குற்றமற்ற வெண்மையான முத்தைப்



போலே பிரகாசிக்கும் வெள்ளைவஸ்திரங்கட்டி உவமையில்லாத குளிர்ச்சியுமகரந்தப்பொடியும் வாசனையுமுள்ள மாலைகளைத்தூக்கி இப்படியாக மணவறையைச் சோடித்தார்கள்.—எ-று. (உச)

சாந்திறாற்றரைமெழுகிக்கர்ப்பூரத்தாற்கோலஞ்சமைத்துப்பின்பு, காந்துமணிவிளக்குமுளைப்பாலிகைபூரணகும்பங்கவினச்செய்தா, ரேந்தலெழின்மங்கையொடுமங்கலநீராடிவரையிருந்துவந்த, பூந்தளிர்போற்சரணனுக்குபபூசைசெய்துமணக்கோலம் பூண்டான்மன்றே.

(இ-ள்.) பின்னையும் பசுஞ்சாணத்தினாலே தரைமெழுகி வெள்ளைமாவினாலே கோலஞ்செய்வித்துப் பின்பு பிரகாசமான அழகுள்ள விளக்குமுளைப்பாலிகை பூரணகும்பம் அழகாகவைத்து பிறகு என்னையன் என்தாயான அழகிய லட்சுமியம்மாளுடனே மங்களஸ்நானஞ்செய்து திருமலையிலிருந்துவந்த சீநிவாசமூர்த்தியினுடைய சுந்தரமான தளிர்போன்றபாதத்துக்குப் பூசைசெய்துடனே மணக்கோலம் பூண்டான்.—எ-று. (உரு)

பொற்கொம்பினந்தளிளிலவுவெயிலெறிக்குமியல்போலத்தெய்வக், கற்புமங்கைக்கொளிர்சரிகைத்துகிலணிந்தாடகமணிப்பூண்கவினச்செய்தே, யற்புதனேடிருவரும்பூமணவறையின்வீற்றிருப்பவரியவோதை, பற்பலவாத்தியமுழங்கவேதியர்கண்முறைச்சடங்கைப்பரிந்துசெய்வார்.

(இ-ள்.) மறுபடியொரு பொன்கொம்பிலே அழகுங்குளிர்ச்சியும் இளமையுமுள்ள சந்திரனைப்போலே பிரகாசிக்குமியல்பான திருமேனியும் பெற்ற தெய்வக்கற்புள்ள மங்கையாகிய இலட்சுமியம்மாளுக்குப்பிரகாசமான சரிகைத்துகிலணிந்து பொன்னினாலிழைத்த இரத்தினாபரணங்கள்தரித்து சிங்காரித்து அற்புதனான என்னையனுடனே அவரும் அழகான மணவறையிலே வீற்றிருக்க அரியசத்தமுள்ள பலபல வாத்தியங்கள்முழங்க பிராமணர்கள் திருக்கலியாணச்சடங்கைச் சாஸ்திரவிதிப்படி ஆசையாய்ச்செய்வார்கள்.—எ-று. (உசு)

மந்திரவோமம்புரிந்துமுன்வந்தா னீரேறுமங்கைதன்னைச், சுந்தரனங்கரத்தளித்தானரிவையர்பல்லாண்டிசைத்தார்தூயோர்வாழ்த்தச், சந்ததனஞ்சயனைவலம்வந்துபொரிசொரிந்தம்மிதனைமிதித்துப், புந்திமகிழ்ந்தருந்ததியைத்தெரிசனஞ்செய்தெழின்மனையுட்புகுந்தார்மன்னே

(இ-ள்.) மந்திரத்துடனே ஓமஞ்செய்து தலைமையாகிய கோபாலன் கைச்சலத்துடனே இலட்சுமியம்மாளை சுந்தரமான என்னையன் கையிலே தத்தஞ்செய்தான் அப்போது பெண்கள் பல்லாண்டுபாடினார்கள் பெரியோர்கள்வாழ்த்தும்படியா யழகுள்ள அக்கினியை வலம்வந்து பொரிசொரிந்து அம்மியைமிதி

த்து மனமகிழ்ச்சியாக அருந்ததியைத்தரிசித்து அழகான இருக்குங்குன்னே போயிருந்தார்கள்.—எ-று. (உ௭)

அந்தணரைப்பெரியோரைப்பணிந்தவரவர்களியம்ப வாழ்த்த லனைவோருக்குஞ்,சந்தனமென்மலரிலைபெருந்தாம்பூலமளித்துத்தனையனைமா க, விந்தவகைக்கலியாணமொருமூன்றுதினநடத்தியின்புற்றுப், பந்துவர்க்கமிகமகிழ்ந்தேயவரவர்களினிதிருக்கும்பதியிற்சென்றார்.

(இ-ள்.) பின்பு பிராமணர்களையும் பெரியோர்களையும் பணிந்து அவர்கள் வாழ்த்த அனைவோர்களுக்குஞ் சந்தனபுட்பதாம்பூலமும் அறுசுவைப்பதார்த்தத் துடனே அன்னமுங்கொடுத்துத் தலைகளையாக இவ்வண்ணம் மூன்றுதினமாய் கலியாணம்நடத்திச்சந்தோஷமாகப் பந்துவர்க்கங்கள் மனமகிழ்ச்சியுடனே அவ ரவரிருக்குமிடம்போய்ச் சேர்ந்தார்கள்.—எ-று. (உ௮)

அருந்ததிநேரிலக்குமியாண்முன்பூண்ட விரதப்பலனதனாற்மென் றுட், பரிந்துதவக்கொழுநனுக்கு நளுநீர்ன்மணமலராற்பாதபூ சை, நிரந்தரமும்புரிந்துபணிந் தெழின்மேவுமில்வாழ்க்கை நெறிந டாத்தித், திருந்துகலவியின்மகிழ்ந்தப்புவியோர்கள்புகழவளந்தெ ழிக்குங்காலை.

(இ-ள்.) பின்னும் அருந்ததிக்குச்சமானமான கற்புள்ள இலட்சுமியம்மா ளோ முன்பூண்டவிரதங் கைக்கூடிற்றென்று மனத்திற்சந்தோஷித்து தயம் பொருந்திய புருஷனுக்கு நல்லசுகந்தமுள்ள வாசனையான மலர் புஷ்பங்களா லும்பாதபூசை நாள்தோறுஞ்செய்து பணிந்து அழகுபொருந்திய இல்வாழ்க்கை வழியே நடந்து திருத்தமான கலவிச்சுகத்திலே மகிழ்ந்து இந்த பூமியிலுள்ளோர் புகழும்படி பாக்கியஞ்செழித்தநாளையிலே.—எ-று. (உ௯)

வேறு.

கனிதரின்றியிடாரெப்பகற்றினெதிர்ந்தபனிவெயறு
துணிவுறப்புரிந்தசெங்கதியந்நாளைவள்ளலை
பணிகொளத்தொடர்ந்தபாசபதுமநாபனருளிறு
வினையிலார்கள்[illegible]ப்பவிறும்றைவழக்கதோ

(இ-ள்) அப்படியிருக்கிற நாளையிலே கணக்கில்லாத இடர்கள் வர வைவெல்லாந் தீர்ப்பனேகன்டபணிபோல் செய்துவருகிறார்; அவரென்றும் எங்களுக்குத் தூய்மையான ஞானத்தைக்கொடுக்கும் வல்லவரான அனந்தசய னைப் பணிவிடை கொள்ளத்தொடங்கிய வாசனையுள்ள பதுமநாபனுடைய கிரு பையால் ஒப்பற்றபெரியோர்களுக்குவந்த இக்கட்டினைத்தவுடனே கெட்டுப் போமென்பது வேதவழக்கமாம்.—எ-று. (௩௦)

தன்னிடர்க்கடற்றுடைத்ததன்மையுள்ளறன்னிலை
யென்னையுற்றநன்பருக்கிலாமையின்றிவாழ்வுற



பின்னருள்கொடென்று[illegible]றைமிகுத்தவகையும்ப
பின்னெவற்புரிந்தசெய்துபேசினன்பரசலன்.

(இ-ள்.) அப்படி தனக்குவந்த இடரானகடலை நீக்கிய தன்மையையமன த்திலே நினைத்து எனக்கதிக நண்பராயிருக்குந் தரித்திரமில்லாமல் வாழ்வு பெறும்படி யினிமையான கிருபைசெய்யவேண்டுமென்று என்னையன் சீனிவா சமூர்த்தியுடனே விண்ணப்பஞ்செய்ய அதற்குமுன்னே பிரமதேவன் விதித்த வகையைத்தள்ள பின்னாலே யெவர்களுக்கு அந்தச்செயலுண்டென்று இருவு ளம்பற்றினார் சேஷமலைக்கதிபன்.—எ-று. (௩௧)

நீநினைப்பநேருறுதகிதிகளின்றெனச்சொலின்
யானதற்குதாரணத்திசைப்பணிப்பகற்கெனு.
ளினமாசுணந்தொடும்மிதைக்கடத்துவாயெனு
வானநண்பருக்குரைத்ததிலமென்னவுன்னினன்.

(இ-ள்.) பின்னுஞ்சொல்லுவார் நீநினைக்க முடியாத பொருளுண்டோ வென்று சொல்லுவையாகில் அதற்கு நானுதாரணஞ்சொல்லுகிறேன் இனி எட்டாநாள் ஈனமான பாம்புன்னைத்தொடும் இதைநீ தள்ளிக்கொள்ளென்று அரு ளிச்செய்து மறைந்தார்; அதன்பிறகு தனக்குநேசமான சினேகிதருடனேசொல் லியிதையறிவோமென்று நினைத்திருந்தான் என்னையன்.—எ-று. (௩௨)

அன்றையத்தினத்திலெங்குமணுகிடாமலோர்வயி
றென்றிமேனோர்களுடனிருப்பவோதுநீருபாதையாற்
சென்றகாலையோடிவந்துசிலையிடுக்கிலுறுமராத்
தான்றுகோபமுடனெழுந்துதொட்டதண்ணல்காலிலே.

(இ-ள்.) அப்படிநினைத்திருந்து எழுநாளகற்றி யெட்டாநாளாகிய அத் தினத்திலேயெங்கும் போகாமல் ஓரிடத்திலே தன்னேசருடனேயிருக்கும்போ து அதிகவுபத்திரமென்று சொல்லும் நீருபாதையினாலே வெளியேவர அந்தச்ச லமயத்திலேகல்லிடுக்கிலிருக்குமொருபாம்பானது ஓடிவந்து மிகுந்தகோபத்து டனே யெழும்பித்தொட்டது என்னவெனலாய் என்னையாண்டவன் காலில். ()

கல்லவர்க்குத்தீதிழைக்கநாடினவ்விடர்தனக்
கொல்லைவந்தடுக்குமென்பதுண்மையங்கிருந்தவர்
கல்லிடுக்கிலுழையுமுன்புகண்டெழுந்தரவினைக்
கொல்லுமென்றடித்திழுத்துகொல்லையுட்கடத்தினர்.

(இ-ள்.) கல்லவர்களுக்கு ஆகாதவன் ஒரு தீமையைச்செய்ய நினைத்தால் அந்தத்தீமை தனக்குடனே வந்து பலிக்குமென்று பெரியோர்கள் சொன்னது உண்மையாதலால் அங்கிருந்தவர்கள் கடித்தபாம்பு கல்லிடுக்கிலே நுழை யுமுன்னமேகண்டு எழுந்திருந்து அந்தப்பாம்பை யாவருங்கொல்லுங்கோனெ (௩௩)
லைறு அடித்திழுத்துக் கொல்லையிலெறிந்துப்போட்டார்கள்.—எ-று.

கடத்திவந்தனன்பருங்கலக்குமேவிற்கவே
விடத்தினன்மயக்கமானவேலைமாமருந்தினைக்
குடித்திடாவுணப்புகன்றகொள்கைகண்டெவ்வேனிலுட
டடத்தினுலதேனெனத்தியானமுற்றிருந்தனன்.

(இ-ள்.) அப்படி யெறிந்துபோட்டுவந்த நண்பருங்கோவிற்றிருமாளிகையிலிருந்தவர்களுங் கலக்கம் பொருந்தினின்று திகைக்க விஷத்தினால் மயக்கமானவேளையிலே நல்ல மேன்மையானமருந்தினைப் புசியுமென்று அனேவருஞ்சொல்ல அதையறிந்து என்னையன் தன் மனத்திடத்தினலே யந்தமருந்து எனக்கேனென்று சொல்லி சிவவாசமூர்த்தியைத் தியானஞ்செய்து கொண்டிருந்தான்.—எ-று. (௬௫)

குடித்துமேனடித்துயிர்கொடுந்தகோரூத்திய
விடத்தைவென்றமாயனித்தைவெல்லுமாறதில்லனே
தடத்தின்முன்றருத்தடுக்கிதான்விழுந்தகாலவந்
தெடுத்துவிட்டதெனவெழுப்பவின்பனங்குதோன்றுவான்.

(இ-ள்.) அப்படியிருக்கிறவேளையிலே கேளுங்கள் திருமாலடியார்களே பூதனைவிஷமுலையைக்குடித்தும் காளிங்கன்மீதிலே நடனஞ்செய்தும் பாண்டவர்களுக்கு நச்சுப்பொய்கையிலேயுயிர்கொடுத்தும் நாகபாணம்மேலே வராமல் அருச்சுனன்தேரையழுத்தியும் இவ்விதமாக விஷத்தை வென்ற மாயன் இதை வெல்ல வகைஅறியாதவனே; ஆகையினல் முன்னுலே பிராமண ஸ்திரீயினுடைய சிவனைக்காப்பாற்றப் போகையில் வழியிலே மரந்தடுக்கி விழுந்தபோது வந்தெடுத்துவிட்டதுபோலெழுப்புதற்கு இன்பமான சிவவாசமூர்த்தி தோன்றுவான்.—எ-று. (௬௬)

தட்டிசல்லடத்தரித்துசட்டைமீதணிந்துவெண்
வட்டமேவுபாகைசென்னிவைத்துசெங்கரத்தினிற்
கட்டுமோரியங்கசைக்கவின்பிறங்குசோளியென்
றிட்டபேரியைந்தபையெடுத்தமெய்யுமாகியே.

(இ-ள்.) தட்டியுஞ் சல்லடமுந்தரித்துக்கொண்டு சட்டைமேலேபூண்டு வெண்மையானசக்கரம்போலே பாகையைத்தலையிலேவைத்துக்கொண்டு சிவந்தகையிலேகட்டி விஷம்வாய்குக் கம்பளிக்கயிறும் அழகுபிரகாசிக்க சோளியென்றிசைவர்ன பெயர்பெற்ற மருந்துப்பையையுமெடுத்த திருவுருவத்தோடும் தோன்றினர்.—எ-று. (௬௭)

வந்தெவர்க்குமறியொணுதமந்திரந்தெரிந்தநான்
என்றனுமமோபிடாரனிவ்வராவிடத்தினைச்
சிந்தியோடவேமருந்துசேர்ப்பனென்றுகந்தளித்
தந்தநல்வயித்தியஞ்செய்தச்சுதன்மறைந்தவன்.



(இ-ள்.) சிவவாசமூர்த்தி அப்படிவந்து எவர்களுக்கும் அறியவரிதான மந்திரந்தெரிந்த பிடாரன் நான் இந்தப்பாம்பின் விஷங்கெட்டோடிப்போக மருந்து கொடுப்பேனென்று சந்தோஷமாய் மருந்துகொடுத்து அந்த நன்மையான வயித்தியஞ்செய்து அச்சுதனைத்தன் மறைந்தான்.—எ-று. (௬௮)

எழுந்தலர்க்கரங்குவித்திறைஞ்சிமெய்பொடித்திடச்
செழுங்கணீருருப்பவெங்கடேசனின்றுசெப்புவான்
றொழும்பருக்கருள்பெருந்துணைச்சொரூபவின்பமே
பழம்பொருட்குமுன்றுறும்பராபரச்சலாபமே.

(இ-ள்.) அப்படி சிவவாசமூர்த்தி கிருபைசெய்த மாத்திரத்திலே யெழுந்திருந்து மலர்போன்ற கையைக் கூப்பித்தொழுது சரீரம் மயிர்க்குச்செறிய செழுமையான ஆனந்தக்கண்ணீரொழுக எங்கள்தேவனுகிய அனந்தநாதனின்று தோத்திரஞ்செய்வான் அடியருக்கருள்செய்யும் பெருந்துணைச் சொரூபவின்பமே! பழம்பொருளுக்கு முன்றோன்றிய பராபரமான சல்லாபமேயென்று பின்னுந் தோத்திரஞ்செய்வான்.—எ-று. (௬௯)

பத்தியம்பெருங்கடல்படர்ந்தெழுந்தவமுதமே
நித்தியாருணைகாரநிர்மயாநிராதரா
சித்தமேவிருள்கெடத்திகழ்ந்துயர்ந்தபானுவே
முத்தியேசுகந்தஞானமூலமேவுகோலமே.

(இ-ள்.) பத்தியென்னும் அழகிய பெரியகடலிலே யிருந்துண்டான அமுதமே! நித்தியமானருணைமே சொரூபமானவனே! நிராமயனே! நிராதரனே! மனத்திலிருக்கும் இருளைக்கெடுக்கப் பிரகாசமாகவுயர்ந்த சூரியனே! மோட்சமே! சுகந்த ஞானமூலமாகிய திருவடிவமே என்று பின்னுந் தோத்திரஞ்செய்வான்.—எ-று. (௭0)

சொற்பொருள்கடந்தபேதைதொன்மையானசின்மயா
கற்பகாலமுங்கெடாதகாரணாதிபூரணா
தற்பரைத்தருக்கலைந்ததன்மையொக்குமிப்புவிச்
சொற்பனத்துளப்புறத்துடோன்றுகன்னிதானமே.

(இ-ள்) சொல்லும்பொருளுங்கடந்த பேதைமையில்லா பழமையான சின்மயனே! யுகாந்தகாலத்திலுங்கெடாத காரணனே! ஆதியான பூரணனே! கண்ணாடிக்குள்ளே நிழலாகுந்தன்மையையொத்த இந்தப்பூமியின்கண்ணே சொற்பனத்திலும் அதற்கப்பாலுந்தோன்றிய நல்ல நிதானமேயென்று பின்னுந் தோத்திரஞ்செய்வான்.—எ-று. (௭௧)

ஆதியேயிந்தில்லாவனாதியேவிசாலமே
நாதமேசராசரந்திதாகமேகுணாகரா
கோதிலாதமாதவக்கொழுந்திலுற்றஞானமே
நீதியேயுனைப்புகழ்ந்துகெஞ்சிறேதவல்லனே.

கக

(இ-ள்.) ஆதியே யாவருமறிதற்கரிதான வஞ்ஞதியே விசாலமே நாதச்சொரூபமே சராசரமானவனே நாதாதீதமான குணாகரனே குற்றமற்ற மகத்தாகிய தவமுடிவிலே வீற்றிருக்கு மெய்ஞ்ஞானமே நீதியே யுன்னைப்புகழ்ந்து என்மனத்தினாலே தோத்திரஞ்செய்ய நான் வல்லவனோ வென்று பின்னுந்தோத்திரஞ்செய்வான்.—எ-று. (௪௨)

சங்குமாழியுந்தரித்ததாமரைக்கரங்களுந்
திங்களோர்முகஞ்செயத்திருத்திகழ்ந்தமார்வமுங்
கொங்குலாவுபாதநீர்குலுங்குகொண்டன்மேனியும்
பொங்குஞானவானிலேபொலிந்தசிற்சொரூபமே.

(இ-ள்.) சங்குஞ்சக்கரமுந்தரித்த தாமரைமலர்போன்ற கைகளும் சந்திரன்போன்றமுகமும் செகன்மாதாவான பெரியபிராட்டியார் வீற்றிருக்கு மார்பமும் மகரந்தப்பொடிமிகுந்த தாமரைமலர்போன்றபாதமும் நீர்மிகுந்த மேகமொத்த திருமேனியுமிகுந்த வடிவமாக ஞானகாசத்திலே விளங்கியிருக்குஞ் சிற்சொரூபமேயென்று பின்னுந் தோத்திரஞ்செய்வான்.—எ-று. (௪௩)

இப்பிறப்பிலென்னையாளுமின்பமேவுகொள்கையா
லப்பவென்னுடற்கிடுக்கணுகினுன்பெரும்புகழ்க்
கொப்புறுதெனப்பரிந்துயிரளித்தசெல்வமே
யெப்பயங்களுந்தவிர்க்குமீசவென்றிறைஞ்சினன்.

(இ-ள்.) இந்தப்பிறப்பிலே யென்னையாளும் இன்பம்பொருந்திய கிருபையினாலே அப்பனே யென்னுடலுக்கு இடுக்கணுண்டானால் உன்பெருங்கீர்த்திக்குக் குறைவென்று பரிவாயென்னுள்ளுயிரளித்த செல்வமே எந்தப்பயங்களுந் தீர்க்கும் ஈசனே என்று இறைஞ்சித் தோத்திரஞ்செய்தான்.—எ-று.

போற்றிசிற்றினஞ்செலப்புராதனத்தினுற்றனன்
தோற்றமுன்புகன்றுநச்சிதொன்னகர்க்கடைந்ததற்
கேற்றிருப்பதுணாகவென்றிசைத்தவாய்மையுன்னியே
நாற்றிசைபுகழ்ந்தவெங்கணாதனுநடந்தனன்.

(இ-ள்.) இப்படி தோத்திரஞ்செய்து சிற்சிறுநாள் போனபிறகு முன்னே நமக்குண்டாகிய சகுனத்தைச்சொல்லிப் பழமையான கச்சிநகருக்குப் போயதற்குத் திருஷ்டாந்தமறிந்துகொள்ளென்று சீநிவாசக்கடவுள் சொன்னவார்த்தையை நினைத்து நாலுதிக்கும்புகழும் எங்கள் நாயகன்நடந்தான்.—எ-று.

நற்புனன்மலிந்தகேழனதியினுத்தரத்துபூம்
பொற்பமைந்தசோலையுட்புகுந்திருந்தகாலையிற்
சொற்பதத்தருச்சனைக்குத்துன்பமுற்றதென்னவே
கற்பிலக்குமிப்பெண்ஞ்சுகவலைகொண்டுழன்றதால்.

(இ-ள்.) அப்படிப்போய் நல்லசலமிகுந்த வராகநதிக்குவடபுறத்திலே அழகான பூமலிந்த ஒரு தோப்புக்குள்ளே யிறங்கியிருக்கிற வேளையிலே பூஜைசெய்கிறதற்கு துக்கம்வந்ததென்று கற்புள்ள இலட்சுமியம்மாள் மனக்கவலைகொண்டு வருத்தமாயினர்.—எ-று. (௪௬)



மாயனந்தமங்கைதன்வருத்தமுள்ளுணர்ந்துமென்
றாயவன்பனுக்கிவைசொலத்தொடங்கிகண்ணியுன்
னேயபுன்னிதன்றவத்துமேமுன்னிவாடினு
ளாயநங்கையைப்பினையழைத்துடன்செலென்றனன்.

(இ-ள்.) அந்தச்சமயத்திலே சீநிவாசக்கடவுள் அந்த இலட்சுமியம்மாளிட வருத்தத்தை யறிந்து மேன்மையும் பரிசுத்தமுமுள்ள தன்னன்பனுக்கு இதைச்சொல்லவேண்டுமென்று அக்கிரகாரத்திற்குப்போய் உனக்குரியமனமான பெண்சாதி தன்தவத்தை நினைத்துவாடுகிறாள் அந்தப்பெண்ணை உன்பின்னே அழைத்துக்கொண்டு போவென்று சொன்னார்.—எ-று. (௪௭)

ஓதுவேலையூரினின்றுழன்றுவாடுமின்பனன்
மாதையங்கழைத்துடன்வரப்புரிந்துகச்சியான்
பாதசேவைகண்டுமுன்பகர்ந்தமேலைவாயலின்
வீதியுட்புகுந்திருந்தவிதமுணர்ந்துரைசெய்வாம்.

(இ-ள்.) அப்படி சொல்லக்கேட்டு ஊரிலேயிருந்து துயரம்பெற்று வாடும் [illegible] இலட்சுமி யென்னும் என்தாயாரை அங்கே [illegible] வரும்படிசெய்து [illegible] ஞ்சிபுரியிலே தேப்பெருமான் திருவடி சேவை [illegible] மேற்கோபுரவாசல் வீதிக்குவந்து [illegible] சொல்லுவேன்.—எ-று. (௪௮)

பதி[illegible]ன்றதுஞ்
[illegible]லங்கொடி[illegible]ராமுதற்
[illegible]மொன்முருகியுகந்து[illegible]ழதலுங்
கைத்தலத்துநெல்லிகனிக்கி[illegible].

(இ-ள்.) சனங்களிழந்து குறைந்த [illegible] இருக்கிறதும் அதைச்சுற்றிமுள்ளுள்ள செடிகள், புதர்கள், மணாடி, பாம்பு முதலானவை மனச்சந்தோஷமாய்த் தன்குடும்பத்துடனே குடியிருந்து வாழ்வதையும் எல்லாம் உன்னுடைய கைநெல்லிக்கனிபோற் கண்டான்.—எ-று. (௪௯)

வீதிவாயின்முதுமையோரவினவமுன்புமாயனு
ரோதுவண்ணமேயுரைத்ததுன்னியுன்றனோர்மையா
னோதுகண்டுசொல்வனென்றியம்பியெங்களன்னையுக்
காதிலங்குசோலைமேவியபதிக்குநண்ணினான்.

(இ-ள்.) சனங்களிழந்து இருப்பதை அந்த வீதியினிடத்திலிருக்கும் பெரியவர்களைக்கேட்க அவர்கள்முன்பு சீநிவாசமூர்த்தி சொன்னபடியே சொல்ல அறிந்துகொண்டு உன்பெருமையை நானெவ்விதமாய்க்கண்டு சொல்லு

வேனென்று நாராயணனைத்தோத்திரித்து எங்களண்ணலாகிய அநந்தநாதன் கூடவந்தவர்களுடனே மகரந்தப்பொடிமிகுந்த பூஞ்சோலை சூழ்ந்திருக்குந் தன்னூருக்குவந்து சேர்ந்தான்.—எ-று. (ரு0)

நண்ணியங்கிருப்பமுன்செய்நற்றவப்பயத்தினே
னண்ணலுக்குவந்துவந்தெணக்கரம்புகன்றனன்
கண்ணனென்னவன்பருங்கசிந்துளன்புமீறிநற்
புண்ணியாவதெங்களுட்புகட்டிடென்றிறைஞ்சினர்.

(இ-ள்.) அப்படி வந்திருக்கிறகாலத்திலே முன்செய்த நல்ல தவபலத்தினாலே யென்னண்ணலாகிய அநந்தநாதனுக்குச் சந்தோஷமாகவந்து திருமந்திரவுபதேசஞ்செய்தார் சீநிவாசமூர்த்தியென்று சொல்லக்கேட்டு திருமாலடியார் உள்ளன்பு மிகுந்து நல்லபுண்ணியனே அதையெங்கள் மனத்திற்குத் திருத்தியடையும்படியாய்ச் சொல்லவேண்டுமென்று வணங்கினார்கள்.—எ-று.

மல்லலம்புவிக்குமாமகட்குநாதனானவன்
துல்லைதங்குமார்பனக்குருச்சிறந்தகோலனே
தொல்லைவக்தருள்புரிந்துகந்தவின்பநேர்மையை.
நல்லனந்தநாதனன்பனற்றவர்க்கியம்புவான்.

(இ-ள்.) வல்லமையும் அழகும்பொருந்திய பூமிதேவிக்கும் மகாலட்சுமிக்கும் நாயகன் திருத்துளபமாலையணிந்த மார்புள்ளவன் பரமதேசிகரூபமாகவந்த பழமையானதேவன் அதிசீக்கிரமாகவந்து கிருபைசெய்து மகிழ்ந்த இன்பமான தன்மையரலி அநந்தநாதனுக்கு அடிமையான பரந்தாமன் நன்மையான தவமுள்ள திருமாலடியார்களுக்குச் சொல்லுவான்.—எ-று. (ருஉ)

திருமணப்படலம் முற்றிற்று.

ஆக படலம் கூ-க்கு திருவிருத்தம்-சஉரு.

---

## உபதேசப்படலம்.

---

மன்னுதென்திருப்பதிக்குவந்திருந்தகாலையிற்
கன்னிமாதமேவகன்னிகாரமாவருக்கைசூழ்
தென்னுலாவுமாலமர்ந்ததிண்மலைக்குகந்துபோம்
பொன்னிலங்குமார்பனைப்புகழ்ந்துகண்டிறைஞ்சினன்.

(இ-ள்.) கேளுங்கள் திருமாலடியார்களே அப்படி அநந்தநாதன் நிலைபெற்ற தென்திருப்பதிக்கு வந்திருக்கிறகாலத்திலே புரட்டாசிமாதம் சிறு செண்பகமரங்கள் மாமரங்கள் பலாமரங்கள் சூழ்ந்து அழகு உலாவிய சீநிவாசமூர்த்தி யெழுந்தருளியிருக்கும் பெருமையான திருமலைக்கு மகிழ்ச்சியாகப் போய் மகா இலட்சுமியிருக்கும் மார்பையுடையவனைப்புகழ்ந்து கண்டுவணங்கினன்.—எ-று. (க)



தாருலாவுமாயனஞ்சரண்பணிந்தபின்னரே
சீருலாவுமெய்வராகதீர்த்தமேற்றடத்தினிற்
பேருலாவுமன்பரோடிப்பிலத்தடிக்கணி
லேருலாவுமனையிலெங்களெந்தைசென்றிருந்தனன்.

(இ-ள்.) அப்படி பூமாலையணிந்த சீனிவாசமூர்த்தியினது அழகிய சீர்பாதத்தை பணிந்தபின்பு சிறப்புப்பொருந்திய மெய்மையான வராகதீர்த்தத்திற்கு மேற்பாரிசக்கரையிலே பெருமைபொருந்திய அடியாருடனே அரசமரத்தடியிலே இருக்கிற அழகுபொருந்திய ஒருவீட்டிலே எங்களையன் வந்திருந்தான்.—எ-று. (உ)

வேறு.

அவனுற்றகாலைவரையதினிற்குநீலமுகிலருள்பெற்றவண்ணலெ
திரே, புவனித்தலம்பணியுமறையோனெனச்சிரம்பொலிமஞ்சளொ
ளிர்சாலுவைத், திவளப்பன்னிருநாமமலரிக்கனலொன்னதிகழுத்த
ரீகவுடையு, மூவமிக்கவரிதானதிருவொப்புமனையிருவருயர்தோளி
லாராதனை.

(இ-ள்.) அப்படி அங்கே இருக்கிறவேளையிலே அந்தத்திருமலையில் நின்ற திருக்கோலமா யெழுந்தருளியிருக்கும் நீலமுகில்போன்ற சீனிவாசமூர்த்தி தன்னருள்பெற்ற அநந்தநாதன்முன்னே இந்தப் பூமியெல்லாம் பணியும்படியான பிராமணனைப்போல சிரத்திலே பிரகாசமான மஞ்சள் சாலுவையும் விளங்கிய பன்னிருதிருநாமமும் அலரிப்புஷ்பம்போன்ற வொளிவான உத்தரீயமும் ஒப்பில்லாத மகா இலட்சுமிக்குச் சமானமான இரண்டுதேவிமாரும் உயர்ந்ததோளிலே ஆராதனையுமுள்ள திருப்பூக்கூடையுமாக.—எ-று. (௩)

இவையுற்றவளமேனியொளிவீசிவரவையனெதிர்கொண்டிறை
ஞ்சியுறைவா, னவையற்றவருளாளவடியார்க்குமெய்ஞ்ஞானகமொ
த்தபரனேயிவண், கவையொப்பதுனையென்னவுனதற்றொழிற்குரி
யகனமந்திரந்திருமணு, மெவருக்குமரிதானவாசாரவகையுதவவிங்
கெய்தலெனமொழியவே.

(இ-ள்.) இவைகளெல்லாம் பொருந்திய வளமையான திருமேனி பிரகாசிக்க வந்தமாத்திரத்திலே எங்களையன் எதிர்கொண்டுபணிந்து சொல்லுவான் குற்றமற்ற அருளாளனே அடியார்களுக்கு மெய்ஞ்ஞானமலையொத்த பரமனே இவ்விடத்துக் கென்னகாரியமாக எழுந்தருளினீரென்றுகேட்க உன் தொழிலுக்குரித்தான கனமாகிய திருமந்திரமுந் திருமண்ணும் யாவருக்குமரிதான ஆசாரவகையுங் கொடுக்க இங்கே வந்தோமென்று சொன்னார்.—எ-று.

எங்குலக்குரவனுமொருசைவனுமைமுன்னொழிலஞ்செழுத்து
வெண்ணீ, றங்கத்தணிந்தபடியுபதேசநெறியுன்னியன்றுமுதலி
ன்றளவுமே; சங்கேதமிடமின்றியாருகாலையுனதுமொழிதனையெண்

ணிதிருமண்ணிடிற், பங்கச்சொதுலகுக்குமிதுவேதகிலையானபரிச
ன்றெனக்கூறினன்.

(இ-ள்.) அப்படி சொல்லக்கேட்டு எங்கள் குலக்குருவாகிய வொ
ரு சைவக்குருவினிடத்திலே அழகான பஞ்சாட்சரமுந் திருவெண்ணீறும் ஆக
மத்திலே சொன்னபடிக்கு உபதேசவழியையறிந்து அன்றுமுத லின்றயவரை
க்குஞ் சங்கைக்கிடமில்லாமல் நடந்து வருகிறகாலத்திலே யிப்போது தேவரீர்
திருவாக்கையெண்ணித் திருமண்ணிட்டுக்கொண்டால் உலகத்துக்குப் பூங்க
மானசொல்லாகும் இது வேதகிலமையான காரியமல்லவென்று என்னையன்
சொன்னன்.—எ-று. (௬)

திரமேவுமறையோர்கணீறணிந்தது தள்ளிதிருமண்ணணிந்திருபுயத்
தருளானதுசங்குதிகிரிப்பொறிப்புற்றுமரிமந்திரஞ்செபித்துப்
பரிவாகவுறுதாசனெனவேதமுறையோதிபலசாதிதொழுதன்புறுங்
குருவாயினார்முன்புவடமத்தையகல்விட்டுகொண்டார்கள்வயிணவருமே.

(இ-ள்.) இப்படிசொல்லக்கேட்டு சீநிவாசக்கடவுள் சொல்லுகிறார் நில
மையுள்ள வேதமறிந்த பிராமணர்கள் திருநீறணிந்ததைத்தள்ளித் திருமண்
ணிந்து இரண்டுதோளிலும் பெருமானது சங்குசக்கர முத்திரைபெற்றுத் திரு
மந்திரமுஞ் செபித்து அன்பாகத் தாசனென்று பெயர்பெற்று வேதமுறையு
டனே யோதி பலசாஸ்திரங்களுந் தொழுது அடிமைகொள்ளும் ஆசாரிய
புருஷர்களாகிறார்கள் முன்னிருந்த வடமத்தையொழித்து வைஷ்ணவமானார்
களென்று பின்னுஞ் சொல்லுவான்.—எ-று. (௭)

எப்பொருளுமெவ்வுயிருமெத்தேவுமெப்பணியுமெழிலரவினி
ற்றுயிலுவோ, னப்பரமனன்றியெள்ளளவில்லதென்றுமுனமாசாரி
யார்புகன்றார், செப்பரியசிவனீருளுகுட்டமொன்றதிற்றிகழ்கின்
றதுறைபலவுள, வொப்பினீர்நனிபருகவெப்படியினிழிவதெனவுன்
னிசிலர்வருகாலையில்.

(இ-ள்.) அதுவுமல்லாமல் எந்தப்பொருளும், எந்தவுயிர்களும், எந்த
த்தெய்வமும், எந்தத்திருப்பணியும், அழகான பாம்பின்மேலே யோகநித்தி
ரைசெய்யும் அந்தப்பரமபுருஷனை அல்லாமல் எள்ளளவாகிலும் வேறில்லையெ
ன்று பூர்வாசாரியர் சொன்னார்கள் ஆகையினாலே சொல்லுதற்கரிதான சிவரா
கிகள் புசிக்கும் நீருள்ளகுளம் ஒன்றுண்டு அதற்குப்பிரகாசமான துறை
கள் பலவுண்டு; அதிலிருக்கிற சலத்தைப்புசிக்க எந்தத்துறையிலிறங்குவ
தென்று நினைத்து சிறிதுபேர்வருகிறபோது.—எ-று. (௮)

முன்னொருவனோர்துறையினின்றிக்கண்மருவுமென்மொழிய
வரவணமனுகியே, நன்னயவுடற்றுகிற்சுத்திசெய்தமுதுண்டுகவிவ
கற்றியவாறுபோற், பன்னரியதெய்வமொன்றுசமையநூலடியவர்கள்ப



லவவர்கருத்திலெதனை, யுன்னினுமந்திரத்துச்சிகிலையோமென்ப
தொன்றன்றிவேறில்லையால்.

(இ-ள்.) அந்தக்குளத்திலே முன்னாலே யொருவன் ஒருதுறையிலி
றங்கி இந்தத்துறை நன்றாயிருக்கிறது இதிலேவந்து சலஞ்சாப்பிடுமென்றழை
க்க அவசங்கப்படியேபோய் நன்மையான வுடலையும் வஸ்திரத்தையுஞ் சுத்தி
செய்து சலம் புசித்துக் களையைத் தீர்த்துக்கொண்டவாறுபோலப் பண்ணுகிற
தற்கரிதான தெய்வமொன்று சமையமுஞ் சாஸ்திரமும் அடியவர்களும் பல
வாயிருக்கும் எவர்கள் கருத்திலே எதை நினைத்தாலும் எந்தச்சமயத்து மந்திர
த்தின் முதனிலைமையிலே ஓமென்னும் பொருளொன்றேயல்லாமல் வேறில்லை.

சமையநூலடியவர்கடேவுபலவெனினொன்றுதாரணியிலிகழா
மலே, யுமையுமறிவோர்முத்தியடைவரென்றேவேதமறையுமதனு
லுனதுள, மிமையமலைதருகன்னிமுகினனதுசமையத்திருந்துமரிபூ
சைபுரிய, வமுதவ்யலுறுபுவியில்பெருமானெனப்பெயரையணிவித்
ததறிகிலாயோ.

(இ-ன்.) பின்னுஞ் சொல்வார் சமையமுஞ் சாஸ்திரமும் அடியார்க
ளுந் தெய்வமும் பலவாயிருந்தாலும் இந்தப்பூமியிலே யொன்றையு மிகழாத அ
றிவைப்பெற்ற பெரியோர்கள் மோக்ஷமடைவார்களென்று வேதஞ்சொல்லும்
ஆனபடியினாலே உன் மனம் இமயபர்வதராசன் பெற்ற பார்வதிக்கு நாய
கனாகிய சிவனது சமயத்திலிருந்தும் விஷ்ணுவைப் பூசைசெய்தபடியினாலே
சலமலிந்த வயல்சூழ்ந்த இந்தப்பூமியிலே பெருமாளென்று உனக்கு பெயரை வ
ருவித்தது தெரியாதோவென்று பின்னையுஞ்சொல்லுவார்.—எ-று. (௯)

முற்பவத்தரிபத்தனாகிட்டையினினின்றமுறைமையாலக்காலையில்
விற்பனக்குருவாகியெட்டக்கரந்துவயமிக்கசாமச்சுலோகம்
கற்பமுறினுங்கெடாவீராறுநாமமறிகாரணமளிக்கவந்தோனு [ளுன்.
சற்குணமிகுந்தெனதுமொழியுன்னுவாயென்றுசக்கரக்கரனருளி

(இ-ள்.) முன் செனனத்திலே நீ விஷ்ணுபத்தனாகி நிஷ்டையிலிருந்து
அந்தத்தேகமொழிந்து இந்த தேகமெடுத்த ஞாயத்தினாலே யிந்தக்காலத்தில்
சகல விற்பனங்களுமுண்டான ஆசாரியனாகி திருமந்திரம் த்வயம்மிகுந்த சரம
சுலோகம் ஊழிகாலம்வந்தபோதும் கெடுதலில்லாத பன்னிரண்டு திருநாமமும்
நீயறியத்தக்கதாகக் காரணகுருவா யனுக்கிரகஞ்செய்யவந்தோம் சன்மார்க்க
குணமிகுந்து என்னுடையசொல்லை யூன்றிக்கேட்பாயென்று சக்கராயுதந்தரித்த
கையனான கடவுளருளிச்செய்தார்.—எ-று. (௧௦)

கன்றுக்கிரங்கிவருகறவைநிகரென்னவேகடினமனமுளவடிய
னே, னென்றைக்குமெழுநிரையமதனிலணுகாமலேயெதிர்சென்ற
—ளாழியின், னன்றிக்குகைமாறறிந்திலேனின்மனநாடுவகையரு

ள்செய்குவாய், குன்றொருத்தகுணவமுதவென்றுதொழுதானெனது குருவாகவந்தபெரியோன்.

(இ-ள்.) கன்றுக்கு இரக்கத்துடனேவந்து பாலைக்கொடுக்கும் பசுவுக்குச்சமானமாகக் கடினமான மனமுள்ள அடியேன் என்றைக்கும் ஏழுநரகங்களிலும் விழாமல் அடியேனுக்கு எதிரேதோன்றுங் கிருபாசமுத்திரமே தேவரீர் செய்யும் நன்றிக்கு நான் கைம்மாறுசெய்ய அறியேன் ஆகையினாலே தேவரீர் திருவுள்ளத்துக்குச் சம்மதியானபடி கடாட்சிக்கக்கடவீர் மலைக்குச்சமானமான குணமுள்ள அமுதமேயென்று வணங்கினான் எனக்குக் குருவாகவந்துதோன்றிய பெரியோன்.—எ-று. (கக).

அதுபுரியவுட்காரெனக்கடவுளுரைபகரவன்பனெதிர்மொழிபுகலுவான், சதுமறைப்பொருளொத்தநீநிற்கவச்சொற்பகாதென்னவப்பொழுதிலே, நிதியுதவுமிறைபுவியிருக்கபணிசெய்குவோர்நெடியதும்பியினிலவுவா, ரிதிலொன்றுதோடமிலைமதுசொற்படிவடக்கெதின்முகமமைத்தியென்றான்.

(இ-ள்.) அப்படி சொல்லக்கேட்டு அந்தப்படியே செய்கிறேம் உட்காரென்று பரமதேசிகர்சொல்ல அதற்கு அநந்தநாதன் எதிருத்தாஞ் சொல்லுவான் நாலுவேதப்பொருளுக்குச் சமானமான தேவரீர் நிற்க அடியேனுட்காரத்தகாதென்று சொன்னமாத்திரத்திலே சுவாமிசொல்லுகிறார் சம்பளங்கொடுக்கிற துரை பூமியிலேயிருக்க வேலைசெய்கிற மாவுத்தர் உயர்ந்தயானையின்மீதிருக்க இல்லையா; ஆகையினாலே இதிலொரு தோஷமுமில்லை நான் சொன்னபடி அழகுடனே வடக்குமுகமாக உட்காரென்று சொன்னார்.—எ-று. ()

சுபமேயளிக்கவருகுருவானையான்முறைச்சொற்படிபுரிந்திடென்னி, லுபசாரமொன்றுபாவனைசெடனியளினுமோதரியவாசாரியர்க், கிபமாவுமுதலாயிடம்பவேடத்தினுமிசைபெற்றகதியுமுளதோ, வபராதமறுமனம்பிடிமுத்திபுரிகருவியாகுமெனவிதுபகருவான்.

(இ-ள்.) பின்னையுஞ் சொல்லுவார் சுவானகாரியத்தைக் கொடுக்கவந்த குருவாணைபடியினாலே சாஸ்திரத்திற் சொல்லு முறைமைப்படி செய்வாயென்று கேட்டால் கண்டு பூரவனைவுபசாரமான சீதக்குணத்தினாலேயுஞ் சொல்லுதற்கரிய ஆசாரியருக்கு யானை, குதிரை முதலான டம்பவேஷத்தினாலும் இசைவான மோட்சமுண்டாகுமோ ஆகையினாலே குற்றமற்ற சிஷ்நுடைய மனசுதானே மோட்சத்துக்கு வித்தாகுமென்று சொன்னார்.—எ-று. (கங).

பணிரண்டுதிருமணுடனீராறுபெயருடன்பலமருளுமெட்டக்கர
மினியவளமார்துயருஞ்சரமச்சுலோகமுமென்மைக்குமறவாமலே
கனிவுபெறவுபதேசமுதவவுன்பாதமேகதியென்றுதொழுதெழுந்தே
மனதுகளிகூடவவனுறைபுமொருமூவருமறைந்தருவமாயினரால்.



சுப்பிரமணியராதனழதியது)

(இ-ள்.) பின்னும் பன்னிரண்டு திருமண்ணிடுகிறதற்கு பன்னிரண்டு நாமமும் பலுங்கொடுக்குந் திருமந்திரமும் இனியவளமையான நல்லதுவயமுஞ் சரமசுலோகமுமாகிய இந்த பஞ்சசமஸ்காரமும் என்னைக்கும் மறவாமலிருக்கக் கிருபையுடனே உபதேசஞ்செய்ய உனது திருவடியேகதியென்று தெண்டன் சமர்ப்பித் தெழுந்திருந்து என்னையருனை அநந்தாதன் மனஞ் சந்தோஷமாக இருக்கிறசமையத்திலே அங்கிருந்த மூவருமறைந்து அருபமானார்கள்.—எ-று.

என்னிறைவனருண்மயக்கர்தெளிந்தங்குற்றவின்பமனதினிலெ
ண்ணியே, யுன்னீறுபெருங்கருணையென்னதறிவறியுமோவோதரிய
மெய்ச்செல்வமே, சொன்னவரையேயமுதவாரியேயென்றுட்டுதித்
தினியதிருமொழியிலே, முன்னமுறுபதிகமோதிடவங்கிருந்தவர்க
ண்முறிய தாயிதுணர்வுற்றதால்.

(இ-ள்.) அப்படி சுவாமி கடாட்சஞ்செய்தவுடனே என்னையன் அருண்மயக்கந்தெளிந்து அங்கேதனக்குவந்த இன்பத்தை மனத்திலெண்ணி தேவரீருடைய பெருங்கருணையை என்னறிவானது அறியுமோ சொல்லுதற்கரிதான மெய்ச்செல்வமே சுவர்ணமலையே அமுதக்கடலேயென்று தோத்திரஞ்செய்து இனிமையான திருமொழியிலே "வாடினேன் வாடிவருந்தினேன் மனத்திற் பெருந்துயரிடும்பையிற்பிறந்த" தென்று முதற்பதிகத்தைச்சொல்ல அங்கிருந்தவர்கள் மிகுந்த நித்திரைதெளிந்து எழுந்தார்கள்.—எ-று. (கரு)

உத்தமமிருந்தபரிமளவாடைவீசவங்குற்றவர்களண்ணலடி
யைச், சித்தமொடுதொழுதிந்தவாசமென்னெனவினவசிறிதுகண்டி
டுவளமையிது, பத்தருள்மகிழவுரைசெய்திருளகன்றபின்பரிதிவரு
முன்பெழுந்தே, நித்தியவராகபுட்கரணிதனிலணுகின்னீராடினனி
னிதரோ.

(இ-ள்.) அப்போது உத்தமமிருந்த பரிமளவாடைவீச அங்கிருந்தவர்களெல்லாம் அதைக்கண்டு அண்ணலாகிய என்னையன் திருவடியை மனத்திலே தொழுது இந்தவாசனை யென்னவிதமென்று கேட்க, தான் கண்டகாட்சியிலே சிறிது அந்த அடியார் மனமகிழ்ச்சியாகச்சொல்லி யிருள் நீங்கின பிறகு சூரியனுதயமாகு முன்னமே எழுந்திருந்து நித்தியமான வராகபுஷ்கரணிக்குப்போய் நன்மையான தீர்த்தமாடினன் இனிமையுடனே.—எ-று. (கசு)

திருமண்டரிக்கவுளமுன்னிசுக்கிதிவரச்சிகரிவாயிற்தபாடம்
பெருகுபந்தனமுறக்குழுமியம்பினபொழுதுபேச்விப்பிரவடிவமா
நமறைப்பொருடிட்டிவரயிற்றிறந்துவிடுமனவில்கலியாணநாம
பமண்டபமுறைந்துச்சுவக்கடவுளைதிருந்தாமுகத்தனுகி.

(இ-ள்) அப்படி தீர்த்தமாடி திருமண்தரித்துக்கொள்ள நினைத்து சந்நிதிக்குவர கோபுரவாசற் கதவு பெரிதான பந்தனஞ்செய்து அனேகங்கும்பல்
கள.

நிறைந்திருக்கிற வேளையில் ஒருபிராம்மண ரூபமா யருமறைப்பொருளாகிய சீநிவாசமூர்த்திவந்து திட்டி வாசற்கதவைத்திறந்து உள்ளேவிட்ட மாத்திரத்திலே கலியாணமண்டபத்துக்குப்போ யுச்சவமூர்த்திக்கெதிராக வடக்குமுகமாயிருந்துகொண்டு.—எ-று. (கஎ)

இரவினிற்குருவாகிவந்ததவுமெய்ப்பொருளேயிதயமதிலுன்னிதிரு
காகமலமிசைகுழைத்திடுகாலையுபதேசகாரணாசாரியவடிவாய்[மண்
குருமணிகுயிற்றுமகுடங்குழைகடுவளமணிகுளைகழற்றுயரிருபால்
விரிகிரணபீதகவுடைப்பொலிவுமாகவேவிமலதரிசனமுற்றதால்.

(இ-ள்) அப்படி இருந்துகொண்டு இராத்திரி குருமுகூர்த்தமாய் வந்து அனுக்கிரகஞ்செய்த மெய்யான திருவடிவை மனதிலே நினைத்து திருமண்ணைக் கையிலேகுழைக்கும்போது முன்னுபதேசஞ்செய்த காரண குருவடிவாகத் தரிசனந்தந்து உடனே நிறமான மாணிக்கமிழைத்த கிரீடமும் மகரகுண்டலங்களுந் துளசிமாலையணிந்த மார்பும் வீரகண்டாமணி யணிந்த பாதமும் இரண்டுபுறமும் பிராட்டிமார்களும் விரிந்த கிரணமுள்ள பீதாம்பரவுடையுமாகிய இந்தத் திருக்கோலத்துடனே தெரிசனந்தந்தான் சீநிவாசமூர்த்தி. ()

கண்டுளமகிழ்ந்துதுதிசெய்துதிருமண்பணிருநண்ணணிந்தெட்
டக்கரங், கொண்டுசெபமும்புரிந்தில்லணுகியன்றிரவு நருமைமந்தாம்
விழாவிற், றெண்டர்குழுருழவேகருடவாகனமிசைச்சோதிதெரிச
னைபெற்றபின், எண்டிசைவிளங்கிரதவுச்சவத்திலமதனிலின்பன
ணிவீதிதனிலே.

(இ-ள்.) அப்படி தரிசனங்கண்டு மனமகிழ்ச்சியாய்த் தோத்திரஞ்செய்து திருமண்பன்னிரண்டிடத்தி லணிந்துகொண்டு திருமந்திரஞ் செபஞ்செய்து வீட்டுக்குவந்து அன்றிராத்திரி ஐந்தாந்திருவிழா வாகையால் அடியார்கூட்டஞ்சூழக் கருடோற்சவ தெரிசனங்கண்டபின்பு எட்டுத்திக்கும் பிரகாசமான இரதவுற்சவத்தின்று என்னையன் அழகானவீதியில் எழுந்தருளினான்.—எ-று.

கோலவிரதத்தின்மிசைகண்டுதரிசித்துமதிகொண்டமுதசே
வையறிய, நாலுவடநடுவின்றணித்துதொழுதாவிரதநடைகொள்ளவி
ழுமளவிலே, யேலமகவுக்கிரங்கிடுமன்னையெனமுனமிசைந்தகுரு
வடிவாகியே, நீலமுகில்வந்தெடுத்தன்பனுயிருதவுமங்கிலைகண்டனா
பபதெவனே.

(இ-ள்.) அப்படி அழகான இரதசேவை தரிசனஞ்செய்து பூர்ணசந்திரோதயம்போலொத்த திருமுகமண்டலசேர்வைகாண நாலுவிடத்துக்கு நவேநின்று தேருக்குச்சமீபமாயிருந்து சேவிக்கிறபோது இரதம் நடைகொள்ளுமளவில் என்னையன் இரதத்தடியிலே விழுந்தான்; விழுந்தமாத்திரத்திலே மிகவும் பிள்ளையினது வருத்தமறிந்து ஓடிவருந் தாயைப்போல் முன் பரமதேசிகவடிவமாய் வந்த நீலமுகிலாகிய சீநிவாசமூர்த்தி தனக்கன்பான என்னுடைய





அனந்தநாதர்-2.பரமதேசிகர்-3.ஸ்ரீனிவாசமூர்த்தி



குமுளத்தில்பரமதேசிகன்

னுடைய உயிரையுதவினான் அந்த நிலையைக்கண்டு சொல்லவல்லவரெவரோ வொருவராலு மாகாது.—எ-று. (உ0)

அன்றுதிருவடகிரியெனப்பரமதேசிகர்க்கந்தாதியடிதொடங்கிச்
சென்றுருமுளப்பதியிலூசலும்பாடியேதிங்கண்மார்கழிதசமியி
னன்றிதருமேகாதசியூசலேகாதசியினொடுவளர்பிறைநிசியிலே
யென்றைக்குமிதுநடாத்திடவரங்கேற்றினனென்றுமெனையாளு[வோன்.

(இ-ள்.) அப்படி யெடுத்துவிட்டமாத்திரத்திலே அன்றையதினம் அப்போதுதானே திருவடகிரியிற் பரமதேசிக நற்றேசிக மண்டப முறைந்தென்ற முதற்பாடல் பரமதேசிகரந்தாதி அடிதொடங்கிப் பாடிக்கொண்டுதானிருக்குந் தென்திருப்பதிக்குவந்து முழுதும்பாடி ஊஞ்சலும்பாடி மார்கழிமாதத் தசமியிலே நன்மையைக்கொடுக்கும் அந்தத்திசையும் ஏகாதசியிலூஞ்சலும் வளர்பிறை ராத்திரியிலே என்றைக்கு மிவ்விதமாக நடக்கும்படியாயரங்கேற்றினான் என்னையாளும் அனந்தநாதன்.—எ-று. (உக)

வேறு.

அத்தினத்திற்கருடன்மிசையணிதையமாவாசையினிற்
பத்தியொடுவிமானமிசைமாண்புறவுற்சவநடத்திச்
சித்தமொடுகும்பமதித்திங்கடினகரனுறுநாள்
புத்திமகிழ்த்திருவிழாப்புரிந்தூசலிடுசெவ்வி.

(இ-ள்.) அப்படி யரங்கேற்றி அன்றையதினஞ் ஸ்ரீவிலாசமூர்த்தி கருடோற்சவஞ்செய்து அழகான தையமாவாசைக்குப் பத்தியுடனே விமான வுற்சவஞ் செய்து அன்புடனே மாசிமாதம் அமாவாசைதினத்திலே மனமகிழ்ச்சியோகத் திருவிழா செய்வித்து திருவூஞ்சலாட்டிவைக்கிற வேளையில்—எ-று.

பரமதேசிகவுருவாய்ப்பரிவுடனேயெழுந்தருளித்
திருநாராயணபுரத்திற்சேர்ந்திருக்குமொருமறையோ
னுருவெனைநேர்வயிணவனுமுயர்ந்ததிருத்தண்டுபிடித்
தரியவெதிதென்னரங்கத்தனுருவணியவனேகி.

(இ-ள்.) அந்தவேளையிலே பரமதேசிகவடிவமாய் அன்பாகச் சீவிலாசமூர்த்தி எழுந்தருளி திருவுளம் பற்றுவார் திருநாராயண புரத்திலிருக்கும் ஒரு பிராமணன் என்னைப்போலே உருவமுள்ள வைஷ்ணவன் உயர்ச்சியான திருத்தண்டு பிடித்துக்கொண்டு அருமையான யதீசுவரன் அழகான ஸ்ரீரங்கத்துக்கு வருவான் நீ அவ்விடத்திற்குப் போவென்று பின்னுஞ் சொல்லுவான்.—எ-று. (உங)

அங்கருடமண்டபத்திலருட்குருவினந்தாதி
பொங்குளமோடோதவவண்பொலிமறையோனணுகிடுவான்
றுங்கமந்திரமுந்துவயஞ்சரமசுலோகப்பொருளைச்
சங்கையறத்திட்டாந்தநானறிந்துவாவென்றான்.

(இ-ள்.) அங்கேபோய் அழகான கருடமண்டபத்திலே கிருபையுள்ள பரமதேசிக சந்ததியைச் சந்தோஷ மனத்துடனே நீ யவ்விடத்திற் தோத்திரஞ் செய்துகொண்டிருந்தால் நான் முன்சொன்ன அழகுள்ள பிராமணன் அவ்விடத்திற்கு வருவார் உனக்கு நாம் சொல்லியிருக்கிற உயர்ச்சியான திருமந்திரமுந் துவயமுஞ் சரமசுலோகத்துக்குப் பொருளையும் உன் மனக்கலக்கமறத் திருஷ்டாந்தமறிந்துகொண்டு வாவென்று திருவுள்ளம்பற்றினான். (உச)

அந்தமொழியறிந்துதொழுதகன்றகன்றுபின்றைநா
ளெந்தையெழுந்தருளரங்கமேவிவடகாவிரியின்
வந்தபொழுதினிற்கூடிவருநால்வருடனிருளின்
விந்தைமரநீழல்கரைமேடுசேரவனக்காடும்.

(இ-ள்.) அந்தத்திருவாக்கையறிந்து சேவித்து அன்றையதினம்போய் மறுநாள் என்னையன் எழுந்திருந்து கிருபையுள்ள ஸ்ரீரங்கத்துக்குப்போய் வடகாவேரிக்குச் சமீபத்தில் வந்தவேளையிலே கூடவரப்பட்ட நாலுபேருடனே இருட்டுவேளையிலே அழகான மரத்துநிழலும் நதிக்கரையான மேடும் நாணற்காடு நேர்ந்தது.—எ-று. (உரு)

நேரிடலாலுளமயங்கிநெறிதடுமாறியபொழுதிற்
பேரிருளிற்பதிகனெனப்பேசுமறையோனுருவாய்க்
கூரொளிராழியங்கரத்தான்குறுகியவணிரெக்த
வூரென்லேவவினாவவருடன்றொழுதுபகருவார்.

(இ-ள்.) அப்படி நேரிட்டபடியினாலே மனமயங்கி வழிதடுமாறிக் கொண்டிருக்கிறவேளையிலே மிகுந்த இருட்டிலே வழிநடக்கும் பிராமணனென்று சொல்லாநின்ற ரூபத்துடனே கூர்மையும் பிரகாசமுமுள்ள சக்கரக்கரனாகிய சீனிவாசமூர்த்தி அவ்விடத்திற்கு வந்து எவ்வூரென்று கேட்க அவருடனே தொழுது சொல்லுவான் என்னையன்.—எ-று. (உசு)

எங்களூரங்குமுளமிவ்வனந்தநாதனிரு
பங்கயச்சேவடிகாணப்பரிவாகிவந்ததுகண்
டங்கிநெறியறியாமற்றடுமாறலெனமறையோ
னிங்கெனதுபின்வருகவென்றுமுனேநடந்தனனால்.

(இ-ள்.) எங்களூர் குமுளம் இந்த அழகிய மணவாளனது தாமரைமலர்போன்ற இரண்டுசேவடியைத் தரிசிக்க ஆசையால் இவ்விடத்திற்கு வந்தோம் இங்கே வழிதெரியாமற் றடுமாறிக்கொண் டிருக்கிறோமென்று சொல்ல அந்தப்பிராமணன் இங்கேயென் பின்னேவாருங்களென்று முன்னே நடந்தார்—எ-று. (உஎ)

உத்தரகாவிரியணுகியுயர்சிகரிமுன்றெரித
லத்தலத்தின்மேற்கொளிகளங்கருடவுச்சவத்தின்.

132 பக்கம் - 25 - பாட்டு. 81



ஸ்ரீரங்கம்போகும்போது காவேரிக்கரையில் பெருமாள் வழிகாட்டுகிறது.

வைத்தவிளக்கென்றுகாவள்மையாவதுகாட்டிச்
சித்தனெனமறைந்தனனச்செயலறிந்தானென்னையன்.

(இ-ள்.) அப்படி நடந்து திருக்காவேரிக்குவந்து உயர்ந்தகோபுர முன்னே தெரியுதே அதுதான் ஊர், அந்த இடத்திற்கு மேற்கே பிரகாசம் தெரிகிறது அழகான கருடவுச்சவத்தின் தீவட்டிவெளிச்சமென்று திருக்கையினாலே அந்தவளமையைக்காட்டிச் சித்தனைப்போலே மறைந்தனர் அந்தச்செயலையறிந்துக்கொண்டான் என்னையன்.—எ-று. (உ௦)

என்னப்பனெம்பெருமானிவ்வுருவாய்வந்தானென்
றன்பரிவந்தபேருடனேயுசாவிமிகத்தோத்திரித்துப்
பொன்னப்பெருமானிற்புலம்பிப்படர்க்தேகிப்
பன்னகத்தின்மேல்வளரும்பணிக்கனைக்கண்டுளமுவந்து.

(இ-ள்.) என்னையன் எம்பெருமான் இந்தத்திருவடிவாக வந்தானென்று நினைத்து வணங்கி தன்னுடனே வந்தபேரோடே இதைச்சொல்லி மிகவுந் தோத்திரித்து அந்த வடதிருக்காவேரிமணலிலே சுவாமி என்று தெரியாமற் போனேனென்று விசாரத்துடனே பலபலவிதமாய்ப் புலம்பி நடந்துபோய் ஆதிசேஷன்மீதிலே யோகநித்திரை செய்யுங் குருவாகிய அழகிய மணவாளனைக்கண்டு மனமகிழ்ந்தானாகப் [illegible]. (உக)

இரவகலப்பின்றைநாளெழுந்துகாவிரியாடிக்
கருடனெதிர்மண்டபத்திற்கஸ்தூரியரங்கனடி
பரவியந்தாதியைப்புகன்றுபாகவதசேவைசெய்து
மருவலுமுன்மாலுரைத்தமாதவனைக்கண்ணுற்றான்.

(இ-ள்.) அப்படி தரிசித்து அன்றிராத்திரிபோக மற்றநாளெழுந்திருந்து திருக்காவேரியிலே தீர்த்தமாடிக் கருடசன்னிதிக்கு எதிர்மண்டபத்திலே கஸ்தூரி நம்பெருமாள் திருவடிகளைப்பணிந்து பரமதேசிகரந்தாதியைத் தோத்திரித்து பாகவதசேவை செய்துகொண்டிருக்கிற வேளையிலே முன்னே ஸ்ரீநிவாசமூர்த்தி சொன்ன எதீசுவரன் அவ்விடத்திலேவர அவரைக்கண்டான்.

கண்டவுடனிறைஞ்சமனக்கனிவையறிந்தம்முறையோன்
மண்டலத்துன்னூரெதுபேர்வழங்கெனவென்றந்தையுன்றன்
றொண்டனேனிடங்குழளஞ்சுப்பராயப்பெயரோ
னெண்டிசையோர்களுக்காசேயெனக்கருள்செயென்றனனால்.

(இ-ள்.) அப்படி கண்டவுடனே தெண்டன் சமர்ப்பிக்க என்னையன் மனத்தன்மையறிந்து அந்த யதீசுவரன் இந்தப் பூமியிலே உன்னூரெங்கே உன் பெயரென்ன சொல்லென்று கேட்க என்னையன்சொல்லுவான் தேவரீருக்குத்தாசன் என்னூர் குழளம், என்பெயர் சுப்பராயன் எட்டுத்திக்கிலுமுள்ள

அடியார்களுக்கெல்லாம் இராஜனே யென்மீதிற் கிருபைசெய்ய வேணுமெ ன்றான்.—எ-று. (௬௧)

கப்பராயப்பெயர்க்குச்சொற்பெரியவடமொழியி
லெப்பொழுதுமனந்தனெனவியைந்துறையுமதனாலே
யெப்படியுன்றமமெழிலனந்ததாசனெனச்
செப்பினோநீயுமதுசெய்யென்றானையமிலோன்.

(இ-ள்.) அப்படி சொல்லக்கேட்டு சுப்பராயனென்றபெயருக்கு சொல்லுதற்கரிய வடமொழியிலே எப்பொழுதும் அனந்த னென்ற நாம மிசைந்திருக்கும் அதனாலே யொப்பில்லாத உன்பெயரோங்கத்தக்கதாக அநந்ததாசனென்று சொன்னோம் நீயுமப்படி சொல்லென்று சொன்னார் குற்றமற்ற எதிசுவரன்.—எ-று. (௬௨)

கூவலை[illegible]டைக்கருமணியைவெளியெடுத்துச்
சோபமறவிளக்கிலது தோடமலவென்பவர்போ
னீபலங்கடருவிக்குநெறியுரைத்தாயென்றையன்
றூடதன்சொற்படியனந்ததாசனென்பேரென்றனரால்.

(இ-ள்.) அப்படிச் சொல்லக்கேட்டு [illegible] சொல்லுவதற்கு [illegible]ற்றுக்குள்ளே சேற்றிலே அழிந்துகிடந்த பிரகாசமான மாணிக்கத்தை வெளியிலெடுத்து களங்கமற விளக்கஞ் செய்தால் அது தோஷமல்லவென்று சொல்லுகிறதுபோலத் தேவரீர் பலன்களைக்கொடுக்கும் வழியைச் சொன்னீரென்று என்னையனைவன் அந்த எதிசுவரன் சொற்படியே அநந்ததாசன் என் பெயரென்று சொன்னான்.—எ-று. (௬௩)

கருணையினாற்பார்த்துத்தன்கருவையுருவாக்கியமீன்
பெருமையெனவிஞ்சுருவைப்பெரியோன்கணுறநோக்கித்
திருவளருத்தரமறுகிற்றிகழ்முளரித்திக்கடுத்த
வரியமணவாளமுனியாலயத்துள்வரவென்றான்.

(இ-ள்.) கிருபையினாலே தயவாகப்பார்த்துத் தன் மூட்டையைக் குஞ்சாக்கின மீனத்தின் பெருமையைப்போல இந்த அனந்தாதன் அவயவங்களை இந்த எதிசுவரன் திருக்கண்ணினாலே பார்த்து இலட்சுமீகரம்பொருந்திய உத்தரவீதியிலே அக்கினிதிக்குக்கடுத்த அருமையுள்ள மணவாளமாமுனி சந்நிதிக்கு வாவென்று சொன்னார்.—எ-று. (௬௪)

சொற்படிவந்தடியேற்குத்தூயமந்திரார்த்தமெலாங்
கற்பனைசெய்தருளென்னக்கருதியிங்குநாளனுகல்
விற்பனனேயுனக்காகமெய்ப்பொருளென்கனவினில்வக்
தற்புதங்கொண்டுரைத்தமொழியதுகேட்டியென்றுரைப்பான்.

134 - பக்கம் - 34 - பாட்டு -




கருடமண்டபம் - ஸ்ரீரங்கம் - கஸ்தூரிரங்கநாதன் மணவாளமாமுனி சன்னதி -



(இ-ள்.) அப்படி அவர்சொன்னபடிக்கு வந்து அடியேனுக்குத் தாய் மையரான மந்திரார்த்தங்களெல்லாங் கற்பித்தருளவேண்டுமென்று கேட்டிருக்கா னினைந்து இவ்விடத்திற்கு வந்து விற்பனமுள்ளவனே யுனக்காகப் பரவா சுதேவன் என் சொற்பனத்திலே வந்து அற்புதம் பொருந்திச் சொன்ன வார்த் தையைக் கேளென்று சொல்லுவார்.—எ-று. (௩௫)

இப்புவியிற்குமுனாகரிருக்கொருபாகவதனாங்
கப்பதியெய்துவன்சம்புகுலத்தவனென்னக்கருதேல்
அப்பாயப்பெயரோன்றாயவன்கேட்கும்பொருளைச்
செப்பென்றுன்னென்றனுக்குத்தெரிந்தவகையுரைப்பனால்.

(இ-ள்.) இந்தப்பூமியிலே குமுன்மென்று பெயருள்ளவன் அந்தத் தாய் மையானவன் கேட்கும்பொருளை யெல்லாஞ் சொல்லென்று திருவுளம்பற்றி னார் ஆனையால் எனக்குத்தெரிந்தமாத்திரஞ் சொல்லுகிறேனென்று சொல் லுவார்.—எ-று. (௩௬)

என்றுமணவாளமுனிவெழிற்கோயிற்பின்னுள்ள
அன்றுபரம்பரையாகச்சேர்ந்தபோயிருந்தமைத்த
மன்றலுறுமாத்தானமண்டபமாடத்துள்
வென்றியருட்பொருளுரைத்தான்மெய்யனெழுந்தடிபணிந்தான்.

(இ-ள்.) இப்படி யென்றுசொல்லி மணவாளமாமுனியினிடம் அழகுள் ளகோயிலுக்குப் பின்னாலே யிருந்த ஆசாரிய பரம்பரையாகப் பிரகாச மான சித்திரத்தினாலே எழுதியிருக்கும் பரிமளம்பொருந்திய ஆஸ்தானமண் டபமானகோயிலுக்குள்ளே யோரிடத்திலே உட்கார்ந்து வெற்றியான இரு மையுள்ள பொருளைச்சொன்னார் அதை மெய்யனாகிய என்னைய னறிந்து சே வைக்காலமானவுடனே எழுந்திருந்து அவர் திருவடியில் சேவித்துக்கொண் டான்.—எ-று. (௩௭)

அதித்தரங்கன்தெப்பவிழாத்தூய்மைகண்டேபின்னாளிற்
புதுக்கோவிலடிச்சென்றுபுகழப்பக்குடத்தான்றன்
மதுக்கமலத்தடிபணிந்துமாமாத்திற்றிருக்குடந்தைப்
பதிச்சார்ங்கக்கான்றனையப்பன்னுளிர்சக்கரக்கரனை.

(இ-ள்.) அப்படி பணிந்து தோத்திரஞ் செய்து ஸ்ரீரங்கநாதர் தெப் போ ற்சவத்தினிட சுத்தமுத்திரமான சேர்வைகண்டு மறுநாள் புதுமையான கோவிலடியென்னுந் தலத்துக்குவந்து புகழ்பெற்ற அபயக்குடத்தானென்னும் பெருமானிடத்தே பொருந்திய கமலம்போன்ற பாதத்தைப்பணிந்து பெரு மைபொருந்திய மகா நட்சத்திரத்திலே திருக்குடந்தை யென்னுங் கும்பகோ ணத்துக்குப்போய் சார்ங்கபாணியையும் நிறைந்த பிரகாசமுள்ள சக்கரபா ணியையும்.—எ-று. (௩௮)

சக்கரவர்த்தியின்மகனைச்சாரங்கபாணியைவணங்கி
மிக்கபுகழ்சிராமவிண்ணகரவிமலன்றன்
செக்கமலச்சரண்பணிந்துசித்திரகூடத்தரசைத்
தக்கதிருக்கோவல்வளர்சக்கிரியையடிபணிந்து.

(இ-ள்.) பின்னையுஞ் சக்கரவர்த்தித் திருமகனாகிய இராமஸ்வாமியையும் சாரங்கபாணியையும் வணங்கி மிகுந்த புகழுள்ள காழிச்சிராம விண்ணகரத்துக்குவந்து தாடாளப்பெருமான் சிவந்த கமலம்போன்ற பாதத்தைப்பணிந்து சித்திரகூடத்துக்கு வந்து தில்லைக்கோவிந்தராசனையும் திருக்கோவலெம்பெருமானையும் பணிந்து.—எ-று. (௩௯)

அதிகதிரவம்பதியனுகியருடெய்வநாயகனைப்
புகழ்ந்திறைஞ்சித்தண்குமுளாபுரிப்பரமதேசிகன்றன்
மகிழ்ந்துபணிந்தொளிர்சீநிவாசனடியிணைதொழுது
மிகுந்தநோன்பாசாரவிதிபூசைசெபமன்பும்.

(இ-ள்.) மறுபடி திருவஹீந்திராபுரத்துக்குவந்து கிருபையுடைய தெய்வநாயகனைப் புகழ்ந்து பணிந்து தானிருக்குங் குமுளாபுரத்துக்கு வந்து பரமதேசிகன்திருவடியை மகிழ்ந்து பணிந்து பிரகாசமான சீநிவாசக்கடவுளின் இரண்டுதிருவடிகளையுந்தொழுது பின்பு மிகுதியான விரதம் ஆசாரவிதி பூசை செபம் அன்பும்.—எ-று. (௪௦)

வரக்கருணைபுரியென்றன்மன்னவனேயென்றேத்தி
விரிப்பஞ்சபருவத்துவிழவாதிநடத்திடலாற்
றிருப்பணிசெய்தொளிரெங்கள்சீநிவாசப்பரன்வந்
திருக்குமிடமெங்கெனவேயின்பனுளத்தெண்ணினனால்.

(இ-ள்.) இவைகளெல்லாம் அடியேனுக்கு வரும்படியாய்க் கிருபைசெய்யவேணும் என்மன்னவனேயென்று தோத்திரஞ்செய்து மிகுந்த பஞ்சபருவத்திலே யுச்சவாதிமுதல் நடத்திவைத்துக்கொண்டு வருகிறபடி திருப்பணிசெய்து பிரகாசமான எங்கள் சீநிவாசக்கடவுள் எழுந்தருளியிருக்கிறதற்கு இடமெங்கே செய்விப்பேனென்று இன்பமான என்னையன் மனத்திலே தியானித்தான்.—எ-று. (௪௧)

வேறு.

அன்னபொழுதெங்களருளண்ணலுழைமேனித்
தென்னுலவுமெய்ப்பரமதேசிகனெனச்சென்
றெங்கிலங்களும்புகழ்ந்திறைஞ்சவினைதீர்ப்பா
மிந்நகரிலாலயமெனக்கமைதியென்றான்.

(இ-ள்.) அப்படி நினைத்தவேளையிலே யெங்களுக்குக் கிருபைசெய்யும் அநந்தனை னிடத்திலே திருமேனியழகு பொருந்திய மெய்ப்பொருளா



கிய பரமதேசிகனைப்போலே சீநிவாசமூர்த்தி யெழுந்தருளிவந்து எந்தப்பூமியும் புகழ்ந்து வணங்கச் சகல வினைகளையுந் தீர்ப்போம் இந்த நகரத்திலே எனக்கு ஆலயஞ்செய்யென்று அருளினார்.—எ-று. (௪௨)

செய்யுமணிதண்டலைசெழுங்குடிசிறப்புந்
துய்யதடமின்றடவிசூழுமிந்நகரத்
தையவுனதாலயமருத்தியொடியற்றக்
கையினிற்பொருளிலைகருத்தமிகிலாதோ.

(இ-ள்.) அப்படிசொல்ல அநந்தநாதன் சொல்லுகிறான் வயல்நிலமும் அழகான தோப்புகளுஞ் செழுமையான குடிகள் மிகுதியுந் தூய்மையான தடாகங்களுமில்லாமல் காடுசூழ்ந்திருக்கும் இந்த நகரத்திலே என்னையனே யுனக்கு ஆலயம் ஆசையுடனே செய்விக்க வென்கையிற் பொருளிருந்தால் முன்சொன்னதையெல்லாந் திருத்திக்கொண்டு ஆலயஞ்செய்விப்பேன் அது தேவரீர் திருவுளமறியாதோவென்று பின்னுஞ் சொல்லுவார்.—எ-று. (௪௩)

பாரினிற்பேராலயப்பழமையைப்புதுக்கி
லார்களுமருந்தனமளிப்பரெனவையன்
சீர்கழல்பணிந்துநாசெலுத்தவனநாதன்
பேரருள்சுரந்துவகைபேசுவதிசைப்பாம்.

(இ-ள்.) இந்த பூமியிலே பெரிதாகிய கோவில்கள் பழமையாயிருக்கிறவைகளைப் புதுக்கினால் எவர்களும் அருமையான திரவியங்கள் கொடுப்பார்களென்று என்னையன் சிறப்புள்ள திருவடியைப்பணிந்து விண்ணப்பஞ்செய்ய திருவேங்கடநாதனாகிய பரமதேசிகர் பெரிதான கிருபைமிகுந்து சந்தோஷமாகக் கடாட்சிக்கிற வகையைச்சொல்லுவோம்.—எ-று. (௪௪)

பன்னரியதென்திருப்பதியெனவிறைஞ்சேர்
சொன்னதறிவாயெனவென்றுன்றலமிதனைச்சென்றே
யின்னவிலையாலயமியற்றியெதிராகத்
தென்றிசையினிற்பணிகள்செய்புமதுகேண்.

(இ-ள்.) சொல்வதற்கு அரிதான தென்திருப்பதியென்று இந்த குமுளத்துக்குப்பெயர் முன்னமே சொல்லியிருக்கிற தறிவாயோ என்று சொல்லி யனது தோன்றலாகிய அநந்தநாதன் மனைக்குள்ளேவந்து தெற்குமுகமாக நின்றுகொண்டு இந்த நிலையிலே எனக்கு ஆலயஞ்செய்வித்து இதற்கெதிராக அழகுபொருந்திய தெற்குத்திசையிலே செய்யும் பணிவிடையை நீகேளென்று சொல்லுவார்.—எ-று. (௪௫)

கற்புனற்பண்ணிவனநிக்கரைவடக்கிற்
சொற்பரமதேசிகன்றன்றூயவடிவைத்தே
சற்குணமிலங்குராமன்சந்நிதிமுன்னாகக்
கற்பனைசெய்வாயினியகாசினியுவப்ப.

(இ-ள்.) நல்லசலமலிந்த வளமையான பம்பாநதியின் வடகரையிலே புகழ்பெற்ற பரமதேசிகருடைய தூய்மையான திருவடிகளை வைத்துச் சன்மார்க்கம்பிரகாசிக்க அநுமான் சந்நிதிக்குமுன்னுகை உண்டாக்கிவைப்பார் இனிமையான பூலோகம் புகழும்படியென்று பின்னுஞ் சொல்லுவார்.—எ-று. (௪௬)

கம்பைநதிபெண்ணை வைகைகாவிரிதண்கங்கை
செம்புநதியாடியுந்தீராதவினையெல்லா
மிம்பரொருகான்முழுகினேகுமதேதென்னிற்
பம்பைநதியின்பெருமைபாபவிநாசப்பேர்.

(இ-ள்.) கம்பைநதி, பெண்ணைநதி, வைகைநதி, காவேரிநதி, குளிர்ச்சியான கங்காநதி, செம்புநதி முதலான தீர்த்தமாடினுந் தீராதவினைகளையெல்லாம் இந்த நதியிலே ஒருகால் ஸ்நானஞ்செய்தால் தீர்ந்துபோம். அதேதென்றால், இந்தப்பம்பாநதியின்பெருமை அப்படி சகலவினைகளையுந் தீர்க்கிறபடியினாலே அதற்குப் பாபவிநாசதீர்த்தமென்று பெயராகுமென்று பின்னு மருளிச்செய்வார்.—எ-று. (௪௭)

தாரணிமிகப்புகழிச்சந்நிதிக்கெதிர்க்கோ
னேரிபுட்கரணியெனநிச்சயிப்பையிந்த
நீரினிற்படிந்திடுநிதிபெருகிவாழ்வா
ரோரணிதிருப்பதிக்கியைந்தபடிசெய்வாய்.

(இ-ள்.) இந்தப்பூமியிலுள்ளோர் மிகுதியாய்ப் புகழும் நமது சந்நிதிக்கெதிரே கோனேரிபுட்கரணியென்று ஒரு தீர்த்தமுண்டாகச்செய்த அந்ததீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்தவர்கள் அதிகசெல்வம்பெற்று வாழ்வார்கள் பின்னும் நடக்கவேண்டியவெல்லாம் அழகுபொருந்திய திருப்பதிதலத்திலே நடக்கிறபடி செய்வாயென்று பின்னுஞ்சொல்லுவார்.—எ-று. (௪௮)

பானுவுதயத்திலணிபம்பைநதியாடி
தினரக்ஷகப்பரமதேசிகனைப்பூசித்
தூனமிறசும்பினீரொருவனுற்றெடுப்ப
மானவரொடோர்மொழிவழங்கிடுதலின்றி.

(இ-ள்.) தினந்தோறுஞ் சூரிய உதயத்திலெழுந்திருந்து அழகான பம்பாநதி நீராடி தினரக்ஷகனுகிய பரமதேசிகன் திருவடியைப் பூசைசெய்து குற்றமற்ற வொருகுடத்திலே திருமஞ்சனம் ஒருவனெடுத்துக்கொண்டுவர மனிதருடனே யொருவார்த்தையுங் கொடாமலிருக்கவென்று பின்னுஞ்சொல்லுவார்.

பல்லியமுழக்கொடுபரிந்துவிசென்றலர்மேல்
வல்லிவளமேவுசீநிவாசனையருச்சித்
தல்லலறக்காரணவாசாரியைநினைத்தே
செல்வநன்னிவேதநங்கள்செய்தமுதுதுய்ப்பாய்.



(இ-ள்.) பின்னுஞ்சகல வாத்தியங்களு முழங்க ஆசையுடனே வந்து அலர்மேலுமங்கையையும் வளமைபொருந்திய சீநிவாசனுகிய என்னையும் ஆராதனைசெய்து நொருமனத்துடனே காரணசாரியனுகிய என்னை நினைத்துச் செல்வமான நல்ல நிவேதனங்கள்செய்து மறுபடி நீ அமுது புசிப்பாயென்று பின்னுஞ்சொல்லுவார்.—எ-று. (௫௦)

கன்னிமதியிற்பிரமவுச்சவங்கழிப்ப
வின்னவிதமேபுரியெனப்புகன்றுமாய
னென்னநிலையேமறைந்தருளவெனதை
னென்னதறிவேயெனவெழின்முனுமுவந்தே.

(இ-ள்.) புரட்டாசிமாதத்திலே பிரமோற்சவம் அழகாக நடத்திக்கொண்டுவாவென்றருளிச்செய்து சீநிவாசக்கடவுள் அந்தவிடத்திலேதானே மறைந்தருள அவனைப் பணிந்து தோத்திரித்து என்னறிவேயென்று அழகான மனத்திற் சந்தோஷம்பெற்றுன்.—எ-று. (௫௧)

தன்மனையிலாலயஞ்சமைப்பமனத்தெண்ணி
சொன்னமதற்கியாசகஞ்செயத்தொழும்பரைச்சொன்
மன்னுமுலகத்தனுப்பவந்தபொருளாலே
தென்னுமுந்திருப்பணிசிறிதியற்றுநாளில்.

(இ-ள்.) அப்படி சந்தோஷமாய் தன்மனையிலே யாலயஞ் செய்விக்க மனதிலே நினைத்துச் செம்பொன்னுக்காக யாசகஞ்செய்யும்படியாயது தன்னடியார்களுக்குச்சொல்லி நிலைபெற்ற உலகத்திலே யனுப்பி அதில்வந்த பொருளைக்கொண்டு அழகுபொருந்திய திருப்பணி சிறிது நடத்திவருகிறநாளையிலே யாசகஞ்செய்து பொன்கொண்டு வருகிறவர்கள் சொன்னவார்த்தையைச் சொல்லுவோம்.—எ-று. (௫௨)

கொண்டுவருதொண்டர்பலகுறிப்பருளுந்தெய்வ
மெண்டிசையினிற்புதைத்திருந்தனமெல்லாங்
கண்டுபணிசெய்வகையைக்காட்டிலனென்றே
மண்டலத்திலுள்ளவர்வழங்கினர்களென்றார்.

(இ-ள்.) அப்படி யாசகஞ்செய்யு மடியார்கள்வந்து சொல்லுகிறார்கள் உங்கள் குருவுக்கு பல குறிப்புகளை யெல்லாஞ் சொல்லுந் தெய்வம் இந்தப் பூமியிலே புதைத்திருக்கிற தனங்களையெல்லாங் காட்டிவைத்து அதிலே திருப்பணிசெய்கிறவகையைச் சொல்லவில்லையோ வென்று இந்தப் பூமியிலேயுள்ளவர்கள் சொல்லுகிறார்களென்று சொன்னார்கள்.—எ-று. (௫௩)

அன்பர்களுரைத்தமொழியன்னலதுகேளா
வென்பரன்றிருப்பணியியற்றுவகைகாணே
னென்கையிலிலாமலுமபுண்ணியமுமுண்டோ
தன்கருணையேயெனநவிற்றுபொழுதம்மா.

(இ-ள்.) அப்படி தன்னடியார்கள் சொன்னவசனத்தை அண்ணலாகிய அநந்தநாதன்கேட்டு உலகமப்படிச் சொல்லுகிறபடியினாலே என்னாண்டவன் திருப்பணிசெய்கிற வகையைக்காணேன் என்னசெய்வேன் பொன் கையிலில்லாமல் வருகிற புண்ணியங்களுண்டோ எனக்கு கிருபைசெய்யுஞ் சீநிவாசக்கடவுளே என்று சொல்லித் தோத்திரஞ்செய்யும்வேளையில்.—எ-று. (௫௪)

மண்டலத்துளாரியவடிவெனப்பொலிந்துட்
கொண்டுழலுமன்பனைதிர்கூறுமினியஞ்சே
லெண்டிசைபணிந்திலகுமென்மலைக்குச்செல்வோர்
கண்டிவணிவரும்படிகருத்திலறிவிப்போம்.

(இ-ள்.) அப்போது சீநிவாசக்கடவுள் பூமியிலே பரமதேசிக வடிவமாகத்தோன்றி மனவருத்தங்கொண்டுழலுந் தனக்கன்பனை எதிரேவந்து திருவுளம்பற்றுகிறார் இனி நீ விசனப்படவேண்டாம் எட்டுத்திக்கும் பணியப்பிரகாசிக்கும் என் திருமலைக்கு வருகிறவர்கள் இந்த இடங்கண்டு வரும்படி யவர்வரக் கருத்திலறிவிப்போமென்று பின்னுஞ் சொல்லுவார்.—எ-று.

வந்துபசும்பொன்முடிவழங்கும்வகைசெய்வோ
மந்தநரர்தீவினையறுத்தினிதருள்வோம்
நந்திருமலைக்குநிகரெனவுலகிலிந்தத்
தென்றலமெனுந்திருவாலயமியற்றிடுகவென்றான்.

(இ-ள்.) அப்படி பிரசைகளிவ்விடத்திற்குவந்து பசுமையான பொன்முடிப்பு தலைமயிர் முடியுங் கொடுக்கும்படியாச் செய்விப்போம். அப்படி வருகிற மனிதர்களுடைய தீவினைகளை யறுத்தோட்டியருள்வோம். நம்முடைய திருமலைக்குச்சரியாக இந்தத் தென்றிருப்பதி மகிமைபொருந்தியிருக்கும் ஆனதால் அப்படிவரும் பொருளைக்கொண்டு இங்கே எனக்கு அழகான ஆலயஞ் செய்துவையென்று திருவுளம்பற்றி யருளினார்.—எ-று. (௫௫)

வேளினையளித்தவன்விதித்தபடியென்னை
யாளுமுதலியாசகமகற்றிவளருந்தாம்
பாளமருள்சந்நிதிப்படிக்கணிவிறுத்த
நீளுமதியொன்றதிலொளிதிகள்சிறிதுற்ற.

(இ-ள்.) இவ்விதமாக மன்மதனைப்பெற்ற சீநிவாசமூர்த்தி யருளிச்செய்தபடியே என்னையாளு முதல்வனாகிய அனந்தநாதன் யாசகத்தைவிட்டு வளர்ச்சிபெற்ற தாம்பாளத்தை கிருபையான சந்நிதிப்படியினிடத்திலே வைக்க நீண்ட வொருமாதமளவும் அதிலே சிறிது தனங் காணிக்கைவந்தது.—எ-று.()

மாழைசிறிதாகவருமாபணிநடத்த
வேழையினியென்புரிவதென்றுளமயங்கிக்



142 பக்கம் 64 பாட்டு.



கோழையோ ரொழுத்துப்புட்குலத்தைவளர்த்தென்னச்
சூழ்வினைபுவிக்ககற்றுதூயனனிவாட.

(இ-ள்.) அப்படி பொருள் கொஞ்சமாய் வருகிறபடியினாலே மகத்தாகிய திருப்பணிநடத்த ஏழையாகிய நான் இனியென்னசெய்வேனென்று மனமயங்கி கோழையானது வோரொழுத்துப்பட்சியாகிய ஈக்குலத்தை வளர்த்துக்கொண்டதுபோலச் சூழ்ந்த வினைகளை இந்தப்பூமிக்கு நீக்கவந்த தூயனாகிய என்னையன் மிகவுங் கவலைபெற்றான்.—எ-று. (ருஅ)

மெய்க்குருவெனப்பெரியவெண்பரியிலேறி
மைக்கருணைமாமுகில்வழங்குவனினிப்பொன்
மொய்த்துவருமென்றருளமூன்றுதினத்துள்ளே
கைத்தமனமொத்தமுறநற்பரிசைசென்ற.

(இ-ள்.) அப்படி கவலையோடிருக்கிறவேளையிலேமெய்க்குருவாகியபரமதேசிகனைப்போல வெள்ளைக்குதிரையின்மீ தேறிக்கொண்டு கிருபைதங்கிய அழகாகிய நீலமுகில்போன்ற சீநிவாசமூர்த்தியெழுந்தருளிவந்து கொடுத்தருள்வோர் இனிமேற்பொருள்மிகுந்து வருமென்றருள, மூன்றுதினத்துக்குள்ளே முன்கவலைபெற்ற அனந்தநாதன் மனமிகுந்த சந்தோஷமாக நல்ல பரிசைகள் வந்தது.—எ-று. (ருகூ)

மந்தரஞ்சுமந்தசீநிவாசனுக்குமுன்னா
ளிந்திரனளித்தபெயரெங்கணுமொலிப்ப
வந்துபலசாதிமுடிமாதிறையளித்துச்
சுந்தரப்பொற்சந்நிதிதொடர்ந்துலவுகாலை.

(இ-ள்.) அப்படிவந்த பரிசைகளானது மந்தரகிரியைக் கூர்மாவதாரமாகச் சுமந்த சீநிவாசக்கடவுளுக்கு முன்னாலே கோவர்த்தனகிரியைக் குடையாயெடுத்தபோது தேவேந்திரனிட்டழைத்த கோவிந்தனென்னும் பெயர் எங்குஞ் சத்திக்கத்தக்கதாகவந்து பலசாதிகளு மயிர்முடியுங் காணிக்கையுங் கொடுத்து அழகானபொற்பிரகாசமுள்ள சந்நிதிக்குவந்து அந்தச் சனங்களுலாவிக்கொண்டிருக்கிறவேளையில்.—எ-று. (சுO)

அண்ணலிவையெண்ணுவனணுகிவருவோர்க்கு
நண்ணரியதீர்த்தமெழிலுடைபிரசாத
மெண்ணுநங்கையாலளிப்பதின்பமலவேதப்
புண்ணியர்காங்கொடுபுகழ்ந்துதவனன்றே.

(இ-ள்.) அந்தவேளையிலே என்னண்ணலாகிய அனந்தநாதன் ஒருயோசனைசெய்வான் இந்தசந்நிதிக்கு வருகிறவர்களுக்குக் கிடைக்கவரிதான தீர்த்தமும் அழகுபொருந்திய பிரசாதமும் என்றைக்கும் நமது கையினாலே கொடுக்கிறது இன்பமல்ல ஆகையினாலே வேதப்புண்ணியராகிய பிராமணர்கள் கை

யினுலே புகழ்ந்துகொடுக்கும்படி செய்வித்தால் நல்லதென்று பின்னும் யோசனைசெய்வான்.—எ-று. (சுக)

தொட்டிலிற்குழவியெனத்தொன்மையென்மனைக்குப்
பெட்டியிலிருந்தவிந்தப்பேரரசனிப்போ
தட்டிச்சல்லடக்தொடுத்துத்தாரணியுவப்ப
வெட்டிநடைகொள்வனெனவிவ்வகைபுரிந்தான்.

(இ-ள்.) தொட்டிலிலிருக்கும் பிள்ளையைப்போலே தொன்மையாகிய சீநிவாசமூர்த்தி யென்வீட்டுக்குள்ளே யொரு பெட்டியிலே யிருந்தார் இப்படி யிருந்த இந்தப்பேரரசனுகிய கடவுள் இப்போது தட்டியுஞ் சல்லடமுந் தரித்துக் கொண்டு பூமியெங்குஞ் சந்தோஷமாக எட்டிநடைகொண்டு வருவானைப்போலே இந்தவகை செய்தானென்று பின்னும் யோசனை செய்வார்.—எ-று. (சுஉ)

ஆதலினருச்சனையடியன்செயலாமோ
வேதியரைக்கொண்டிதுவிளங்கிடநடத்தித்
தீதறுமற்றூழியஞ்செயத்தகைமையாமென்
றோதரியதன்னினைவிலுன்னினனென்மன்னன்.

(இ-ள்.) ஆனபடியினுலே இனிமேல் ஆராதனை அடியேன்செய்யலாகாது பிராமணனைக்கொண்டு இந்த ஆராதனையைவிளக்கமாகச்செய்வித்து குற்றமில்லாத மற்ற ஊழியங்களைச் செய்வது தகைமையாமென்று சொல்லற்கரிய தன் மனத்திலெண்ணினன் எனது மன்னவனுகிய அனந்தாழ்வான்.—எ-று. (சுங)

அந்தரினைவுற்றதையறிந்துமலைநாதன்
வந்துபுகனும்பரிவுடனவனைநோக்கிச்
சிந்தொருகைகுல்லையொடுசிந்தனைபுரிந்தா
ரெந்தமரபாயிடினுமின்பரவராகும்.

(இ-ள்.) அப்படியந்த யோசனைசெய்ததை யறிந்து திருமலைநாதனுகிய சீநிவாசக்கடவுள் வந்து திருவுளம் பற்றுவார் ஆகையினுலே வணக்கத்துடனே என்னை யொருகை சலத்தினுலேயும் ஒரு தளத் திருத்துழாயினுலேயும் நினைத்துச்செய்தவர் எந்தக்குலமானுலும் எனக்கு அவரன்பராகுமென்று பின்னுஞ்சொல்லுவார்.—எ-று. (சுச)

கோடிமலராயிரக்குடஞ்சலங்கொண்டென்னை
வாடலறுபத்தியனுமாத்திரமுமின்றி
நாடுமெச்சுபூசைகற்பகாளளவுசெய்வார்
நீடுமறையோரெனினுநேயரலராமே.

(இ-ள்.) கோடிமலர்களும் ஆயிரங்குடத் திருமஞ்சனங்களுங் கொண்டு என்னை வாட்டமற்ற பத்தி யனுமாத்திரமுமில்லாமல் பூமியிலுள்ளோர்



தன்னை மெச்சும்படியான பூசை யநேககற்பகாலஞ் செய்தாலும் அவர்கள் மிகுந்த வேதந்தெரிந்த பிராமணர்களாகிலும் எனக்கிஷ்டமில்லாதவர்களாகுமென்று பின்னுஞ் சொல்லுவார்.—எ-று. (சுரு)

ஆகையிலுன்னன்பினுக்கடிமைகொண்டுவந்தோ
ஷீகவலைவிட்டெனைநிதமருச்சித்துள்ள
மூகமுறவந்தணர்க்குயர்துளபமற்றோர்க்
கீகுவதுதீர்த்தமுமிருந்தண்டுழாயும்.

(இ-ள்.) ஆனபடியினுலே உன்னன்பினுக்கு அடிமைகொண்டு சந்தோஷம்பொருந்தினும் நீ கவலையைவிட்டு என்னைத்தினந்தோறும் ஆராதனை செய்து மனத்திலே விவேகம்பொருந்த பிராமணருக்கு உயர்ச்சியான திருத்துளபமும் மற்றவர்களுக்குக்கொடுப்பது தீர்த்தமும் இசைவான திருத்துழாயுமென்று பின்னுஞ்சொல்லுவார்.—எ-று. (சுசு)

உன்னடியரைக்கொடுமுவந்துதவித்துப்
பன்னருழிலாங்கனிப்பழத்திருகல்பண்ணி
கன்னயச்சருக்கரைநறுங்கதலிமென்னி
மன்னுபலநற்றனிகையாய்த்தபல்விதங்கள்.

(இ-ள்.) உன்னடியார்களைக்கொண்டு மனது சந்தோஷமாகக் கொடுப்பித்துந் தேங்காய்த்திருகலும் அப்பவர்க்கங்களும் இனிமையான அருமையுள்ள சருக்கரையும் அழகான வாழைமரத்தின் சிரசிலே நிலைபெற்றிருக்கும் வாழைப்பழமும் நல்லதளிகை முதலான பலவிதங்களு மென்று பின்னுஞ் சொல்லுவார்.—எ-று. (சுஎ)

இவ்வகைநைவேத்தியமியற்றியுச்சவத்துக்
கொவ்வுவகைதோகையர்களோரிருவர்மேவச்
செவ்விபெறுமெய்யுருசெய்திடுவையென்றே
யவ்வுழிமறைந்தனனருட்கடவுளம்மா.

(இ-ள்.) இந்தப்படி நைவேத்தியஞ்செய்து உச்சவத்துக்கு இயற்கையாகத்தேவிமாருடனே யழகுபெறும்படி மெய்ம்மையான ஓர் திருவுருவஞ்செய்து உச்சவஞ்செய்யென்று சொல்லி அந்த இடத்திலே மறைந்தார் அருட்கடவுளாகிய சீநிவாசமூர்த்தி.—எ-று. (சுஅ)

மாதவனுரைத்தநிலைமாமனத்திலுற்றுக்
காதலொடுமாலைசதகம்புகன்றுமீனத்
தேதம்றுவுத்திரமேகாதசியிதுனத்
தோதவெனவென்குருசிலுண்மையொடுசாற்றி.

(இ-ள்.) அப்படி சீநிவாசமூர்த்தி யருளிச்செய்த நிலைமையைப் பெரிதான மனத்திலே நினைத்துக்கொண்டு ஆசையுடனே சீநிவாசமாலையுஞ் சீநி

வாசகதகமும் பாடி குற்றமற்ற பங்குனிமாத உத்திரத்திலே ஸ்ரீநிவாசமாலையும், ஆனிமாதம் பூர்வபக்ஷத்து ஏகாதசியிலே ஸ்ரீவாசகதகமும் என்றைக்கும் படிக்கும்படியா யென்றுசிலாகிய அனந்தநாதன் உண்மையாகச் சொல்லி யரங்கேற்றிவைத்தான்.—எ-று. (௬௯)

வையகம்புகழுஞ்ஸ்ரீநிவாசனிணையென்ன
வையமறவேளாருருவதனருகிரண்டு
தையலருமாச்சிற்பசாத்திரத்திலுற்ற
செய்கையறிவோர்கையிற்றிருக்கறமுடித்தே.

(இ-ள்.) மறுபடி பூமியெல்லாம் புகழுஞ் ஸ்ரீநிவாசக்கடவுளைப்போல் குற்றமற வொரு மங்களவிக்கிரகத் திருவுருவும் அதனருகே இரண்டு பிராட்டிமாருமாகச் சிற்பசாஸ்திரத்திலிருக்கு முறைமை தெரிந்தவர்கள் கையினாலே குற்றமறச் செய்துவைத்தான்.—எ-று. (௭௦)

பூசனைபுரிந்துவரப்பூவுலகிலுள்ளோ
ரீசனெனவந்தடியிறைஞ்சவினைதீர
வாசையொடுதக்கணையவரவர்கொடுப்ப
தேசிகசல்லாலயஞ்செழிக்கவமைவிப்பான்.

(இ-ள்.) அப்படி செய்வித்து ஆராதனை செய்துகொண்டு வருகிறகாலத்திலே அழகான பூமியிலுள்ளவர்கள் ஸ்ரீநிவாசக்கடவுளைத் தவிர வேறு தெய்வமில்லையென்று வந்து வணங்குகிறவர்கள் தீவினைகளொழிய ஆசையுடனே பொன்முடிப்புக் கொண்டுவந்து அவரவர் கொடுக்க அழகுமிகுந்த நல்ல கோவில் செழிக்கும்படி செய்விப்பான் என்னையன்.—எ-று. (௭௧)

மாதவனிருக்குமையமுன்றுதன்மனைக்கண்
கோதகன்றிலங்கிடும்வைகுந்தவிமானந்தென்
றோதியங்கடவுண்மகிழானந்தநிலையம்
பாதிமண்டபஞ்சிறந்தபாரிமண்டபங்கள்.

(இ-ள்) அப்படி ஸ்ரீநிவாசமூர்த்தி யிருந்து திருவாக்கருளிச்செய்தபடி தன் வீட்டினிடத்திலே குற்றமறப் பிரகாசிக்கும் வைகுந்தவிமானமும் அழகான ஆதிமூலக்கடவுளுக்கு மகிழ்ச்சியான ஆனந்தநிலயமும் அந்தராளமும் அர்த்தமண்டபமுஞ் சிற்பமான மகாமண்டபங்களும்.—எ-று. (௭௨)

பாவையஞ்சிகரிமதிட்பாருலகுவப்ப
யாவலினியற்றிஸ்ரீநிவாசனையவண்வைத்
தாவலொடுசோடசவுபசாரணையாலே
பூவைபொன்னிறப்பதருமம்பூசனைபுரிந்தான்.

(இ-ள்.) சித்திரம்பொருந்திய அழகான கோபுரமதில்களும் இந்தப் பூலோகம் ஆச்சரியங்கொள்ளும்படியாக மகத்தாகிய வல்லமையுள்ள அனந்தநாதன் செய்வித்து ஸ்ரீநிவாசக்கடவுளை யவ்விடத்திலே யெழுந்தருளச் செய்து ஆசையுடனே சோடசோபசாரத்தினால் பூவையாகிய அலர்மேன்மங்கைத் தாயாரின் நல்லதிருவடிகளையும் திரு ஆராதனை செய்துவந்தான்.—எ-று. (௭௧)



திவாகரனெனுங்கருடதேவனதுகோவில்
அவாவொடுகொடிக்கம்பமருகுபலிபீடஞ்
துவாரமதிலோரிருவர்சூழ்ந்தொளிவிளங்கச்
சுவாமிபுட்கரணியெதிர்தோன்றும்வகைசெய்தான்.

(இ-ள்.) பின்னுஞ் சூரியனைப்போலப் பிரகாசமான கருடதேவன் சந்நிதியும் ஆசையுடனே கொடிக்கம்பமும் அதைச்சேர பலிபீடமுமிரண்டு துவாரபாலர்களுஞ்சூழ்ந்து ஒளிவிளங்கும்படிச் செய்வித்துச் சுவாமி புஷ்கரணியெதிராகத் தோன்றும்படிச் செய்தான்.—எ-று. (௭௪)

பம்பைநதியுத்தரப்படர்கரையின்மீதே
யும்பரொட்டங்கஞ்சிறந்தொளிர்விமானங்
கம்பமுறுமண்டபஞ்சூழ்காவல்புரிவித்துத்
தம்பரமதேசிகன்சரணவணிருத்தி.

(இ-ள்.) பின்னும் பம்பாநதிக்கு உத்தரபாரிசத்திலே விசாலமான கரையின்மீது உயர்ந்த பிரகாசமான சிறப்புப்பொருந்திய அஷ்டாங்க விமானமுந் தூண்பொருந்திய மண்டபங்களுஞ் சுற்றிலும் மதிலுஞ்செய்வித்துத் தன் பரமதேசிகர் திருவடிகளை யவ்விடத்தி லெழுந்தருளப்பண்ணினான்.—எ-று. ()

அஞ்சனைகுமாரனெதிராகவுமைவித்தே
யெஞ்சலறுசத்திரமியைந்துபுடைசூழ
விஞ்சுபுகழ்நந்தவனமேவுமலர்ச்சோலை
செஞ்சொலெனநீர்பெருகுதிருநற்கூவம்.

(இ-ள்.) அப்படி செய்து அதற்கெதிராக அஞ்சனாதேவிபுத்திரனை அநுமான் சந்நிதியுண்டாக்கி இளைப்புநீக்கும் சத்திரங்களு மிசைவாகப் பக்கங்களிலே சூழச்செய்வித்து மிகுந்த புகழுள்ள நந்தனவனங்களும் மலர்பொருந்திய தோப்புகளும் புலவோர்சொல்லுந் தமிழைப்போல நீர்பெருகுங் குற்றமற்ற நல்ல கிணறுகளும்.—எ-று. (௭௬)

புங்கமிகுமந்தணர்பொருந்துமனையாதி
பொங்குவளமந்திரம்புரிந்தொளிவழங்க
மங்கலமிலங்குஸ்ரீநிவாசபுரமென்றே
யங்கதற்கியைந்தபெயராகவமைவித்தான்.

(இ-ள்.) பின்னும் உயர்ந்த பிராமணர்களிருக்கும் அக்கிராரமுதலான மிகுந்த வளமையுள்ள பலசாதி வீடுகளுஞ் செய்வித்து ஒளிமிகுந்த மங்களகரமான ஸ்ரீநிவாசபுரமென்று அதற்கிசைவாகப் பெயரமைவித்தான்.—எ-று. ()

இவ்வகைதிருப்பணியியற்றித்திரிகால
மொவ்வுசோடசத்தொடுமுபசாரணைசெய்தே
நவ்வியுறுமைம்பருவகல்விழவுநூற்றி
புவ்வரிவைத்திங்கள்பிரமோற்சவமியற்றி.

(இ-ள்.) இந்தவகையாகத் திருப்பணிசெய்வித்து திரிகாலமு மொருமையாகச் சோடசவுபசாரமுஞ் செய்து அழகுபொருந்திய பஞ்சபருவ உச்சவங்களும் நடத்தித் தவமிருந்த புரட்டாசி மாதத்திலே பிரமோற்சவஞ் செய்வித்து.—எ-று. (எஅ)

நித்தியம்பக்கத்திங்களேரும்வருடத்திற்
சித்தமொடுமுச்சவங்கள்செய்திடைவிடாமற்
பத்திநிறைவுற்றாசிவாசகத்தைமனத்துன்னி
யெத்திசைபுகழ்ந்துவந்திறைஞ்சிடவிருந்தான்.

(இ-ள்.) பின்னும் நித்தியோச்சவம் பட்சோச்சவம் மாதோச்சவும் வருஷோச்சவம் அன்புடனே செய்வித்து இடைவிடாமற் பத்திநிறைந்து சீநிவாசக்கடவுள் பாதத்தை மனத்திலே தியானித்துக்கொண்டெந்தத்திக்குகளும் புகழ்ந்து வந்து வணங்கும்படியா யிருந்தானென்னையன்.—எ-று. (எக)

மன்னுதென்குமுளநகர்மாயனெழின்மேவும்
பொன்னடியருச்சனைபுரிந்திடுவனென்றோர்
பன்னுமறைவேதியன்பகர்ந்தறிவிழந்தே
தன்னினியமானமதுதான்தவிர்தலுற்றான்.

(இ-ள்.) இவ்விதமாக நிலைபெற்று அழகுபொருந்திய குமுளநகரத்திலே சீநிவாசமூர்த்தி எழில்பெற்றிருக்கும் அழகிய திருவடிகளை யாராதனை செய்வேனென்று ஒருபிராமணன்வந்து பொய்சொல்லி யறிவிழந்து தனக்கினிமையான மானமுந்தவிர்ந்த நிலைபெற்றான்.—எ-று. (அ௦)

என்றவுடன்மாலடியரிவ்வனந்தநாத
னன்றிவளர்பூசனைநடத்தமறையோன்வந்
தன்றுரைபுகன்றதெனவாதிபரந்தாமா
வின்றவைதெரிந்திடவியம்பெனவியம்பும்.

(இ-ள்.) இப்படி சொல்லக்கேட்டவுடனே திருமாலடியார் சொல்லுகின்றனர், இந்த அனந்நாதன் நன்மைமிகுந்த ஆராதனைசெய்து வருகிறகாலத்திலே யந்தப் பிராமணன்வந்து அப்போது சொன்ன பொய்வசனமென்ன முதன்மையான பரந்தாமனே இப்போது அதையெங்களுக்குத் தெரியச்சொல்லுவாயென்று கேட்க மறுபடியும் சொல்லத்தொடங்கினான்.—எ-று. (அக)

உபதேசப்படலமுற்றிற்று.

ஆக படலம் எ-க்கு திருவிருத்தம் - ௯௦௭.

147-பக்கம்-2-பாட்டு- போலியாராதனைபடலம்-



# பொய்யாராதனையானபடலம்.

என்னரசாராதனையியற்றிவருஞான்று
செந்நெல்வயற்பொன்னிவளர்தேசமதிலுள்ளோன்
வன்னியொருவேதியன்மதத்தினிவன்பூசை
தன்னதெனவந்திடுசரித்திரமுரைப்பாம்.

(இ-ள்.) கேளுங்கள் திருமாலடியார்களே என்னரசனாகிய அனந்தநா தன் இவ்விதமாக ஆராதனைசெய்து வருகிற காலத்திலே செந்நெல் வயல் சூழ்ந்த காவேரிநதியால் வளமமைந்த சோழதேசத்தி லிருக்கப்பட்டவன் பிரமசாரியாகிய வொருபிராமணன் மதங்கொண்டு இந்தப்பூசை தன்னதெ ன்றுவந்து அவன்செய்த சரித்திரத்தைச் சொல்லுவேன்.—எ-று. (க)

வேறு.

அப்பூசுரனொருநால்வர்களடியாரெனமருவத்
தொப்பிக்குணமுள்ளாரெனத்துடிமேவியநடையோ
டப்புப்பெருகும்பம்பையினணிதென்றிசையணுகி
யொப்பற்றவெனண்ணற்கவனொருதூதனைவிடுவான்.

(இ-ள்.) அந்தப்பிராமணன் நால்வர்களைச் சேஷராகக்கூட்டிக்கொண் டுவா மத்தியபானஞ்செய்த குணமுள்ளவரைப்போலே துடியான நடையுட னே சலம்பெருகி வரும் பம்பாநதியின் அழகான தென்கரையிலே வந்திரு ந்துகொண்டு ஒப்பற்ற நமதண்ணலாகிய அனந்தநாதனிடத்துக்கு ஒருதூ தனைவிடத்தொடங்கினான்.—எ-று. (உ)

வந்தோமெழினதிநீர்மிகவரலாலிவணுற்றோந்
தொந்தம்பெறவளர்சந்நிதித்தொழிலார்குடைமேளங்
கந்தஞ்செறிவெண்சாமரைகவினுங்கொடிவிசிறி
யந்தம்பொழிசிவிகைச்சனரனைவோர்களுமிசைய.

(இ-ள்.) அந்தத் தூதனுடனே சொல்லுகிறான் இவ்விடத்திற்கு வந் தோம் அழகான பம்பாநதி சலமிகுந்து வருவதினாலே இவ்விடத்திலெழுந் தருளி இருக்கின்றோம் தொந்தமாக வளர்ச்சிபெற்ற ஸ்ரீவாசர்சந்நிதி பரிசாரக ரையுங் குடை, மேளம், வெண்சாமரை, அழகான கொடிகள், விசிறி, அந்தமா ன பல்லக்குச்சனர்கள் அனைவோருமிசைந்து பின்னுஞ் சொல்லுவான்.—எ-று.

சென்றிங்கெதிர்கொண்டாலுயர்சேவைப்பொலிவுறுவோ
மன்றென்றிடிற்றகுமானதையனுக்கேயிடர்புரிவோ
மின்றிச்செயலறைவாயெனவிவையுள்ளுணர்தூதன்
வென்றிப்பெருநிலையானெதிர்விளைவோடிவைசொன்னான்.

(இ-ள்.) இப்படி யெல்லாருமிங்கே யெதிர்கொண்டுவந்து அழைத்தா லுயர்ந்த மிகுதியான சேவைசாதிப்போம் இல்லாவிட்டால் அதற்குத்தகுமா

ன இடர்செய்வோம் இப்போதிந்தச் சமாச்சாரத்தையெல்லாம் அனந்நாத னுக்கு நீசொல்லக்கடவாயென்று ஒருதூதனுடனே சொல்ல அதையறிந்து கொண்டு அந்தத்தூதன்வந்து வெற்றியான பெரிய நிலைமையுடைய வென்னைய னெதிரேநின்று அதிசீக்கிரமாகச் சொன்னான்.—எ-று. (ச)

சொல்லும்வகையறிவுற்றணிதூயோனிதுநடவா
தொல்லைச்செலுவெனவம்மறையோனுக்கதுபுகல
மெல்லிப்பரிசனர்கால்வருமேவச்சமையவுறு
நெல்லைக்கணிரேளுக்குங்கொடிநேர்வந்தனன்மாதோ.

(இ-ள்.) அப்படி யந்தத்தூதன் சொன்ன சமாச்சாரங்களைக் கேட்டு அழகான பரிசத்தனை என்னையன் சொல்லுவான் [illegible]து இவ்விடத்திலே ந டவாது நீ சடுதியிலேபோவென்று சொல்ல அந்தத் [illegible] போய் அந்தப்பிரா மணனுக்கு அதைச்சொல்லக்கேட்டு காலு சேஷணாயுங் கூட்டிக்கொண்டு வே கவைத்த நெல்லைக் கண்ணினாலே கண்டு ஓடிவருங்காலத்தைப்போல் நடந்து வந்தான்.—எ-று. (ரு)

என்னன்பனெதிர்யோகியொனவிறலிருந்தே
பொன்னிக்கணிமனைவித்துபுரட்டத்திருமறையோ
னின்னப்பொழுதிவணுற்றதுமிதுமுன்னுறைபதியும்
பன்னத்தெரிவேனென்றுபகர்ந்தானெனதையன்.

(இ-ள்.) அப்படி வந்து என்னையனுக்கெதிரே யோகீசுவரர் என்னத் தன்வேஷ்டியினால் யோகப்பட்டையைப்போலே கட்டிக்கொண்டிருந்து மகா லட்சுமிக் கலங்காரமான வீடாகிய தாமரைமணியைக் கையினாலே புரட்டிக் கொண்டு அந்தப்பிராமணனிருக்க இந்தவேளையிலே இவ்விடத்தில்வந்ததுவு மிதற்குமுன்னமே நீர்வாசமாயிருக்கு மூரையுஞ் சொன்னால் தெரிந்துகொ ள்ளுவேனென்று என்னையனானவன் அவனை வினாவினான்.—எ-று. (சு)

மவுனத்திறமவனுற்றிடமறுகாளிவனுறவா
னவனித்தலைச்சேரியார்க்குரையாடாதிரமயலேதக்
[illegible]த்துமதாளதோவெனக்கமலைப்பெருநாதன்
சுவனத்தடிவிரலுக்கிடைசுழல்கின்றதெனுளமே.

(இ-ள்.) அப்படி கேட்க அவன் மவுனமாய்ப் பேசாமலிருக்க மறுபடி யு மென்னையன் சொல்லுவான் இந்தப்பூமியிலிருக்கிற பொல்லாத மனி தருடனே வாய்பேசாதவிதத்தை நினைத்து இப்படி யிருக்குதோவென்று கே ட்க, அதற்கு அவன்சொல்லுவான் பெரியபிராட்டிநாயகனான சீனிவாசமூர்த்தி யின் பொற்பிரகாசமான திருவடி விரலிடுக்கிலே சுழன்று அகப்பட்டுக்கொண் டிருக்கின்ற தென்மனமென்று பின்னுஞ்சொல்லுவான்.—எ-று. (எ)



அதனாலொருவர் [illegible]ாடுரையாடுஞ்செயலிலனென்
றெதிருத்தரமிடவன்னனுமெப்போததுவென்னத்
துதிகன்னியிலரிவந்ததுதொட்டென்றவனறைய
வதுபற்றியவிதமெப்படியருளென்றனனையன்.

(இ-ள்.) ஆனபடியினாலே யொருவருடனே வாய்பேசுஞ் செய்கை இல்லையென் றெதிருத்தரம் அவன்சொல்ல என்னையனவன் அதெப்போதென்று கேட்க அதற்குத் துதிபெற்ற கன்னியாராசியிற் சூரியன் வந்த புரட்டாசிமாத முதற்கொண்டென்று அவன் சொல்ல அது விரதசந்திலே யகப்பட்டுக்கொ ண்டவித மெப்படிசொல்லுமென்று என்னையன் கேட்டான்.—எ-று. (அ)

அதுசொல்குவனினியென்றனனடிசிற்செயுமெனமும்
மதிதொட்டரியாலன்னமறந்தேனதனாலே
யிதுதேவையிலைப்பின்வருமெழின்மேவியவடியார்
சதிராகவவர்க்கப்படிதருவாயெனமொழிய.

(இ-ள்.) அதை இனிமேற் சொல்வேனென்று அந்தப்பிராமணன் சொல்ல ஆனால் தளிகைசெய்துகொள்ளுங்களென்று என்னையன்சொல்ல மூ ன்றுமாதமுதற்கொண்டு சீனிவாசதேவனாலே அன்னத்தை மறந்துவிட்டேன் அதனால் இது தேவையில்லை யென்பின்னே வந்த அழகிய பரிசாரகர்க ளாகிய பெருமையுள்ள சேஷர்களுக்கு மாத்திரம் அந்தப்படியே தளிகைக்குக் கொடுமென்று சொன்னான்.—எ-று. (கூ)

பாலும்பழமருள்வோமவைபரிவாயுணுமெனமுக்
காலந்தனிலசபோசனகருணைச்சலமலதெக்
கோலப்புனலெனின்மற்றதுகொள்ளாயிவனொருமான்
றேலிற்சயனித்தேமுனஞ்சொற்போர்வையும்பூண்டான்.

(இ-ள்.) அப்படி சொன்னவுடனே பாலும்பழமுங்கொடுக்கிறோம் அவை யாகிலுமின்பமாய்க் கொள்ளுமென்று சொல்ல அதற்கு அவன்சொல்லுவா ன் திரிசந்தியாகாலத்திலே யாபோஜனம் சொன்னான் இருமையான தீர்த்தத்த விர மறுபடி யெந்த அழகிய தீர்த்தமானாலுமதைக் கொள்ளத்தகாதென் றுசொல்லி கிருஷ்ணாசலத்திற [illegible] வேறொரு கிருஷ்ணாசலத்தை மேலே போர்த்துக்கொண்டான்.—எ-று. (௰)

அதுவேதலையணையாகவுமவனுற்றிடுகாலை
மதிமேவெனதையன்சொலுமாற்றவருடனே
கதையோன்றெளிர்பகமீனுணைக்கருதுஞ்செயுலென்ன
விதுவென்றலுமறையோன்விழிவெரிபொங்கவெழுந்தே.

(இ-ள்.) பின்னுமந்தக் கிருஷ்ணாசலத்தினாலே வைத்த தலையணையை ப்போட்டுக்கொண்டு அங்கேயிருக்கிற வேளையிலே விவேகமுள்ள என்னைய

ன்பக்கத்திலே இருக்கிறவர்களுடனே பொருகலை சொல்லுவான்; அது யா தெனில்—

இராமாயணத்திலே உத்தரகாண்டத்திலே சக்கரவர்த்தித்திருமகனார்
சீதாபிராட்டியாருக்குச் சொல்லியது.

" பொருகயனயனப்புரிகுழலாளேபொய்த்தவேடத்திறன்மறைந்து
விரிகடலுலகில்வேண்டியவண்ணம்வெவ்வினைசெய்பவரொன்னத்
திரிதருமீனைத்தப்பறக்கொத்தித்தின்றிடுமுபாயமீதென்று
கருதியகொக்குமெய்சலியாதுகண்மூடித்திருப்பனகாணாய்." என்றது ஒப் பற்ற மீன்போன்ற கண்ணையும் முடித்த கூந்தலையுமுடைய சீதையென்னும் பெண்ணேயென்று இரகுநாயகர் சொல்லியதெப்படியென்றால் பொய்யான தவ வேஷங்கொண்டு தன் தூர்க்குணத்தை யுள்ளேவைத்து விரிந்த கடல்சூழ்ந்த உலகத்திலே தனக்கிச்சையானதைக் கிரகித்துக்கொள்ள நன்மையைக்காட்டித் தீமையைச் செய்கிறவரைப்போல் சலத்திலே திரியும் மீன்களைத்தப்பாமற் கொத்தித்தின்கிற வுபாயமீதென்றுநினைத்து கொக்குகளானவை சரீரமசையாமல் நிஷ்டைகூடியிருக்கிறவர்களைப்போலே இருப்பது பாரென்று சொன்னார். அந்தச்செயலைப்போலிதுவென்று சொல்ல அந்தப்பிராமணன் கேட்டு கண்க ளிலே நெருப்புப்பொரிபறக்க எழுந்திருந்தான்.—எ-று. (கக)

அதரந்தனைய துக்கிப்பினிதறிவாயிதெனக்கோர்
கதைசொற்றனையோநீயெனக்கடிதிங்கெனைவிடுத்துத்
துதிபெற்றிடவோசெய்தனன்சுடர்மாதவனெனவெண்
சுதைபற்றியசுவரிற்றலைதுளையாகவிடித்தான்.

(இ-ள்) அப்படி யெழுந்திருந்து உதட்டைக்கடித்து பின்பலே இது உனக்குத் தெரியவரும் எனக்குமொரு கதை சொன்னையோவென்று கேட்க ஆமென்று என்னையன்சொல்லச் சீக்கிரமாயிவ்விடத்தென்னை யனுப்பித்து இக் தப்பிரதிஷ்டை பெறவோசெய்தான் அழகிய சீநிவாசனென்று அந்தப்பிரா மணன் வெண்மையான சுண்ணாம்புக்காறை தீற்றிய சுவரிலே தலை துளையா கும்படியா யிடித்துக்கொண்டான்.—எ-று. (கஉ)

உனையார்வினவினர்வாவெனவோதென்றனுமறையோன்
தனிநாயகனாராதனைதவிராதருபுரிய
கனியோதினனெனவப்படிநாதன்தயையுற்று
வினிநீயதுசெயலாமெனவெமதண்ணலறைந்தான்.

(இ-ள்.) அதைக்கனவில் உன்னையாரிங்கே வரச்சொல்லி யனுப்பினார் அதைச்சொல்லென்று என்னையன்கேட்க, அந்தப்பிராமணன் சொல்லுவான் ஒப்பற்ற நாயகனான சீநிவாசதேவன் தனக்காராதனை முறைதவறாமற் செ ய்யும்படி மிகவுமெனக்குத் திருவுள்ளம் பற்றினனென்று சொல்ல அப்படி அனந்தநாதன் கிருபையிருந்தா லினி நீ அதுசெய்யலாமென்று என்னையன் சொன்னான்.—எ-று. (கங)

அருளுற்றிவணுற்றேனலவயல்லாலணுகுவனோ
பிரான்சொலனெனவேதியன்பெரியோனிவைபகர்வான்



கருணைக்கடலுன்னோடதுகழறும்படியென்னோ
டுரைதந்திடினீயேசெயுமுணர்வுள்ளவனென்றான்.

(இ-ள்.) அப்படி கிருபைபெற்றுத் தான் இவ்விடத்தில் வந்தேன் அதி ல்லாவிட்டால் வருவேனோ அப்படிப் புரட்டானதைச்சொல்லேனென்று பிரா மணன் சொல்ல பெரியவனாகிய என்னையன் ஒன்று சொல்வான், கருணை க்கடலான சீநிவாசமூர்த்தி யுன்னோடதைச் சொன்னபடி யென்னுடனேசொ ன்னால் நீயே யதுசெய்யும் விவேகமுள்ளவனேயென்றான்.—எ-று. (கச)

எமக்காகியமறையாகமவியலோடணிபஞ்சச்
சமஸ்காரமிலார்மாயவன்றாளர்ச்சனையதனை
லமையாரொனவடவேங்கடத்தன்றொளொருவேட
னிமிர்பூசனைசெய்தானதுநினையென்றனையன்.

(இ-ள்.) அதற்குப்பிராமணன் சொல்லுவான் எங்களுக் கியல்பாகிய வேதசாஸ்திர விதியுடனே அலங்காரமாகப் பஞ்சசமஸ்கார மில்லாதவாள் மாயவன் திருவடிகளையாராதனை யெந்தவிதமாகச் செய்வாரென்று கேட்க வட வேங்கடத்திலே முன்னொளொருவேடன் வெகுகாலம் ஆதிவராகசுவாமியைப் பூசைசெய்தான் அதை நினைத்துப்பாரென்று என்னையன் சொன்னான்.—எ-று.

எனதண்ணலிவ்வுரைதந்தவனைக்கொடுமறையோ
னனியன்பர்செயமுதுண்டுபின்னகர்சோதனைவந்தோ
மினிநிட்டையிருப்போமெனவின்னித்திரைசெய்து
புனல்மேவியபம்பாநதிபுலரிப்பொழுதுற்றே.

(இ-ள்.) இப்படி என்னண்ணல் இந்தவார்த்தையைச் சொல்லிவிட்டு தீர்த்தமாடத் தன் வீட்டுக்குப்போக இந்தக்கொடுமையான பிராமணன் மிகு ந்த தன் ஷேஷர்வெளியிலே செய்துவைத்திருக்குந் தளிகையைச் சாப்பிட்டுவ ந்தபின்பு நகர்சோதனைபோய் வந்தோமென்று சொல்லி யினிமேல் நிஷ்டை கூடி யிருப்போமென்று இனிமையான நித்திரைசெய்து சலநிறைந்த பம்பா நதிக்குச் சூரியோதயத்துக்கு முன்னே யெழுந்துபோனான்.—எ-று. (கரு)

நீராடிமுனருடேசிகனிறைசந்நிதியணுகி
யீராறெழிறிருமண்டலையிட்டுச்செபமுற்றிச்
சீராரெனதண்ணற்புடைதிருமஞ்சனமொடுசென்
றாராதனைபுரிகாலையிலணிவீதியிருந்தான்.

(இ-ள்.) அப்படி போய் தீர்த்தமாடி கிருபையுள்ள பரமதேசிகர் சந்நிதி முன்னேவந்திருந்து பிரகாசமான பன்னிரண்டு திருநாமமுந் தரித்துக்கொ ண்டு செபஞ்செய்து சிறப்புப்பொருந்திய வென்னண்ணல் பக்கத்திலே திரும ஞ்சனத்துடனேகூடவந்து ஆராதனைசெய்யும்போது அலங்காரமுள்ள வீதியி லேதானேயிருந்தான்.—எ-று. (கசு)

பன்னவ்விதிமுறைமாதவன்பதபூசனைமுற்றி
யென்னண்ணலுமமுதுண்டுவந்திருக்குமிடமணுகி
யின்னப்பொழுதென்வாசகமெழின்மாயவனுரையென்
றுன்னிக்கொளவுற்றுலரியுரைசெய்ததுபகர்வோம்.

(இ-ள்.) சொல்லுதற்கினிமையான சாஸ்திர விதிமுறைப்படி சீநிவ
சமூர்த்தியாதத்தைப் பூசைசெய்து என்னண்ணல் அமுதுண்டு வந்திருக்குமி
டத்துக்குவந்து அந்தபிராமணன் இப்போதென்பேச்சை அழகான மாயவன்
திருவாக்கென்று நினைத்துக்கொண்டால் சீநிவாசமூர்த்தியெனக்குத் திருவுளம்
பற்றினதை யுனக்குச்சொல்லுவேன்.—எ-று. (கஅ)

மறையோனிதுசொலநீதெரிமகிமைச்செயறனையே
கறையற்றவையெனநெஞ்சுதுகதியென்னெனவெங்கட்
கிறையோதிடவவ்வேதியனிதுகண்டனமெனவே
யறையத்தகுமுன்னேடிதினணிகேளெனமொழிவான்.

(இ-ள்.) பிராமணன் இப்படிசொல்ல வுனக்குத் தெரிந்த மகிமைச்செ
யலைக் குற்றமற்றதென் றென்மனதிலே நினைத்துக்கொண்டால் அதினாலேவரு
கிற மோட்சமென்னவென்று எங்களையன் சொல்ல அந்தப்பிராமணனிதுகண்
டேனென்று உன்னுடனே சொல்லத்தகும் இதன் விருத்தாந்தங்களென்று சொ
ல்லுவான்.—எ-று. (க௯)

கன்னிப்பெருமதிமுன்வருகவினுஞ்சனிவாரத்
தென்னப்பனருஞ்சொப்பனமெதிர்காலையிலணுகிச்
சொன்னப்பொருண்மறையாகமத்துறைமேவுபுராணர்
தன்னொப்பறுமோரைந்துசமஸ்காரமுமிலதாய்.

(இ-ள்.) பெருமையான புரட்டாசிமாதமுதலிலே வந்த அழகான சநி
வாரத்திலே யென்னப்பனுகிய சீநிவாசதேவன் அருமையான சொப்பனவே
ளையிலேவந்து சொன்னவார்த்தையைக்கேள் வேதசாஸ்திர மிகுதியான புரா
ணர் தனக்கொப்பற்ற பஞ்சசமஸ்காரமு மில்லாதவனாகி என்று பின்னுஞ்
சொல்லுவான்.—எ-று. (உ0)

ஒருரூத்திரனாராதனையுளமின்றிவருக்கு
முருவாகினமதனுலிழிவுலகுக்கெனவோதத்
திருநாயகவதுவேதெனச்சீர்மேவியகுளப்
பெருமாளெனவந்தோமினிபேசும்வகைகேணீ.

(இ-ள்.) அப்படி யொன்றுந்தெரியாதவனை வொருவன் ஆராதனை
யன்பில்லாமற்செய்யும்படியா யொரு ரூபமாயினேம் அதினாலே யுலகத்துக்
குப் பழிப்புவசனம் வந்ததென்று சொல்ல அதற்குநான் பெரியபிராட்டி
நாயகனே அதியாதென்று கேட்க சுவாமிசொல்லுவார் அழகுள்ள சிற்...



படைத்த குளத்திலே சீநிவாசப்பெருமாளென் றெழுந்தருளினேமென்று
சொல்லிப்பின்னும் அவர்சொன்ன காரியங்களைச்சொல்லுவேன் நீ கேளென்று
சொல்லுவானாயினன்.—எ-று. (உக)

அம்மாநகர்சென்றோர்வினையறவந்தவனூற்றோ
யிம்மானுடனதனுக்கிசையெழில்வேதியராலே
நம்மாவடியாராதனைநயமேவியவழிசெய்
தும்மேற்பணிதானேக்குவதனுமின்றிலன்மாதோ.

(இ-ள்.) அந்தகுளத்துக்கு வந்துதொழுதவர்கள் வினையைத் தீர்க்க
அவ்விடத்துக் கெழுந்தருளினோ மிந்த மனிதன் அதற்கிசைவாக அழகான
பிராமணர்களாலே நமது திருவடியாராதனை நன்மையாகச்செய்யும்படிசெ
ய்து மற்றைப்பணிவிடைதான் பார்க்கும்படி நினையாமலிருக்கிறானென்று பின்
னுஞ்சொல்லுவாரென்று பிராமணன் சொல்லுவான்.—எ-று. (உஉ)

அதுகண்டிலனமதன்புறுமடியார்களையணுகா
விதிசெய்தெவையுந்தன்றொழில்விதமென்றுமகிழ்ந்தா
னிதுசொற்றிடவந்தேனெனவென்னுட்பயமுற்றே
நதிமேவியபதனேயெனநானேதிடுநெறிகேள்.

(இ-ள்.) அப்படி நினைத்துப் பாராமல் நமக்கன்பரான அடியார்களை
யங்கே சேரவொட்டாதவனாகயச்செய்ததெல்லாந்தொழிலுந் தான்செய்யும்படி
யாக நினைத்துச் சந்தோஷமாக நடக்கின்றான், இது சொல்லவந்தேனென்று
அருளிச்செய்தார்; அதைக்கேட்டெனக்குள்ளே பயம்பொருந்திக்கங்காநதி வீ
ற்றிருக்குந்திருவடியானே யென்றுதுதிக்க நான்சொல்லும்வார்த்தையைக் கே
ளென்று பின்னுஞ் சொல்லுவான்.—எ-று. (உ௩)

அவனுக்கிவ்வயுரைசெய்திடினறிவாயருமறையோ
ரவரைக்கொடும்பெரிதாகியவெழில்பூசனைபுரிவித்
துவமைக்கிணையறுநற்புகழுறுவானதுபுரியா
திவனூற்றெனதொடுபேசவந்தேனென்றுமொழிந்தேன்

(இ-ள்.) தேவரீர் அவனுக்குத் திருவுளம் பற்றினால் விவேகமுண்
டாய் பிராமணரிலே யெவரையாயினுங் கொண்டு பெரிய அழகான ஆரா
தனை செய்வித்து உவமையில்லாத நல்லபுகழைப்பெறுவானன்றோ அதுசெய்யா
மல் இவ்விடத்துக்குவந்தென்னுடனே சொல்லவந்தேனென்று கேட்டேனென்று
சொன்னான்.—எ-று. (உச)

உலகைத்தருதிருமாதவனுயர்பாகவதர்களுட்
சலதிச்சிணைநல்லன்புதழைந்தாயதினலன்
[illegible]முற்றருளாராதனை நீசெய்யெனவோதப்
பல்வத்தவனனுகிற்பெருபரியாசகமுதவும்.

(இ-ள்.) அதற்கு உலகத்தையெல்லாம்பெற்ற பெரியபிராட்டி நாயகன்திருவுளம்பற்றினார் உயர்ந்தபாகவதர்களுக்குள்ளே சமுத்திரம்போலே நிறைந்த நல்ல பத்திமிகுந்தவனீயானபடியால் அந்த இடத்துக்குப் போய் ஆராதனை நீசெய்யென்று சொல்ல அதற்குநான் பலவந்தமா யவ்விடத்திற்குப் போனாற் பெரும் பரியாசகமாமென்று சொன்னேனென்று பின்னுஞ்சொல்லுவான்.—எ-று. (உரு)

இதுநாள்வரையாராதனையெவர்செய்தனரவரோ
டதுசொல்லுவைபரிசாரகாதிப்பெயருடனப்
பதிசென்றுனதுள்ளத்துறுபடியவ்வகைபுரிகே
னதிமேவியசாதுவெனநானுநினனம்மா.

(இ-ள்.) இத்தனை வன்மையா ஆராதனை யார்செய்தார்களோ அவர்களுடனே தேவரீர்திருவுளம்பற்றினால் நான் பரிசாரகர் முதலானவர்களுடனே அந்த ஊருக்குப்போய்த் தேவரீர்திருவுள்ளத்தில் நினைத்தபடி யந்தக்காரியஞ் செய்கிறேன் தங்கைவீற்றிருக்கும் பாதனே யென்று நான் சொன்னேன்.—எ-று. (உசு)

மாயன்பகர்வானென்பெருவளமைத்தருதழையுஞ்
சாயற்புரியாதன்புறுசமுசாரமுணப்பற்
றேயத்துளர்தன்னையேநலதேவென்றிடமறையோர்
கோயிற்றிருவாராதனைகோராவகைசெய்தான்.

(இ-ள்.) அதற்குத் திருமாலருளிச்செய்வார் எனது பெரிதானவளமையென்னும் விருட்சமானது தழைத்தகிளைகள் விருத்தியாகும்படியாய்ச் செய்யாமற்றனக்கன்பான சமுசாரம் புசிக்கவும் பலதேசத்திலுமுள்ளவர் தன்னையே நல்லதெய்வமென்று பணியத்தக்கதாகவும் பிராமணனா அந்தக்கோவிலுக்குத் திருவாராதனை செய்யாதவகையையுஞ் செய்துகொண்டானென்று பின்னுஞ் சொல்லுவான்.—எ-று. (உஎ)

இச்செய்கையுளானுக்கெனுமியானேதிடலுன்னோ
டச்சொல்லைவழங்கானவனழையானதனாலே
யெச்சிந்தனைபுகலோமறியிந்நாள்வரையினுமோர்
மெச்சுமனையுற்றோமினிவெளிவந்தருடருவோம்.

(இ-ள்.) இந்த மடத்தையுள்ளவனுக் கென்றைக்குநாம் சொன்னாலும் உன்னுடனே அந்தச்சொல்லையுஞ் சொல்லான் அவ்விடத்துக்கு உன்னையுமழையான் ஆனபடியா லெந்தச்சொல்லுமினிமேல் அவனுக்குச்சொல்லோம் இந்நாள்வரைக்கும் யாவருமெச்சமொரு வீட்டுக்குள்ளே யிருந்தோம் இனிமேல்வெளியேவந்து அவரவருக்குமிருந்த கிருபைசெய்வோமென்று பின்னுஞ் சொல்லுவாரென்று சொன்னான்.—எ-று. (உஅ)



வேதத்துறைவழுவாவகைவிரிதேர்முதலாகத்
தீதற்றவிழாவாதிகள்செயுமஃதும்புதுமினிமே
வீதற்கவணீசென்றுரையினையுன்னிலனாகிற்
போதிந்தரமனையாரொடுபுரிபூசனையென்றான்.

(இ-ள்.) வேதவாக்கியம் வழுவாதபடி யிருந்த தேர்முதலாகிய குற்றமற்றவுச்சவங்களும் நடக்குங்குணமு மினிமேலுண்டாக்கி வைப்போமாகையினாலே யிதற்கு அவ்விடத்தில் நீ போயிந்தச் சமாச்சாரத்தைச்சொல்ல அவன் கேளாமற்போனால் அரமனையாருக்குச்சொல்லி நீ ஆராதனை செய்யென்றுசொன்னானென்று பின்னுஞ் சொல்லுவான்.—எ-று. (உகூ)

வந்தோமதனாலேயெனமதியானகைசெய்தே
யெந்தஞ்செயலிங்கொன்றிலையிறையோனலதென்னா
நந்தன்சுதனுரைசெய்வுகைநானேதிடமனதிற்
சந்தோடமுறாதேனசலனக்குணமுற்றாய்.

(இ-ள்) ஆனபடியினாலே இவ்விடத்திற்கு வந்தோமென்று அந்தப்பிராமணன் சொலக்கேட்டு விவேகம்பொருந்திய என்னையன் நகைத்தெனது செயலின்று லிவ்விடத்திலொன்றுமில்லை எல்லாஞ் சீனிவாசக்கடவுள் செயலாமென்று சொல்லப் பிராமணன் சொல்லுகிறான் நந்தகோபன் பிள்ளையாகிய பரவாசுதேவன் சொன்னபடி நான் சொன்னால் மனத்திற் சந்தோஷமாயென்றுமற் பரிகாசஞ் செய்து சித்தசலனம் பெற்றாயென்று பின்னுஞ்சொல்லுவான்.—எ-று. (௩0)

வாழென்புவிவிட்டேபெருவயிற்றுக்கிரைதேடுந்
தாழ்வைப்புகலான்பொய்மொழிதழைவுற்றுயிரட்டு
மேழைக்குணமுள்ளானெனவெண்ணிச்சிறுநகைசெய்
தாழற்றாவோவிதெனவுன்மத்தனழன்றான்.

(இ-ள்.) நான் வாழும் பூமியைவிட்டு என் பெருவயிற்றுக் கிரைதேடும் பொருட்டாகத் தன்வருத்தத்தைச்சொல்லாமல் பொய்வார்த்தையினாலே யுலகத்தை மிரட்டிப் பெருக்கித்தின்னு மேழைமையான குணமுள்ளவனென்றெண்ணி யல்லவோ சிறுநகைசெய்து ஊழலாகிய குற்றத்தை என்மேற் சுமத்துகிறதற்காக வென்று அந்த உன்மத்தங்கொண்டவன் கோபமானான்.—எ-று. (௩க)

அன்பன்பகர்வானெண்ணிலாதிகப்பெயர்வந்தா
ருன்போலறிவில்லார்களையோர்போதினுமறியேன்
றென்பாருளமென்றேநகைசெய்தேனெனமறையோன்
பின்போதுவனேனைவாவெனும்பெரியோனறிவிலனே.

(இ-ள்.) அதைக்கேட்டு என்னையன்சொல்லுவான் அதிகமாயெண்ணிக்கையில்லாதபேர் இவ்விடத்தில் வந்தார்கள் உன்னைப்போல் அறிவில்லாத

வர்களை யொருகாலுங் கண்டதில்லை நீநல்ல திடச்சித்தமுள்ளவ னென்று நி னைத்து நகைசெய்தேனென்று சொல்ல அதற்கந்தப் பிராமணன் பின்னாலே சொல்லுவான் என்னைவாவென்று சொன்ன பெரியோனாகிய சீனிவாசமூர்த்தி அறிவில்லாதவன், நானறிவில்லாதவ னல்லவென்று பின்னுஞ் சொல்லுவா ன்.—எ-று. (கஉ)

எனவுன்னினையாராதனையினியொப்பிலமகலென்
றுனதோடொயணிமாதவனேதாமுனமரசற்
கனியாயழிதெனவேசொனியவர்பாலெனதுறவோர்
தினமேவினரவருக்குரைசெய்துன்னையும்வெல்வேன்.

(இ-ள்.) இப்படி நினைத்துக்கொண்டாயானால் கேளும் நீசெய்யும் ஆராதனையை யொத்துக்கொள்ளோம் நீபோவென்று உன்னுடனே அழகிய திருமால் சொல்வதற்கு முன்னமே அரசர்களுடனே நீ யாராதனைசெய்கி றது அநியாயமென்று சொல்லி யவரிடத்திலே என்னுறவின்முறையார் கள் நித்தியம் உத்தியோகத்தொழிலிலேயே யிருக்கிறார்கள் அவருக்குமிதைச் சொல்லி உன்னை நான் செயிப்பேன் என்று சொன்னான்.—எ-று. (கங)

என்றேமறையவன்வெம்பிடவெழிலண்ணலுரைப்பா
னன்றேயரசருமந்திரியருமேற்பவர்முதலாய்
நன்றிப்பணிசெயவென்மிசைநனியின்புறுமதனா
லின்றுன்னதுபுன்சொற்செவியேறுவகையாமே.

(இ-ள்.) இப்படியாக அந்தப்பிராமணன் கோபமாய்ச்சொல்ல அழ கிய வென்னையன் சொல்லுவான் முன்னேதானே நீசொன்ன அரசர்களும் ம ந்திரிகளும் இந்தவுலகத்திலே யாசகஞ் செய்கிறவர்கள் முதற்கொண்டு நன் மையாகிய இந்தவேலை செய்யும் அடியேன்மீதிலே மிகவுஞ் சந்தோஷித்தி ருப்பார்கள் ஆனபடியினாலே நீயிப்போது சொல்லும் அதிகபொய்யானசொல் அவர்கள் செவிக்கேறுதவகையாமென்று பின்னுஞ் சொல்லுவான்.—எ-று. ()

படியிற்சரவசரங்களிற்பகருன்னையுமென்னையுங்
குடிவைத்தவன்மறையாகமகுலனென்றுனையுயர்செய்
தடியன்சிறுகுலமுற்றவனறிவில்லவனென்றே
யிடைவிட்டிலனென்னப்பனியைந்தேயருள்புரிவான்.

(இ-ள்.) இந்தப்பூமியிலே நடக்கிற உயிர்களையும் நடவாத உயிர்களை யுமிப்படி சொல்லுமுன்னையு மென்னையுங் குடியாவைத்துக் காக்கின்ற சீனி வாசமூர்த்தி வேதசாஸ்திரம்பெற்ற குலமுள்ளவனென்று உன்னையுயர்ச்சி செய்து அடியேன் வேறு குலத்திலே பிறந்த அறிவில்லாதவனென் றென்னை இடையிலே விட்டுவிடான் இசைவான கிருபையைச் செய்வானென்று பின் னுஞ் சொல்லுவான்.—எ-று. (கரு)



கல்விக்கடலுறுமைந்தரைக்கவினும்படிசெய்தே
நல்விற்பனமறுசேயினைநடுமீரவடவியிலே
செல்லப்புரிதாய்தந்தையர்செகமீதிலரதுபோ
லல்லற்பெறுமெனையாயவனருளாற்றிசைதருவான்.

(இ-ள்.) சமுத்திரம்போற் பெரிதான வித்தைகளைக்கற்ற பிள்ளைகளை யழகாகக்காத்து நல்ல விற்பன மில்லாத பிள்ளைகளை நடுத்தாகிய நடுக்காட் டிலே விடும்படியாய்ச்செய்த தாய் தந்தைமார் இந்தப்பூமியிலே இல்லை அது போலப் புத்தியில்லாமல் அல்லலைப்படைத்த என்னைச் சீனிவாசக்கடவுள் கிருபையாகக் காத்திரட்சிப்பாரென்று பின்னுஞ்சொல்லுவான்.—எ-று. (கசா)

அடியேனொருகுருமுன்னிலையாயைந்துமறிந்தேன்
றிடமாமறையோர்பூசனைசெய்தாலமையுலகோர்
கடிவாரெனவுன்னேனுயர்கலையாகமமறிவோய்
தடையற்றுனதுள்ளப்படிதான்செய்வாயென்றான்.

(இ-ள்.) அடியேன் ஒரு குருமுன்னிலையிற் பஞ்சசமஸ்காரமும் பெ ற்றுக்கொண்டேன் இடம்பொருந்திய வேதப்பிராமணர் ஆராதனைசெய்தால் நம்மையிந்த வுலக மிகழ்வார்களென்று நினைத்ததுமில்லை யுயர்ந்த வேதசாஸ்தி ரந் தெரிந்தவனே [illegible] அதி சீக்கிரமாய்ச் செய்யெ ன்று பின்னுஞ்சொல்லுவான்.—எ-று. (கஎ)

முன்னுன்மொழியாராதனைமுயல்வேனதனாலே
யென்னையகனிகழாரெனையிம்மாதலமதுவென்
றுன்னேனுலகத்தெத்தனையுளவோவவையறியத்
தென்னாவலர்தீவெந்[illegible]யனைமொழிவான்.

(இ-ள்.) முன்னோர்கள் சொன்ன சாஸ்திர[illegible]தனை செய்துகொண்டு வருகிறேன் அதனாலே யென்னையகனை சீனிவாசக்கடவுளை னையிப்படி இகழ்ந்து தள்ளமாட்டார் இந்தப்பெருமையுள்ளதலம் நீசொன்ன தலமென்று நினையாதே யுலகத்திலே யெத்தனையோ அதை யறியவேண்டுமெ ன்றால் தென்னாவலர் தீவாகிய இந்தச் சம்புத்தீவெல்லாந் தேடிப்பாரென்று சொன்னான்.—எ-று. (கஅ)

வேறு.

வேதியனுரைப்பானுன்பேர்விளங்குமிவ்வூரினுமங்
கோதறவேறுமுண்டோகூறெனவையனித்தப்
பூதலந்தன்னிலென்னைப்போலவெத்தனையோவென்றான்
சூதுநீபுகன்றுயென்னத்துட்டனெஞ்சழன்றான்மன்னோ.

(இ-ள்.) அப்படிசொல்லக்கேட்டு அந்தப்பிராமணன் சொல்லுவான் உன்பெயரும் விளக்கமான இந்த ஊரின்பெயருங்குற்றமறவேறே யுண்டா

யிருக்குமோ நீ சொல்லென்று கேட்க என்னையன் சொல்லுவான் இந்தப் பூமியிலே என்னைப்போலவு மிந்த ஆளைப்போலவு மெத்தனையோ வென் றுசொன்னான் அந்தச்சொல்லைக்கேட்டு நீ கூறுசொன்னாயென்று அந்தத்துஷ்ட னானபிராமணன் மனத்திலேயதிககோபங் கொண்டான்.—எ-று. (௩௯)

மூர்க்கத்தொன் றுவதில்லைமொழிந்ததில்லூ டொன் றுன் னுட்
டீர்க்கமாயிருந்தாலிந்தச்சிவாசனைப்போலொன்றைப்
பார்ப்பவர்க்கினிதாய்ச்செய்துபரிந்துபூசித்தாலுன்ற
னூர்ப்பொருண்மகத்துவங்களுண்ணறிவுளதும்பின்னும்.

(இ-ள்.) அதனைப்பார்த் தென்னையன் சொல்லுகிறான் மூர்க்கத்தினாலேயொருகாரியமு நடப்பதில்லை நீ சொன்ன வசரிதுதானென்று உன்மனத்திலேதிடமாயிருந்தால் இந்தச் சிவாசக்கடவுளைப்போலே யொன்றைப்பார்ப்பவர்க்கின்பமாகச் செய்து பத்தியுடனே ஆராதனை செய்தால் நீ கற்றசாஸ்திரப்பொருளும் உன்மகத்துவமும் நுண்மையான அறிவும் பின்னுமுள்ளனவெல்லாம்.—எ-று. (௪௰)

தேவனன் றுரைத்தவாறுந்தெரியலாமிதுநீசெய்யிற்
பாவியேன்விதியிலுற்றபடிநடந்திடுமென்னை
னுவினுற்புகலக்கேட்டுகதைத் [illegible] றயோன்பினனை
நீவிதியென் றுரை [illegible] லையினித்தெரியுமென்றான்.

(இ-ள்.) சிவாசக்கடவுள் அன்றுனக்குச் சொன்ன வகையுந் தெரிந்து கொள்ளலா மிது நீ செய்துவந்தாற் பாவியாகிய வெனக்கு விதித்தபடி நடக்குமென் றென்னையன் வாக்கினாலே சொல்லக்கேட்டு பின்புநகைத்து அந்தப்பிராமணன் சொல்லுகிறான் [illegible] விதியென்று நீசொன்ன நிலைமை இனி மேற்றெரியுமென்று [illegible] னான்.—எ-று. (௪௧)

அப்படியுணர்ந்தவேதியன்றனைப்பார்த்துமுன்னோர்
செப்பியகதையிலொன்றைத்தெரிவிப்பானெங்களைய
னொப்பறுருத்திரன் றானொருவனம்மதியோன் மீதிற்
றப்பிலாக்கிருபைவைத்தான்றாமரைக்கண்ணனன்னே.

(இ-ள்.) அப்படிசொன்ன பிராமணனைப்பார்த்து முன்னோர் சொன்ன கதையிலே யொன்றை யெங்களையன்சொல்லுவான் ஒப்பற்ற ருத்திரனொருவன் அந்தப்புத்தியுள்ளவன்மேலே களங்கமில்லாத கிருபையைக் கடாட்சஞ்செய்தார் தாமரைக்கண்ணனாகிய பரவாசுதேவர்.—எ-று. (௪௨)

மூன்றவப்பலத்தினாலேமுப்பொழுதறிவித்திட்டா
னன்றவன்குருதெய்வத்தாலனுசரித்ததிகமுற்றான்
சென்றவன்மகிமைகண்டோர்தினந்தொழுதுபசரிக்க
நன்றுமார்க்கமெல்லாமடைநாடும்பெருகிற்றம்மா.



(இ-ள்.) பின்னு முன்செய்தவப்பலத்தினாலே மூன்றுகாலமு மறிவித்தார் அப்போது அவன் குருவையுந் தெய்வத்தின் திருவடிகளையும் அனுசரித்துத்தொழுது அதிக உயர்ச்சிபெற்றான் அவன் மகிமையைத்தெரிந்தவர்கள்போய்த்தொழுது உபசாரஞ்செய்ய நன்மார்க்கமெல்லாம் நாள்தோறும் பெருகிவந்தன.—எ-று. (௪௩)

ஒருதினந்திருவிழாவுக்குகக்கொருநாட்டைநண்ணப்
பெருமறையோர்கள்வேதம்பேசியவவையினுப்பண்
குருவைக்கண்டேத்தியோர்பாற்குணமுனோனிருப்பமுன்ன
முரியதொண்டர்களங்குற்றிவ்வுத்தமன்றனைப்பணிந்தார்.

(இ-ள்.) அப்படிநடக்கிறகாலத்திலே யொருநாள் திருவிழாவுக்காக வொருதேசத்துக்குப்போய்ப் பெருமையான பாகவதர்கள் திருவாய்மொழியோதிக்கொண்டிருக்கிற சபைக்குநடுவே தன்னாசிரியனைக் கண்டுபணிந்து ஒருபக்கத்திலே யந்தத்தகைமையுள்ளவனிருக்க முன்னிவனுக்கு உரிமையாகிய சிஷர்கள் அங்கேவந்து இந்த வுத்தமனைப் பணிந்தார்கள்.—எ-று. (௪௪)

பணிந்தவர்தம்மைநோக்கிப்பகருவார்மறையோரெல்லா
மிணங்கியெங்களைப்போற்றுமவிந்தச்ருத்திரன்றன்காலில்
வணங்கினீரிவனிடத்தின்மகிமையென்கண்டீரென்னக்
குணம்பெறுமவையைநோக்கிக்கூறுவார்கும்பிட்டோரே.

(இ-ள்.) அப்படி பணிந்தவர்களைப் பார்த்து அங்கிருந்த பிராமணரெல்லாருஞ் சொல்லுவார்கள் இணக்கமாயெங்களைப் பணியாமல் இந்தருத்திரன்காலில்விழுந்து வணங்கி னீரிவனிடத்திலே யென்னமகிமையைக்கண்டீரென்றுகேட்க தகுதி பெற்ற அந்தச் சபையைப்பார்த்து முன்கும்பிட்டவர்கள் சொல்லுவார்கள்.—எ-று. (௪௫)

இவன்பெருமகிமைதேவனொழிந்துத்தமநியுநீரு
மெவர்களுமெங்கணெஞ்சுமெளிதல்காணவென்னக்
கவனமுற்றறியவுங்கள்கருத்தினுக்கில வென்றாலிவ்
வவையிலுள்ளாரைச்சேரவறிவிலராக்கினீரால்.

(இ-ள்.) இவனது பெரிதான மகிமையைப் பரவாசுதேவன் அழகிய சித்தமறியும் நீங்களுமற்றை யோர்களு மெங்கள் மனந்தெரிந்து கொள்ளுவதற் கெளிதல்லவென்று சொல்லக்கேட்டு அந்தப்பிராமணர்கள் சொல்லுவார்கள் [illegible] பார்த்தறிய உங்களுக்கே கருத்தில்லாமற்போனது இந்தச்சபையிலுள்ளவரையெல்லாம் அறிவில்லாதவ ராக்கினீ ரென்று பின்னுஞ் சொல்லுவார்கள்.—எ-று. (௪௬)

ஆகையாலுங்களுக்கேயறிவிப்போம்புகவிருக்கச்
சேகுறுசனங்களுக்குச்சேவித்தலொக்குமென்ன

நாகரிகஞ்சேரன்பனண்பர்களிவனுற்றத்தால்
வாகறுமபசாரங்கள்வந்ததென்றகன்றாரப்பால்.

(இ-ள்.) ஆகையாலுங்களுக்குத்தானே யதையறிவிக்கிறோம் பசவிருக்கக் குற்றம்பொருந்திய நாய்க்குச் சேவித்தலொக்கும் நீங்கள்செய்ததென்று சொல்லக்கேட்டு அழகுபொருந்திய அவ்வன்பன் அடியார்களும் அவனும் நாமிவ்விடத்திருந்தபடியினாலே நன்மையில்லாத அபசாரம்வந்ததென்று அப்பாற்போனார்கள்.—எ-று. (சஎ)

அங்கவரகன்றபின்னரனை வருமெண்ணலுற்று
நிக்குறுமறையோர்க்குற்றவேளைநிவிர்த்திசெய்ய
மங்கலத்தமிழ்வேதத்தின்வளமையையுரைப்போங்கேட்கச்
சங்கையற்றணுகுமென்றுற்றழியொமெவர்கள்செல்வார்.

(இ-ள்.) அப்படியவர்கள் போனபிற்பாடு அந்தப்பிராமணனைவருவியோசித்திங்கே யிந்தப்பெரியவர்களுக் கெல்லாங்குற்றமான மோடனம் வந்ததை நிவர்த்திசெய்ய மங்கலமான திருவாய்மொழியின் வளமையைச் சொல்லுவோங் கேளுங்கள் சங்கையில்லாமல் வாருங்களென்றழைத்தால் ஆசையுடனே அவர்களெல்லாரும் வருவார்கள்—எ-று. (சஅ)

வடிதமிழ்வேதமோதிவரிலந்தமகிமையோனை
நடையினிற்படுக்கவைத்துநமதுவெள்ளாட்டியைப்போய்த்
துடியொடுமவனிடத்திற்றுயில்வகைபுரிந்துதேடும்
படிவிளக்கேந்திநாமும்பரிவுடன்கண்டுகொண்டே.

(இ-ள்.) அப்படிவந்தவுடனே வடித்ததமிழ்வேதமாகிய திருவாய்மொழியைச் சொல்லிவருகிறகாலத்திலே யவர்கள் கும்பிட்ட மகிமையுள்ளவனை நடையிலே படுக்கவைத்து நம்முடையவெள்ளாட்டியைத் திடமாக அவனிடத்தில் நித்திரைசெய்யும்படிசெய்து நாமவனைத்தேடும்படியாய் விளக்கையெடுத்துக்கொண்டு பார்த்துக்கண்டு பிடித்துக் கொள்ளுவோம்.—எ-று. (சகூ)

அவனதுதொண்டருக்கிவ்வபவாதந்தன்னைக்காட்டி
யிவன்கதிப்பொருளைக்கேட்கவியைந்தவனெங்கள்பெண்ணுக்
குவமையானவளைக்கூடவுன்னினானென்றுகட்டிச்
சவையெலாமறியப்பூசைசாற்றிவைத்தோட்டிவிட்டால்.

(இ-ள்.) அப்படி பிடித்துக்கொண்டு அவன்தொண்டருக்கு இந்த அபவாதத்தைதக்காண்பித்து இவன் மோட்சப்பொருளைக் கேட்கவிசைந்து வந்தவனெங்கள்பெண்ணுக்குச் சமானமானவளைக்கூட நினைத்தானென்றுகட்டிச்சபையெல்லாமறிய அடித்தோட்டிவிட்டாலென்று பின்னுஞ்சொல்லுவார்கள். ()

குருமனையுற்றபெண்ணைக்கூடினானென்றுபூமி
பரிகாசஞ்செய்துகண்டார்பணியவுமாட்டாரென்றப்



பெரியவனாசானுக்குப்பேசிடவவனுள்ளோர்க்கே
பரிகரியிந்தப்பாவமகியாயமென்றுரைப்பான்.

(இ-ள்.) அப்படியோட்டிவிட்டால் குருவின் வீட்டிலே யிருக்கிற பெண்ணைக்கூடினானென்று பூலோகம் பரிகாசஞ்செய்து கண்டவர்கள் பணியவுமாட்டார்களென்று ஆலோசித்து அந்தப்பெரியவனுடைய ஆசாரியனுக்குச் சொல்ல அவன்மனத்திலே நினைத்துப் பார்த்து அரிகரி இந்தப்பாவ மகியாயமென்று சொல்வான்.—எ-று. (ருக)

இதற்குட்பட்டியைத்தேனுகிலிவையறிந்தவனுக்கோதுக்
துறிச்செறிமாயனிந்தச்சொற்றெரிந்துலகத்தோரு
மதிப்பறுமென்றன்சீடவர்க்கமுந்தூடிப்பார்க்
ளதைக்கண்டுநீருமென்னையகசியஞ்செய்வீரென்றான்.

(இ-ள்.) இதற்கு நாளொட்டியபடி இவைசகந்துசொன்னவென்றுகில் துதிபெற்ற திருமாயவன் இவையறிந்து அவனுக்குச்சொல்வார் இந்தச்சொல் வெளியிலே தெரிந்தால் உலகத்தாருங் கணக்கில்லாத எனது சீஷவர்க்கமும் என்னைத் தூஷிப்பார்கள் அதைக்கண்டு நீருமென்னைப் பரிகாசஞ் செய்வீரென்று சொன்னான்.—எ-று. (ருஉ)

மறையவர்கேட்டுத்தெய்வம்வழங்குமீதவனுக்கென்றாய்
முறைதெரிபெரியோர்க்கெல்லாமோடனஞ்செய்தபொய்ய
னறிவிலான்றனக்குநல்லவாசானென்றமர்ந்தாயந்தக்
குறிதனையாங்கள்காணுங்கொள்கையொன்றுரைப்போங்கேண்மோ.

(இ-ள்.) அதைப் பிராமணர்கள்கேட்டுத் தெய்வம் அவனுக்கிதைச்சொல்லுமென்றுசொற்றனையே சகலமுறைமையுந்தெரிந்த பெரியோர்களுக்கெல்லாம் மோடனஞ்செய்த பொய்யனை அந்த அறிவில்லாதவனுக்கு நல்ல ஆசாரியனென்று அமர்ந்தாய் அப்படி தெய்வஞ்சொல்லுங்குறிப்பை நாங்கள்காணும்படியாயொருவிதஞ்சொல்லுவோங் கேளென்று பின்னுஞ்சொல்வார்கள்.—எ-று (ருங)

வந்தவனுடனேபேசுமாபனையுன்னிடத்தி
லந்தமுற்றிடவோர்வைகற்கனுப்பெனச்சொல்லியந்நாள்
சிந்தையோடுரைத்தானுன்றன்றிருமனைக்கணுகியாங்க
ளிந்தக்காரியம்பொய்மெய்யென்றின்பமுற்றறிவோம்பின்னும்.

(இ-ள்.) அப்படிவந்து அவனுடனேபேசும் பாவாசுதேவனை யுன்னிடத்திலழகாக வொருதினத்துக்கு அனுப்பென்று அவனுடனேசொல்லி அந்தப்பாவாசுதேவன் உன்மனைக்கு வருகிறகாலை மனவாஞ்சையுடனே எங்களுக்குச் சொன்னால் உன் திருமாளிகைக்கு நாங்கள்வந்து இந்தக்காரியம்பொய்மெய்யென்று இன்பத்துடனே அறிந்துகொள்ளுகிறோமென்று பின்னுஞ்சொல்லுகிறார்.

இப்படிசெய்யிற்குற்றமில்லையேயுனக்குமுன்றன்
றப்பனுசீடனுக்குந்தானிதுவாகையாலே
யெப்பொழுதிதுநீசெய்வாயென்னவம்மறையோன்சொல்வா
னொப்பிலேனவனைக்கண்டேதோகிப்பின்னுரைப்பேனென்றான்.

(இ-ள்.) இப்படிசெய்தால் உனக்கும் பொய்மையில்லாத வுன் சீஷனுக்கும் குற்றமில்லையே ஆகையினாலே எப்போதிதுசெய்வாயென்று அந்தப்பிராமணர்கேட்க அந்த ஆசாரியன்சொல்லுவான் நானிதை ஒத்துக்கொண்டேன் என் சீஷனைக்கண்டு இதைச்சொல்லி உங்களுக்குச் சமாசாரஞ்சொல்லுகிறேனென்றுசொன்னான்.—எ-று. (௫௫)

உரைப்பனென்றவன்சீடன்பாலுற்றுனதிடத்தின்மாயன்
வரப்பெற்றுயானுங்காணும்வகைசெய்வாயென்னக்கேட்கத்
திருக்கிளர்மார்பன்சித்தஞ்செயலென்றேனறியேன்கோவே
மருக்கமழ்சரணுவென்றுவணங்கினனன்பனன்றே.

(இ-ள்.) அப்படி சொல்லுகிறேனென்று அவருக்குச்சொல்லித் தன் சீஷனிடத்துக்கும்போய் உன்னிடத்துக்குப் பரவாசுதேவன் வரத்தவம்பெற்று நானுமந்தத் தரிசனங்காணும்படியான வகைசெய்வாயென்றுகேட்க மகாலக்ஷ்மி விளங்கிய மார்பனது திருவுளச்செயலென்றே அதையறியேன் என் குருவே வாசனைவீசுந்தாமரைமலர்போன்ற பாதனேயென்றுவணங்கினன் அந்த அன்பனென்றான்.—எ-று. (௫௬)

வேதியனுரைப்பானெக்கவிதத்துமித்தினத்திராவின்
மாதவனென்மனைக்குவரவருள்செய்யென்றோதத்
தீதிலான்மனையிற்சென்றுதியானிக்கவுருவந்தோன்றப்
பாதத்திற்பணிந்துபோற்றிப்பகருவானன்பன்மாதோ.

(இ-ள்.) அப்படி சொல்லக்கேட்டு ஆசாரியன்சொல்லுகிறான் எந்த விதமானாலும் இன்றிராத்திரிக்குப் பரவாசுதேவன் என்மனைக்கு வரும்படியாகத் தய்வுசெய்யென்று சொல்லக்கேட்டு குற்றமற்ற சீஷன் தன்வீட்டுக்குப்போய்த் தியானிக்க சுவாமி திருவுருவந்தோன்றத் திருவடிகளிலேபணிந்து தோத்திரஞ்செய்து அந்த அன்பனவன்சொல்லுவான்.—எ-று. (௫௭)

உன்றிருவுருவைக்காணுமுணர்வறிவிக்குமென்ற
னன்றிசேராசான்வாழுநன்மனைதனக்குத்தேவ
நின்றிராமுதற்சாமத்துக்கெழும்படிவரந்தாவென்ன
வன்றுனையிகழ்ந்தபாவிகளைவராங்களுகிறிபார்.

(இ-ள்.) உன் திருவடிவைக் காணும்படி யெனக்கு விவேகத்தையறிவித்த நன்றிபொருந்திய என் ஆசாரியனிருக்கும் திருமனைக்கு தேவரீர் இன்றிராத்திரி முதற்சாமத்திலெழுந்தருளும்படி வரந்தரவேண்டுமென்று கேட்க அதற்குச் சுவாமி திருவுளம்பற்றுகிறார் முன்னே உன்னையிகழ்ந்த பாவிகளென்னமங்கேவந்திருப்பார்களென்று பின்னுஞ்சொல்வான்.— (௫௮)



ஆகிலுன்குரவன்வந்தினக்கறைந்த[illegible]படியாலிந்தத்
தேகத்தோடேகேனென்னத்தேவவெவ்விதமானாலு
நாகரிகஞ்சேர்ந்தவன்மனைசெல்வாயென்னத்
தாகமாயன்பனோதச்சற்குணனதுவுட்கொண்டான்.

(இ-ள்.) ஆனாலுமுன் குருவந்திங்கே யுனக்குச்சொன்னபடியினாலே இந்தத்தேகத்துடனே அங்கேபோகமாட்டேனென்று சொல்லத் தேவரீர் எந்தவிதமானாலும் நாகரீகம்பொருந்திய அக்கலமான திருமாளிகைக்குப்போகவேண்டுமென்று ஆசையா யன்பன்சொல்லச் சுவாமி அதையுட்கொண்டான்.

நாடுமிவ்விரவிலாதிநாயம்பெறுமுதற்சாமத்தின்
வாடலாத்திருத்தாளங்குவருமெனவாசானுக்குச்
சீடன்சொற்றிடவுகந்திச்சேதியம்மறையோர்க்கோதி
வீடியமனையும்வீதி[illegible]சுத்திசெய்து.

(இ-ள்.) தேவரீர் நாடினபடி இன்றிராத்திரி முதற்சாமத்துக்கு வாட்டமில்லாத்திருவடிகள் தேவரீர் திருமாளிகைக்குவருமென்று ஆசாரியனுக்குச் சீஷன் போய்ச்சொல்லச் சந்தோஷ[illegible] இந்தச்சேதியை அந்தப்பிராமணருக்குச்சொல்லி தன்வீடும் வீதியும் மற்ற நிலங்களுஞ் சுத்திசெய்தான்.— (௬௦)

பந்தருண்டாக்கித்தீபப்பரிமளங்கலந்தசீதச்
சந்தனந்தவனமங்கனிக்கனிமுதலிருத்திக்
கொந்தலர்மாலைதூக்கிக்கும்பம்வைத்தலங்கரித்தே
யந்தவந்தணரையெல்லாமழைத்துவந்திருக்குங்காலை.

(இ-ள்.) பின்னையும் பந்தல்செய்வித்து தீபங்களேற்றி வாசனைகலந்த சீதளமான சந்தனமும் மருக்கொழுந்தும் வாழைப்பழமுதலியவும் வைத்துக் கொண்டு கொத்துக்கொத்தானமலர்மாலைதூக்கிப் பூரணகும்பம்வைத்து அலங்காரஞ்செய்து அந்தப்பிராமணரையெல்லா மழைத்துவந்து வைத்துக்கொண்டிருக்கிறவேளையில்.—எ-று. (௬௧)

தூர்க்கந்தவிரணமிக்குச்சூரன்போற்றோன்றிமாய
நற்சபைகாட்பணிற்கநாடியம்மறையோரெல்லாங்
கற்களுங்கடியெடுத்துக்கடிதுவந்தோச்சவோடி
யற்புதன்றுகிற்செல்லவணைந்தடிபணிந்தான்.

(இ-ள்.) அந்தவேளையிலே தூர்க்கந்தமுமிரணமுமிருந்த நாயைப்போலே ஸ்ரீமந்நாராயணமூர்த்தியானவர் தோன்றி நலமான சபைக்கு நடுவே நிற்கப்

பார்த்து சுவாமியென்றுந்தெரியாமல் அங்கேயிருந்த பிராமணரையெல்லாங் கற்க ளுந்தடிகளுங்கொண்டு சீக்கிரமாகவோடிவந்து துரத்தக்கண்டு பயந் தோடி அற்புதனுகிய அந்த அடியவனிடத்துக்குப்போக அவன் சுவாமியென்ற றிந்தெழுந்திருந்து திருவடிகளிற் பணிந்தான்.—எ-று. (௬௨)

அடிபணிந்துருகிச்சொல்வானடியர்க்குவரமுன்றந்த
படிபுரிந்தனையோவென்னப்பாவிகளிடத்திற்சென்றேன்
றடிகொடுமொத்தவந்தார்தான்பயந்தோடிவந்தேன்
வடிவுயிர்பிழைத்தேனென்றுமாயவனறைந்தான்மன்னே.

(இ-ள்.) அப்படி திருவடிகளைப்பணிந்து அன்பாயுருகிச் சொல்வான் அடியேனுக்குமுன் வரந்தந்தபடி செய்தனையோவென்றுகேட்கச் சுவாமிசொல்லுவார் அந்தப்பாவியரிடத்துக்குப்போனேன் தடிகொண்டு அடிக்கவந்தார் ஆனபடியினாலே பயந்துவோடிவந்து என்னுடைய உடலுமுயிரும் பிழைத்தேனென்று மாயவன்சொன்னான்.—எ-று. (௬௩)

ஊழியினுலகையெல்லாமுதரத்துளடக்கிக்காக்கும்
பாழியந்தடந்தோளுதபயமுனக்குளதோவென்னி
ராழியினீருதித்தாலதுகலக்கிடுதலுண்டோ
வேழைநேருரைத்தாயெங்களின்பவென்றடியில்வீழ்ந்தே.

(இ-ள்.) அப்படிசொல்லக்கேட்டு அந்த அடியான்சொல்லுவான் ஊழிக் காலத்திலே சகலவுலகத்தையுமுன்னுடைய திருவயிற்றிலடக்கிக்காக்கும் வல்லமையும் அழகும் விசாலமும்பொருந்திய தோள்களையுடையநாதனே உனக்குப்பயமுண்டோ சமுத்திரத்திலே குளிர்ந்தசமுத்திரத்திலே குள்ளநரிகுதித்தாலந்தச் சமுத்திரங்கலங்குமோ அப்படி ஏழையைப்போலேசொல்லுகிறீர் எங்களன்பனேயென்று திருவடிகளிற்பணிந்து பின்னுஞ்சொல்வான்.—எ-று. (௬௪)

இவ்வுருவாகியங்கேயெழுந்ததென்றின்பன்கேட்ப
வவ்வியமுள்ளார்க்கையமாகவேசென்றுமென்ன
வவ்வுளன்றனக்குச்சொல்லியுயர்ந்தவனகன்றபின்னே
திவ்வியகுணத்தானிந்தச்செய்கைதன்னுள்ளத்தெண்ணி.

(இ-ள்.) இந்த வடிவத்துடனே யங்கேயெழுந்தருளினதேனென்று அந்த அடியான்கேட்க சுவாமிசொல்லுகிறார் அந்தப்பிராமணர் மனக்கோட்டமுள்ளவர்களானபடியினாலே அவர்களுக்கு ஐயமாக வெழுந்தருளினேனென்று அந்தத்தவமுடைய அடியானுக்குச்சொல்லி உயர்ந்தபரவாசுதேவன் எழுந்தருளினபின்பு இவ்வமானகுணமுள்ள அந்த அன்பன் இச்செயலையறிந்து தன்மனத்திலெண்ணினான்,—எ-று. (௬௫)

நங்குரவனுக்குநாணந்நுகிற்றென்றவன்பாலுற்றுப்
பங்கயத்திருத்தாளேத்தப்பாவிபொய்யுரைத்துவேதப்



புங்கவரிங்குகாக்கப்புரிந்தனையென்றங்குற்றச்
சங்கையின்மறையோரெல்லாஞ்சீற்றவிவ்வன்பன்சொல்லும்.

(இ-ள்) அப்படியெண்ணி இதினாலே எனது குருவுக்கு வெட்கமுண்டாயிருக்குமென்று அந்த ஆசாரியனிடத்துக்குவந்து தாமரைமலர்போன்ற திருவடியிலே பணிய, அங்கிருந்த பிராமணர்களெல்லாம் பார்த்து பாவி பொய் வசனத்தைச்சொல்லி உயர்ச்சியான வேதப்பிராமணர்களை இங்கே காக்கவைத்தையேயென்று சங்கையில்லாதவர்கள் இப்படிச்சொல்ல, இந்த அன்பன் சொல்வான்.—எ-று. (௬௬)

ஆண்டவன்வந்தாற்றண்டேற்றடித்தோச்சவுன்னிமெத்தத்
தாண்டியேவிழுந்திரந்தத்தனுவொடுமென்பாற்செல்ல
வேண்டியேபணிந்தேனென்னவேதியரேங்கிச்சோர்ந்து
நீண்டபோழகன்மாயனிலையறிந்திலமென்றெண்ணி.

(இ-ள்.) அப்படி சொல்லக்கேட்டுப் பரவாசுதேவன் வந்தால் தடியெடுத்து அடித்தோட்ட நினைந்து மெத்தத்தாண்டிவிழுந்தீர்களே அந்த வடிவுடனே என்னிடத்துக்குவந்தார் நான் தோத்திரஞ்செய்து பணிந்தேனென்று சொல்ல,அதுகேட்டு அங்கிருந்த பிராமணர்களெல்லா மனம் ஏங்கிச்சோர்ந்து விசாலமான பெருமையுள்ள அழகுபொருந்திய ஸ்ரீமந்நாராயணமூர்த்தியின் நிலைமையை யறியமாட்டோமென்று நிதானித்தார்கள்.—எ-று. (௬௭)

குலந்தாங்குசாதியென்னுங் [illegible]
நலந்தாங்குமன்பனுக்கே[illegible]காரஞ்சொல்லி
நிலந்தாங்குபுகழோனு[illegible]ஞ்சுவந்துவகைபொங்க
வலந்தாங்குசக்கரத்தா[illegible]மலரடிவழுத்தினானே.

(இ-ள்.) அப்படி [illegible]னித்து குலந்தாங்கு சாதியென்னுங் குற்றமற்ற பதிகமோதி நலம்பொருந்திய இந்த அன்பனுக்கு வாயுபசாரஞ்சொல்லி இந்தப் பூமியிலே மிகுந்த புகழுள்ள அந்த அன்பனுடைய ஆசாரியன் மனச் சந்தோஷமிகுந்து வலது கையிலே சக்கரப்படையைத் தாங்கியிருக்கும் ஸ்ரீமந்நாராயணனது திருவடியைத் தோத்திரஞ்செய்தான்.—எ-று. (௬௮)

உலகிலிக்கதையைமுன்னோரோதினாரகையாலே
யிலகுசக்கரத்தான்செய்கையெவரறிந்துரைக்கவல்லார்
நலமலவுன்றன்வாய்மைநனுகுன்றாரொனவென்னையன்
புலமறியாதவேதப்பூசுரன்புகலலுற்றான்.

(இ-ள்.) இப்படி உலகத்தில் இந்தக்கதையை முன்னோர்கள் சொன்னார்கள்; ஆகையினாலே பிரகாசமுள்ள சக்கரப்படையையுடையவனது செய்கையை எவர்களறிந்துசொல்ல வல்லமையுள்ளவர்கள். ஆனபடியினாலே உன்

114689

வார்த்தை நன்மையல்ல உன்னூருக்குப்போவென்று என்னையன் சொல்ல, அந்தப்புலமையறியாத வேதப்பிராமணன் சொல்வான்.—எ-று. (சுகூ)

கட்டியகதையீதிந்தக்காரியமுரைத்தாயென்று
நாட்டணங்கோதுகாலைத்தொழும்பர்சென்றிறைஞ்சியெங்க
ளிட்டனேடுரைப்பார்மாரிபெய்திடுகாலத்தாற்
சட்டமாய்த்திருக்காப்பேற்றச்சந்நிதிக்கிசைவிலென்றார்.

(இ-ள்.) உலகத்திலே இது கட்டுக்கதையாய்ச்சொல்லுகிறது இந்தக்காரியத்தைச் சொன்னாயென்று அந்த துஷ்டப்பிராமணன் அங்கேசொல்ல அந்த வேளையிலே சந்நிதிபரிசாரகர்வந்து பணிந்து எங்களிஷ்டனாகிய அநந்தநாதனுடனே சொல்லுகிறார்கள், மேகமாரிபெய்கிற காலமானபடியினாலே சட்டமாகக் கதவு திருக்காப்புசெய்யச் சந்நிதிக்கு இசைவில்லாமலிருக்கிறதென்று சொன்னார்கள்.—எ-று. (எ0)

அம்மொழிசெவியினாற்றென்னண்ணல்சொற்றிடுவன்மாயன்
செம்மினையொருவர்கையாற்றொட்டுக்கெடுங்கண்களாலே
கம்மியர்தனையழைத்துக்கதவுசெவ்வைச்செய்வோமென்
றம்மிலிற்சென்றுவந்துதான்துயில்புரியுங்காலை.

(இ-ள்.) அந்தச்சொல் காதிலே கேட்டு என்னண்ணலாகிய அநந்தநாதன் சொல்லுவான். திருமாயவனுடைமையை ஒருவர்கையினாலே தொடக்கண்கெட்டுப்போம், ஆகையினாலே நாளையதினம் தச்சர்களையழைப்பித்து கதவு செம்மையாகச்செய்து வைப்போமென்று சொல்லித் தன் வீட்டுக்குள்ளேபோய்ச் சந்தோஷமாய் நித்திரைசெய்யும்போது.—எ-று. (எக)

பரமதேசிகன்போல்வந்துபாவசண்டாளனென்னைக்
கரவடங்கொள்ளச்செல்வான்கண்டுகொளென்னவைய
னுருகியுள்ளெழுந்துகோயிலிலாடிவந்தோர்பானிற்க
விரியறிவின்றியந்தவேதியனணுகினானே.

(இ-ள்.) பரமதேசிகன்போலேவந்து சிவவாசகக்கடவுள் தன்னன்பனுக்குச்சொல்லுவார், அந்தப்பாவம்பொருந்திய சண்டாளன் என்னைத்திருடிக்கொள்ளவருகிறான், நீயறிந்துகொள்ளென்று சொல்ல என்னையன் பயந்தெழுந்திருந்து கோவிலுக்குவந்து ஒருபக்கத்தில் நிற்கும்போது மிகுந்த அறிவில்லாத அந்தப் பிராமணன் அவ்விடத்திற்கு வந்தான்.—எ-று. (எஉ)

எங்குற்றாயென்றென்னையனிம்மறையோனைக்கேட்ப
வங்கமுண்ணடுங்கநாவுமதுதடுமாறிச்சொல்வா
னிங்கறியாமற்கெட்டேனென்னைவிட்டோட்டிவிட்டா
லுங்களுக்கனேககீர்த்தியுலகத்துண்டாகுமென்றான்.



(இ-ள்.) அப்படிவந்தபோது எங்கேவந்தாயென்று என்னையன் இந்தப் பிராமணனைக்கேட்கச் சரீரமு மனமும் நடுங்க நாவுந்தடுமாறிச் சொல்லுவான். இங்கே யறியாமற் கெட்டுப்போனேன், என்னை யப்பாலே யோட்டிவிட்டால் உங்களுக்கு அனேககீர்த்தி இந்தவுலகத்தில் உண்டாமென்று சொன்னான். (எங)

எதுகினைத்தீண்டுசென்றாயெழின்மறையறிந்துமிந்த
மதியுனக்குதித்தவாறுமறைத்திடாதுரைத்தியென்ன
விதுமுகன்கேட்பவந்தவேதியனுரைப்பானுன்றன்
புதுமையைபுணரோன்வேதப்பொருளையான்கவரவந்தேன்.

(இ-ள்.) அப்படி சொல்லக்கேட்டு என்னகாரியம் நினைத்து இவ்விடத்திற்குவந்தாய் அழகானவேதம்படித்தும் இந்தப்புத்தியுனக்கு வந்தவகையை மறையாமற்சொல்லென்று பூரணசந்திரன்போன்ற முகமுடைய அநந்தநாதன் கேட்க அந்தப்பிராமணன் சொல்லுவான் உன் மகிமையை யறியாமல் வேதப்பொருளாகிய சிவவாசமூர்த்தியைத் திருடவந்தேனென்று பின்னுஞ்சொல்லுவான்.—எ-று. (எச)

மாதவன்கனவிற்சொன்னவார்த்தையென்றதும்பொய்யோ
மாதவினால்யான்செய்தவபசாரம்பொறுத்துவிட்டால்
நாதனேவெளியிற்சென்றுநாட்டினிலிரந்துண்டுய்வேன்
மாதவவென்றிரங்கிவாய்புதைத்தழுதான்மன்னோ.

(இ-ள்.) சிவவாசக்கடவுள் சொற்பனத்திலே வந்து சொன்னதொன்றதும் பொய்தான் ஆனபடியினாலே நான்செய்த அபசாரத்தைப்பொறுத்து என்னைவிட்டுவிட்டால் அநந்தநாதனே வெளியிலேபோய், தேசத்திலிரந்துண்டு பிழைப்பேன் மகத்தாகிய தவம்பொருந்தியவனே யென்று இரக்கமாய் வாயைக் கையினாலே மூடிக்கொண்டு அழுதான்.—எ-று. (எரு)

அதனைக்கண்டிரங்கியண்ணலா[illegible]செய்தாயிதன்னே
பிறுபிழை[illegible]
புதுமொழியவ[illegible]கோதிப்புந்தியைத்தெளியவைத்துச்
சதிர்பெறச்செய்தனுப்பத்தருமமென்றுரைப்பதானான்.

(இ-ள்.) அப்படி அழுதலைக்கண்டு மனதிரங்கி என்னண்ணல் இவனை வருத்தஞ்செய்து ஆகிறகாரியமென்ன? ஆகையினாலே இந்தப்பிழையைப் பொறுத்தோமென்று சொல்லி அன்றிராத்திரி விடியுமளவும் புதுமையான ஞானமொழிகளை இவனுக்குச் சொல்லி மனத்தைத்தெளியவைத்து பெருமைபெறச்செய்தனுப்புகிறது தருமமென்று சொல்லத்தொடங்கினான்.—எ-று. (எசு)

தெளிவிலாதிந்தவேலைசெயவந்தமறையோய்கேளாய்
வளமலிபரமன்செய்யுமாதவஞ்சுருதியன்ப

ருளமுறும்பாவனத்தாலுருவினிற்பொருந்துமந்தக்
கிளர்நிலைதெரியகன்றுய்க்கேளெனவறைவான்பின்னும்.

(இ-ள்.) மனது தெளிவில்லாமல் இந்தவேலைசெய்யவந்தபிராமணனே கேளும் வளமலிந்த பராபரன் அவரவர்செய்யும் பெருமையான தவத்திலும் அடியார்மனத்திலுமிருப்பார் அதல்லாமற் பாவனையிலேயே ஆராதனை ரூபங்களிலே பொருந்தியிருப்பார் அந்தப்பிரகாசமான நிலைதெரிய நன்றாய்க்கேளென்று பின்னுஞ்சொல்வான் என்னையன்.—எ-று. (௭௭)

புலனொடுகரணமற்றும்பொறிகளையடக்கிவாயு
நிலையறிந்தனேகங்காலநெடுந்தவஞ்செய்தபெருங்
குலையறவெதிராய்த்தோன்றியுயர்வரந்தருவான்ஞான
மலிவுறுமறிவுளோர்பான்மாதவன்றானுங்கேண்மோ.

(இ-ள்.) ஐந்துபுலனையும் நாலுகரணத்தையும் பின்னுமந்தப் புலனாலே யுண்டாகிய வைந்து விஷயத்தையுமடக்கி வாயுநிலைமைதெரிந்து அநேககாலம் நெடிதான தவஞ்செய்தபேருக்கு மனத்தலைச்சலற எதிராய்த்தோன்றி உயர்ந்த வரத்தைக்கொடுப்பார் மற்றபடி ஞானமிகுந்த அறிவுள்ளவரிடத்திலே ஸ்ரீமந்நாராயணமூர்த்தி அவர்களே தானாக இருப்பார்.—எ-று. (௭௮)

முயற்கொம்புகட்டைக்கள்ளன்மோகனார்மலடிமைந்த
னயத்திடும்பிவெள்ளிநாடியகனவுபோலச்
செயற்கையற்றிடமுங்காண்போர்தீட்டுமோவியன்றித்தோன்றும்
வியப்புலகோவியத்தின்விதமிதென்றறிவாய்மன்னே.

(இ-ள்.) பின்னு முசற்கொம்பு கட்டையிற் கள்ளன் மன்மதப்பட்டினம் மலடிமைந்தன் பிரமிக்குஞ் சிப்பி வெள்ளி நித்திரையிற் காணுஞ் சொப்பன மிவைகளைப்போலச் செய்கையற்று ஓரிடமுங்காண்பவரு மெழுதினவருமில்லாமற்றோன்றுஞ் [illegible] சித்திரத்திலுடையவித்தி [illegible] யென்று பின்னுஞ்சொல்லுவாய் [illegible] என்னையன்.—எ-று. (௭௯)

தத்துவந்தொண்ணூற்றாறுந்தயங்குமாதாரமாறுஞ்
சித்தத்திலுணர்ந்தவத்தாத்திரயமும்மலமுக்காலஞ்
சத்தமும்பரிசரூபரசகந்தனையறிந்தால்
நித்திரையதனிற்றோன்றுநிலையெனவுலகம்பொய்யாம்.

(இ-ள்.) தொண்ணூற்றாறு தத்துவமும் விளக்கமானமூலாதாரஞ், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞையென்ற ஆதாரமாறும் மனத்திலேயறிந்து சாக்கிரஞ், சொப்பனஞ், சுழுத்தியென்ற அவத்தாத்திரயமும் ஆணவம், மாயை, காமியமென்னும் மும்மலமுஞ் செல்காலம், நிகழ்காலம், வருங்காலமென்னும் முக்காலமுஞ் சத்த, பரிச, ரூப, ரச, கந்தமென்னுமைம்பொறிமுதலானவையு மறிந்தால் நித்திரையிலேதோன்றும் நிலைமையைப்போல இந்தவுலகம் பொய்யாம்.—எ-று.



சாதனைசதுட்டயத்தைத்தன்வயப்படுத்தியானும்
போதனைப்பணிந்துநன்னூற்பொருள்வயிராக்கியத்திற்
றீதறமுயன்றுஞானத்திரயமக்கியானமைய
பேதஞ்சேர்விபரீதத்தைப்பிரித்துமூவுடலைக்கண்டு. (௮௦)

(இ-ள்.) பின்னும் சமம், தமம், திதிக்ஷை, உபாதி, சிரத்தை, சமாதியென்னுஞ் சதுஷ்டயமென்னும் சாதனையும்; ஆர்த்தம், அங்கம், தானம், சற்பாவமென்னுஞ் சதுஷ்டயமும் ஆகிய இவைகளைத் தன்வயப்படுத்தித் தன்னையாளும் ஞானாசாரியனைப் பணிந்து நல்ல நூற்பொருளிலும் வயிராக்கியத்திலும் குற்றமறப் பழகி, சிரவணம், மனனம், நிருத்தியாசனமென்னும் ஞானத்திரயத்தின்வழி நின்று; அஞ்ஞானம், சமுசயம், விபரீதமென்னும் அஞ்ஞானத்திரயத்தின் பகுதியைப்பிரிந்து; தூலம், சூக்குமம், காரணமென்னு மூன்றுடலையும் காண்பது.—எ-று.

இவற்றுள் சாதனையாறனுள் சமம், உட்கரணமடக்கல்; தமம், புறக்கரணமடக்கல்; திதிக்ஷை, காமக்குரோதாதியைத்தணித்தல்; உபாதி, பிரபஞ்சவாஞ்சையையொழித்தல்; சிரத்தை, சாத்திரங்களைக் கேள்விப்படுதல்; சமாதி, அந்தச் சாத்திரஞ்சொன்ன நிலையிலே நிற்றலாம். சதுஷ்டயமாகிய நான்கனுள் ஆர்த்தம், குருவுக்கனுகூலமாயிருத்தல்; அங்கம், குருவினது பாதார்ச்சனைபுரிதல்; தானம், குருவின் இருகத்தைக்காத்தல்; சற்பாவம், குருவையே கடவுளாக நம்புதலாம். ஞானத்திரயமாகிய மூன்றனுள் சிரவணம், ஞானநூலைக்கேட்குதல்; மனனம், அந்த ஞானநூலிற்கேட்ட பொருளை மறவாமற்தியானித்தல்; நிருத்தியாசனம், குருசொன்ன நிலையிலே நிற்றலாம். அஞ்ஞானத்திரயமாகிய மூன்றனுள் அஞ்ஞானம், தான் பிரமமல்லவென்பது; சமுசயம், நாமந்தப்பிரமத்தையறியமாட்டோமென்பது; விபரீதம், பேதைமையைச்சேர்ந்து பெண்டு பிள்ளைகளுக்கு வேண்டுவனவற்றைச் சம்பாதித்துவைத்துப் பின்னர் ஞானத்தையறியலாமென்பதாம். (௮௧)

கற்பனையுலகிலென்னுங்கருத்தறிந்துளத்தைவென்று
லற்புதவறிவுகோடியாதித்தரொழுக்கதென்னப்
பற்பலமாயைநீங்கப்பருங்கதிர்விட்டெறிக்குந்
தர்ப்பணமுகம்போற்சென்மசாகரக்கரைமுன்றோன்றும்.

(இ-ள்.) மாயாகற்பனையை யுலகமில்லையென்னுங் கருத்தையறிந்து மனத்தைவென்றால் அற்புதமான அறிவுகோடி சூரியோதயமானாற்போல தோன்றிப் பலபலமாயையை நீக்கிக்கிரணம் விட்டெறிக்கும் அந்தக்கண்ணாடியிலே பார்க்கக்கண்ணாடிக்குள்ளே முகந்தெரிந்தபோற் பிறவிக்கடலின்கரை சமீபித்தோன்றும்.—எ-று. (௮௨)

வென்முத்தியாகுமென்றனைத்தேயந்த
செல்லும்வகைபுரிந்திருந்தான்மற்றுஞ்

சதிசெயவினைத்தோளாயன்றான்வந்தான்மாயன்சென்று
விதொலைத்தாண்டானத்தைவிளம்புவேனுணர்ந்துகேண்மின்.

(இ-ள்.) அந்தக்குணத்தினாலே சீவன்முத்தியாகுமென்றுசொல்லி முன் புத்தியைப்போக்கடித்து அவனூருக்கு அவன்போகும்படியாய்ச்செய்த்து அனந்தநாதன் சந்தோஷமாயிருந்தான்; அப்படியிருக்கிறகாலத்திலே சதிசெய்யும்படியாயொருபிராமணன்வந்தான் ஸ்ரீநிவாசக்கடவுள்வந்து அவன்வழியால்வந்த விதியைத்தொலைத்துக் கடாட்சஞ்செய்தார் அதைச்சொல்லுகிறேன் அறிந்துகேளுங்களென்று பரந்தாமன்சொல்வான்.—எ-று. (அக)

பொய்யாகாதனையானபடலம்முற்றிற்று.

ஆக படலம் அ-க்குத் திருவிருத்தம்-நிஅஎ.

---

## வசனுபிகண்டகற்றியபடலம்.

என்னரசின்புற்றிவ்வாறிருப்பவோர்தினத்துட்கச்சிப்
பொன்னகர்மறையோன்பூமிபுகழ்வயிணவன்பூஞ்சோலைத்
தென்னுலவியமெய்ஞ்ஞானத்தென்றிருப்பதியின்மேவு
மன்னவன்சீநிவாசன்வளம்பெறுகோயில்புக்கான்.

(இ-ள்.) கேளுங்கள் திருமாலடியார்களே என்னரசனாகிய அனந்தநாதன் இன்பம்பொருந்தி யிப்படியிருக்கிறகாலத்திலே ஒருநாள் பொற்பிரகாசமான பெருமாள்கோயிலிலிருக்கு மொருபிராமணன் பூமியெல்லாம் புகழும் ஸ்ரீவைஷ்ணவன் சோலைசூழ்ந்து அழகுபொருந்திய மெய்ஞ்ஞானத்தை விளங்கச்செய்யுந் தென்றிருப்பதியிலே வீற்றிருக்குமன்னவனாகிய சீநிவாசக்கடவுள் வளமைபெற்று விளங்கும் சந்நிதானத்துக்குவந்தான்.—எ-று. (க)

வந்தவன்றன்னையேத்திமகிழ்ந்தெனதைபனேக்கி
யெந்தவூரெங்கேகிற்றென்றியம்பிடமறையோன்கூறுஞ்
செந்திருக்கச்சியெம்மூர்சீநிவாசன்சென்றிங்கே
சந்ததமுறைவாயென்னச்சாற்றினுளதனாலுற்றேன்.

(இ-ள்.) அப்படிவந்தவனைக்கண்டு வணங்கி மகிட்சியாயெங்களனந்தநாதன்சொல்லுவான் எந்தவூர் எங்கெழுந்தருளிற்றென்றுகேட்க அந்தப்பிராமணன்சொல்லுவான் சிவந்தபொற்பிரகாசமான இலட்சுமீகரம்விளங்கிய பெருமாள்கோயில் எங்களூர் என்னைச் சீநிவாசக்கடவுள் இவ்விடத்துக்குவந்து எந்நாளு மிருப்பாயென்று சாதித்தாராகையால் வந்தேனென்று பின்னுஞ் சொல்வான்.—எ-று. (உ)

வேதசாத்திரம்புராணம்விளங்குசாம்பிரதாயங்க
ளோதினேன்யாங்களித்தவுலகத்தோர்க்குபதேசங்க



டிதறவுரைப்பதல்லாற்சென்றொருவர்களிடத்தி
லாதியாய்க்கற்பதில்லையதுபிதாவழியாய்க்கேட்போம்.

(இ-ள்.) வேதம் சாஸ்திரம் புராணம் விளக்கமான சாம்பிரதாயங்களெல்லாம் படித்துக்கொண்டேன் நாங்களித்தவுலகத்தோர்க்கு உபதேசங்களைக்குற்றமறச்செய்வதல்லாமல் ஒருவரிடத்துக்குப்போ யெங்கள் வமிசமெல்லாங் கற்றுக்கொள்ளுகிறதில்லை அந்த வுபதேசத்தை பிதாவழியாகக் கேட்டுக்கொள்ளுவோமென்று பின்னுஞ்சொல்வான்.—எ-று. (ங)

எந்தனுக்கறுவர்மைந்தரிதிலொருமூன்றுபெண்கட்
கந்தமாய்விவாகஞ்செய்யவறிவுற்றேனிந்தவேலை
வந்துறுவறுமையாலேமணஞ்செய்துபொன்னைவாங்குஞ்
சிந்தையுமிலதாயெங்கடேவனைத்தியானித்தேனே.

(இ-ள்.) எனக்கு ஆறுபேர் பிள்ளைகள் அதிலே மூன்றுபெண்கள் அதற்கு அழகான விவாகஞ்செய்ய நினைத்தேன் இந்தவேளை எனக்குத் தரித்திரஞ் சேர்ந்திருப்பதினாலே அந்தப்பெண்களைக் கலியாணஞ் செய்துகொடுத்து அறிந்து பொருளைவாங்கவு நினையாமல் எங்கள் பரவாசுதேவனைத் தியானித்தேனென்று பின்னுஞ் சொல்வான்.—எ-று. (ச)

அப்பொழுதகிலநாதனறைகுவன்குழுளமென்றே
செப்பியநகர்தன்னைத்தென்றிருப்பதியென்றாக்கி
யெற்பெருங்கிரிக்குச்செல்லுமின்பொருண்முடிப்புமொவ்வு
மொப்பனைபுரிந்துவந்தார்க்குறுபிணிதீர்த்திருந்தோம்.

(இ-ள்.) அந்தவேளையிலே அகிலநாதனான சீநிவாசக்கடவுள்வந்து சொல்லுகின்ற குழுளமென்று சொல்லு நகரத்தைத் தென்றிருப்பதியென்று பெயருண்டாக்கி என் திருமலைக்குவரும் இனிமையான காணிக்கை முடிப்புஞ் சேர்ந்து இவ்விடத்திலே செல்லும்படியாய்க் கடாட்சஞ்செய்து வந்து பணிகின்றவர்களுக்கு முன்னிருக்கும் வினையைத் தீர்த்துக்கொண்டிருக்கின்றோமென்று பின்னுஞ் சொல்வான்.—எ-று. (ரு)

குடும்பத்தோடேகிநீயக்குழுளநற்பதியிற்சென்றே
நெடும்புனற்பம்பையென்னுநீணதிவடபால்வீட்டிற்
றிடம்பெறவிருந்தேயென்னைச்சேவிக்கவருவோருக்குத்
தடம்புயத்தாழிசங்கந்தரித்துபதேசஞ்செய்வாய்.

(இ-ள்.) குடும்பத்துடனே நீ யந்த குழுளமென்னும் நன்மையுள்ள நகரத்துக்குப்போய் மிகுந்த சலம்பெருகிய விசாலமான பம்பாநதிக்கு வடபாலிருக்கும் வீட்டிலே சந்தோஷமாக இருந்துகொண்டு என்னைச் சேவிக்க வருகிறவர்களுக்குக் காத்திரமானதோளிலே சங்குசக்கரந்தரித்து உபதேசஞ்செய்வாயென்று பின்னுஞ் சொல்வான்.—எ-று. (சா)

அதில்வரும்பொருளுனக்கேயாம்படிசெய்துகோவி
லுதவியருள்லையோடுமொண்பிரசாதமற்று
முதனடத்திடுகவென்றுமொழிந்தனமென்றேயென்றன்
பதவணிப்பூசைசெய்யும்பண்பனுக்குரைத்தியாலும்.

(இ-ள்.) அப்படிசெய்து அதில்வரும் பொருளை உனக்காகும்படி செய்துகொண்டு சந்நிதானத்திலே கொடுக்குந் திருத்துழாயுடனே பிரசாதமு மற்றுமுள்ளவைகளும் முதல் உனக்கு நடக்கும்படி நாம் சொன்னோமென்று, என் பாதபூசை யலங்காரமாக ஆராதிக்குங் குணமுள்ள அனந்தநாதனுக்கு நீ சொல்லுவாயாகுலென்று பின்னுஞ் சொல்வான்.—எ-று. (௭)

உகந்தந்தப்படியேசெய்வனுனக்கவன்சீடனாகச்
சகந்தனிலொளிரும்பஞ்சசமற்காரமுஞ்செய்துனக்கற்
சுகம்பெறுநூலையெல்லாஞ்சொல்லிச்சாம்பிரதாயங்க
டரும்படிசெய்வையென்றுசாதித்தாளிவையான்சொல்வேன்.

(இ-ள்.) சந்தோஷமாக அந்தப்படியே அனந்தநாதன் செய்வான் அவனையுனக்குச் சிஷனாக்கிக்கொண்டு இந்த உலகத்திலே கீர்த்திப் பிரகாசமான பஞ்சசமஸ்காரமும் அவனுக்குச்செய்து உன்னிடத்திலிருக்குஞ் சுகம்பெறும்படியான சாஸ்திரங்களையெல்லாஞ் சொல்லி சாம்பிரதாயங்களைத் தரும்படி செய்துவையென்று திருவுளம்பற்றினார் அதற்கு நான்சொன்னவை கேளுமென்று பின்னுஞ் சொல்வான்.—எ-று. (அ)

என்மொழிதன்னைப்புண்ணியிவ்வகையாவர்செய்வ
ரன்னவன்றனக்குமித்தையருளெனவுரைத்தேன்மாயன்
சொன்னதுகேளாயென்றன்றொழும்பருக்கடிமைசெய்யு
மின்னபேரன்பனுக்கிதைசெப்பிடாயிதைநீமற்றும்.

(இ-ள்.) இப்படி யான்சொன்னால் எனது வார்த்தையை நம்பி இப்படியார் செய்வார்கள் அந்த அனந்நாதனுக்கு இந்தப்படி கிருபைசெய்யுமென்று நான் சொன்னேன் அதற்குச் சீனிவாசக்கடவுள் சொன்னதைக்கேளும் என்னடியார்களுக்கு அடிமைசெய்யும் அந்தப்பேரன்பனுக்கு இதை நீ சொல்லென்று பின்னுஞ் சொல்வான்.—எ-று. (௯)

உனதுசொல்லுள்ளத்துன்னிபுகந்துடனடவாளுகி
லனகமுத்தினத்தினம்மையணுகிப்பூசனையுஞ்செய்யா
தனவகைபுரிவோமென்றுசாற்றினனாகையாலே
முனம்வந்தேன்சமுசாரம்பின்மொழிக்கிடிலழைப்பேனென்றான்.

(இ-ள்) உன் வார்த்தையை நம்பிச் சந்தோஷமா யப்படி நடவானாகில் பத்தியுள்ளவனே மூன்றுதினத்திலே நம்மைக்கிட்டவந்து பூசைசெய்யாதவகையைச்செய்வோமென்று அருளினார். ஆகையினாலே நான் முன்னேவந்தேன்





பின்னாலே என்சமுசாரத்தை சேரழைப்பிக்கச்சொன்னால் அழைப்பிக்கிறேனெ ன்று சொன்னான்.—எ-று. (௧௦)

வேதியனுரைப்பக்கேட்டுவிளங்குநல்லறிஞன்சொல்வான்
சோதிமாமுகிலுனக்குச்சொல்வகையெனக்குமோதிற்
றீதறநடக்குமல்லாற்சிறிதேனுங்கூடாதென்னப்
பூதர்ப்பொய்யனைபூசுரன்புகல்வதானான்.

(இ-ள்.) அப்படி அந்தப்பிராமணன் சொல்லக்கேட்டு விளக்கமான நல்லறிவுள்ள என்னையன் சொல்வான், சோதிமாமுகிலாகிய சிவாசக்கடவுள் உனக்குச் சொன்னபடி எனக்குஞ்சொன்னாற் குற்றமில்லாமல் நடக்கும் இல்லை யாகிற் கொஞ்சமாகிலும் நடவாதென்று சொல்லக்கேட்டு அந்தமலையத்தனைப் பொய்யனை பிராமணன் சொல்வான்.—எ-று. (௧௧)

எந்தமேறுமொத்ததேவனியைந்துனக்குரைப்பானென்றே
சிந்தையிலுன்னிலேனீதெரிந்திலைநடத்திடாயே
லுந்தனைவிட்டெங்கேகேனுறுதியென்றிருந்துகொண்டு
புந்தியிலாங்காரத்தாற்புகைக்கெழுந்தழன்றான்மன்னே.

(இ-ள்) என்னுடனே சொன்ன பரவாசதேவன் இசைவாக உன்னுட னேயுஞ் சொல்வானென்று என்மனதிலே நினைக்கவில்லை ஆனபடியினாலே இது தெரிந்து நீ நடவாவிட்டால் உன்னைவிட்டு எங்கும்போகேன் இது உறுதி தானென்று இருந்துகொண்டு மனத்திலே அகங்காரத்தினால் அக்கினி புகைக் கெழும்படியான கோபங்கொண்டான்.—எ-று. (௧௨)

வேறு.

அடியருக்கிடுக்கணுறுகிடாக்கிருபையரண்செயுஞ்சற்குணக்க டவுட், படிமிசைவலியவாட்கொண்டதொண்டன்பகருமின்னுயிரி னைக்காப்பக், கடிமலர்ப்பதத்தேசிகன்சொலும்பச்சைக்கருப்பூரந் னைவசனாபி, யொடுகலந்தெனதுபாதரோனுவிதெனவுதவுவனீயுனே லென்றான்.

(இ-ள்.) அந்தவேளையிலே அடியார்களுக்கோரிடுக்கண் வாராமற் றன து கிருபையென்னுங் கோட்டையினுள்ளே வைத்துக்காக்குஞ் சற்குணக்கட வுளாகிய சிவாசமூர்த்தி பூமியிலே வலிய ஆட்கொண்ட தொண்டனென்று சொல்லு மினிமையான அனந்தாதனுயிரைக் காக்கவாசனையான மலர்போ ன்ற திருவடியுடைய பரமதேசிகர் உருவமாகவுந்து சொல்லுவார் பச்சைக் கர்ப்பூரத்தைந் வசனுபி யுடனே கலந்து என் திருப்பாதரோனு இதென்று அந் தப்பிராமணன் கொடுப்பான் அதை நீ புசியாதையென்று திருவுளம்பற்றினார்.

என்னையாளரசன்றன்னையாள்கடவுளியம்பியவுரைமனத்திருத் திப், பின்னைகாட்புலரிக்காலையிற்பம்பைப்பெருநதியாடவேகியபோ,

திச்சிலேம்மறையோன்பெருங்குறட்டினில்வந்திருந்தபின்றொடர்ந்து பசாரஞ்சொன்னவை அறிந்துவஞ்சகம்பெருகுந்தொழிலனுக்கிவை யிவைதொகுப்பான்.

(இ-ள்) இப்படி என்னையாளு மிராசனுகிய அனந்தநாதனையாளுஞ் சீனிவாசக்கடவுள்சொன்ன திருமொழியை மனத்திலே நினைத்துக்கொண்டு மறுநாள் சூரியோதயத்திலெழுந்திருந்து பெருமையுள்ள பம்பாநதிக்குத் தீர்த்தமாடப் போகிறபோது முன்சொன்ன கொடுமையான நிலைமையுள்ள அந்தப்பிராமணன் தெருத்திண்ணையிலே வந்திருந்து பின்னே தொடர்ந்து உபசாரவார்த்தையைச்சொல்ல அதை யறிந்து வஞ்சகம் பெருகுந் தொழிலுள்ளவனுக்கு இவ்விதமாகச் சொல்லுவான் அனந்தநாதன்.—எ-று. (கச)

உனக்குளகருத்தையறிகுவன் வள்ளலோதிடலெம்பெருமாயன், றனக்கறிவரியவுயிரிலென்றியப்பிச்சலந்துளோந்தினியபூசையுஞ்செய், தனத்தினையருந்திவளர்திருப்பணியினைவிசாரணைசெயவையன், சினப்பெருமறையோன்றுவாதசநாமச்செவ்வியோடவ்வழிச்சென்றான்.

(இ-ள்.) உனக்குள்ள கருத்தை வள்ளலறிகுவானெனக்கு நீ யுபசாரஞ் சொலத்தேவையில்லை எம்பெருமானுகிய சீனிவாசக்கடவுளறியாத உயிர்களில்லையென்று சொல்லி பம்பாநதியிலே நீராடி ஆராதனையுஞ் செய்து அன்னம் புசித்து வளர்ச்சியான திருப்பணி விசாரணையை என்னையன்செய்ய அந்தவேளையிலே அந்தப்பெருங்கோபமுள்ள பிராமணன் துவாதசநாமப் பிரகாசத்துடனே அவ்விடத்துக்கு வந்தான் —எ-று. (க௫)

தண்டுழாயபயகாமுமக்கதைபைந்தாழையங்கனிவிடக்கலந்து, கொண்டதாளிரேணுவைக்கையிலெடுத்துக்குணச்சாமச்சுலோகத்தை, வண்டனங்கோதியண்ணலுக்களிக்க வாங்கிப்பாக்கியமெனவுரைத்துக், கண்டணிலொத்தித்தானுறுவனனக்கம்பளமிசையிருத்தினனல்.

(இ-ள்.) அப்படிவந்து குளிர்ச்சிபொருந்திய திருத்துழாயும அபயாஸ்தமும் அட்சதையும் பசுமைபொருந்திய தென்னங்கனியாகிய தேங்காயும் விளங்கலங்கிருக்கும் ஸ்ரீபாதரேணுவையுங் கையிலெடுத்துக்கொண்டு குணமான சாமச்சுலோகத்தை யந்த வண்டன்சொல்லி அனந்தநாதன் கையிற்கொடுக்க அதை வாங்கி மகாபாக்கியமென்று சொல்லி கண்ணிலொத்திக்கொண்டு தானிருக்கு மிரத்தினக்கம்பளத்தின்மீதிலே வைத்தான்.—எ-று. (கசு)

நோக்கியம்மறையோனரிப்பிரசாதநுண்மைகடெரிந்தநீயிருக்கைக், காக்குகம்பளமேல்வைத்தபசாரமதுசெயலாகுமோவெனவென், பாக்கியன்பகர்வானிப்பொழுதெங்குபதிப்பதென்றுரைக்கவுள்



ளுலவு, நீக்கரும்வெகுளிபொங்கக்கண்விழித்திங்ஙெதிமுறைபுகலும் வேதியனே.

(இ-ள்.) அப்படி வைத்ததைப்பார்த்து அந்தப்பிராமணன் சொல்லுகிறுன் அரிப்பிரசாத மகிமைதெரிந்த நீர் உட்கார்ந்திருக்கச்செய்வித்த இரத்தினக்கம்பளத்தின்மேல் வைத்து அபசாரஞ் செய்யலாமோவென்றுகேட்க என் பாக்கியவடிவான அனந்தநாதன் சொல்வான்; இப்பொழுது எங்கேவைப்பதென்று சொல்லக்கேட்டு மனத்திலே நீக்கவரிதான கோபம்பொங்கக் கண்ணை விழித்துப்பார்த்து இவ்விதமாகச்சொல்வான் அந்தப்பிராமணன்.—எ-று. (கஎ)

அக்கதைசிரத்திலபயத்தங்குல்லேயணித்திருநாமப்பெட்டகத்தின் மிக்கொளிவளர்சந்நிதிக்கனிற்றேங்காய்விளங்கியசீர்பதரேணு குக்கியிலிருக்கச்செய்திடாதெனதுகொழுங்கரத்தேற்றபொழுதே பக்குவமறியாரெனவிதுபுரிதற்பாவமென்றறப்பொருளுரைத்தான்.

(இ-ள்.) அட்சதை சிரசின்மீதிலேயும் அபயாஸ்தமுந் திருத்துழாயும் அழகான திருமண்பெட்டியிலேயு மிகுந்த பிரகாசமான சந்நிதியினிடத்திலே தேங்காயும் விளக்கமான திருப்பாதரேணுவை வயிற்றிலுமிருக்கச் செய்திடாமல் என்னுடைய செழுமையான கையிலே இருந்து வாங்கினபொழுதே பக்குவந் தெரியாதவர்களைப்போலே இப்படி செய்கிறது பாவமென்று தருமசாஸ்திரத்தை எடுத்துச் சொல்லிக்காட்டினுன்.—எ-று. (கஅ)

உடற்சுத்தியில்லேன்பசியதாம்பூலமுண்டவாயாகையானீர்சொல், லிடத்தினில்வைப்பேனெனவையனேந்தவின்பமின்மறையவன்பெரியோர், கொடுத்தபோதருந்திக்கண்டொடன்றொழுதற்கொள்கையாமிவையிருந்தாலு, மெடுத்துமெற்பாதரேணுவையுளேயிப்பொழுதிருத்துவாயென்றுன்.

(இ-ள்.) அதுகேட்டு என்னையன் சொல்லுவான் சரீரசுத்தியில்லாமையாலும் பசுமையான தாம்பூலம் புசித்தவாயானமையாலுந் தாங்கள் சொன்ன இடத்தில் வையாமலிருக்கிறேனென்று என்னையன் சொல்ல இன்பமில்லாத பிராமணன் சொல்லுவான் பெரியோர் கொடுத்தபொழுதே புசித்து கண்டவுடனே தொழுகின்றது கல்வியிலேமையாகும் ஆனபடியினுலே இவைகளெல்லாமிருந்தாலும் தங்கம்போன்ற திருப்பாதத்தினுடையரேணுவை மாத்திரமெடுத்து இப்போதுதானே யுட்கொள்ளென்று சொன்னுனந்தப் பிராமணன்.()

என்றபோதன்பன்றேகத்தைச்சுத்தியற்றிப்பின்னுட்கொளவியற்கை, நன்றெனக்கன்னலனைசென்றபின்புகான்மறையோன்வண்ணமெனவே, யன்றதுவின்னமென்பவரொடுவாக்கறைவதுகுற்றமென்றளித்த, வின்றுழாய்முதலாவெடுப்பக்கைக்கீட்டவென்னையனதுதடுத்தியம்பும்.

(இ-ள்.) அப்படிசொன்னபோது என்னையன் சொல்வான் தேகத்தைச் சுத்திசெய்து பின் உட்கொள்ளுகிறது இயற்கையான நன்மையென்றுசொல்லி அனாசாரிகை சென்றபின் அந்தப் பிராமணன் சொல்வான் வண்ணமென்றால் அல்ல அது இன்னமென்பாருடனே பேசுவது குற்றமென்று தான்கொடுத்த இனிமையான திருத்துழாய் முதலானவற்றை எடுக்கக்கையைநீட்ட என்னையனைத் தடுத்துச்சொல்வான்.—எ-று. (௨௦)

பெரியவரளித்தபொருளைப்பின்வாங்கப்பேசியவாசமுளதோ, வருமறையோயென்றதையெடுத்தோர்பாலனுசவைத்திடவருணிலை மை, தெரிகிலாரிடத்தென்றேவனன் றுரைத்தசெயலினுலிங்குவந் தெதற்குஞ், சரியின்மோடனம்பெற்றேன்விதியென்றேசாற்றினனக்கொடுஞ்சினத்தோன்.

(இ-ள்.) பெரியவர்கொடுத்த பொருளை பின்னேவாங்கிக் கொள்ளுகிறதற்குச் சொல்லியிருக்கிற சாஸ்திரமுண்டோ அரிதாகிய வேதபாராயணமுள்ள பிராமணனேயென்று என்னையன் சொல்லியந்தப் பிரசாதங்களை யெடுத்து ஓரிடத்திலேவைக்கக் கிருபையில்லாமை தெரியாதவர்களிடத்திலே என் தேவன் அன்று வந்து சொன்ன திருவாக்கைநம்பி இவ்விடத்துக்குவந்து எதற்குஞ் சரியில்லாத மோடனம்பெற்றேன் இது என் விதியென்று சொன்னான் அந்தக்கொடிய கோபம் பொருந்திய பிராமணன்.—எ-று. (௨௧)

அப்பனன் றுரைப்பானுயிர்க்குயிராகியணுவினுக்கணுவுமாய்நிறைந்த, மெய்ப்பொருட்செயலையன்றியெள்ளளவும்வினைவகைபுரியமாதவர்க, ளெப்பெரியோர்களினைக்கினுமுடியாதிருப்பதுமறைவழக்காமா, லொப்பறுவினைவந்தனுகினுமதனையுடனனுபவித்திடவேண்டும்.

(இ-ள்.) அதையறிந்து என்னப்பனாகிய அனந்தநாதன் சொல்வான் உயிருக்குயிரும் அணுவுக்கணுவுமாய் நிறைந்த மெய்ப்பொருளாகிய ஈசுவர சாமர்த்தியத்துடைய செயலல்லாமல் எள்ளளவு மொரு காரியத்தை விளைவிக்க முனிவர்கள்முதலாகிய எந்தப்பெரியவர்களாலேயு முடியாதிருப்பதென்பது வேதவழக்கமாகும். ஆனபடியினாலே ஒப்பற்ற வினைவந்தாலு மதனை யுடனே யனுபவித்திடவேண்டுமென்று பின்னுஞ்சொல்வான்.—எ-று. (௨௨)

என்விதிவயமிங்குனைவரவழைத்தாலிதற்குநீதுயருறேலெனவே
மூன்பெரியவர்சொல்வாதிட்டங்கீதைமுதற்புராணத்தெடுத்தோதி
யன்பனீதுரைக்கக்கலைவலானந்தனகத்தினால்வருங்கதிதெரியா
தின்பமுற்றனைபின்வருவனென்றெழுந்தாரோகின்னவஞ்சகநிலையன்

(இ-ள்.), எனது விதிவசமானது உன்னை இங்கே வரவழைத்தா லதற்கு நீ விசனப்படவேண்டியதென்னவென்று முன் பெரியவர்கள் சொன்ன



வாசிஷ்டம், கீதை முதலான நூல்களிலெடுத்துச் சொல்லி என்னைய னிருக்க சாஸ்திரவல்லவனாகிய பிராமணன் சொல்வான் உன்னகங்காரத்தினாலே வருங்காரியத்தை அறியாமல் சந்தோஷமா யிருக்கின்றாய் பின்னாலே வருவேனென்று எழுந்திருந்து அவனூருக்குப்போயினான் அந்த வஞ்சகநிலைமையுள்ள பிராமணன்.—எ-று (௨௩)

மறுதிங்களனுகிப்பம்பைமாநதியின் வடகரைதனிலிருந்தென் சொ,. லுறுதியாய்க்கேளென் றன்னனுக்கிசைப்பவுன்மொழியமுதமென்செவியாஞ், செறுவில்கற்கடகம்வாழ்புழையூற்றச்செய்வதென்பலமெனவோத; மறையவன்புகல்வானின்செயலறியாவந்தவாறுரைத்திடக்கேண்மோ.

(இ-ள்.) மறுபடி யொருமாதஞ் சென்றபிறகு அந்தப்பிராமணன்வந்து மகத்தாகிய பம்பாநதியின்வடகரையிலே இருந்துகொண்டு என்னையனைக்கண்டு என்சொல்லை உறுதியாய்க்கேளென்று சொல்லக்கேட்டு என்னையன்சொல்வான் உன்சொல்லாகிய அமுதத்தை என்செவியாகிய வயலில் அலவன் செய்த வளையிலே வார்க்கச்செய்கிறது என்ன பலனென்று சொல்ல அந்தப் பிராமணன் சொல்வான், உன்செயலையறியாமல் எனக்குவந்த விபத்தையெல்லாஞ் சொல்லக்கேளுமென்று சொல்வான்.—எ-று. (௨௪)

மடப்பருமறிவாலிகழ்ந்தென் னூரனுகிமனைவியோடுரைத்தனேனாய், விடப்பொடியளித்தேனுட்கொளவிலையெவ்விடத்தினிலெ கேளாய், விடப்பொடியளித்தேனுட்கொளவிலையெவ்விடத்தினிலெ றிவனோவன்றி, யடுத்தவர்க்களித்துச் சோதனையானுமறிவன்கொலோபதரோனுக்கு, நிடத்தினைக்காணவெண்டினத்தினிற்பின் செல்வனென்றிப்பதிபுகுந்தேன்.

(இ-ள்.) மடமையுள்ள பெருத்த அறிவினாலே உன்னை இகழ்ந்து என்னூருக்குப்போய்என்பெண்சாதியுடனே சொன்னதைக்கேளும் விஷப்பொடியைக் கொடுத்தேன் அதை உட்கொள்ளவில்லை வந்தவிடத்திலே எறிந்துபோவானோ அதல்லாமலும் அடுத்தவர்களுக்குக்கொடுத்துச் சோதனைகாண்பானோ என்னவோ தெரியாது அந்தத்திருப்பாதரோனுவினது இடத்தைக்காண வட்டுகொண்டு என்னவோ தெரியாது அந்தத்திருப்பாதரோனுவினது இடத்தைக்காண வட்டுகொண்டு பின்னாலேசொல்லி இந்நகரத்துக்குவந்தேன்.—எ-று. (௨௫)

இன்னமோர்விதத்தைச்செய்யலாமென்பாலிருக்குஞ்சிர்கோசமடிசஞ்சை, மின்னியவிரவியழுந்தகானுந்தன்வீட்டினிலிதைவைக்கவேண்டு, மன்னியரின்றியேசுதேகத்திலடைந்ததாலுதாவாதைக்கே, யுன்னியோர்புறஞ்சென்றுவிதைகள்வருடனெடுத்தோடிலென்செய்தேன்.

(இ-ள்.) ஆனபடியினாலே இன்னமொருவிதஞ் செய்யலாம் அதென்னவென்றால் என்னிடத்திலிருக்கும் ஸ்ரீகோசமடிசஞ்சை பிரகாசமான ஸ்ரீ

யன் அஸ்தமயனமானபிறகுபோய் உன்வீட்டிலிதை வைக்கவேண்டும் யாதொருவரு மில்லாமல் ஏகதேசமாக இவ்விடத்திற்கு வந்ததினாலே யதார்வா தைக்காக நினைத்து ஓரிடத்திற்போய் இதை அவ்விடத்தில்வைத்து நான் வெளியிலே போனவேளையிலே திருடனெடுத்துக்கொண்டுபோனு னென்செய்வேனென்று பின்னுஞ் சொல்வான்.—எ-று. (உசு)

என்றச்சமுறுவதாகையாலிவையிங்கிருப்பச்செய்யெனவகன் றப்பா, னின்றுமென்னேவருபவற்கொண்டுநீயிடத்திலொருவருமறியா, தின்றியேவருவித்தவிடஞ்சென்றாகாயிருவாயெனவினைவிடிலே, யொன்றுமேதெரியாதுருகிகோலேயோதிடுவகையதுகேண்மோ.

(இ-ள்.) இப்படியாக என்மனத்தில் அச்சமாயிருக்கிறது ஆனதினாலே இதை இவ்விடத்தி லிருக்கும்படியாய் செய்யவேண்டுமென்று வைத்துப்போட்டு அப்பாற்போயிருந்து என்னுடனே வந்தவனைக்கொண்டு ஒருநிமிஷத்திலே யொருவருமறியாமலதனை வருவித்துப்பின் அவ்விடத்திற்குப்போய் அந்த ஸ்ரீ கோசமிடி சஞ்சலையக் கொடுவென்று கேட்டாலுமென்றுந்தெரியாமல் மனமுருகித் தவிக்கிறவேளையிலே நான்சொல்லுகிறகாரியத்தைக்கேளென்று பின்னுஞ்சொல்வான்.—எ-று. (உஎ)

அடைக்கலம்வைத்தபொருள்கவர்ந்ததனுளடைத்தவைத்திச்சையாய்க்கனத்திற், புடைத்தனப்புதற்குநினைத்தனையித்தப்புதன்மையெங்கதிர்திலனிதனைக், கொடுத்திடாவிடிலென்னுயிரகற்றிடுவேன்கொடியவென்றடமுற்றவ்வுழையிற், படுத்திடலனைவோர்களேழையினுடைமைபறித்தனையென்றுசொல்குவராலெ.

(இ-ள்.) அடைக்கலம் வைத்தபொருளைக் கவர்ந்து அதற்குள்ளே இருக்கிறபொருளை இச்சையாயபகரித்துக்கொண்டு கனத்திலேயடித்ததுப்பிவிடலாமென்று நினைத்தாய், இத்தப்புதன்மையை நானெங்கும் பார்த்ததில்லை இனியதைக் கொடாவிட்டால் என்னுயிரைவிடுவேன் கொடுமையுள்ளவனே என்று அடமாய்த்தெருவிலே படுத்துக்கொண்டால் அவனை எல்லாரும்பார்த்து ஏழையின் உடைமையைப் பறித்துக்கொண்டானென்று சொல்வார்களென்று பின்னுஞ்சொல்வான்.—எ-று. (உஅ)

ஒருவருமறியர்திருளிலாறணுகியுண்டுவந்திருந்திடிலனைவோருருகுசென்றினிமையுறைகுவரொங்களாண்டவனுரைப்படியிந்தப்புரியினிலிருக்கச்சாதனந்தந்தாற்பொருந்துவேனென்றிடிலெழுதித்தருகுவனந்தப்படிமணங்களிக்கத்தனமெலாங்கைக்கொளலாமால்.

(இ-ள்.) ஒருவருமறியாமல் இராத்திரியிலே ஆற்றுக்குப்போய்ச் சாப்பிட்டுவந்திருந்தால் எல்லாரும் என்னிடத்துக்குவந்து இனிமையான வார்த்



தையைச் சொல்வார்கள் அப்போது நான் எங்களாண்டவன் சொன்னபடி இந்த ஊரிலே வந்திருக்கச் சாதனமெழுதிக்கொடுத்தால் சம்மதிப்பேனென்று சொன்னால் எழுதித்தருவான் அந்தப்படி மனங்களிக்கத்தனங்களை எல்லாம் கைக்கொள்ளலாமென்று பின்னுஞ் சொல்வான்—எ-று. (உகூ)

உள்ளத்தாலிந்தவகையினைத்தறுகாட்டுதவியபடிபலகாரஞ், கொள்ளையாய்ப்புரியென்றேதான்காண்மனையாள்குலுங்கியவ்வழிவிழுந்திரங்கத், தெள்ளியவுன்றன்மனத்தினிற்றுயரஞ்சென்றதென்னெனவினவிடலக், கள்ளலவியபூங்குழலறிந்துரைத்தகாரணநெறிபுகன்றிடக்கேள்.

(இ-ள்.) இரிகரணசுத்தியாயிந்தவகையைச்சொல்லி ஆறுகாலைக்குதவும்படி பலகாரமிருந்து செய்யென்றுசொல்லக்கேட்டு என்பெண்சாதிகுலுங்கி அந்த இடத்திலே விழுந்தழுதான் அதைக்கண்டுதெளிவான உன்மனத்துக்கு இந்ததுயரம் வந்ததென்னவென்று நான்கேட்கத் தேன்பொருந்திய புஷ்பமாலையைத்தரித்த கூந்தலையுடையாளறிந்துசொன்ன காரணமானவழியைச் சொல்லக்கேளுமென்று பின்னுஞ்சொல்வான்—எ-று. (௩௦)

வடமலைப்பொருள்மெய்த்தேசிகனெனவந்துபதேசமும்வழங்கி, யடைவுடனொருமித்துறைபகருதற்குமருவினையகற்றவுமுலகத், திடையுளபெரியோர்புகழ்தனுமதுசெவியிற்கேட்டிருந்திடத்தேவர், கொடுமையைப்புரியநினைந்தவையுன்னிக்குலுங்கினதென்னுடலென்றாள்.

(இ-ள்.) வடமலையிலிருக்கும் பொருளாகிய சீநிவாசக்கடவுள் மெய்மையான பரமதேசிகராகவந்து உபதேசத்தைச்சொல்லியதும் வழியுடனேயொருமையாகவந்து எதிரேநின்றுபேசினதும் அருமையான வினைகளை நீக்குவதும் உலகத்திலுள்ள பெரியோர்களெல்லாம் புகழுவதும் இவைமுதலிய பலவும் நம்முடையசெவியிலே கேட்டிருந்து தேவரீரிந்தக்கொடுமையைச்செய்ய நினைந்ததையெண்ணி நடுங்கிற்றென்னுடலென்றுசொன்னாள்.—எ-று. (௩௧)

உனக்கென்னதெரியுமெனப்புடைத்ததட்டியுண்டெழுந்தேகிடவாந்தி,கனைத்துச்செய்துடனேமூர்ச்சைவந்துன்னைக்கல்லெனப்பெருத்துறையின்றி, மனத்தெளிவகன்றுன்மத்தர்போலேயோர்மடியனவிருந்திடமனையா, டனிப்பெரும்பொருளேமாதவாவெங்கடப்பெலாமொப்புவையென்றே.

(இ-ன்.) அதைக்கேட்டு நானுனக்கென்னதெரியுமென்று கன்னத்திலடித்து அதட்டி போசனஞ்செய்து எழுந்து போகிறவேளையிலே வாந்திசெய்து இருமலுண்டாகியுடனே மூர்ச்சைவந்து உன்னுக்கு கல்லைப்போலே பருத்து பேசு மனத்தெளிவுமற்று உன்மத்தங் கொண்டவனைப்போல் ஒருமாதவனை

மிருக்க என்பெண்சாதிபார்த்து ஒப்பற்றபெரிதானபொருளே மாதவனே நாங்கள் செய்த பிழையெல்லாம் பொறுத்துக் கொள்வாயென்று தோத்திரஞ் செய்தாள்.—எ-று. (ருஉ)

அடியனைக்கொல்லவிடஞ்செறிபொருளையளித்தவனையறிந்துமுன்வைத்தே, முடிவறுமுன்னோர்கதையுனக்குரைத்தமுதறிவாளர்க்குமேனு, மிடரளித்திடநெஞ்சுசுன்னிணையதனுலிவ்வகையுந்தவினுன்மாயன், றிடமுடனினிமேற்சிநிவாசனையேசேவிக்கவெழுகவென்றறைந்தாள்.

(இ-ள்.) பின்னுஞ்சொல்வாள் திருமாலடியார்களைக்கொல்ல விஷஞ்சேர்ந்தபொருளைக் கொடுத்ததையறிந்து உன்னைமுன்னே வைத்துக்கொண்டு கோபமில்லாமல் முடிவற்ற முன்னோர்சொன்னகதைகளைச்சொல்லி மிகுந்த அறிவுள்ளவருக்கு மேலும் இடரைக்கொடுக்கமனத்திலெண்ணி னிரக்கையினுலே இவ்விதஞ்செய்தான் திருமாலென்றுசொல்லி இனிமேல்திடமான அந்த சீனிவாசக்கடவுளைச்சேவிக்க எழுந்திருமென்று சொன்னுள்.—எ-று. (ருங)

கேட்டுநன்மொழியைச்சிரமசைத்[illegible]யன்கிளருமதத்தெய்வமேயன்றி, நாட்டமிப்பிறவியென்னணியெலாமவற்கேநல்குவனென்மனைகழற்றி,மூட்டையாய்மஞ்சட்டுணியினின்முடிந்துமுதன்மதலையையழைத்துங்கட், பாட்டனில்புகுந்திம்மொழியெலமுரைத்துப்பாடலங்கொணர்கெனப்பகர்ந்தான்.

(இ-ள்.) அப்படிச்சொன்ன நன்மையான சொல்லைக்கேட்டு நான் தலையையசைத்[illegible]பிரகாசமான அந்தத்தெய்வமே யல்லாமல்வேறே நாட்டமினிமே[illegible]யென்று நினைத்து என்னுபரணத்தையெல்லாம் அவருக்குக்காணிக்கையாகக் கொடு[illegible]யென்பெண்சாதி ஆ[illegible]யாகமஞ்சட்டுணியிலே முடிந்து முதற்பிள்ளையையழைத்து உங்கள்பாட்டன் வீட்டுக்குப்போய் இந்தவார்த்தையைச்சொல்லி குதிரையைவாங்கிக்கொண்டு வாவென்றுசொன்னுள்.—எ-று. (ருச)

கதனுடன்றென்னுபரிகொணர்ந்திடலுந்தூக்கியேயதிலெனையேற்ற, மதியொடுசிறுவியருச்சிக்குமரங்கமாதவன்றனைத்தொழுயாடக், கதவினைத்திறப்பவவன்புவிகுதிப்பக்கண்டெடுத்தீண்டினிருக்கச், சதிரலயாலும்வருவனென்றுவந்தான்றயாபரனெனமனையுரைப்பாள்.

(இ-ள்.) அப்படியே யந்தப்பிள்ளை பாட்டன்வீட்டுக்குப்போய் குதிரையைக்கொண்டுவந்த மாத்திரத்திலே தூக்கியதிலே என்னைவைக்கிறதற்காகத் திரிகரணத்தியுடனேயெடுத்து நிறுத்தி எங்கள்பெரியவர்கள் முதலாயருச்சிக்கும் ஸ்ரீரங்கநாதனை வணங்குதற்கு மாடத்துச்சுதவைத்திறக்க அந்தத்தெய்வம்



பூமியிலே குதிக்கக்கண்டெடுத்து இனிமே லிங்கே யிருப்பது பெருமையல்ல நாளும் வருவேனென்று மனச்சந்தோஷமானர் இந்தத்தயாபரனென்று என் பெண்சாதி பின்னுஞ்சொல்வாள்.—எ-று. (ருரு)

கருத்தொடுபூசைபுரிபவரிடத்திற்கண்டுகண்களித்தருட்டெய்வமருத்தியாயிருக்குமெனப்புவிபுகலுமாதலாலவ்வன்பனுழையே[ந்து]யிருத்திடுமெனையென்றிசைத்ததாமென்னவிது நலமென்றுவாய்திறபருக்கவேயுரைக்கலாமுதவினனப்பதுமண்பப்பரன்மன்னே.

(இ-ள்.) பின்னுஞ்சொல்வான் பத்தியுடனே பூஜைசெய்பவரிடத்திலே கண்களிப்பாகப்பார்த்துக் கிருபையானதெய்வம் ஆசையாயிருக்குமென்று இந்தப்பூ[illegible]சொல்லும் ஆனபடியினுலே அந்த அனந்தார்தனிடத்திலேதானே என்னைக்கொண்டுபோய் நிறுத்துங்களென்று சொன்னதாமென்று சொல்ல இதுவே நலமென்று வாய்திறந்து பருத்த தோளுடனே நான் பேசும்படியாய் வரங்கொடுத்தார் இந்த நலமான பதுமாபதியாகிய சீநிவாசக்கடவுளென்று பின்னுஞ்சொல்வான்.—எ-று. (ருசு)

போசனமுவந்துதென்றிருப்பதிக்குப் புகுவமென்றியானுரைத்திடமாசிலாக்கடவுளிந்நலம்புரிந்தவகையினுல்வழிச்சிலசென்றே [பே]யாசையாய்த்தளிகைசெய்தவர்க்கருச்சி[illegible]பொடுபுசிப்பதென்றுன்னியேசறுமனைவிபுகன்றிடவெழுந்தேயின்றிவந்திந்நகரடைந்தோம்.

(இ-ள்.) அப்படி கடாட்சஞ்செய்த பிறகு சந்தோஷமாகப் போசனஞ்செய்து தென்றிருப்பதிக்குப்போவோமென்று நான் வாயைத்திறந்து சொல்லும்படி குற்றமற்ற சீநிவாசக்கடவுள் இந்த [illegible]செய்தாரானதினுலே சிறிதுவழிநடந்து ஆசையுடனே தளிகைசெய்து அவருக்கு ஆராதனைசெய்து அன்புடனே புசிப்போமென்று நினைத்து குற்றமற்ற என்பெண்சாதி சொல்லவுடனே எழுந்திருந்து இன்று இந்தவூருக்கு வந்தோமென்று பின்னுஞ்சொல்வான்.—எ-று. (ருஎ)

கொல்லவந்தவனைக்கோறல்செய்திடலோர்கொடுமையின்றெனச்சதுமறையிற், சொல்லியதொழித்தென்னுயிர்க்கருள்புரிந்துதோழனோருகினிலிருத்தி, யல்லல்செய்யாமலகந்தனையடக்கியன்புவைத்தனுப்புமின்னருமைக், கெல்லையில்காலநினைப்பினுங்கைமாறில்லையென்றின்புறப்புகழ்ந்தே.

(இ-ள்.) தன்னைக்கொல்லவந்தவனைக்கொன்றால் அதிலொரு பாபமுமில்லையென்று வேதத்திலே சொல்லியிருக்கிறதையறிந்தும் அதைத்தள்ளி என்னுயிர்க்குதவிசெய்து தோழனைப்போற் பக்கத்தில் வைத்துக்கொண்டு ஒருகுற்றமுஞ்செய்யாமல் கோபத்தையடக்கி அன்புவைத்து நல்லவசனஞ்சொல்லி என்னூருக்கனுப்புமுன்னருமைக்கு எண்ணிக்கையில்லாதகாலம் உன்னை நினைத்து

த்தோத்திரஞ்செய்தாலும் அது பிரதியுபகாரமல்லவென்று பின்னுஞ் சொல்வான்.—எ-று. (௩௮)

செய்யுமிப்பிழையைப்பொறுத்தருளென்னச்செப்புமுன்னுதவி
செய்தனையா, லுய்யுமாறினிமேலுரைத்தருளென்னுமுத்தமனுள்
ளுணர்ந்தறைவான், வையமுண்டவனைவாழ்த்திந்தாகருமவழிநடந்
தன்பரைப்பணிந்தா,லையமதின்றியுலகினிற்பெருவாழ்வளிக்குமெய்
ப்பொருளெனப்புகல்வான்.

(இ-ள்.) நான்செய்யும் இந்தப்பிழையைப்பொறுத்துக் கிருபைசெய்ய வேண்டுமென்று நான் சொல்வதற்கு முன்னமே கிருபை செய்தாயாகையால் இனிமேலும் பிழைக்கும்வழி யருளிச்செய்வாயென்று கேட்க அனந்தநாதன் சித்தத்திலறிந்து சொல்வான் இந்தவுலகத்தை வயிற்றிலே வைத்துக்காப்பாற்றுஞ் சீனிவாசக்கடவுளை வாழ்த்தி நல்ல தருமவழியாக நடந்து அடியார்களையும் பணிந்துகொண்டிருந்தால் களங்கமில்லாமல் இந்தவுலகத்திலே பெருவாழ்வைக்கொடுக்கும் அந்த மெய்ப்பொருளென்று பின்னுஞ்சொல்வான். (௩௯)

வேறு.

பொய்வாழ்வைநினைத்துபுலம்பிடுவோர்
மெய்வாழ்வறியாநிலைமேதினியோர்
செய்காரியமீதெனல்சித்தமுறா
ருய்காரணமேதிதிலுன்னுவையால்.

(இ-ள்.) பொய்யான வாழ்வை நினைத்துப்புலம்பியழுவார்கள் மெய்யான வாழ்வையறியாத நிலைமையுள்ள இந்தப்பூலோகத்தார் செய்யுங் காரியமீதென்று மனத்திலே நினையார் இதிலே பிழைக்குங்காரணமேதென்று நீ நினைத்தப்பாரென்று பின்னுஞ் சொல்லுவான்.—எ-று. (௪0)

நாராயணனென்றுநமக்கமைதற்
றீராவகையாநடுதீதறுமோ
சேராவினைசெல்லநினைத்திடுதற்
காராலுமிதைச்செயவாதிடுமோ.

(இ-ள்.) ஸ்ரீமந்நாராயணமூர்த்தி முன்னாலே நமக்கமைத்தது தீராதவழியாயிருக்குமேயன்றி அவற்றை நடுவிலே கெடுக்கக்கூடுமோ ஒருவனுக்கு விதியில்லாத வினையைச்சேர்க்கும்படியாய் நினைக்க யாவராலு மிதைச் செய்யக்கூடாதென்று பின்னுஞ் சொல்வான்.—எ-று. (௪௧)

வேதத்துவிளம்பிடுநன்னெறியுஞ்
சாதித்தொழிறன்னையகற்றிமனக்
கோதுற்றநடத்தைகுறித்திடுத
னீதிக்குணமன்றுநினைத்திடுவாய்.



(இ-ள்.) வேதத்திற்சொல்லிய நன்மார்க்கமும் அழகாகிய தன் சாதித்தொழிலையும்விட்டு மனத்திலே குற்றமான நடத்தையை நினைக்கிறது நீதியான குணமல்லவென்று நினைப்பாயென்று பின்னுஞ்சொல்வானென்னையன்.—எ-று.

அருளீகையொழுக்கமடக்கமறைப்
பொருளன்பொடுவாய்மைபுகழ்ப்பொறையும்
வருந்தீவினையச்சமனத்தவமுந்
திருவேதியர்செய்கையெனப்புகல்வார்.

(இ-ள்.) கிருபையும், கொடுக்குந்தொழிலும், வணக்கமும், அடக்கமும், வேதப்பொருளிலே அன்பும், சத்தியமும், புகழ்ச்சியும், பொறுமையும், வரப்பட்டதீவினைக்குப் பயப்படுகிறதும், மனதிலே தவமு மிவைகளெல்லாம் பிராமணர்கள்செய்யும் தொழிலென்று பின்னுஞ் சொல்வான்.—எ-று. (௪௩)

படையீகையமைச்சுபசும்பயிர்மா
தொடர்நட்பரனேறுகுணந்துணிவும்
வடிவாமறையோரைவணங்கிடுதற்
றிடமேவுமிராசர்செயுந்தொழிலே.

(இ-ள்.) நால்வகைச்சேனைகளுங் கொடுக்குந்தொழிலு மந்திரியும் பசுமையான பயிர்விளைவிக்கிறதும் அன்புபொருந்திய சினேகமும் படிக்குந்தொழிலுந் தயிரியமும் பிராமணர்களைப் பணிவதும் திடம்பொருந்திய அரசர்கள் செய்யுந் தொழிலென்று பின்னுஞ்சொல்வான்.—எ-று. (௪௪)

ஆதாயமிலாவிரயம்புரியார்
மாதானமுமன்பொடுவாய்மையுளார்
சூதாருடனல்லுரைசொல்லறியார்
நீதானறிநீள்வசியக்குலமே.

(இ-ள்.) ஆதாயத்துக்குமிஞ்சி விரயஞ்செய்யார், பெருமையாகிய தானமும், அன்புஞ், சத்தியமுமுள்ளவர் பொய்பேசுகிறவர்களுடனே நல்லவார்த்தை சொல்லவறியார், நீ இதை யறிந்துகொள்வாய் மிகுந்த வசியகுல மாந்தர்கள் புரியுந்தொழிலீதென்று பின்னுஞ்சொல்வான்.—எ-று. (௪௫)

நீளாகமமாமறைநெஞ்சறிவும்
வாளார்கரமன்னரமைச்சியல்பு
மாளாநிதிமாவசியற்குறலும்
வேளாளர்களின்பெருமேழியினல்.

(இ-ள்.) விரிந்த ஆகமவிதிப்படி பிராமணர்கள் வேதபாராயணவறிவு வளருகிறதும் வாளாயுதங் கையிலேதரித்த அரசர்கள் மந்திரிகள் குணமாக [illegible] கிறதும் அளவற்ற தனத்தைத் தனவைசியர்பெருகிறதும் வேளாளர்களுடைய மேழியின் பெருமையாலென்று பின்னுஞ்சொல்வான்.—எ-று. (௪௬)

அசனுலகத்தினிலியாவரையுஞ்
சதிசெய்தளதன்மையொழித்திடினன்
னிதிமேவிநிலைத்திடுவாரெனவே
மதிமேவுமென்னையன்வழங்கினனே.

(இ-ள்.) ஆனபடியினாலே உலகத்திலே எவர்களுக்குஞ் சதிசெய்யா நின்க்குந்தொழில்களைவிட்டு சாதித்தொழிலையெண்ணி நடந்தால் நல்லதானம் பொருந்தி நிலைமையாய் வாழ்வா ரென்று விவேகம்பொருந்திய என்னையன் சொன்னான்.—எ-று. (௬௭)

வேறு.

இதற்கிணையிலதென்றுதொழிலாளனின்பமுற்றவன்கரத்திருந்த, நதிப்பதனரங்கநாதனைத்தரவென்றுயகனுமைக்கியிவ்வுருவைத், துதித்தனிபூசைபுரிகுவேனுனக்குத்தாய்மனமுளதெனிற்கோயி, லெதிர்ப்படுந்தாம்பாளத்தினிற்சேர்ப்பாயென்றனுமதின்வயினிட்டான்.

(இ-ள்.) அப்படிசொல்லக்கேட்டு இதற்கு இணை வேறில்லையென்று அந்தப்பிராமணன் சந்தோஷம்பொருந்தித் தன் கையிலிருந்த நதிப்பதனென்ற ஸ்ரீரங்கநாதனைக் கொடுக்க அனந்தநாதன் சொல்வான். எங்கள் சிவவாசக் கடவுள் இந்த உருவைத் தோத்திரஞ் செய்து அலங்காரமான பூசையைச் செய்யென்று சொன்னார் இப்பொழுது இல்லாவிட்டாற் செய்யேன் ஆனாலுனக்கு நல்ல மனமுண்டாயிருந்தால் சந்நிதிக்கெதிரே இருக்குந் தாம்பாளத்திலேகொண்டுபோய்ச் சேரென்று சொன்னமாத்திரத்திலே கொண்டுபோய் வைத்தான் அந்தப்பிராமணன்.—எ-று. (௬௮)

மறையவனுரைத்தகாணிக்கைசெலுத்திவள்ர்பதிபுகவொருதிங்கள், குறைவறவகன்றபின்மலைப்பரமன்கூறுவானன்பனுக்கித்த, நிறைபெறுமரங்கத்துருவையுமீண்டுநித்தியாராதனைபுரிந்து, நெறியொடுமிருந்தமடைப்பளித்தளிகைநிவேத்தியம்வழங்கெனப்புகன்றான்.

(இ-ள்.) பின்னுமந்தப்பிராமணன் சொன்ன காணிக்கையைச்செலுத்தித் தன்னூருக்குப்போன பின் ஒருமாதஞ்சென்றபிறகு திருமலைப் பரமனான சிவவாசக்கடவுள் அனந்தநாதனுக்குச் சொல்லுகிறார். இந்தத்தாம்பாளத்திலிருக்கும் ஸ்ரீரங்கநாதவுருவையு மிவ்விடத்திலே நித்தியாராதனஞ்செய்து அன்புடனே மிகுந்த மடைப்பளித்தளிகை கண்டருளச்செய்யென்று திருவளம் பற்றினார்.—எ-று. (௬௯)

அன்றுதொட்டாராதனைமுடித்துடனேயரங்கனைமணியொலியொடுஞ், சென்றுகொண்டினியதளிகைகண்டுவப்பச்செய்துபின்சந்நிதியிருத்தி, நன்றியதொழும்பர்க்கருதளித்தண்டுசோதிபஞ்சாக்கரப்பொருளை, யென்றுமேவாழ்த்திமனத்தகத்திருத்திவிருந்தனனென்னையாள்கடவுள்.



(இ-ள்.) அப்படிசொல்லக்கேட்டு அன்றுமுதற்கொண்டு ஆராதனஞ் செய்துடனே ஸ்ரீரங்கநாதனை யொருமணிச்சத்தத்துடனே எழுந்தருளப்பண்ணிக்கொண்டு போயினமையான் மடைப்பளித்தளிகை கண்டருளச்செய்து பின்பு சந்நிதியிற் கொண்டுவந்து வைத்து மிகுந்த அடியார்களுக்கும் பிரசாதங்கொடுத்துச் சூலுமமுதுண்டு பிரகாசமும் அழகுமுள்ள சக்கரத்தைக்கையிலேதரித்த சிவவாசப்பெருமானை என்றைக்குந் தோத்திரஞ்செய்து மனத்திலே தியானித்துக்கொண்டிருந்தான் என்னையாளவந்த அனந்தநாதன்.—எ-று.

பொருவருகாலமருந்தவம்புரிந்தபோதினுங்காணிலாப்பெரியோன், திருவளரன்பன்கண்ணிடைவிடாமற்றெரிசனமளித்திடலன்றி, வருகருமங்களுனைத்துமவ்விடத்தைமாற்றினனையர்விந்தத், திருவருள்பெற்றோன்பெருமையையென்றுந்தெரிந்துமக்கிசைப்பதிங்கரிதே.

(இ-ள்.) அளவற்றகாலம் அருமையான தவஞ்செய்தபோதுங் காணக்கூடாத பெரியோனாகிய சிவவாசக்கடவுள் திருவருட்பெற்ற தன்னன்பனிடத்திலே இடைவிடாமற் றெரிசனங்கொடுத்ததுமல்லாமல் வருங்காரியங்களையும் சொல்லி விடத்தையுமாற்றினார்; ஆகையினாலே இந்தக்கடாட்சம் பெற்ற அனந்தநாதன் பெருமையை என்னாலே தெரிந்து உமக்குச் சொல்லுவது மிக வுமரிதென்று சொன்னான் பரந்தாமன்.—எ-று. (௭௰)

வசனுபிகண்டகற்றியபடலம் முற்றிற்று.

ஆக படலம் ௯-க்கு திருவிருத்தம்-௬௱௯௰௪.

---

## கண்டமாலையொழித்தபடலம்.

மன்[illegible]த்திருளைநீக்கியடியார்னுமானமெய்யன்பர்களுளத்துக், குமண்டலத்திமிரமகற்றியசோதிக்குளிரிளநிலவுமிழ்வதனக், கொண்டலத்திகிரிவளையணிபாணிக்குல்லையோனைவரும்புகழக், கண்டமாலைந்தென்னும்பெரும்பிணிதொலைத்தகடவுளைத்தொழவினைகடத்தும்.

(இ-ள்.) நேசருங்கள் திருமாலடியார்களே இந்தப்பூலோகத்து இருளை நீக்குஞ் சூரியனைப்போல மெய்யடியார்கள் மனமென்னும் ஆகாசத்திலிருக்குஞ் சோதிப்பிரகாசமான சிவவாசக்கடவுள் குளிர்ந்த அழகான குமிழ்நேர்க்குஞ் சந்திரனைப்போலே முகம்பொருந்திய மேகவண்ணன் சங்குசக்கரந்தரித்துக். திருத்துழாய் மாலையணிந்தவன் தன்னை கொண்டிருக்குங் கையையுடையவன் கண்டமாலையென்னும் பெரியபிணியை நீக்கி எல்லோரும் புகழத்தக்கதாகக் கண்டமாலையென்னும் பெரியபிணியை நீக்கிவைத்தார் அந்தக்கடவுளைப்பணிய வினைகளெல்லாம் நீங்குமென்று பரந்தாமன் சொன்னான்.—எ-று. (க)

வினைக்கடற்புகுந்துசேதுறலன்றிமெலிந்துளமுழுதுமெங்களு க்குத், தனிப்பெருங்கவினுர்மாக்கலமென்னத்தானுகந்திங்கெழுந்த ருள்வோய், சினைக்கொடுங்கண்டமாலையாம்பிணியைத்தீர்த்தவனெ ன்றனையதனை, நனிப்புகலெனமாலடியவர்வினவநற்பரந்தாமனீது ரைப்பான்.

(இ-ள்.) அப்படி சொல்லக்கேட்டுத் திருமாலடியார்கள் சொல்லுகிறார் கள் வினையென்னுங்கடலிலே விழுந்து கரைசேறமாட்டாமல் மெலிந்து மன முழலுகின்றவெங்களுக்கு ஒப்பற்ற அழகுநிறைந்த பெரியகப்பலைப்போல இங் கே எழுந்தருளி வந்தவனே இளைக்குங் கொடுமையான கண்டமாலையாகிய பிணியைத்தீர்த்தானென்று சொன்னாயே அதினை நன்றாய்த் தெரியச்சொல்லவே ண்டுமென்று அவர்கள் கேட்கப் பரந்தாமன் அதைச்சொல்வான்.—எ-று. (௨)

வேறு.

வாளைமேதிக்குலப்பான்மாந்துதடஞ்சூழ்ந்திலங்கு
நீளுபுகழணிந்ததிருநெல்வேலிநகர்க்கணித்தாப்
பாளையங்கோட்டைப்பதியிற்பண்புபெறவாழொருவ
னாளுங்கண்டப்பிணியானலிவுற்றாறுமதியம்.

(இ-ள்.) வாளைமீன்கள் தடாகத்திலே எருமைக்கூட்டங்கள் வந்துபோ லுமடியிலே முட்ட அது கன்றென்று பாலைவிட அதைக்குடித்துக்கொழு த்திருக்கும் தகுதிவாய்ந்த தடாகங்கள் சூழ்ந்து மிகுந்த புகழுள்ள திருநெல் வேலிநகர்க்கருகேயுள்ள பாளையங்கோட்டை என்னு மூரிலேவாழுமொருவன் எக்காலுங் கண்டமாலை என்னும்பிணியால் நலிவுற்று ஆறுமாதம் வயித்தியஞ் செய்துவந்தான்.—எ-று. (௩)

தேடரியவிரதங்கள்செய்துதெய்வங்களைத்தொழுது
நீடுவயித்தியம்புரிந்துநீங்காமற்சுக்கிலமுங்
கூடுமிரத்தமும்பெருகிக்குத்தலெடுத்துழன்றுமனம்
வாடியிந்தப்புவியிலினிவாழேனென்றுன்னினான்.

(இ-ள்.) அப்படி தேடுதற்கரிதான விரதங்கள் செய்தும் தெய்வங்களைப் பணிந்தும் மிகுந்தவயித்தியங்களைச்செய்தும் நீங்காமல் சுக்கிலமு மிரத்தமும் பெ ருகி வலிமிகுதியாகத் துயரம்பொறுத்துமனம்வாடி இந்தப்பூமியில் இனிவாழே னென்று நினைத்தான்.—எ-று. (௪)

வச்சிரத்தைப்பொடித்துடையின்வைத்துமுடிந்தொருவருட
னிச்சயத்தைப்புகன்றிடிற்சாவோரோதென்றுளத்துன்னித்
தச்சனுற்செய்திலங்குந்தன்மனையிலுறுமவரோ
டிச்சையாயெனைத்தெருவிலெடுத்துவளர்த்திடுமென்றான்.

(இ-ள்.) அப்படி நினைந்து வச்சிரத்தைப்பொடிசெய்து சோமனிலே முடிந்து வைத்துக்கொண்டு ஒருவருடனே இதைச்சொன்னால் தனக்குச் சாவு




× தெனதிருப்பதியைவட்டு வடதிருப்பதிக்கிபிறமணன் அழைத்து கொண்டு போகிறது-

வாராதென்று தன்மனத்திலே நினைத்து தச்சனாலே செய்துவிளங்குந்தன்வீட்
டிலே யிருக்கிறவர்களுடனே காற்றுக்காக என்னை ஆசையாய்த்தெருவிலெடு (௫)
த்து வளர்த்துங்களென்று சொன்னான்.—எ-று.

மனைக்குண்மருந்துண்டிறக்கின்வருத்தமுறுமிவர்க்கென்றே
நினைத்திருப்பதறியாராய்நீண்மறுகுக்குறட்டினிடைக்
கனிப்பொடுகொண்டிருத்திடவேகவலையுளத்தெழுந்தோங்கத்
தனிப்பொருளேயெனச்சுவரிற்சாய்ந்துதுயில்கொளுங்காலை.

(இ-ள்.) பின்னும் வீட்டுக்குள்ளே மருந்தைத்தின்று இறந்தால் இந்த
வீட்டிலிருக்கிறவர்களுக்கு வருத்தமாமென்று அவனினைத்திருக்கிறதை அவர்க
ளறியாமல் நீண்டதெருத்திண்ணையினிடத்திலே சந்தோஷமாகக் கொண்டுவந்
துபடுக்கவைத்தவுடனே அவன்மனத்திலே கவலையிருந்து வளரவொப்பற்றபரம்
பொருளே என்று சுவரிலேசார்ந்து கொண்டு நித்திரைசெய்யும்வேளையில். (௬)

நானிலத்தார்வினையகற்றிருப்பணிதென்றிருப்பதியிற்
றுணைமைக்குந்தூண்டிலுறுஞ்சடைமிதவைப்பார்த்திருக்கு
மானவன்போனினைத்திருக்கும்வடமலையுச்சிப்பொருளாஞ்
சீநிவாசன்கனவிற்றெரிசிக்கத்தோன்றினான்.

(இ-ள்.) இந்தப் பூமியிலுள்ளவர்களுடைய வினைகளைத் தீர்த்து நல்ல
திருப்பணி தென்றிருப்பதியிலே செய்விக்க தூண்டிலிருக்கு நெட்டி மிதப்பை
யைப்பார்த்துக் கொண்டிருக்கு மனிதன்போலே நினைத்திருக்கும் வடமலையுச்
சிப்பொருளாகிய சீநிவாசக்கடவுள் இவன்கனவிலே தெரிசனமருளத்தோன் (௭)
றினார்.—எ-று.

உத்தரத்திலிருந்தொளிர்வெள்ளுயர்பரியின்மிசையேறிச்
சித்திரநேர்வனப்புறுமோர்சேவகன்பின்னேநடப்ப
வுத்தமனிப்பிணியன்பாலுற்றணுகிக்கரச்செண்டாற்
பத்தர்பணியுங்குமுளப்பதியுறுமத்திசைகாட்டி.

(இ-ள்.) அப்படிதோன்றி யுத்தரத்திக்கிலிருந்து பிரகாசமான வெண்
மையுள்ள ஒரு உயர்ந்தகுதிரையின்மீதி லேறிக்கொண்டு சித்திரம்போலே
அழகுள்ள ஒரு சேவகன்பின்னே நடந்துவரும்படியா யுத்தமனாகிய சீநிவா
சக்கடவுள் அந்தவியாதியஸ்தனிடத்தில்வந்து கையிலிருக்குங் குதிரைக்குறடா
வாலே யடியார்களெல்லாம் பணியுங் குமுளகரிருக்கும் வடக்குத்திசையை (௮)
க்காட்டினார்.—எ-று.

கந்துகமுந்தீரநடத்தக்கடிதுபின்செல்வனைப்பிணிய
னெந்தவூர்க்கெனைவருகவியம்பினானிவர்பெயரோ
தந்தநிலையுரையென்னவணிகுமுளப்பதிக்குரிசி
லிந்தப்பிரபுவின்பெயரேயெழிற்சீநிவாசனோ.

(இ-ள்.) அப்படிகாட்டி குதிரையை வடக்குத்திக்காக நடத்த சீக்கிரமாகப் பின்னேயோடுஞ் சேவகனையந்தப் பிணியாளன்பார்த்து எந்த ஊருக்கு என்னைவரச்சொல்லிச் சொன்னார் இவர் பெயரென்ன அந்தநிலைமையைச் சொல்லென்று கேட்க அழகான குழுளநகரத்திலிருக்கும் அதிபதி இந்தப் பிரபுவின்பெயர் அழகான சீநிவாசக்கடவுளென்று பின்னுஞ் சொல்வான்.—எ-று. (கூ)

உன்னையவணழைத்தாரென்றோதியவன்பின்னேக
வன்னபொழுதிவனெழுந்தேயந்தநரவ்விடமோ
மன்னவனெந்தெய்வதமோவழியறியேனென்வினையை
யின்னபொழுதாற்றவந்தவின்பமெனச்சாதித்தான்.

(இ-ள்.) உன்னை அவ்விடத்துக்கு வரச்சொன்னாரென்று சொல்லியவனும் பின்னே நடக்கக்கண்டு அந்தவேளையி லிந்தப்பிணியன் விழித்துக் கொண்டு அந்தவூரெவ்விடமோ அந்தமன்னவனெந்தத் தெய்வமோ வழியுமறியேன் எனது வினையை இப்பொழுதே தீர்க்கவந்த இன்பவடிவனென்று நிச்சயித்துக்கொண்டான்.—எ-று. (௧௰)

அக்காலேயோரூவரப்பதியாரங்கணுக
விக்காட்சியவருடனேயிவருரைப்பவதிலொருவன்
றக்கவிராமேச்சுரத்தைத்தான்பணிந்துத்தரஞ்செலுவோர்
புக்கென்வீட்டினிலேநேர்ந்துபொருந்திரவிற்புகன்றதுகேள்.

(இ-ள்.) அப்படி நினைத்துக் கொண்டிருக்கிற வேளையிலே அந்த ஊரார் சிலருமவ்விடத்திற்குவர இப்படிதான்கண்டகாட்சியையவருடனே இவன் சொல்ல அதிலொருவன் சொல்லுகிறான் தகைமையான விராமேச்சுரத்துக் குப்போய் சுவாமியைப்பணிந்து வடக்கேபோமவர்கள் வந்து என்வீட்டிலே நேற்றிராத்திரி இறங்கி யிருந்தார்கள் அவர்கள் சொன்னதைக்கேளென்று பின்னுஞ்சொல்வான்.—எ-று. (கக)

வந்தவருண்முன்றடந்தோர்மானினிக்குவெதுப்புறலா
லிந்தநெறியினிநடப்பதெவ்விதமென்றங்குழுளஞ்
சந்ததமுமமர்சீநிவாசனிருதாளிணையைச்
சிந்தனைசெய்திவளணிந்ததிகழொளிப்பூணுனக்களிப்போம்.

(இ-ள்.) அப்படி வந்தவருக்குள்ளே முன்னாலே வழியிலேயொரு பெண்ணுக்குச் சுரந்தோன்றினபடியினாலே இந்தவழி இனிமேலெப்படி நடக்கிறதென்று நினைத்து அழகான குழுளநகர மெக்காலமும் அமருஞ் சீநிவாசக் கடவுளினுடைய இரண்டுபாத தாமரையைத் தோத்திரஞ்செய்து இவளணிந்த பிரகாசமான பூஷணங்களெல்லா முனக்குக் காணிக்கையாகக் கொடுப்போமென்று பின்னுஞ் சொல்வார்.—எ-று. (கஉ)

நாளையிதுநீங்கிவழிநடக்கவருள்புரிந்திடெனத்
தாளிணையைத்துதித்துமிகச்சயனித்துவைகறையிற்



தோளின்மியெழுந்துநடைகோலவிதுகேட்டந்த
வேளையவர்பாலணுகிவினவினேன்வருரைப்பார்.

(இ-ள்.) நாளையதினமிந்தப்பிணி நீங்கிவழிநடக்கும்படியாய்க் கிருபை செய்யவேண்டுமென்று திருவடியை மிகவுந்தொழுது படுத்துக்கொண்டிருந்து விடியற்காலையிலெழுந்திருந்து ஒருவேதனையுமில்லாமல் பிரயாணப்படுகிறபோது இச்சமாச்சாரத்தைக்கேட்டு அந்தவேளையிலே நானவ்விடத்திற்குப்போய் எந்தத்தெய்வமென்று கேட்டேன் அவர் சொல்வார்.—எ-று. (கங)

ஒருபேதைக்கங்கமதிலுறுசுரத்தாலெழிற்புதுவைப்
புரிமேற்கோரோசனையாம்புகழ்குழுளப்பதிவிளங்கும்
பெருமாளாகியகோலப்பெருஞ்சீநிவாசனுக்கே
யரியபிரார்த்தனைசெய்தோமவையகன்றதெ[illegible]நடந்தார்.

(இ-ள்.) எங்களுக்குள்ளே ஒரு பெண்ணுக்குச் சரீரத்திலே சுரந்தோன்றினதினாலே புதுவைமாநகரத்துக்கு மேற்குப்பத்துநாழிகை வழிதூரத்திலே புகழ்பெற்றோங்கும் குழுளமென்னுந் தென்றிருப்பதியிலே விளங்கியிருக்கும் பெருமாளாகிய அழகுபொருந்திய சீநிவாசக்கடவுளுக்குப் பிரார்த்தனை செய்தோமது போய்விட்டதென்று சொல்லிநடந்தார்களென்று சொல்லிப் பின்னுஞ்சொல்வான்.—எ-று. (கச)

கேட்டிந்தமொழியுடனேகிளரும்பித்திகையிடத்திற்
றீட்டினன்கையினிலிருந்தசெழுநாகவல்லியினு
ளோட்டமதுதானென்றூனன்றிதெனவொருவனையங்
கோட்டவெழுத்தறிந்தவன்வந்துரைப்பமனமிகமகிழ்ந்து.

(இ-ள்.) அந்தவார்த்தையை நான்கேட்டு உடனே பிரகாசமான சுவரினிடத்திலெழுதிவைத்தேன் என்கையிலிருந்த வெற்றிலையினாலே ஆகையாலது தானென்று சொல்ல மகாநன்மையென்று ஒருவனையவ்விடத்திற்கு அனுப்பி வைத்து அந்த எழுத்தை யறிந்துவந்தவன் சொல்லமனமகிழ்ச்சியடைந்தான்.()

என்பிணியைநீக்கவந்தானெனப்பெண்டுபிள்ளைகளோ
டன்புநிறையுயிரையிப்போதகற்றநினைந்திடுகாலை
யின்பனிலையுரைத்தானென்றினிதியம்பிச்சகடுமிசைத்
தன்குடும்பத்தோடிலங்குந்தடமதனிற்செலும்வேலை.

(இ-ள்.) அப்படி சந்தோஷமா என்வினையைத்தீர்க்க வந்ததெய்வமென்று நினைத்து பெண்டுபிள்ளைகளுடனே சொல்லுகிறான் அன்புமிகுந்த என்னுயிரையிப்போதே விடவேண்டுமென்று நினைந்திருக்கிறவேளையிலே இன்பவடிவனாகிய சீநிவாசக்கடவுள் இப்படிதிருவுளம் பற்றினாரென்று சொல்லி வண்டியின்மீதிலே தன்குடும்பத்துடனே தென்றிருப்பதி வழிகொண்டு வரும்போது.

தினதினத்துக்கபரபக்கத்திங்களெனப்பிணிகுறைய
மனமகிழ்ந்தோரூரணுகிமலர்த்தடத்துக்கரையினிலே

யனமமைப்பவன் றயிலவன் றருட்போலெதிர்காணா
வுனதுசெயலதியேனென் றுன்னியெழுந்தடிபணிந்தான்.

(இ-ள்.) நாளுக்குநாள் அபரபட்சத்துச் சந்திரனைப்போல இவன் பிணிகுறைந்துவர மனமகிழ்ச்சியுடனே திருநகருக்குவந்து ஒரு தாமரைத்தடாகத்துக்கரையிலே அன்னஞ்சமைக்கிறபோது அவனித்திரைசெய்ய முன்னூருவைப்போல் குதிரைமேல் தரிசனங்கொடுக்க, அவர் சீநிவாசக்கடவுளென்று நினைத்து எழுந்திருந்து திக்குநோக்கித் திருவடியைப்பணிந்தான்.—எ-று. (கஎ)

அங்குட்டமகன் றமுன் னூரனுகியிராத்தங்கியபின்
செக்கரொளிப்பரிதிவரத்தெரிந்தெழுந்துநடக்குங்கால்
றக்ககளத்தொருகையாற் றைவாலுமிட்டுண்ணூச்
சிக்கனமுளார்படைத்ததிரவியம்போற்கண்ணுற்றான்.

(இ-ள்.) அப்படி பணிந்து அந்தக்குளத்தைவிட்டு அப்பால் முன்னூருக்குவந்து அன்றிராத்திரி தங்கியிருந்து பிறகு சூரியோதயந் தெரிந்து எழுந்திருந்து நடக்கும்போது தகைமையான கழுத்தை ஒருகையினாலே தடவிப்பார்க்க பிட்சையிட்டுண்ணாத கடினமுள்ளவன் படைத்த திரவியம் போலே இந்தப்பிணியகன்றது அதைக்கண்டான்.—எ-று. (கஅ)

கோவலர்தங்குலவிளக்கேகொண்டல்வணனேயினிய
மாவமருநெஞ்சகனேமாநிலமுண்டுமிழ்ந்தவனே
பாவமொழித்தாயெனவேபன்னிரண்டுதிருமண்ணை
மேலவளர்மேனியெங்கும்விளங்கவணிந்தனனன்றே.

(இ-ள்.) அப்படிகண்ட மாத்திரத்திலே ஆயர் குலத்திலே பிறந்த மணிவிளக்கே மேகவண்ணனே இனிமையான மகாலட்சுமி எழுந்தருளியிருக்கு மார்பனே இந்தப்பூமியெல்லாமுண்டு மறுபடியும்வெளியிலே தோன்றச்செய்து காக்கப்பட்டவனே எனது பாவத்தை ஒழித்தாயென்றுபன்னிரண்டு திருமண்ணைவளர்ச்சியான சரீரமெங்கும் விளங்கத்தரித்துக் கொண்டான்.—எ-று.

வணங்கித்தென்றிருப்பதியின்வந்துபணிந்தருட்கடலைக்
குணந்திருந்தநோக்கியெங்கள்கோவையடிதொழுதுமுனை
முணங்குபிணிவந்ததுபின்னொழிந்ததுவுமுரைத்தரிவை
பிணங்குமதிவிழாவினுக்கேயிங்கடைவனென் றகன்றான்.

(இ-ள்.) மறுபடி வணங்கி தென்றிருப்பதிக்கு வந்து கிருபைக்கடலாகிய சீநிவாசக்கடவுளைப்பணிந்து குணந்திருந்தும் படியாகத்தரிசித்து எங்கள் கோவாகிய அனந்தநாதனைத் தொழுது முன்னேதனக்குவருத்தமான பிணிவந்ததுவும் பின்னொழிந்ததுவுஞ் சொல்லி புரட்டாசிமாதம் பிரம்மோற்சவத்துக்குவருவேனென்று அவனூருக்குப் போயினன்.—எ-று. (உ0)

புரியதனிற்சென்றிருந்தான்புகழுரிவைமதியாலும்
பெரியவினைதொலைத்தபிரான்பெரியசந்நிதிகாண



வருபொழுதுவழித்துணையாய்மறைக்குலத்துவயினவரு
ருரிமையுடனீயெந்தவூர்க்கேகவேண்டுமென்றார்.

(இ-ள்.) அப்படி அவனூருக்குப் போயிருந்தகாலத்திலே புகழ்ச்சியான புரட்டாசிமாதம் வரக்கண்டு தனக்குப்பெரிதான வினையையொழித்த சீநிவாசமூர்த்தியினுடைய சந்நிதிதரிசனத்துக்கு வருகிறவேளையிலே வழித்துணையாய்வேதகுலமாகிய ஸ்ரீ வயிஷ்ணவ பிராமணர்கள் இவனைக்கண்டு நீ ஒருமையா யெந்த வூருக்குப் போகவேண்டுமென்று கேட்டார்கள்.—எ-று. (உக)

மருவளருங்குமுளநகர்மாதவன்றாளிணைபணிய
வுரியமனத்தேனெனலுமோதுவாரம்மறையோர்
திருமலையிலெப்பொழுதுந்திகழ்சீநிவாசன்முதற்
பெருமையுளதல்லாதுபிறநகரத்தினிலுண்டோ.

(இ-ள்.) பூஞ்சோலைவாசனையிருக்கு குமுளநகரத்திலிருக்குஞ் சீநிவாசனது திருவடிகளைப்பணிய வுரித்தான மனத்தை யுடையவனென்று சொன்னமாத்திரத்திலே அந்தப்பிராமணர்கள் சொல்வார்கள் திருமலையிலே எந்தக்காலமும் பிரகாசமான சீநிவாசக்கடவுள் பெருமையுள்ளதல்லாமல் மற்றவூரிலுண்டோ வென்று பின்னுஞ் சொல்வார்கள்.—எ-று. (உஉ)

பற்பலர்கணடுவிலொருபாவனைசெய்தாலதனைச்
சொற்பனமென்றெண்ணுமற்றொடர்ந்தாயிம்மதிவிடெனக்
கற்பனைசெய்தவன்மனத்தைக்கலைத்திழுத்துப்போம்பொழுது
விற்பனமற்றவருடனேவிக்கிரவாண்டியையடைந்தான்.

(இ-ள்.) பற்பலபேர்கள் நடுவிலே ஒருபாவனை செய்தால் அதைச்சொற்பனமென்று நினையாமல்போகத்தொடங்கினாய் இந்தப்புத்தியைவிட்டு விடென்று கற்பனைசெய்து அவன்மனத்தைக் கலைத்திழுத்துக்கொண்டு போகிறபோது அந்தப்புத்தி யில்லாதவன் அவர்களுடனே விக்கிரவாண்டிக்கு வந்தான்.—எ-று. (உங)

அந்நகரக்குளத்திடத்திலன்னஞ்செய்திடுகாலை
யின்னவனித்திரைபுரியவிசைவேலைசெய்வதற்குப்
பின்னைவந்தான்சமையமெனப்பிரார்த்தனையின்முடிப்பெடுத்துச்
சொன்னகரைமேற்கோயிற்றொடர்ந்துள்ளிற்புதைத்தனனால்.

(இ-ள்.) அந்தவிக்கிரவாண்டிக் குளத்திடத்தில் அன்னஞ்சமைக்கிறபோது இவன் நித்திரைசெய்ய இவனிடம்வேலை செய்வதற்காகப் பிறகேவந்தவன் இதுசமையமென்றுபார்த்து பிரார்த்தனைக்குக் கொண்டுவந்த முடிப்பையெடுத்து அந்தக்குளத்தின் கரைமேலிருக்கும் பாழுங்கோவிலுக்குள்ளே புதைத்துவைத்தான்.—எ-று. (உச)

புதைத்துப்பின்வந்தெடுத்துப்புசிக்கலாமெனநினைத்துப்
பதைப்பின்றியிருப்பவவன்பரிந்தெழுந்துண்டிடாதியான்
முதற்றொடர்ந்தவேதியருமுடிப்பெடுத்தகள்வனொடு
நிதிக்கருணைத்திருமலையினெறிபடர்ந்தாங்காலை.

(இ-ள்.) அப்படி புதைத்த பிறகு திரும்பிவரும்போது எடுத்துப்புசிக்கலாமென்று நினைத்து மனது பதைப்பற்றிருக்க அவன் நித்திரை நீங்கி எழுந்திருந்து அமுதுண்டு இது தெரியாமல் முன்னே வழித்துணையாகக் கூடிவந்த பிராமணருடனேயு மிந்தமுடிப்பெடுத்த திருடனுடனேயு நிதிக்கருணையாகிய சீநிவாசக் கடவுளிருக்குந் திருப்பதியின் வழியைநோக்கி நடக்கும்போது.—எ-று. (௨௬)

வாடலிலாவெழிற்சீநிவாசனெனாதன்னனுக்கு
மாடைகுளக்கரையிருக்கும்வகையுரைத்துரைநக்கொளென
நாடுபுனற்றடமுமெதிர்நயந்துதரிசிப்பவருங்
காடுகளுஞ்செய்தவத்தாற்கானடையாய்ச்செலவினைந்தான்.

(இ-ள்.) அந்தவேளையிலே வாட்டமில்லாத சீநிவாசக்கடவுள் எம்மண்ணலாகிய அனந்தநாதனுக்கு அந்த முடிப்புப்பணங் குளத்தன்கரையிலிருக்கும்வகையைச்சொல்லி நீகைக்கொள்ளென்று அருளிச்செய்ய அந்நாடுஞ் சலநிறைந்ததடாகமுமெதிரே யன்பாகத்தெரிசிக்கிறவர்களுஞ் செய்ததவத்தினாலே கால் நடையாகவேஅந்த ஊருக்குப்போக மனத்திலெண்ணினான் அனந்தநாதன்.—எ-று. (௨௭)

சீநிவாசக்கடவுட்டிருவாராதனைப்புரிந்தே
யானபிறகமுதமுமுண்டடியவரோடங்கணுகித்
தேனுலவுகுளக்கரைமேற்றிகழ்தளபமேடையரு
கினமுறுங்கோவிலுக்குளிருந்தபொருள்கண்டெடுத்தான்.

(இ-ள்.) சீநிவாசக்கடவுளினுடைய திருவாராதனையைச்செய்து பின்னர் அமுதுண்டு தன்னடியாருடனே அவ்விடத்துக்குப்போய்த் தேனுலாவிய மலர்சூழ்ந்த அந்தக்குளத்தங்கரைமீதிலே இருக்குந்துளசிமேடைக்குச் சமீபத்திலிருக்கும் பாழுங்கோவிலுக்குள்ளிருந்த பொருளைக் கண்டெடுத்தான்.—எ-று.

அக்குளத்துநீராடியரியதிருமண்டரித்துப்
பக்குவஞ்சேர்பழங்குளமும்பரமதேசிகன்மகிழ
மிக்கநைவேத்தியம்புரிந்துமேவடியார்க்குங்கொடுத்து
தக்கபுகழ்க்குமுளநகர்தானணுகவருங்காலை.

(இ-ள்.) அப்படி எடுத்துக்கொண்டு அந்தக்குளத்திலே ஸ்நானஞ்செய்து அருமையான திருமண்ணுந் தரித்துக்கொண்டு பக்குவமாய்க் கனிந்திருக்கும் வாழைப்பழமுஞ் சர்க்கரையும் பரமதேசிகருக்கு மகிழ்ச்சியாய் மிகுந்த நிவேதனஞ்செய்து கூடவந்த அடியாருக்குங் கொடுத்துத் தானும் புசித்துத் தகைமையான குமுளநகரத்துக்கு வரும்போது.—எ-று. (௨௮)



கண்டவர்களடிபணிந்துகாரியமேனிங்குவரக்
கொண்டல்வண்ணனடியவனேகூறென்றாலிவைபுகலின்
மண்டலம்பாதிதனைமறைத்துரைக்கின்மாலொவ்வா
னண்டினார்க்கென்மொழிவதெனவையன்றன்பதிபுக்கான்.

(இ-ள்.) அப்படி வருகிறவழியிலே கண்டவர்கள் திருவடியிலே பணிந்து இவ்விடத்திற்கு வரவேண்டியகாரியமென்ன மேகவண்ணனாகிய சீநிவாசக்கடவுளினுடைய அடியவனே என்று கேட்க இதைச்சொன்னால் உலகும் நம்பாது மறைத்துச்சொன்னாலுந் திருமாலுக்கொவ்வாது இனிமேல் கேட்கிறவர்களுக்கு என்ன சொல்லுவதென்றெண்ணி என்னையன் குமுளநகரத்துக்கு வந்தான்.—எ-று. (௨௯)

என்னரசன்பதிபுகுந்தங்கிருப்பநடந்தானெனமுன்
சொன்னவன்பின்னாள்முட்டைசோதிக்கமுடிவழிக்கென்
றுன்னிவைத்தபொருளினிலேயொருகாசுங்காணா
தென்னசெய்வேனெனமறையோரொழின்முகம்பார்த்துரைப்பனால்.

(இ-ள்.) இப்படி என்னரசனாகிய அனந்தநாதன் தன்னூருக்கு வந்திருக்க முன்னே திருப்பதிவழியாய் நடந்தவனென்று சொன்னவன் மறுநாள் மூட்டையைச் சோதிக்க முடிப்பும் வழிச்செலவுக்கென்று வைத்தபொருளிலு மொருகாசாகிலுங்காணாமல் என்னசெய்வேனென்று அந்தப்பிராமணர்கள் முகத்தைப்பார்த்துச் சொல்வான்.—எ-று. (௩௰)

பண்டெனதுவினையகற்றும்பரமனடிதரிசித்துத்
தொண்டுசெயவருங்காலைத்துன்மொழியைப்புகன்றடியேன்
கொண்டுவந்தபொருளெல்லாங்கொள்ளைகொளச்செய்துவிட்டீர்
மண்டலத்திலெனைக்கெடுக்கமறையோராய்வடிவெடுத்தீர்.

(இ-ள்.) முன்னாலே என்வினையைத்தீர்த்த சீநிவாசப்பெருமான் திருவடியைத்தரிசித்து அவனுக்குத் தொண்டுசெய்ய வருகிறகாலத்திலே துன்மார்க்கமான சொல்லைப்போதித்து நான் கொண்டுவந்த பொருளெல்லாந் திருடன் கொள்ளைகொண்டு போகும்படி செய்துவைத்தீர்கள் இந்தப்பூமியிலென்னைக் கெடுக்கப் பிராமணர்களாய் வடிவெடுத்தீர்களென்று சொல்லுகிறான்.—எ-று. ()

என்றுரைக்கவம்மறையோரொழின்மனத்திற்பயம்பொருந்தி
நன்றெனவேவழிச்செலவுநல்கிடுவோமென்றகன்று
ரன்றுமுதற்கரந்தோன்றியதனொடுமாவடமலையிற்
சென்றுறங்கவியராகித்திருவுருவாய்மால்புகல்வான்.

(இ-ள்.) இப்படியென்று சொல்ல அந்தப்பிராமணர்கள் அழகான மனத்திலே பயமுண்டாகி நல்லது உனக்கு வழிச்செலவுக்கு நாங்கள் கொடுக்கிறோமென்று வாயினாலே சொல்லிக் கொடாமற்போய்விட்டார்கள் பிறகு இவனுக்கு அது முதற்கொண்டு சரீரத்திலே சுரம் பிரவேசித்து அந்தச்சுரத்துடனே பெருமையுள்ள திருமலைக்குவந்து ஒரிடத்திலே நித்திரைசெய்யும்போது ஒரு வயிராகிரூபமாய்வந்து திருமாலருளிச்செய்வார்.—எ-று. (கூஉ)

வேறு.

எனக்குரியமலைப்பொருளைக்காணவந்தோயென்றொணர்ந்தா
யெனப்புகல வேழைநாயேன், மனக்கொடியமறையோராட்டைப்
பேய்நாயாச்செய்தகதையெனப்புரியுந்திரிபைமெய்யென், றுனக்கு
கந்தமாற்குப்பொன்கொணருங்காலையுயர்நெறியிலெவரோகொண்
கன்றார்காணேன், கனற்பொருவுஞ்சுரந்தோன்றிமனைவிபூண்டகலை
னைவிற்றுச்செலவுசெய்துகண்டேனுன்றாளை.

(இ-ள்.) அந்தவயிராகி சொல்லுவார் எனக்குரித்தான மலைப்பொருளாகிய சீநிவாசக்கடவுளை தரிசிக்கவந்தையே என்ன கொண்டுவந்தாயென்று கேட்க இவன் சொல்லுவான் ஏழையாகிய நாயேனை முன்னே பிணமிருந்த கொடுமையான பிராமணர்கள் ஆட்டைப் பேய்நாயாச்செய்த கதையைப்போல ஒன்று திரிந்தொன்றாகச்செய்து வைத்த வேறுபாட்டைமெய்யென்று நினைத்தேனாகையால் உனக்கின்பமான திருமாலுக்குப் பொன்முடிப்பு கொண்டுவருகிறபோது உயர்ந்தவழியிலே எவரோ கொண்டுபோய்விட்டார்கள்; அதை நானறியேன் ஆகையால் அக்கினிபோலே சுரந்தோன்ற என்பெண்சாதியணிந்த ஆபரணங்களைவிற்று வழிச்செலவுசெய்துகொண்டுவந்து சீநிவாசக்கடவுளினுடைய திருவடியைத் தரிசித்தேன்.—எ-று. (கூங)

எந்தன்மதிமயக்கத்தாலிடருற்றேனென்றியம்பவருண்மாயனி
வையிசைப்பான்முன்னே, வந்தவினைமாற்றியவராயாதிங்கேவரு
கையினுன்றாழியஞ்செய்மனிதனுக்குத், தந்தகுணத்தாற்பொரு
ளைப்பாழுங்கோவிற்றனிற்புதைக்கவனந்தநாதனுக்குச்சொல்லி, யந்
தமுறுந்தென்திருப்பதிப்பணிக்கேயான்றந்தேன்பொன்முடிப்பென்
றறிவாய்நீயே.

(இ-ள்.) இப்படி யென் மதிமயக்கத்தினாலே இடர்பெற்றேனென்று சொல்லக் கிருபைபொருந்திய திருமாயவனருளிச்செய்வார் முன்னே உனக்கு வந்த வினையை மாற்றினவரை யறியாமல் இங்கே வந்தபடியினால் உனக்கு ஊழியஞ்செய்யு மனிதனுக்குச் சுவாமிகொடுத்த குணத்தினாலே யந்தப் பொருளையெடுத்து ஒருபாழுங்கோவிலிலே புதைக்க அதை அனந்தநாதனுக்குச் சொல்லி அழகுபெற்ற தென்திருப்பதித்திருப்பணிக்கே யாகச்செய்தோம்; அந்தப் பொன் முடிப்பென்று அறிந்து கொள்ளுவாய் நீ என்று பின்னுஞ்சொல்வான்.—எ-று. (கூச)



ஓரிடத்தில்விழுபொருண்மற்றோரிடத்திலோடித்தேடினுங்கிடை
பாவண்மைபோலத், தாரணியிலெங்குநிறைந்துறையிருக்குந்தகை
மையெனுமிகழ்ந்தொன்றைத்தள்ளநோயு, நோவந்ததுனக்கவனி
யேகிப்போய்நினைத்துவினையொழியுமெனவிகழ்ந்தலோடுங், காரண
னேயுனதுசெயலறியேனென்று கருதிவந்தகுமுளநகர் கண்டானம
ன்றோ.

(இ-ள்.) ஓரிடத்திலே விழுந்தபொருளை மற்றோரிடத்திலே யோடித் தேடிப்பார்த்தாலுங் கிடையாததுபோலத் தெய்வம் பூமியெங்கும் நிறைந்திருக்குந் தகைமையாயிருந்தாலு மிகழ்ந்து ஒன்றைத் தள்ளினபடியினாலே இந்த வருத்த முனக்கு வந்தது ஆகையால் அவ்விடத்துக்குப்போய் வணங்கினால் விரைவில் வினை யொழியுமென்று சொன்னமாத்திரத்திலே சர்வவுயிருக்குங் காரணனே யுனது செயலை யறியேனென்று தோத்திரஞ்செய்து நினைத்து அந்தக்குமுளநகரத்துக்கு வந்தான்.—எ-று. (கூரு)

வந்துநெடுமாயவனைவணங்கிப்பின்பென்மனவனைப்பணிந்
துமுன்னைவரலாறெல்லாஞ், சிந்தையுறப்புகன்றுநாற்றினமிருந்து
தேகத்திலிருந்தழலோய்ந்தபின்றைச், சந்தமிகுமனைவியொடும
ன்பாலந்தத்தலத்தைமிகத்தோத்திரித்துத்தன்னூர்புக்கும், கந்தம
லர்த்திருவிளங்கமைந்தவரோடுங்காசினியில்வாழ்ந்துமனக்களித்தான்
மன்றோ.

(இ-ள்.) அப்படிவந்து சீநிவாசக்கடவுளைவணங்கிப் பிறகு என் மனவனாகிய அனந்தநாதனைப்பணிந்து முன்னேநடந்த வரலாறெல்லாஞ் சந்தோஷமாகச்சொல்லி நாலுநாளிருந்து முன் தேகத்திலிருந்த சுரந்தீர்ந்தபிறகு அழகான பெண்சாதியுடனே அன்பாயந்தத் தென்திருப்பதியென்னுந் தலத்தை மிகவுந்தோத்திரித்துத் தன்னூருக்குப்போயி தாமரை இலையிலிருக்கும் இலட்சுமிவிளங்கத்தக்கதாகப் பெண்பிள்ளைகளுடனே இந்தப்பூமியிலே வாழ்ந்து மனக்களிப்பாக இருந்தான்.—எ-று. (கூசா)

ஆதிமறையோராறுசமயத்துள்ளுமமர்ந்தபொருளொன்றெ
னவேயறைந்தநேர்மை, தேடினைக்கண்டுபணியப்பெறுமாயன்றோழு
தாய்யமுன்பரிபிலேறுந்தொன்மை, வாதனுக்காவிந்நாளெந்தன்
மன்னாவயசெய்திருப்பணிக்குமாதைநல்கக், கோதிலாவெண்டுரகமீதி
ற்சென்றகுணமொன்றென்றறிவார்களுகிடாரோ.

(இ-ள்.) ஆதியாகிய வேதமானது ஆறுசமயத்திலும் அமர்ந்திருக்கும் பொருளொன்றேயென்று சொன்ன நேர்மையைத் திருஷ்டாந்தமாகக்கண்டு இந்த உலகம் பேதியாமல்தொழுது கடைத்தேற முன்னாளிலே மாணிக்கவாசகருக்காக குதிரையிலேறிய பழமையாகிய பொருள் இந்நாள் அனந்தநாதன்செய்

துவைக்குந் திருப்பணிவிடைக்குப் பொருளைக்கொடுக்கவே குற்றமற்ற வெள்ளைக்குதிரையின்மே லேறியபடியினாலே 'சகலதெய்வமு மொன்றே யென்று தெரிந்து பணியுமவர்கள் நரகத்தைக் காணமாட்டார்கள்.—எ-று. (௩௭)

கண்டமாலையொழித்தபடலம் முற்றிற்று.

ஆக படலம் கo-க்கு திருவிருத்தம்-௬௭௰.

---

## இடர்நீங்கியபடலம்.

இன்னுமொருவகைகேளீர்குளந்தாமென்னுமென்னையனுதித்த
தலத்தெழிலுலாவி, மன்னுமாளையொன்றதனில்வாழ்வோரின்பவள
முதவுங்கூழமுதைப்பெரியபாண்டந், தன்னிலடுப்பினிற்கொதிக்க
வைத்தகாலைச்சர்ப்பமீதணுகியிற்றவதிவீழ, சொன்னவில்லுளோ
ரறியாததனைமூடித்துன்னிருள்கூடியபவிரவிற்றுயின்றார்மன்னோ.

(இ-ள்.) இன்னுமொரு விதத்தைச்சொல்லுகிறேன் கேளுங்கள் திருமாலடியார்களே அதெப்படியென்றால் என்னையன் அவதாரஞ்செய்த குளந்தாமென்னுந்தலத்திலே அழகுபொருந்திய நிலைபெற்ற ஒருவீட்டிலே இருக்கிறவர்கள் அவர்களுக்கு இன்பவாரத்தைக்கொடுக்குங் கூழமுதை ஒருபெரியபாண்டத்திலே வைத்து அடுப்பிலேற்றிக்கொதிக்கிற வேளையிலே ஒரு பாம்பு மேலேவந்து தவறியதிலேவிழ அந்த வீட்டிலுள்ளவர்கள் அதையறியாமல் அந்தப் பாண்டத்தை மூடிவைத்து நெருங்கின இருள்கூடிய இராத்திரியிலே நித்திரைசெய்தார்கள்.—எ-று. (க)

திருமருவுஞ்சீனிவாசன்றனன்பன்செயலேந்தவுலகறியத்தெரிப்
பானுன்ற, வுருவுதித்தபதியினிற்கூழமுதிற்போகியுற்றதனையொ
ருவருணவகையைச்செய்து, வருகுவையென்றுரைக்கவண்ணல்ப
ரிதிமேற்பான் மறைந்துபதினைங்கடிகை வந்தகாலைப், புரவிமிசை
யேறியொருமனிசன்றீபம் பொலியுங்கண்டொமெவ்வூர் புகுந்தான்
மாதோ.

(இ-ள்.) அப்படி நித்திரைசெய்கிறவேளையிலே பெரிய பிராட்டிக்கு நாயகனான சீனிவாசக்கடவுள் தன்னன்பனுடைய அனந்தநாதன்செயலை இந்த உலகத்துள்ள யாவரும் அறிந்துய்யவேண்டி சொல்லுவார் நீயுதித்த பதியிலே கூழமுதில் பாம்புவிழுந்திருக்கிறது அதை ஒருவரும் புசியாமலிருக்கச்செய்வாயென்று திருவுளம்பற்ற என்னண்ணல் சூரியன் மேற்குத்திசையிலே மறைந்த பிறகு இராத்திரிபதினைந்து நாழிகை வந்தவேளையிலே குதிரைமேலேறிக்கொண்டு ஒருவன் விளக்குக்கூண்டு பிடித்துவர அந்தவூருக்குப்போனான்.—எ-று. (உ)



அந்தமனையுள்ளவர்நித்திரைநீக்கிக்கூழமுதுறுபாண்டத்தையரு ட்கண்ணானோக்கிச், சந்தமிகுதோட்டத்திற்பள்ளஞ்செய்துதலைகீழா ய்ப்பாண்டமதுதனைக்கவிழ்ப்ப, முந்தியதிலுறுமரவத்துருவங்கெட்டு முடிதலைமீக்கவர்கரங்கண்முகிழ்த்துநிற்பப், பந்தனஞ்செய்தேகுமு னைப்பதியிற்சென்றான்பரித்துலகந்தோத்திரித்துப்பணியுந்தாளான்.

(இ-ள்.) அப்படியேபோய் அந்தவீட்டிலுள்ள வர்களுடைய நித்திரையை நீக்கிக் கூழமுதிருக்கும் பாண்டத்தை கிருபையான தனது கண்ணினாலே பார் த்து அழகுமிகுந்த தோட்டத்திலே பள்ளஞ்செய்து தலைகீழாய் அந்தப்பாண் டத்தைக்கவிழ்க்க முன்னதிலிருந்த பாம்பினுருவங் கெட்டு முடிந்திருக்கிற தைக்கண்டு அந்த வீட்டிலுள்ளவர்கள் கைகூப்பித்தொழுது நிற்க அதைப் பந்தனஞ் செய்துபோட்டு தென்றிருப்பதிக்கு வந்தான் பரிவுடனே இந்தவுல கமெல்லாந் தோத்திரித்துப் பணியும் பாதனை அனந்தநாதன்.—எ-று. (௩)

வேறு.

அண்ணலார்செயுமதிசயமினஞ்சிறிதறைவே
னெண்ணிலாப்புகழ்த்தொண்டைநாட்டிடத்தினிலெழில்சேர்
கண்ணன்மாபுரியிருப்பவனொருவன்முற்கரும
நண்ணலாற்பெரும்பாரிசவாயுவானலிந்தான்.

(இ-ள்.) அண்ணலாராகிய சீநிவாசக்கடவுள் செய்த அதிசயங்க ளின் னஞ் சிறிது சொல்லுகிறேன் என்னவென்றால் எண்ணிக்கை இல்லாத புக ழ்பெற்ற தொண்டைநாட்டினிடத்திலே அழகுபொருந்திய கிருஷ்ணபுரத்திலி ருக்குமொருவன்முன் வினைத்தொடர்ச்சியினாலே பெரியபாரிசவாயுவந்து அதி னாலே வருத்தம்பெற்றான்.—எ-று. (௪)

அன்னகாலையிற்றென்றிருப்பதிவளரமலன்
றன்னையன்றியிப்பிணிதனையாரிங்குதவிர்ப்பா
ரென்றெண்ணியேபெருவயிராக்கியமியற்றிச்
சந்நிதிக்குவந்தெம்பெருமானடிதாழ்ந்தான்.

(இ-ள்.) அப்படி வருத்தம்பெற்ற வேளையிலே தென்றிருப்பதியில்வ ளருஞ் சீநிவாசக்கடவுளையல்லாமல் இந்தப்பிணியை யாவர் தீர்க்கப்போகிறார் என்று நினைந்து பெரிய வயிராக்கியஞ்செய்து சந்நிதிக்குவந்து பரவாசுதேவன் பாதத்தைப்பணிந்தான்.—எ-று. (௫)

தாழ்ந்தகாலையிலிரவிகண்டிடுபனிதனையச்
சூழ்ந்தவல்வினையகன்றிடமலரடித்துணையின்
வீழ்ந்திறைஞ்சித்தோத்திரஞ்செய்துதன்பதிமேவி
வாழ்ந்திருந்தனன்மற்றுமேனடந்தனவுரைப்பாம்.

(இ-ள்.) அப்படி பணிந்தமாத்திரத்திலே சூரியனைக்கண்ட பனிபோ லே யவனைச்சூழ்ந்த வல்வினை நீங்கிப்போக, அந்தப்பெருமாள் திருவடியிலே

அதன்மேல் மிகவுந் தோத்திரஞ்செய்து தன்னூருக்குப்போய் வாழ்ந்திருந்தான் இதுநிற்க; பின்னும் நடந்தகாரியங்களைச் சொல்லுவாம்.—எ-று. (சு)

தொண்டைநாட்டிடைத்தோன்றிநல்லறநெறிசுரக்கும்
பண்டசோழநல்லூரினில்வாழுமோர்பன்பன்
வண்டமும்விருந்தாய்க்காரூர்தனைமருவிக்
கண்டுபின்னொருமனையினிலிரவுறுங்காலை.

(இ-ள்.) பின்னுமந்தத் தொண்டைநாட்டினிடத்திலே யுண்டாகி நல்லதருமவழி வளர்ந்திருக்கும் பண்டசோழ நல்லூரென்னும் ஒருநன்றி அதிலேவாழும் நற்குணமுள்ளவ னொருவன் குற்றமற்ற விருந்தாகக் காரூரென்னும் ஒரூருக்குப்போய் ஒருவீட்டிலே போசனஞ்செய்து இராத்திரியிலே நித்திரைசெய்யும்போது.—எ-று. (எ)

மூடிகஞ்செயுப்புழையிருந்தோராராமுடி
யோடிவந்துகாற்பெருவிரலினிற்கடித்துளைக்க
காடியேயெழுந்ததைக்கையாற்பிடித்திடலளிபின்
னேடுநேர்காத்திலும்விடப்பல்லினுலிறுத்த.

(இ-ள்) அப்படி நித்திரை செய்யும்போது பெருச்சாளி தோண்டின வளையிலிருந்து ஒருபாம்பு வேகமாயோடிவந்து காற்பெருவிரலிலே கடிக்க வலியெடுத்து எழுந்திருந்து அதைக்கையினலே பிடிக்கவும் பிறகு மிகுந்தகோபத்துடனே விஷப்பல்லினலே கடித்தது.—எ-று. (அ)

கெட்டியாய்ப்பிடித்தொளிகொணர்கெனவவன்றெளிந்தித்
திட்டியாலறிந்ததைவிட்டுவிடவயித்தியனை
யட்டியின்றியங்கழைத்திடவவரிந்தகலாத்
துட்டமீதிவனுயிர்ப்பட்டெனச்சொன்னன்.

(இ-ள்.) அப்படிகடிக்கக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு விளக்கைக் கொண்டுவாவென்று சொல்லி கண்ணினலே பார்த்து பாம்பை விட்டுவிட்டுப் பிறகு வயித்தியனைச் சீக்கிரமாக அழைத்துவந்து அவர்பார்த்து இது தீராத துஷ்டவிஷம் இவனுயுள் இவ்வளவுதானென்று சொன்னன்.—எ-று. (கூ)

அன்னகாலையிலென்னையன்குழுளத்திலனுக
வுன்னுவீரெனவிடதரனேதவங்குள்ளா
ரின்னதேநலமென்றொருபரியினிலேற்றி
மன்னுதென்றிருப்பதியரிவாசலின்வந்தார்.

(இ-ன்.) அந்தவேளையிலேயந்த விஷதரன் என்னை அழகான குழுளத்துக்குக்கொண்டுபோய் விடுவீரென்று சொல்ல அங்குள்ளவர்கள் இதுவே நலமென்று ஒருகுதிரையிலேற்றிக்கொண்டு கீர்த்திபெற்ற தென்றிருப்பதி சீனிவாசக்கடவுள் சந்நிதானத்துக்கு வந்தார்.—எ-று. (கo)



வந்தகாலையிற்கண்சுழன்றினியாவுறண்டுச
சிந்தையுந்தமொழிதடத்திருமண்ணுந்தீர்த்த
மெந்தனுயகனிம்மருந்தவனுக்கன்றிந்தா
னந்தவல்விடந்திர்ந்தெழுந்தானகிழ்ந்துறையான்.

(இ-ள்.) அப்படிவந்த வேளையில் அவனுக்குக் கண்சுழன்று இனிமையான காவும் வரண்டு மனமுந்தமொழியின வேளையிலே திருமண்ணுந் தீர்த்தமுமெங்கள் அனந்தநாதன்மருந்தாக அன்று அவனுக்கே கொடுக்க அந்த வல்லமையான விஷந்தீர்ந்து எழுந்திருந்து மனமகிழ்ச்சியாகச் சொல்வான்.—எ-று.

எந்தனுயகவென்னுயிரளித்திடுமிறையோய்
சுந்தரானந்தவாரிதியேயெனத்தொழுது
சிந்தையோடுமேகாதசியுச்சவஞ்செய்து
புந்தியோடிசைவளரவனூரினிற்புக்கான்.

(இ-ள்.) எனக்கு நாயகனே எனதுயிரைக்கொடுக்கவந்த தெய்வமே அழகுபொருந்திய ஆனந்தக்கடலே யென்று வணங்கி அன்புடனே யேகாதசியுற்சவஞ் செய்துவைத்து மனமகிழ்ச்சியாக் கீர்த்தியுள்ளரும் அவனூருக்குப்போயிருந்தான்.—எ-று. (கஉ)

உத்தரத்தணிவேங்கடகிரிவளரொருவ
னத்தியேயுத்தியோகத்தைத்தக்கணநடந்தே
யெத்திசைப்புகழுஞ்சென்னபுரியின்வந்திருப்பச்
சித்தத்திற்பெருப்பயித்தியஞ்சேர்ந்தவன்றிரிந்தான்.

(இ-ன்.) பின்னும் உத்தரதேசத்தில் அழகான வேங்கடகிரியிலே இருக்கின்றவனொருவன் உத்தியோகஞ்செய்ய நினைத்துத் தன்னூருக்குத் தட்சணத்திலே வந்து எத்திசையும் புகழுஞ் சென்னபட்டணத்திலே வந்திருக்க மனத்திற்பெரிதான பயித்தியம்பிடித்து அவன் திரிந்தான்.—எ-று. (கங)

ஆடையைக்கிழித்தன்னமுநீருணவகற்றி
யோடிவீதியிற்கற்கொடுவருநரையுறுக்க
காடியெவ்விதமொழியுமென்றவனதிகன்பர்
கூடியேவளர்தென்றிருப்பதியினிற்கொணர்ந்தார்.

(இ-ள்.) அந்தப் பயித்தியக்குணத்தினலே வஸ்திரங்களைக் கிழித்து அன்னமும் நீரும் புசியாமல் தெருவிலோடி கல்லைக்கொண்டு வருகிறவர்மீதி லெறிந்து பயமுறுத்த இதைப்பார்த்து அவனுக்கு அதிகநேசமானவர்கள் இவனுக்கு இது எந்தவிதமா யொழியுமென்று நினைத்து அவனைக்கூட்டிக்கொண்டு வளர்ச்சியான தென்றிருப்பதிக்கு வந்தார்கள்.—எ-று. (கச)

வந்துமெய்த்திருமண்ணொடுதீர்த்தமும்வழங்க
வந்தவல்வினையிரவிமுன்பனியெனவகலப்

புந்தியாலவன்சில்கயிங்கரியமும்புரிந்தே
யெந்தனையனந்தம்பணிந்தார்புருந்திருந்தான்.

(இ-ள்.) அப்படிவந்த மெய்ம்மையான திருமண்ணூற் றீர்த்தமும் அவனுக்குக் கொடுக்க அந்த வல்வினையானது சூரியனைக்கண்ட பனிபோல நீங்கிப்போக மனது சந்தோஷமாக அவன் சிறிது கயிங்கரியங்களைச்செய்து எந்தன் நாயகனாகிய அனந்தநாதனுடைய இரண்டு திருவடிகளையும்பணிந்து சந்தோஷமாக அவனூருக்குப்போயிருந்தான்.—எ-று. (௧௫)

தேனுறும்பொழிற்றென்றிருப்பதியினிலெங்கள்
கோனனந்தநாதன்செயமுலவியகுணத்தோ
னிலம்புகழ்தன்கயிங்கரியத்தைநடத்தச்
சிவாசனிப்பெருவயித்தியமெலாஞ்செய்தான்.

(இ-ள்.) தேன்பொருந்திய மலர்ச்சோலைசூழ் தென்றிருப்பதியிலே யெங்கள் குருவாகிய அனந்தநாதன் செயம்பெருகிய குணத்தையுள்ளவன் இந்தப் பூமியெல்லாம் புகழுந் தனது கயிங்கரியங்களை நடத்தும்படியாகத் தனம் வரும்பொருட்டுச் சிவாசக்கடவுள் இந்தப்பெரிதான வயித்தியங்களை யெல்லாஞ் செய்தான்.—எ-று. (௧௬)

திண்டிறல்பெருந்தளபமுந்திருமண்ணுந்தீர்த்த
முண்டிலக்கமில்பெரும்பிணிதொலைத்ததையுலகின்
மண்டனைக்கணக்காக்கினும்வாயினால்வருத்தக்
கண்டுசொல்பவரியாரெனவறிவிலெங்கருத்தே.

(இ-ள்.) பெருமையான திறம்பொருந்திய திருமண்ணுந் தீர்த்தமுமுண்டு கணக்கில்லாத பெரிதான பிணிகள் தீர்த்ததை இந்த உலகத்திலுள்ள மண்ணைக் கணக்காக்கிச் சொன்னாலும் வாயினாலே வருத்தங் கணக்காக்கிக் கண்டு சொல்லுகிறவர் இன்றொன்று என்னறிவுக்குத்தெரியாது.—எ-று. (௧௭)

இரணியன்மகன்முதற்சிரஞ்சீவிசெய்தொழின்முத்
தரணியோர்புகழ்ந்தேத்தியவினியசந்தான
கரணியோகுல்லைப்பெருமையையிதென்றுதானெ
மரணநீக்கவேமாமலையுதித்தமாமருந்தோ.

(இ-ள்.) பின்னும் இரணியன் மகனை பிரகலாதனன் முதலானவரைச் சிரஞ்சீவியாக்கிவைத்த அழகான மூன்றுலோகமும் புகழ்ந்து தோத்திரஞ்செய்யு மினிமையான சந்தானகரணியென்னுஞ் சஞ்சீவியோ திருத்துழாய் மகிமையை இன்னதென்று சொல்ல எனக்குத் தெரியாது; பின்னும் மரணங்களை நீக்க அழகுபொருந்திய சஞ்சீவிமலையிலே தோன்றிய பெருமையுள்ள மருந்தோ யாதோ எனக்குத் தெரியாது.—எ-று. (௧௮)



மலையில்வாழ்சித்தர்காணிக்கைதந்தமாமருந்தோ
வலைகடற்பிறந்தாருயிரளித்தநல்லமுதோ
வுலகிலெப்பிணியுந்தொலைத்தின்பமேயுதவுஞ்
சிலையெடுத்தொடித்தரிவையாய்ச்செய்தவன்றிருமண்.

(இ-ள்.) பின்னும், மலையிலே வாழ்கின்ற சித்தர்கள் சிவாசக் கடவுளுக்குக் காணிக்கையாகக்கொடுத்த பெருமையுள்ள மருந்தோ அல்லாமலும் அலைபொருந்திய சமுத்திரத்திற் பிறந்து எல்லாருக்கு முயிரைக்கொடுக்கும் நல்ல தேவாமுதமோ உலகத்திலே எந்தப் பிணியையும் நீக்கி இன்பத்தைக் கொடுக்கும்; பினாகமென்னும் வில்லை யெடுத்தொடித்த சானகியாரைத் திருமணஞ்செய்துகொண்ட சிவாசக்கடவுளின் றிருமண்.—எ-று. (௧௯)

வேறு.

மாதவன்முன்விளையாடல்செய்தநேர்மைமகிழ்ந்தடியாருரைத்
தவங்கமனத்துட்கொண்டே, கோதறவிக்கலியுகத்திற்றெய்வமந்தக்
கொள்ளைசெயவிலையென்றுற்குறைகடாப், பேதமனுமானமின்றி
யாருமெச்சும்பிரத்தியக்கப்பிரமாணமாகக்கண்ணு, லாதிநாயகனெங்
களனந்தனருட்பணிகொண்டிருந்தவையின்றறிந்தோமன்றே.

(இ-ள்.) பின்னுமிந்தப் பரவாசுதேவன் முன்னே திருவிளையாடற்செய்த சரித்திரத்தைமகிட்சியாய் அடியார்கள்சொன்னவகையைமனத்திலேநினைத்துக் கொண்டுகுற்றமற இந்தக்கலியுகத்தில் தெய்வம் அந்தக்காரியஞ்செய்யக்காணே மென்றால் உலகத்திற் [illegible] பேதமும் அனுமானமுமில்லாமல யாவரும் மெச்சும் பிரத்தியட்சப் பிரமாணமாகக் கண்களினாலே ஆதிநாயகனாகிய சிவாசக்கடவுள் எங்களனந்தனிடம் திருவையாகத் திருப்பணிவிடைகொண்டதை இன்றறிந்தோம்.—எ-று. (௨௦)

இடர்நீங்கியபடலம் முற்றிற்று.

ஆக படலம் ௧௧-க்கு திருவிருத்தம்-௬௧௫.

---

## கண்ணளித்தபடலம்.

தண்ணளிக்குமுகிலுமைத்தேன்றுளிக்குஞ்செய்யதாமரைக்கா
டலர்ந்தெனவொளிருமேனி, திண்ணளிக்குமவையவமுங்கடலிற்
றோன்றுந்திருமாதுமணிநிலவுந்திகழ்ந்தமார்பும், பண்ணளிக்குங்க
ழைவாயனன்பர்நெஞ்சிற்பரிந்துகுடியிருந்தவனோர்பாவைவேண்
டிடும், கண்ணளித்தான்மெய்ச்சிவாசன்றுளிற்கவனத்தார்வினையக
ன்றபவனத்தாரே.

(இ-ள்.) செனுங்கள் திருமாலடியார்களே குளிர்ச்சியைத்தரும் மோ சத்தினிடத்திலே தேனைத் துளிக்குஞ் சிவந்த தாமரைக் காடுமலர்ந்தது போலப் பிரகாசமான திருமேனியிலே பெருமையைக்கொடுக்கும் அவையவங்களுங் கடலிலே பிறந்த பெரியபிராட்டியாரும் மாணிக்கமாலையினது பிரகாசமும் பொருந்தியிருக்கும் மார்பும் இசையைத்தரும் புல்லாங்குழல் நாதஞ்செய்யும் வாயுமாக அடியார்மனத்திலே பரிவாய்க் குடியிருந்து; "ஒருபிராமணப்பெண் வேண்டக் கண்கொடுத்த மெய்ம்மையான சீனிவாசக்கடவுளினுடைய திருப்பாதத் தியானமுன்னவர்கள் வினையைநீக்கிய மோட்சமின்னவர்கள்." (௪)

மருமலர்த்தேன் துளித்தளிகளுநன் னுஞ்சோலைவளரரங்கப்பெருமானைவழுத்தும்வாயா, பரிவைக்கம்பகமளித்தானென்றுயர்ந்தவருங்கதையைச்சொல்லெனவேயன்பாய்க்கேட்பத், திருவுறைதென்றிருப்பதிவீற்றிருக்குமெங்கள் சீனிவாசன்பதத்தைத்தினமும்போற்றும், பொருவரியபரந்தாமனவர்க்குநன்றாய்ப்புகலுவான் றன்வினையயிகலுவானே.

(இ-ள்.) இப்படி சொல்லக்கேட்டு வாசனையான மலரிலிருக்குந்தேனை வண்டுகளுண்ணுஞ் சோலைசூழ்ந்த ஸ்ரீரங்கநாதனைத் தோத்திரஞ்செய்யும் வாயினையுடைய திருமாலடியார், ஒருபெண்ணுக்குக் கண்கொடுத்தனென்றீரோ அந்த அருமையான சரித்திரத்தைச்சொல்லவென்று அன்பாய்க்கேட்க மகாலட்சுமிக்கு வாசமாகிய தென்றிருப்பதியிலே வீற்றிருக்கு மெங்கள் சீனிவாசதேவன் திருவடியைத் தினமும்பணியும் ஒப்பற்ற பரந்தாமன் அவர்களுக்கு நன்றாய்ச் சொல்வான் தன்று வினையை நீக்கிக்கொள்வதற்கு.—எ-று. (௨.)

வேறு.

நீருலாவியசோழநாட்டணிபுகழ்நிறைந்த
பேருலாவியகொள்ளிடநதித்தென்பாற்பெருகு
மேருலாவியவத்தலந்தன்னிலேயிருக்குஞ்
சீருலாவுசாம்பையனோர்மறையவன்றெலுங்குன்.

(இ-ள்.) சலமிகுந்த சோழநாட்டிலே அலங்காரம் நிறைந்த புகழ் பொருந்திய கொள்ளிட நதிக்குத் தென்பாரிசத்திலே மிகுந்த அழகுவிளங்கிய அந்த இடத்திலிருக்குஞ் சிறப்பினையுடைய சாம்பையனென்றொரு தெலுங்குப்பிராமணன்.—எ-று. (௩)

நாடெலாந்திரிந்தவரவர்க்கினிதுரைநடத்தி
யாடகங்கொளர்ந்தப்புரிதன்னிலோரையன்
பூடணம்மெனப்பெண்களுக்கின்புறும்புதல்வி
சேடம்மாளெனுங்கன்னியைத்திருமணஞ்செய்தான்.

(இ-ள்.) அவ்னித்தப் பூமியெல்லாந்திரிந்து அவரவர்க்கு நல்வார்த்தைசொல்லி தனங்கொண்டுவந்து அந்தபுரியிலொரு பிராமணன் பெற்றபெ



ன்சநேர்க்கெல்லாம் பூஷணம்போலும் இனிமையைத்தரும்ஒருபெண் சேஷம் மாளென்றும் பெயருள்ள அந்தக் கன்னிகையைக் கலியாணஞ்செய்துகொண் டான்.—எ-று. (௪)

பன்னிரெண்வயதானையாள்மங்கையம்பருவந்
தன்னையேயுநாளவிவனுங்கள்பாற்றரிக்க
வென்றுவிரெனப்பெற்றதாய்தந்தை [illegible]
மன் [illegible] பெருமறையோன்.

(இ-ள்.) அப்படி கலியாணஞ்செய்த பெண்சாதிக்கு எட்டுவயதானதி றிலே மங்கைப்பருவம் அடைகிற நாள்வரைக்கு பிவளுங்களிடத்திலிருக்க ட்டுமென்று பெற்றதாய்தகப்பனுக்குச் சொல்லிவிட்டு நிலைமையான கங்கை யாத்திரைபோயினு னந்தப்பிராமணன்.—எ-று. (௫)

காசியாத்திரைகொழுநன்சென்றுவந்திடுகாலை
யேசிலாதநல்லன்னையுந்தந்தையுமிறக்க
மாசிலாத்தவக்கன்னிதன்மனமிகமயங்கிப்
போசனத்தகளுமின்றியேயனுதினம்புலம்பும்.

(இ-ள்.) அப்படி பெருமைபொருந்திய காசியாத்திரை புருஷன்போ யிருக்கிறகாலத்திலே குற்றமில்லாத நல்ல தாயுந் தகப்பனுமிறக்க இந்த களங் கமற்ற தவத்தினையுடைய சேஷம்மாள் தன்மனமயங்கிப் போசனமுமில்லாமல் நாள்தோறும் புலம்புவாள்.—எ-று. (௬)

உருகுகாலையிரணத்திலெரிசெய்யையூற்றும்
பரிசுபோலிருகண்களுமிழந்திடப்பதைத்தே
தெருவுதோறுநின்றலைந்திடக்காசியிற்சென்றோன்
கருணையாகிவந்திப்பெருஞ்செயலினைக்கண்டான்.

(இ-ள்.) அப்படிபுலம்பிக்கொண்டிருக்கிற காலத்திலே இரணத்திலே செய்யைக்காய்ச்சி யூற்றினதுபோல் இரண்டுகண்களு மிழந்துபோக மனம் ப தைத்து தெருக்கள் தோறும் நின்று அலைந்து திரிகிறபோது காசிக்குப்போன பிராமணன் ஆசையாய்வந்து இந்தப்பெரிதான கண்காட்சியைக் கண்டான்.

என்னபாவமிங்கியற்றினேன்றெய்வமேயெனக்கிவ்
வின்னலுற்றது விதிவயமோவெனவிரங்கி
மன்னுகாசியினைஞ்செலநினைத்தனன்மறையோ
னன்னகர்லையவ்விரதைசென்றடிபணிந்தறைவாள்.

(இ-ள்.) அப்படிப்பார்த்து என்னபாவம் நானிங்கே செய்தேன் தெ ய்வமே எனக்கே விந்தத்துன்பம் வந்தது விதிவசமோவென்று இரங்கி நிலைமை யான காசிக்கு மறுபடியும் போக நினைத்துப் பிரயாணமான அந்தப்பிராம

ணன் அந்தவேளையில் சேஷம்மாளென்னும்பதிவிரதைவந்து அவனைப்பணிந்து சொல்வாள்.—எ-று. (அ)

தந்தைதாயிறந்திருவிழியகன்றுநான்றவிப்ப
தெந்தனாயகவறிந்தனையுலகத்திலெனக்கே
யுந்தன பொன்னடியன்றியேயொருதுணையுளதோ
விந்தவேலையிலென்னைநீகைவிடற்கவென்றியம்பும்.

(இ-ள்) தகப்பனுந் தாயுமிறந்து இரண்டுகண்ணுமே போய்நான் தவிக்கிறதையென்னாயகனே இதையறிந்தனையே எனக்கு உனது பொற்பாதமல்லாமல் வேறே துணையுண்டோ இந்த வேளையிலே என்னைக்கைவிடாதே என்று அழுதாள்.—எ-று. (௯)

உன்னைக்கட்டிக்கொண்டுலகத்திலெவ்விதமுழலுவே
னென்னவேதியனிவள்பெருங்குரலொடுமிரங்க
வன்னகாலையோர்மறையவன்மனைவியங்கணுகி
யின்னவோதையென்னெனவிவரவட்கிவையிசைத்தார்.

(இ-ள்.) அதைப்பார்த்து உன்னைக்கட்டிக்கொண்டு உலகத்திலே நானெந்தவிதமாக வுழலுவேனென்று அந்தப்பிராமணன் சொல்லக்கேட்டு இவள் பெருங்குரலோடுந் துக்கிக்க, அந்தவேளையி லொருபிராமணன் பெண்சாதி அவ்விடத்திற்கு வந்து இந்தக் கூச்சலேனென்றுகேட்க இவர் அவளுடனே நடந்த விருத்தாந்தத்தைச் சொன்னார். (க0)

புந்தியாலறிந்தவளிதுபுகலுமிப்புவியி
லெந்தனல்லூழிக்கணித்துத்தென்திருப்பதியென்றே
சந்ததம்பெயர்விளங்கியசீநிவாசப்பேர்ச்
சுந்தரஞ்செறிமாதவன்சரிதையைச்சொலக்கேள்.

(இ-ள்.) அப்படி சொல்லக்கேட்டு மனத்திலறிந்து அவள் சொல்லுவாள் இந்தப்பூமியிலே யானிருக்கும் நன்மையான இடத்துக்குச் சமீபத்திலே தென்திருப்பதியென்னும் நித்தியமங்களகரமாக பெயர்விளங்கும் ஒரு திவ்ய க்ஷேத்திரமுண்டு அதிலே அழகுபொருந்திய சீநிவாசப்பெருமாள் சரித்திரத்தைச் சொல்லக்கேளென்று சொல்வாள்.—எ-று. (கக)

முன்புசெய்வினையாவையுந்தொலைத்தருண்மூர்த்தி
யென்சுதன்பெரும்பாண்டுவையொழித்தனனிதலாற்
றுன்பமுற்றவரடிபணிந்திடவதுதொலைந்த
தன்புகொண்டவணைந்தமாவாசைநீரணுகில்.

(இ-ள்.) முன்செய்த பாவங்களை எல்லாமொழிக்குந் தயாநிதியாகிய சீநிவாசப்பெருமாள் என்மகனுக்குப்பெரிதான பாண்டுரோகத்தைத் தீர்த்தார் அதல்லாமல் அனேகர்கள் பிணியுள்ளவாள் வந்து திருவடியிற்பணிய அவைக



ளெல்லாந் தீர்ந்துபோகின்றன ஆகையால் அவ்விடத்துக்கு நீபோந்து அமாவாசைக்குப்போய்த் தரிசனஞ் செய்யுங்களென்று பின்னுஞ் சொல்வாள்.—எ-று.

இப்பெரும்பவமொழிந்திடுமெனவவளிசைப்ப
வொப்பிலாததென்திருப்பதிதனக்குளமுவந்து
முப்பெருந்திங்களுமமாவாசையின்முறையே
தப்பறத்தொழுதகன்றபின்னொருமதிதனிலே.

(இ-ள்.) அப்படி செய்தால் இந்தப்பெரும்பாவந் தொலையுமென்று அவள்சொல்ல ஒப்பற்ற தென்திருப்பதிக்கு மனம் சந்தோஷமாய் பெருமை பொருந்திய மூன்றுமாதத்தில் வாராநின்ற மூன்றமாவாசை முறைதப்பாமல் வந்து பணிந்துசென்ற பிறகு பின்னொருமாதத்தில்.—எ-று. (கஉ)

இலங்குநல்லமாவாசையுச்சவத்துக்குளியைந்து
தலந்தனையுகந்தணைவுழி நெறிதனிலே
யலங்கலங்குழன்மாதொடுசமைத்தனமருந்திக்
கலங்குபூசுரனெழுகெனக்கோலமுன்காட்ட.

(இ-ள்.) அந்தமாதத்திற்றோன்றிய நல்ல அமாவாசை யுற்சவத்துக்கு மனஞ்சந்தோஷமாய்த் தன்னூரைவிட்டு தென்திருப்பதிக்கு வருகிற நடுவழியிலே மாலையணிந்தகூந்தலையுடையபெண்சாதியுடனே அன்னஞ்சமைத்துப்புசித்து மனக்கலக்கத்துடனே அந்தப்பிராமண னெழுந்திரென்று கோலைமுன்பாகக் காட்டினான்.—எ-று. (கங)

நீண்டகோனுனிவிளிம்பிடைப்படவுடனெளித்தே
யாண்டுகண்ணிணையவணிமிட்டிடவழக்ககன்று
தூண்டுசோதிசேர்விழியிரண்டின்புறத்திலங்கப்
பாண்டவர்க்கருந்தூதனேயெனச்சொலிப்பணிந்தான்.

(இ-ள்.) அப்படிகாட்ட நீண்டகோலினது நுனி கண்ணிமையிலே படவுடனே உடலைநெளித்து அப்போது கண்ணையவன் நிமிட்ட அதிலிருந்த அழுக்கற்று தூண்டிவிட்ட விளக்குக்குச்சமானமாக இரண்டுகண்ணுமின்பமாய் விளங்க பாண்டவர்களுக்கு அருமையான தூதனே என்று சொல்லிப் பணிந்தான்.—எ-று. (கச)

இந்தவாறறிந்தம்மறையவன்குதித்தெழுந்தே
யெந்தனாயகவென்றுதோத்திரமிகவிசைத்துச்
சிந்தையோடுமத்தென்திருப்பதியினைச்சேர்ந்தே
வந்தமாதவன்றனைப்பணிந்தவர்பதிக்ககன்றார்.

(இ-ள்.) இந்தஅதிசயத்தை அந்தப்பிராமணன் கண்டெழுந்திருந்து கூத்தாடி எந்தன் நாயகனேயென்று மிகவுந்தோத்திரஞ் செய்து மனஞ் சந்தோ

ஷமாய்த் தென்திருப்பதிக்கு வந்து அந்தச் சீநிவாசக்கடவுளைப்பணிந்து அவ ரூருக்குப்போய்ச்சுகமாக இருந்தார்கள்.—எ-று. (௧௮)

இந்தவாறுமாலைக்குறுநிடைப்பிணியினைந்தே
வந்திடுங்குறுநீஞ்சென்மக்குறு மெடலாமாற்றித்
தந்தநல்வரந்தனைக்கணக்காக்கவென்றமோ
வந்தமேவியசேடனும்புகலொணாதநுவே.

(இ-ள்.) பின்னுமிந்தப்படியாக மாலைக்குறுநிம், இடைநலிலேயுண்டா ஞலே வந்த குருநிம், சென்னகாலத்திலே இருந்தகுருநிம், இவை முதலான வெல்லாந் தீர்த்து நல்லவரங்களைச் சீநிவாசமூர்த்தி கிருபைசெய்வதைக் கண க்காக்கிச்சொல்ல என்றமல்ல அதேதென்றால் அழகுபொருந்திய ஆதிசே ஷனாகிய இரண்டாயிரம் நாவினாலுங் கணக்கிட்டுச் சொல்லக்கூடாம லிருக் கும் அந்தப்பெருமையை யான் எவ்வாறு சொல்வேன்.—எ-று. (௧௯)

கண்ணளித்தபடலம் முற்றும்.

ஆக படலம் - ௧௨-க்கு திருவிருத்தம் - ௭௧௨.

---

## தீர்த்தபடலம்.

தென்னிலங்கியசேரநாட்டகத்தொருதெரிவை
சின்னமின்றியோர்சோரநாயகன்றனைச்சேரப்
பன்னியின்குணமறிந்துயர்கொழுநனுட்பதைத்தே
யின்னமேயிலேயேனுனக்கெனவவன்கடிந்தியம்ப.

(இ-ள்.) கேளுங்கள் திருமாலடியார்களே அழகுமிகுந்த சேரநாட்டி லிருக்குமொரு பெண் வெட்கமில்லாமல் ஒருசோரநாயகனைச்சேர அப்பெண் சாதியின்குணத்தையறிந்து உயர்ச்சியான அவன்புருஷன் மனம்பதைத்து இக் கவிலேயேனுனக்கென்று அவன்கடிந்து சொன்னான்.—எ-று. (௧)

சோரநாதனாற்புருடனாருயிர்தனைத்தொலைத்தவ்
வூரிலுள்ளவரறிந்திடாவகைபுரிந்துவைத்தே
வீரமுள்ளிவடக்கைவாழ்மனைதனைமேவி
கேருவார்களைப்புணர்ந்துவந்திருந்தனளொருநாள்.

(இ-ள்.) அப்படி சொல்லக்கேட்டு அவளந்தச் சோரபுருஷனாலே தன் புருஷனுயிரைக்கொன்று அந்த ஊரிலுள்ளவருக்குத் தெரியாமற் பந்தனஞ் செய்துபோட்டு மனத்திலே தயிரியமுள்ள அவன் தகப்பனிருக்கும் வீட்டுக்குப் போயிருந்துகொண்டுசேர்ந்தவர்களையெல்லாம் புணர்ந்துபுணர்ந்து மனஞ் சந்தோஷமாய் ஒருநாளிருந்தாள்.—எ-று. (௨)



அந்தக்காலையிற்றந்தையிந்நடத்தையையறிந்தே
யிந்தக்காரணமேதெனவவனுயிர்தீர்த்தா
ளெந்தனன்னையேயென்செய்தாயெனமகனியம்பச்
சிந்தையின்பமற்றீன்றகாதலனையுஞ்செகுத்தாள்.

(இ-ள்.) அப்படி இருக்கிற காலத்திலே அவள் தகப்பனிந்த நடக்கை யை அறிந்து இந்தக் காரணமேனக்கேனென்று கேட்க அவனுயிரையுங்கொ ன்றாள்; அதையறிந்து என்தாயே நீ என்ன செய்தாயென்று அவள் மகன்கேட்க மனத்திலன்பில்லாமற் றான்பெற்ற பிள்ளையையுங் கொன்றாள்.—எ-று. (௩)

அக்கொடும்பழிக்காரிபின்சிறிதுநாளகலத்
திக்கெலாமலைந்தன்னமுமின்றியேதிகைத்தே
யெக்கணக்கினுமியம்பிடாப்பெரும்பிணிபிணைந்து
தக்கதென்குருமளாபுரித்தலத்தினைச்சார்ந்தாள்.

(இ-ள்.) அப்படிப்பட்ட கொடுமையான பழிக்காரி சிறிதுநாள்போன பின் திக்குகளெல்லா மலைந்து அன்னமுமில்லாமல் மனது திகைத்து எக் கணக்கிலேயுஞ் சொல்லக்கூடாத பிணிகளைப்பொருந்தி தகைமையான அழகுபொருந்திய குருமளாபுரமாகிய தென்திருப்பதிக்கு வந்தாள்.—எ-று. (௪)

வந்தவேலையிற்சந்நிதிக்கண்ணனிதென்மன்னன்
சுந்தரத்தொழும்பருக்கறிவுண்மையுந்துலங்கப்
புந்தியாற்செய்தபவஞ்சொலக்கெடுமெனப்புகல
வந்தவாய்மையைச்செவியுறக்கேட்டனளரிவை.

(இ-ள்.) அப்படிவந்த வேளையிலே சந்நிதியினிடத்திலே என்மன்னவ னாகிய அனந்தநாதன் அழகான தன்னடியாருக்கு அறிவுமுண்மையும் விளங்கும் படியாய் மனமறிந்துசெய்த பாவந் தன்னுடனே சொல்லக் கெடுமென்று சொல் ல அந்தவார்த்தையைக் காதாரக்கேட்டாளந்தப்பெண்.—எ-று. (௫)

புலரிக்காலையிலென்குருநதிச்செலும்பொழுது
மலரையொத்தநல்லிணையடிதன்னிலேவணங்கி
யலகிலாப்பவஞ்செய்தவையொன்றறவுறைந்திக்
கலகமற்றிடும்வழிபுரிவாயெனக்கழற.

(இ-ள்.) அப்படி சொல்லக்கேட்டு அருணோதயகாலத்திலே என்னுடைய குருவாகிய அனந்தநாதன் பம்பாநதிக்குப்போகிறபோது தாமரைமலரையொ த்த நல்லதிருவடிகளிலே வணங்கி தான் கணக்கில்லாத பாதகஞ்செய்தவை எல்லாவற்றையுங் குறையாமற் சொல்லி இந்தத்தீவினை அறும்படியான வழி சொல்வாயென்று கேட்டாள்.—எ-று. (௬)

இந்தப்பம்பையிற்றுளைக்குந்திருவிணையடியிறைஞ்சி
யுந்தன்பாதகம்போமெனவென்றந்தையுரைப்பச்

சிந்தையாயொருதிங்கணீர்ப்படிந்ததுதீர்ந்தே
யெந்தகாளுந்தான்வாழுமூர்சென்றினிதிருந்தாள்.

(இ-ள்) அப்படி சொல்லக்கேட்டு இந்தப் பாபவிநாசதீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து சீநிவாசக்கடவுளினுடைய திருவடிகளைப்பணிந்தால் உனது பாதகம்போமென்று என்னையன்சொல்ல அவள்மனதுடனே ஒருமாதம் அந்த நதியிலே ஸ்நானஞ்செய்து அந்தவினையொழிந்து எந்நாளுந் தான்வாழுமூருக்குப்போ யினிமையாக இருந்தாள்.—எ-று. (எ)

சேற்றுப்பட்டெனுஞ்சீர்மையிலொருவன்முன்றீதான்
மாற்றருஞ்செந்நீர்சுக்கிலமிரணமுமலிந்த
நாற்றமீதெழுங்குட்டரோகத்துறநண்ப
ரேற்றுகப்பளத்தெடுத்தந்தக்குமுளம்வந்தியைந்தார்.

(இ-ள்.) பின்னுஞ் சேற்றுப்பட்டென்னுந் தேசத்திலிருக்கும் ஒருவன் முன்வினையினாலேமாற்றவரிதான உதிரமுஞ்சுக்கிலமும் இரணமுமலிந்துநாற்றமெழும்பிய குஷ்டரோகத்தைப்பொருந்த அவன்பந்துக்கள் கம்பளியிலேயவனை கட்டி எடுத்துக்கொண்டு அந்தத்தென்திருப்பதிக்கு வந்தார்.—எ-று. (அ)

வந்துடற்குட்டன்றனையொன்பான்றினமெழின்மலிந்த
சிந்துலாவியபாபநாசத்தடஞ்சேர்க்க
வுந்தியேயதின்மூழ்கியவ்வியாதியையொழிக்கச்
சுந்தரானந்தச்சீநிவாசன்பதந்தொழுதே.

(இ-ள்) அப்படிவந்து அந்தக் குஷ்டரோகனை ஒன்பதுநாள் அழகுமிகுந்த சலம்பெருகிய பாபவிநாசநதிக்கரையில்றக்கிவிட அவன் தவழ்ந்துகொண்டுபோய் தினமுமதிலே ஸ்நானஞ்செய்து அந்தவியாதியைப் போக்கடிக்க சுந்தரானந்த சீநிவாசக்கடவுள்திருவடியைப் பணிந்தான்.—எ-று. (௯)

திங்களொன்பதுதிகழமாவாசையிற்சென்று
துங்கமாயொன்பான்றினமிருந்தனைதிதுளைந்தே
யங்கமுற்றநோயகன்றுதென்திருப்பதிக்கரசை
யிங்கிதம்பெறத்தொழுதுதன்னூர்ப்புகுந்திருந்தான்.

(இ-ள்.) அப்படி ஒன்பதுமாதம் அமாவாசைக்குவந்து உயர்ச்சியாய் ஒன்பது தினமிருந்து அந்தநதியிலே ஸ்நானஞ்செய்து அவன் சரீரத்திற்பொருந்திய குஷ்டரோகந்தீர்ந்து தென்திருப்பதிக்கு அரசாகிய சீநிவாசமூர்த்தியை யின்பமாகப்பணிந்து தன்னூருக்குப்போய்ச் சுகமாக இருந்தான். ௧௦

இன்னுஞ்சோழநாட்டொருவன்றன்னகட்டுறும்பிணியாற்
றுன்னுந்தெய்வமந்திரவயித்தியஞ்செய்துந்தொலையா
தின்னதென்திருப்பதிக்குவந்தியைந்தநல்லெழில்சேர்
மன்னுபம்பையிற்படிந்துநோயகன்றவன்வாழ்ந்தான்.



௨-சேத்துப்பட்டு குஷ்டரோகி.

(இ-ள்.) பின்னுஞ் சோழநாட்டிலிருக்கு மொருவன் தன் வயிற்றுவலியி
னாலே யிருந்த தெய்வங்களைத்தொழுது மந்திரவயித்தியங்களையுஞ்செய்து ஒழி
யாமல் இந்தத் தென்திருப்பதிக்கு வந்து இசைவான நல்ல அழகுபொருந்திய
நிலைபெற்ற பாபவிநாசதீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து அந்தப்பிணி தீர்ந்து
அவன் தன்னூருக்குப்போய்ச் சுகமாக வாழ்ந்திருந்தான்.—எ-று. (கக)

கவினுமிந்நதிபடிந்தகல்வினைகளைக்கணக்கிட்
டெவருரைக்கினுமிடங்கொடாவகைசெறிந்திருக்கு
மவனிமீதினிற்புல்லறிவுள்ளவனாதனு
னவினுமாறுளதெவ்விதஞ்சொலுமொருநாவால்.

(இ-ள்.) பின்னு மழகுமிகுந்த இந்தநதியிலே ஸ்நானஞ்செய்து நீங்கின
வினைகளைக் கணக்கிட்டு யாவர் சொல்லவேண்டுமென்றாலுங் கணக்கிலடங்காத
நிலைபெற்றிருக்கும் இந்தப்பூமியில் புல்லறிவுள்ளவனானவனாகையால் அறிந்துசொல்
லுவ தெவ்விதம் புகலுமொரு நாவினால்—எ-று. (கஉ)

தாரணிக்கிருவினையொழித்தருண்மிகத்தழைக்கும்
பேரணிக்குணம்படைத்துநல்வாழ்வையேயிறங்கும்
பூரணச்செயுறந்திடுத்திறத்துறுபொலிவு
மோரணி[illegible]யித்தன்செயலைவரிசைப்பார்.

(இ-ள்.) இந்தப் பூமியிலே மிகுதியான வினைகளையெல்லா மொழித்
துக் கிருபைதழைத்திருக்கும் பெரிய அலங்காரகுணத்தைப் படைத்து நல்ல
வாழ்வை எல்லாருக்கும் மிகுதியான நிறைந்த செயலாகக் கொடுக்கும் திறத்
தைப்பொருந்திய சிறப்புமலிந்த புகழையறிந்து அந்த நதியின் பெருமையை
யாவர் சொல்வார்.—எ-று. (கரு)

கற்றமாந்தர்கள்புகழுங்கோனேரிபுட்கரணி[illegible]
மற்றுமத்தலமுளத்தினிற்ப[illegible]கதிடமனத்[illegible]
லுற்றபாவமெலாந்தொலைத்[illegible]ரிபதமுதவு
நற்றவப்பயனுரைக்குமாற[illegible]வனொருநாவா[illegible]

(இ-ள்.) பின்னுங் கல்விமிகுந்த[illegible] பெரியவர்கள் புகழுங் கோனேரிபுட்
கரணி யென்று மற்றும் அந்தத்தலத்தி[illegible]லே ஒரு தீர்த்தமுண்டு, அதிலே ஸ்நா
னஞ் செய்தால் மனத்திற் பொருந்திய பஞ்சபாதகங்களையு மொழித்துப் பர
மபதத்தைக் கொடுக்கும் அதனுடைய ந[illegible]லதவப்பயனை அறிந்து சொல்லுவோ
மென்றால் ஒரு நாவுள்ளவர் யா[illegible]ல்வார்.—எ-று. (கச)

என்னவோதமாலடியவ[illegible]ற்பராந்தாமன்
றன்னெஞ்செயத்தென்[illegible]ருப்பதியினைச்சார்ந்து
தென்னுலாவியசீநிவாசன்[illegible]ருப்பதத்தை
மன்னுமெய்யனந்தனைப்ப[illegible]ரித்தவ்வுழிவாழ்ந்தார்.

(இ-ள்.) இப்படி சொல்லக்கேட்டு திருமாலடியவர் அழகான பரந்தாமனுடனே கூடிக்கொண்டு செயம்பொருந்திய தென்றிருப்பதியைத் தரிசனஞ் செய்யவேண்டு மென்கிற ஆசையினாலே அந்தத் தலத்துக்கு வந்து அழகுமிகுந்த சீநிவாசக்கடவுளினுடைய திருவடிகளையும் நிலைபெற்ற மெய்மையாயும் அநந்தநாதனைப் பணிந்து அந்த இடத்திலே சுகமாக வாழ்ந்திருந்தார்கள்.—எ-று. (கரு)

எண்ணிலாப்புகழ்மருவுதென்றிருப்பதிக்கிறைவன்
வெண்ணெயுண்டசெம்பவளவாயிலங்கியவிமலன்
மண்ணையுண்டுமிழ்ந்தளித்திடுஞ்சற்குணவரதன்
கண்ணன்மாதவன்றன்னையேபுகழுமென்கருத்தே.

(இ-ள்.) எண்ணிக்கை இல்லாத புகழைப்பெற்ற தென்றிருப்பதிக்கு நாதனாகிய வெண்ணெயையுண்ட சிவந்த பவளம்போன்ற வாயன் பிரகாசம் பொருந்திய விமலன் இந்த உலகத்தை உண்டு மறுபடியும் வெளியிலே வைத்துக்காக்குஞ் சற்குண வரதன் கண்ணன் மாதவனாகிய அந்தத்தேவனையே புகழும் என் கருத்து.—எ-று. (கசு)

வேறு.

நிர்க்குணமாகிஞானநிமலவானந்தமாகிச்
சிற்குணமாகிவேதச்சின்மயப்பரமமாகி
நற்குணமாகித்தன்னைநயந்தவர்க்கினிதுசெய்யுஞ்
சற்குணக்கடலைவாழ்த்திச்சஞ்சலப்பிறவிதீர்வாம்.

(இ-ள்.) ஒருகுணமுமில்லாமல் நிர்க்குணமாகியும் ஞான நிருமலானந்தச் சொருபமாகியும் நல்ல குணமாகத் தன்னைத் தோத்திரஞ் செய்யும் அடியார்களுக் கினிமை செய்யுஞ் சற்குணக் கடலாகிய சீநிவாசக்கடவுளை வாழ்த்திச் சஞ்சலமென்னும் பிறவியைத் தீர்த்துக்கொள்ளுவாம்.—எ-று. (கஎ)

கோலமாமுடியுங்காதிற்குண்டலப்பொலிவுமார்பிற்
சாலவேவிளங்குஞ்செய்யதாமரைமகளும்பைம்பொற்
காலிலேகமலம்பூத்தகடவுளெவ்வுலகுங்காக்கு
நீலமாமுகிலைவாழ்த்திநெடுந்துயரகற்றல்செய்வாம்.

(இ-ள்.) அழகுபொருந்திய பெருமையான கிரீடமுடியுங் காதிலே குண்டலப் பிரகாசமும் மார்பிலே மிகுந்த விளக்கமான செந்தாமரைமகளாகிய பெரியபிராட்டியும் பசுமையான பொன் போன்ற திருவடிகளிலே கங்கை வீற்றிருக்குங் கடவுளாகிய தேவனை எந்தவுலகத்தையுங்காக்கும் நீலமாமுகிலாகிய சீநிவாசதேவனை வாழ்த்தி எனது பெருந்துயரத்தைத் தீர்த்துக்கொள்ளுவாம்.—எ-று. (கஅ)



வேறு.

அரியமறைப்பொருளாகியாகமத்தின்காரணமாயகண்டசோதிப், பரிதியுலகிருளகற்றும்பான்மையெனவடியர்மனப்பவத்தைநீக்கு, நிருமலமெய்ஞ்ஞானவமுதக்கடற்றோன்றியபொருளைநினைத்துச் செல்வம், பெருகுதிருவேங்கடத்தைப்புகழ்ந்தெனதுபிறவியெனும் பிணியைத்தீர்ப்பாம்.

(இ-ள்.) அருமையான வேதப்பொருளாகிய இலக்கணநூல் முதலாகிய சாஸ்திரங்களுக்குக் காரணமாகியும் விலாசமான பிரகாசமுள்ள சூரியன் உலகத்திருளை நீக்கியதுபோலத் தன்னடியார்கள் மனத்திலிருக்கும் அஞ்ஞானமான இருளைநீக்கும் நிருமல மெய்ஞ்ஞானமென்னும் அமுதக்கடலிற்றோன்றிய பொருளை நினைத்து செல்வம்பெருகுந் திருவேங்கடத்தைப் புகழ்ந்து பிறவியென்னும் பிணியைத் தீர்த்துக்கொள்ளுவாம்.—எ-று. (௧௯)

வேறு.

கொங்குதங்கியகுல்லையணிந்துவெண்
சங்குமாழியுந்தாங்கியசெங்கையோன்
கங்கைவீற்றிருக்குங்கழற்காண்மலர்
மங்கையாளுறைமார்பனைவாழ்த்துவாம்.

(இ-ள்.) மகரந்தப் பொடிமிகுந்த திருத்துழாயை அணிந்து வெண்மையான சங்குசக்கரமுந் தாங்கிய செந்தாமரை மலர்போன்ற கையும் ஒப்பற்ற கங்கை வீற்றிருக்கும் வீரகண்டைபொருந்திய திருப்பாதமலரும் பெரியபிராட்டி யமர்ந்த மார்புமுடைய ஸ்ரீநிவாசக்கடவுளை வாழ்த்துவாம்.—எ-று. ()

வேறு.

விண்டலத்திலங்குபானுமேவவென்னுமவுலிபோற்
குண்டலம்பிறங்குவெண்குபேரரொத்திருப்பவே
மண்டலம்புரிந்தசேடமலைமுடிக்கணிலைபெறுங்
கொண்டலைப்பணிந்துநங்குறும்பறுக்கவுன்னுவாம்.

(இ-ள்.) ஆகாயத்தினிடத்திலே பிரகாசிக்குஞ் சூரியன் குடியிருக்கிறதுபோலொத்த கிரீடமுங் குண்டலமானது பிரகாசமான வெண்மையுள்ள இரண்டு சந்திரோதயம்போல் இருக்கவும் வளைந்து மண்டலஞ் செய்யும் ஆதிசேஷனென்னும் பெயர்பெற்ற மலைமுடியினிடத்திலே நிலைபெற்றிருக்குங் கொண்டலாகிய ஸ்ரீநிவாசக்கடவுளைப் பணிந்து நமது வினைகளைப் போக்குவாம்.—எ-று. (௨௧)

வேறு.

அங்கடல்கடைந்தமுதமண்டருக்களித்தோ
னெங்கணுமயிர்ம்முனைக்கிடமறநிறைந்தோன்

சங்குவாளாழிவிற்றண்டேந்துகைமெய்யன்
பங்கயவடித்துணைபணிந்துளமுவப்பாம்.

(இ-ள்.) அழகுபொருந்திய கடலைக்கடைந்து தேவர்களுக்கு அமுதங் கொடுத்தவன் எங்கும் மயிர்முனைக்கிடமில்லாமல் நிறைந்த சங்கும் வாளுஞ் சக்கரமும் வில்லுந் தண்டமுந்தரித்த கையினையுடைய மெய்யனது தாமரைமலர் போன்ற திருவடிகளைப் பணிந்து மனத்திலானந்தம் பெறுவாம்.—எ-று. (உஉ)

வேறு.

குடையெனத்தாங்கிக்குன்றைக்கொழுங்கதிர்மறைக்கநேமிப்
படையெடுத்தாக்குலத்தைப்பார்த்தனைப்பரிந்துகாத்தோன்
விடமுலையுண்டவாயன்விரைமலர்த்துணைத்தாள்போற்றிப்
படியினிற்றுயரமென்னும்பரவையைக்கடத்தல்செய்வாம்.

(இ-ள்.) குடையாக மலையை எடுத்து கொழுமையான கிரணம்பொருந்திய சூரியனைமறைக்க சக்கராயுதத்தை விடுத்து பசுக்குலத்தையும் அருச்சுனனையும் பரிவாகக்காத்தவன் பூதனையினுடைய முலையையுண்டவாயன் வாசனைபொருந்திய மலர்த்தாளைப்போற்றி இந்தப் பூமியிற் றுயரமென்னுஞ் சமுத்திரத்தைக்கடப்பாம்.—எ-று. (உங)

வேறு.

தசரதன்பாலுதித்துக்கௌசிகயாகந்தனைமுடித்துக்கல்லைப்பெண்ணாக்கிவில்லை, யிசைபெறவேயொடித்துநங்கள்சனகிதன்னையினியமணம்புரிந்துபுவியினையோனுள,வசையறுகான்புகுந்துகொடுங்கரன்மாரீசன்வாலியைக்கொன்றிராவணனைவதைத்துப்பின்றோன், மிசையன்பான்முடிபுனையவயோத்திவந்தவீராகவனடியைவிளம்புவோமே.

(இ-ள்.) தசரதசக்கரவர்த்தி வயிற்றிலே பிறந்து விஸ்வாமித்திரன் யாகத்தைமுடித்து கல்லான அகலிகையைப் பெண்ணாக்கி வில்லைக் கீர்த்தி பெறும்படியாய் ஒடித்து சனகன் மகளாகிய சீதாபிராட்டியாரை இனிமையாகத் திருமணஞ்செய்து பூமியை பரதமகாராசனுக்குக்கொடுத்து குற்றமற்ற காட்டுக்குப்போய் கரன், மாரீசன், வாலி முதலானவர்களையுங்கொன்று இராவணன் முதலான இராட்சதரை சங்கரித்து விபீஷணன்மீதிலே அன்பாக இலங்கையைப் பட்டங்கட்டி மறுபடியும் அயோத்திக்குவந்து பட்டாபிஷேகஞ்செய்து கொண்ட சக்கரவர்த்தித் திருமகனுடைய திருவடிகளைத் தோத்திரஞ் செய்வாம்.—எ-று. (உச)

வேறு.

ஆதிநூற்பொருள்விளங்கவருட்டருமஞ்செழிப்ப
மாதமும்மாரிபெய்யமகிதலப்பயிர்தழைப்பக்





ரோதிலாச்செங்கோலோங்கக்குலவுமுத்தமிழ்
சீதரன்புகழிலங்கச்செயம்பெறுமடியர்வாழ்க.

(இ-ள்.) வேதநூற்பொருளெல்லாம் விளங்க கிருபையான தருமஞ் செழிக்க மாதமும்மாரிபெய்ய பூமியிலே பயிர்கள் தழைக்க குற்றமற்ற இராசாக்கள் செங்கோலோங்க குலாவிய முத்தமிழ் மிகுதியாக ஸ்ரீமந்நாராயண மூர்த்தியாகிய சீநிவாசக்கடவுளினுடைய கீர்த்தி பிரகாசிக்கச் செயம் பெற்ற பல அடியார்களும் வாழ்க.—எ-று. (ருகு)

இந்தமாக்கதைகேட்டவர்படித்தவரெழுதிப்
புத்தியான்மனையகத்தில்வைத்திருந்தவர்புவிமே
லுந்திபூத்தவனருளினால்வாழ்ந்துபின்னுயர்ந்த
சிந்தைமேவிநல்வைகுந்தந்தன்னிலேசேர்வார்.

(இ-ள்.) இப்படி மகிமையுள்ள தென்திருப்பதி புராணத்தைக்கேட்டவர்களும் இந்தப் பூமியிலே உந்திபூத்தவனாகிய சீநிவாசக் கடவுளினுடைய கிருபையினாலே சகல சம்பத்துடனே வாழ்ந்து பின்பு உயர்ந்த மனத்துடனே வைகுந்தத்தையும் பெறுவார்கள்.—எ-று. (உகூ)

தீர்த்தபடலம் முற்றிற்று.

ஆக படலம் கச - க்கு திருவிருத்தம் - எகஅ.

தென்திருப்பதிபுராணம்
முற்றுப்பெற்றது.

ஸ்ரீமத்குலசேகராழ்வார்திருவடிகளேசரணம்.

ஸ்ரீ அனந்தாதசுவாமிகள் திருவடிகளேசரணம்.

# பரிசோதனபத்திரம்.

| பக்கம். | வரி. | பிழை. | | திருத்தம். |
| --- | --- | --- | --- | --- |
| ௪ | ௨௧ | உல்கின்றுளுக் | ... | உலகின்றுளுக் |
| ௮ | ௪ | சொல்லுகற்கரி | ... | சொல்லுதற்கரி |
| ௧௨ | ௬ | மாமர்கள்காற்சிலம்பிஞெளி | ... | மாதர்கள்காற்சிலம்பிஞெலி |
| ௧௨ | ௨௪ | சொல்லமுடிமோ | ... | சொல்லமுடியுமோ |
| ௨௦ | ௫ | பறங்குடி | ... | புளிங்குடி |
| ௨௨ | ௯ | கலியுககலியுகக் | ... | கலியுகக் |
| ௨௨ | ௧௫ | திருப்பறி | ... | திருப்பதி |
| ௨௨ | ௩௪ | கச்சியிற்றெற்கைகலி | ... | கச்சியின்றெற்கைக்தார்கலி |
| ௨௮ | ௨௨ | அப்பாகதவனே | ... | அப்பாகவதனே |
| ௨௯ | ௧௭ | சோதிவி | ... | சோதிவி |
| ௩௧ | ௧ | சொல்லாதது | ... | சொல்ல தாது |
| ௪௦ | ௯ | வகைரோயதிட | ... | வகையோதிட |
| ௪௦ | ௭ | போர்புகழும் | ... | யோர்புகழும் |
| ௪௦ | ௭ | மகிழ்லோடு | ... | மகிழ்வோடு |
| ௪௭ | ௭ | பேசுகின்வர் | ... | பேசுகின்றவர் |
| ௬௯ | ௧௩ | துளைப்புண் | ... | துளைப்பண் |
| ௭௪ | ௨௬ | தமியணையடி | ... | தமினையடி |
| ௮௫ | ௨௦ | திட்டத் | ... | தெட்டத் |
| ௯௯ | ௮ | குழுளாககரி | ... | குளமாககரி |
| ௧௦௨ | ௧௪ | மரத்தப்பொடி | ... | மகாந்தப்பொடி |
| ௧௦௨ | ௧௫ | சூழுந்திருக்கும் | ... | சூழ்ந்திருக்கும் |
| ௧௦௭ | ௩௦ | மனனனே | ... | மனனே |
| ௧௨௫ | ௬ | பனிந்தபின்பு | ... | பணிந்தபின்பு |
| ௧௨௮ | ௧௩ | வடக்கெதின்முக | ... | வடக்கெழின்முக |
| ௧௨௮ | ௨௬ | சுவான | ... | சுபமான |
| ௧௩௦ | ௨௭ | நாலுவிடத்துக்கு | ... | நாலுவடத்துக்கு |
| ௧௩௧ | ௧௧ | அந்தத்திசையும் | ... | அந்தாதியையும் |
| ௧௩௫ | ௨௭ | மாமரம் | ... | மாமகம் |
| ௧௩௮ | ௨௮ | தானமிறசம்பி | ... | தானமிற்றசெம்பி |
| ௧௪௬ | ௩௦ | அனந்தநதன் | ... | அனந்தநாதன் |
| ௧௬௪ | ௧ | பிராமணனையெல்லாம் | ... | பிராமணர்களெல்லாம் |
| ௧௮௬ | ௧௪ | நகர்க்களித்தாப் | ... | நகர்க்கணித்தாப் |
| ௧௯௮ | ௧ | அதன்மேல் | ... | பணிந்து |

ஸ்ரீ.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

# இந்நூலாசிரியர் இயற்றிய
ஸ்ரீமத்
# அநந்தநாதசுவாமிகள்பதிகம்.

காப்பு—வெண்பா.

தேசலாந்தெய்வத்திருக்குழுளமாபுரத்தெம்
பேசும்பெருமானைப்பேசுதற்கு — நீசெறிநா
கண்பார்த்தருளக்கடன்கண்டாய்தென்குருகூர்
கண்பார்த்திபனேகனிந்து.

ஆசிரியவிருத்தம்.

உலகெலாம்பணியும்பாவையிற்றுயிலுமொருவனையன்பினலழைத்தே
யுண்மையாய்திருத்தியவன்றிருவடியையுறுதியாயருச்சனைபுரியும்
சலசனேர்கரனேமதுரவாசகனேதன்னிலாத்திகளானனனே
சதுமறைபுகழுந்தாலணிமார்பதாரணிபோற்றுறுபதனே
அலகறுகல்விக்கெழில்பெறுமனையேயைம்புலனடக்கியாதார
மாதினுந்தா[illegible]யமதிசற்குணனே
நலமிலேன்றனையாளுமணறமானாளியுந்தென்றிருப்பதியோய்
நண்ணருமுத்திக்காசனேயநந்தநாதனேஞானதேசிகனே. (௧)

அந்தமாதியிலாதிருக்குமெய்ப்பொருளையருமறைதேடியுங்காணு
வருமையாம்பணவத்தொண்பொருளானவாதியையணங்குதென்னியனே
வந்தனைபுரிவார்க்கருள்பகர்தருவேமன்னியமாதவக்கொழுந்தே
வளர்பத்திக்கடலேயாசவெம்பகையேவருமடியார்களுக்குறவே
சந்ததமெட்டக்கரந்துதியுளனேசங்கற்பவிகற்பமுமில்லாச்
சத்துவகுணமெய்ஞ்ஞானகன்னிலையத்தமியனேற்கருளனையினனே
நந்தாவிந்தமேறிமுத்தீனுமணிவளர்தென்றிருப்பதியோய்
நண்ணருமுத்திக்காசனேயநந்தநாதனேஞானதேசிகனே. (௨)

உள்ளுவாரமுதேயோதுவாராரசேயுத்தமவொருவருந்துணையே
யோங்கிப்புருடமேருவேயெவர்க்குமொப்பிலாவற்புதக்கனியே
வள்ளலேசதகமாலையந்தாதிவழங்கியவின்பநாவினனே
வாதுசெய்சமயக்கரிகளுண்ணடுங்கவுருதிறன்மிகுந்தகேசரியே

புள்ளுயர்த்தோனைவிடப்பயந்தவிர்ப்பப்பீடாருப்பொருத்துவித்தவனே
புன்மையைத்தவிர்த்துநன்மையைத்தந்தாள்புண்ணியவடிவமானவனே
நள்ளிருளகலாப்பூமலர்ச்சோலைகனிவளர்தென்றிருப்பதியோய்
நண்ணருமுத்திக்கரசனேயநந்தநாதனேஞானதேசிகனே.

தேவரிந்திரனந்தணர்மதியிரவிசேர்ந்தசையேழுக்கண்கமலரோன்
தேடியுங்காணுவடமலைமுதலாற்றிருவுபதேசம்பெற்றவனே
காவிரோர்மறையோன்றேவியைமரத்திற்கயிற்றிற்பிணித்துலாவனேத்தி
கழுத்தினையறுக்கவரும்பொழுதங்காரிகையரிகரியெனவே [க்
மூவரின்முதல்வனுனைப்படியங்கேமுன்புவந்தவளுயிர்காத்த
முத்தராடகமேமொய்வினையேனைமூகருள்செய்துகாத்திடுவாய்
நாவலர்புகழும்வடமலைதனக்குநாதன்வாழ்தென்றிருப்பதியோய்
நண்ணருமுத்திக்கரசனேயநந்தநாதனேஞானதேசிகனே. (௪)

மறுவுறுகுணநீத்தென்னைநின்னடிமைவாய்க்குமாறருளுதல்பெரிதோ
வளர்பிறப்பாம்பிணியைக்குறைத்தும்வடவையேயெங்களாரமுதே
குறைவிலாநிறைந்தநற்குணவடிவேகொண்டன்மேனியனைப்படியே
குட்டமதகற்றித்திருத்துழாய்த்தீர்த்தங்கொடுக்குமங்கையனேயெவர்க்கும்
உறவெனநின்றேயுதித்தகாண்முதலாவொருமொழிபுகன்றிடவறியா
ஊமையையகற்றிப்பலமொழிபுகலுமுறுதிதந்தாண்டவாரியனே
நறைமலிகமலத்தடங்கொள்பூஞ்சோலைகனிவளர்தென்றிருப்பதியோய்
நண்ணருமுத்திக்கரசனேயநந்தநாதனேஞானதேசிகனே. (௫)

பச்சைமால்சேடகிரியிற்றேரடியிற்பாரினியனுகிருமனமே
பரிவுடனோடிவந்தெத்துருணைப்பாக்கியமடைந்தனிருடையோய்
உச்சிதப்பொருளேமிகுந்தவானந்தமோங்கியஞானவாரிதியே
யோதுதற்கெளிதோநினதுசீர்சிறியேனொருதனிநாவிலைலம்மா
மச்சநோயிற்கொருபெருந்தேவிமதுரவாசகவிலக்குமிப்பெண்
மகிழ்ந்துசெய்தவத்தாலவட்கருள்புரியமணமகனும்வைப்புயனே
நச்சரவினிலேதுயில்பவன்புனமுநனிவளர்தென்றிருப்பதியோய்
நண்ணருமுத்திக்கரசனேயநந்தநாதனேஞானதேசிகனே. (௬)

வரதனைப்பணிந்தவண்மையோவுதித்துவந்தநாளின்பெருங்குணமோ
மாதவப்பயனோவாமனன்குசர்மனமகிழ்ந்தளித்தமெய்வரமோ
பாவியவுலகிலெண்ணிலாச்சத்திபடைத்துமெய்ஞ்ஞானமும்பெருகும்
படியவதரித்தபண்பனேயுன்னைப்பரவுவார்க்கொருகுறையுமாதோ
வரகனிபெறவேமாந்தர்கள்பசுக்கண்மன்னுமாகாத்திடும்பொருளால்
மாதவர்கூறும்பெயரினையோதிவந்துசேர்புவிமகட்கணியா
நாலைகுழுலகமேத்துறுசீர்த்திகனிவளர்தென்றிருப்பதியோய்
நண்ணருமுத்திக்கரசனேயநந்தநாதனேஞானதேசிகனே. (௭)



இளமதிச்சடையோனேயும்வெண்கைலையிரும்பொன்மாமலையொடுபணியும்
இணையிலாப்புகழ்க்கொடிருமலைநோக்கியேகுறுகாலையோர்கானில்
வளமிகுசெருக்கால்ராசிளங்குமாரனுன்முகங்குறியெனக்கொள்ள
உண்டைகேடாவவுடனவன்விழிபோயுன்சரண்வீழ்தலுமிரங்கி
ராமலிகண்டந்தனையபுன்மக்கண்மயக்குறுமயக்கினைத்தாந்தான்
மூங்குசித்திரத்தைநயருளினைஞானமருவிழியளித்தவன்மனப்பேய்
ஒளியெனையகலக்கருணைசெய்யெந்தாய்கனிவளர்தென்றிருப்பதிவாழ்
நண்ணருமுத்திக்கரசனேயநந்தநாதனேஞானதேசிகனே. (௮)

பெறற்கருதிமலர்மகட்டொழாதுநெடுமுகடியைத்தொழுபவன்போல்
நின்னைநிழுத்திபெறநினைந்தங்கோநெடுமறையொழுக்கினையொருவிச்
சதிபெறுபொய்யாகமவழிபுக்குத்தருக்கினல்லறிவழிந்துழல்வேன்
தனைப்பரிந்தருளிநோக்கினின்கமலத்தாளிணையென்முடிசாத்தி
விதிபெறத்திருத்தியெட்டெழுத்தின்சீர்மெய்ப்பொருள்காட்டியாண்டனையா
வீறுநின்கருணையென்னெனவேத்திவிளம்புகேன்முக்கணன்சிரமேல் [ல்
நதிதருகழற்காளயகனடியார்நயந்துறைதென்றிருப்பதியோய்
நண்ணருமுத்திக்கரசனேயநந்தநாதனேஞானதேசிகனே. (௯)

அந்திவர்ந்துன்னின்செவியணிபறிக்கவசடர்களுனையடுத்துளத்தில்
ஆசையாய்நடந்துவரும்பொழுதறிந்தேயரிகரியெனச்சொலுங்காலை
சிந்துரமலையின்முதலவாய்ச்சிக்கி[illegible]
செய்திலையுயிர்துவந்ததற்கப்பச்சிதரன்மாதவன்முருந்தன்
மந்தரஞ்சமர்த்தமைவையிராகிவடிவுகொண்டென்னுயிரளிக்க
வரும்படிதவஞ்செய்மன்னவாவெனைநீமகிழ்ந்தினியாட்கொளாயின்னே
சந்தலில்சித்தாருதினம்வணங்கனிவளர்தென்றிருப்பதியோய்
நண்ணருமுத்திக்கரசனேயநந்தநாதனேஞானதேசிகனே. (௧௦)

மீனவன்சோழன்சேரனேமுதலோர்மெய்த்திருப்பணிபுரிந்ததுபோல்
மேலவர்பணியுமரிப்பணிசெய்யமேன்மையாய்நீவருந்தவத்தால்
கூடுநெடுமுழங்கையுஞ்சரமுங்கூட்டமுமகற்றுதலாலே
குவலயத்திற்பேசறும்பெருமானார்க்குறித்திடுமாநந்தப்பெருக்கே
வானவர்தொகுதியனுதினங்கூடிவாசவன்மழைவிடுத்திடுநாள்
மாதவர்க்கணிந்தபேரினையோதிவந்திகப்பணமிடவே
நானிலம்புகழுமண்டலாதிபனேகனிவளர்தென்றிருப்பதியோய்
நண்ணருமுத்திக்கரசனேயநந்தநாதனேஞானதேசிகனே. (௧௧)

ஏரணமெழுத்[illegible]ற்பொருள்யாப்பேரடிபலலங்காரநற்புல்மை
யேய்ந்துமாமதுரத்தமிழ்சொலுமாறெற்கெம்பவாக்குதவியதருவே
கோரிவந்தவருக்கவ்வரங்கொடுத்துக்கோதிலாஞானமெய்ச்செல்வம்
கொடுத்துநின்பெருமையிழைநயேன்கூறற்குறுருமோதினைக்கடல்சூழும்

## ஸ்ரீமத் அநந்தநாதசுவாமிகள்பதிகம்.

பாரெலாம்புகழுமகாலிங்காமப்பண்பிலேன்றன்னையோர்பொருளாப்
பரிந்துவந்தாண்டபரமனேபடியார்பவப்பெரும்பிணிக்கொருமருந்தே
நாரணன்மெய்த்தேவெனும்புகழெக்குநனிவளர்தென்றிருப்பதியோய்
நண்ணருமுத்திக்கரசனேயநந்நாதனேஞானதேசிகனே.

ஸ்ரீமத் அநந்தநாதசுவாமிகள்பதிகம்

முற்றிற்று.

ஸ்ரீமத்குலசேகரஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஸ்ரீ அனந்தநாதசுவாமிகள் திருவடிகளேசரணம்.

963

K4688